நகராட்சி பகுதிகளில் மரங்கள் அதிகமாக வளர்த்தல்.

வினா எண் 16701—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

(அ) நகராட்சிப் பகுதிகளில் மரங்கள் அதிகமாக வளர்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்பதைக் கட்டாயமாக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) நகராட்சிப் பகுதிகளில் காலியான இடங்கள், அலுவலக வளாகங்கள், பள்ளிக் கட்டிடப் பகுதி ஆகிய இடங்களில் மரங்கள் அதிகமாக வளர்க்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது.

(ஆ) இனி, நகராட்சிப் பகுதிகளில் புதியதாக வீடுகள் கட்ட நகராட்சி அனுமதி வழங்கும்போது, அந்த வீட்டு மனையில் குறைந்தது ஒரு மரமாவது நடப்பட வேண்டும் என்று கட்டாயப்படுத்தி அறிவுரை வழங்குவது பற்றி ஆராயப்படும். மற்றும் தற்போது நகராட்சிகளில் உள்ள வீடுகளில் மரங்கள் இல்லையெனில் வீட்டிற்கு ஒரு மரமாவது நடப்பட வேண்டும் என்று வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு அறிவுரை வழங்குவது பற்றியும் ஆராயப்படும்.

தமிழ்நாடு சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

156—

பரமக்குடி நகராட்சியில் தொழில் வரி மற்றும் வீட்டுவரி நிலுவைத் தொகை.

வினா எண் 16838—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகராட்சியில் தொழில்வரி மற்றும் வீட்டுவரி நிலுவைத் தொகை 1991-92-இல் எவ்வளவு ?

(ஆ) முற்றிலுமாக வீட்டுவரி வசூல் செய்த நகராட்சிகளுக்கு அரசு ஊக்கத் தொகை வழங்க முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) பரமக்குடி நகராட்சியில் 1991-92 நிதியாண்டில் தொழில் வரியின் கீழ் உள்ள நிலுவைத் தொகை ரூ. 3.92 இலட்சம் ஆகும். வீட்டுவரியின் கீழ் உள்ள நிலுவைத் தொகை ரூ. 2.35 இலட்சம் ஆகும்.

(ஆ) அரசின் பரிசீலனையில் இல்லை.

157—

புதுக்கோட்டை நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம்.

வினா எண் 16999—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டுவர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

158—

சென்னை மாநகராட்சி பூங்காவில் மூலிகைச் செடிகளை வளர்த்தல்.

வினா எண் 17446—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

(அ) சென்னை மாநகரப் பூங்காக்களில் அன்றாட வாழ்வில் பயன்படும் துளசி, தும்பைப் போன்ற மூலிகைச் செடிகளை வளர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

159—

தளி ஊராட்சி பிற்பட்ட ஒன்றியங்களுக்கு ஐ.எல்.ஓ. திட்டம் செயல்படுத்துதல்.

வினா எண் 17558—திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படுத்தப்படும் ஐ.எல்.ஓ. (International Labour Organisation) திட்டம் மற்ற பிற்பட்ட ஒன்றியங்களுக்கு செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆம், அரசினால் பரிசீலிக்கப்பட்டு திட்டம் ஐ.எல்.ஓ. வின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

160—

உதச்சிக்கோட்டை தினசரி சந்தையை தனியாரிடமிருந்து மீட்டு பஞ்சாயத்துச் சந்தையாக மாற்றுதல்.

வினா எண் 17568—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் விளாத்துறை பேரு ராட்சி உதச்சிக்கோட்டை தினசரி சந்தை தனியார் நிலத்தில் இயங்குவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்தச் சந்தையை தனியாரிடமிருந்து மீட்டு அதே இடத்தில் பஞ்சாயத்துச் சந்தையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

161—

மோகனூர்-ஆர். பட்டினம் கூட்டுக்குடிநீர்த் திட்டம்.

வினா எண் 19084—திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோகனூர்-ஆர். பட்டினம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

162—

துறையூர் நகருக்கு முசிறி காவிரியிலிருந்து கூட்டுக்குடிநீர்த் திட்டம் அமைத்தல்.

வினா எண் 19109—திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

(அ) உப்பிலியாபுரம் தொகுதியைச் சார்ந்த துறையூர் நகருக்கு முசிறி காவிரியிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) காவிரி நதியை நீராதாரமாகக் கொண்டு துறையூர் நகராட்சி உப்பிலியாபுரம், மேட்டுப்பாளையம் தாத்தையங்கார்ப்பேட்டை, பாலகிருஷ்ணயம்பட்டி பேரூராட்சிகள் மற்றும் 94 வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

163—

விளவங்கோடு தொகுதியில் மெதுகும்மல்-களியக்காவிளை கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வினா எண் 19171—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி மெதுகும்மல்-களியக்காவிளை கூட்டுக் குடிநீர்த் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, மெதுக்கும்மல், களியக்காவிளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் அனைத்துப் பணிகளும் 12/94க்குள் முடித்து குடிநீர் விநியோகம் செய்வதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

164—

விருதுநகருக்கு குடிநீர்த் திட்டம்

வினா எண் 19362—திரு. சஞ்சய் ராமசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகருக்கு உடனடி குடிநீர்த் திட்டத்தின் கீழ் ஒண்டிபுலி தண்ணீர்த் திட்டம் துவங்கப்பட்டும் போதிய குடிநீர் கிடைக்காததால், நிரந்தர தீர்வாக மாற்றுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) விருதுநகர் நகராட்சிக்கு மாற்றுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்த ஆய்வுப் பணிகள் எதுவும் வாரியத்தால் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

165—

வருமானம் குறைவாக உள்ள பேரூராட்சிகளை ஊராட்சிகளாக மாற்றுதல்.

வினா எண் 19311—திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வருமானம் மிகக் குறைவாக உள்ள பேரூராட்சிகளை ஊராட்சிகளாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வருமானம் மிகக் குறைவாக உள்ள பேரூராட்சிகளை ஊராட்சிகளாக மாற்றம் செய்ய கோரிக்கை வரப்பெற்றால் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திற்குட்பட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

1993 அக்டோபர் 29]

166—

புளியஞ்சோலையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வினா எண் 19337—திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரத்திற்கு உப்பிலியாபுரம் தொகுதி புளியஞ்சோலையில் இருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல் படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயற்படுத்தப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) உப்பிலியாபுரம் பேரூராட்சியின் குடிநீர்த் திட்டம் அய்யம்பாளையத்தில் காவிரி நதியை தலைப்பிடமாகக் கொண்டு வகுக்கப்பட்டுள்ள துறையூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதால், புளியஞ்சோலையில் இருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

167—

விருதுநகரில் பாதாள சாக்கடைத் திட்டம்.

வினா எண் 19361—திரு. சஞ்சய் ராமசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

விருதுநகரில் பாதாள சாக்கடைத் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

விருதுநகரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

[1993 அக்டோபர் 29

168—

சுப்பையாபுரத்திற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வினா எண் 20054—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராசிபுரம்-ஆட்டையாம்பட்டி கூட்டுக்குடிநீர்த் திட்டத்தில் சுப்பையாபுரத்தையும் இணைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

169—

கிருஷ்ணகிரிக்கு மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்கல்.

வினா எண் 20090—திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரிக்குப் போதிய குடிநீர் வழங்க இரண்டாவது குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்டுதலும் குழாய் அமைத்தலும் எந்த நிலையில் உள்ளன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கிருஷ்ணகிரிக்கு தென்பெண்ணையாற்றில் கூடுதலாக ஒரு நீர் உறிஞ்சி கிணறும், நகரில் கூடுதலாக ஒரு மேல்நிலைத் தொட்டியும், மேலும், நகரில் விடுபட்டுள்ள பகுதிகளில் பகிர்மானக் குழாய்கள் பதிக்கவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வாரிய விதிமுறைகளின்படி நகராட்சியினர் ஆய்வுக் கட்டணம் முழுவதையும் செலுத்திய பின்னரே நகராட்சிக்கான குடிநீர் திட்ட ஆய்வுப்பணிகள் வாரியத்தால் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 29]

170—

குமரன் ஆதிதிராவிடர் காலனிக்கு கழிவுநீர் வடிகால் வசதி செய்தல்.

வினா எண் 21079—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவிநாசி நகரம் குமரன் ஆதிதிராவிடர் காலனிக்கு கழிவு நீர் வடிகால் வசதி செய்துதர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செய்து தரப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

171—

சீர்காழி ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்கு சொந்தக் கட்டிடம்.

வினா எண் 9347—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழியில் வாடகை கட்டிடத்தில் இயங்கும் ஆதிதிராவிட மாணவர் விடுதிக்கு அரசின் சார்பில் சொந்தமாக கட்டிடம் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் சீர்காழி ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிக்கு கட்டிடம் கட்டுவதற்குத் தகுதியான புறம்போக்கு நிலம் இல்லாத காரணத்தால் நிலம்

[1993 அக்டோபர் 29

கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்திய பின் வரும் ஆண்டுகளில் நிதிநிலைமையின் அடிப்படையில் இப்பணியை மேற்கொள்வது பற்றிக் கருதப்படும்.

172—

ஆதிதிராவிட குழந்தைகளுக்கு கல்வி ஆண்டு தொடக்கத்திலேயே இலவச பாடநூல்கள் வழங்குதல்.

வினா எண் 9635—டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிட குழந்தைகளுக்கு, அரசு கொடுக்கும் இலவச பாடநூல்கள், சீருடைகள், காலம் தாழ்த்தி வழங்கப்படுவதால் மாணவ, மாணவிகள் கல்வித் தரம் குறைவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவற்றை கல்வி ஆண்டின் தொடக்கத்திலேயே வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) ஆதிதிராவிட குழந்தைகளுக்கு அரசு கொடுக்கும் இலவச பாடநூல்கள், சீருடைகள், காலம் தாழ்த்தி வழங்கப்படுவதில்லை.

(ஆ) இவ்வினா எழுவதற்கு இடமில்லை.

173—

மணமை ஆதிதிராவிட நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்.

வினா எண் 10586—திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் மணமை கிராம ஆதிதிராவிடர் நலத்துறை நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்திடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு எவ்வளவு மதிப்பீட்டில் நிறைவேறும் ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டம், மணமை கிராம ஆதிதிராவிடர் நலத்துறை நடுநிலை பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

174—

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை தடை உத்தரவு மூலம் நிறுத்தி வைக்காமல் இருக்க அரசு சட்டத் திருத்தம்.

வினா எண் 10865—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அரசால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை தடை உத்தரவு மூலம் நிறுத்திவைக்காமல் இருக்க அரசு சட்டத் திருத்தம் கொண்டு வர உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

175—

பரமக்குடி தொகுதி ஆதிதிராவிடர்களுக்கு கொடுக்கப்பட்ட நிலங்கள் தொடர்பாக வழக்குகளை பரிசீலிக்க தனியாக நீதிமன்றம் அமைத்தல்.

வினா எண் 10933—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் ஆதிதிராவிடர்களுக்கு கொடுக்கப்பட்ட நிலங்கள் தொடர்பாக நிலுவையில் உள்ள வழக்குகள் எத்தனை ?

(ஆ) அந்த வழக்குகளை பரிசீலிக்க தனியாக நீதிமன்றம் அமைக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) நான்கு.

(ஆ) இல்லை.

176—

ரெஸல்லர் என்ற இனத்தவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்த்தல்.

வினா எண் 11015—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி, கோவை, செங்கோட்டை ஆகிய பகுதிகளில் வாழும் ரெஸல்லர் என்ற இனத்தவர் அனைவரையும் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி, கோவை, செங்கோட்டை ஆகிய பகுதிகளில் ரெஸல்லர் இனத்தவர் வசிக்கவில்லை.

177—

ஆதிதிராவிடர் துறையில் இயங்குகின்ற விளம்பர ஊர்தியை மேலும் வாங்குதல்.

வினா எண் 11377—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

(அ) ஆதிதிராவிடர் துறையில் இயங்குகின்ற விளம்பர ஊர்தியால் பயன் ஏற்பட்டுள்ளதா ?

(ஆ) ஊர்திகளை மேலும் வாங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

178—

முத்துப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் ஆதிதிராவிடர் பெண்களுக்கு விடுதி அமைத்தல்.

வினா எண் 13784—திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், முத்துப் பேட்டை உயர்நிலைப்பள்ளியில் பெண்களுக்கு ஆதிதிராவிடர் நல விடுதி துவங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், முத்துப் பேட்டை உயர்நிலைப்பள்ளியில் பெண்களுக்கு ஆதிதிராவிடர் நல விடுதி துவங்குவதற்கு போதுமான வாய்ப்பு உள்ளதா என்ற கருத்துரு ஆய்வில் உள்ளது.

179—

பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 மாணவர்களுக்கு ஆதிதிராவிடர் மாணவர் இல்லம் அமைத்தல்.

வினா எண் 16035—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ப்ளஸ் 1 மற்றும் ப்ளஸ் 2 மாணவர்களுக்கு தனியாக ஆதி திராவிடர் நலத்துறை மூலம் ஆதிதிராவிடர் மாணவர் இல்லம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

இல்லை.

180—

அரவக்குறிச்சியில் ஆதிதிராவிடர்களுக்குத் திருமணக் கூடம் அமைத்தல்.

வினா எண் 19979—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சியில் ஆதி திராவிடர்களுக்குத் திருமணக் கூடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

திருமணக் கூடம் கட்டுவதற்கான இடம், நிதி வசதி மற்றும் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் வரும் ஆண்டுகளில் பரிசீலனை செய்யப்படும்.

181—

பழனி கோவில் சார்பாக மருத்துவக் கல்லூரி தொடங்குதல்.

வினா எண் 9263.—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் சார்பாக மருத்துவக் கல்லூரி ஒன்று தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

182—

பழனி கோவில் சார்பாக பணிபுரியும் மகளிர் விடுதி ஏற்படுத்துதல்.

வினா எண் 9264—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் சார்பாக "பணிபுரியும் மகளிர் விடுதி" (Working Women's Hostel) ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

183—

மதுரை மீனாட்சி ஆலயத்தின் வெளிப்புறத்தில் கடைகள் கட்டுதல்.

வினா எண் 9314—திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் உள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தின் வெளிப்புற நான்கு பக்கத்திலும் அறநிலையத் துறை சார்பாகக் கடை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் :

இல்லை.

184—

பழனி கோயில் சார்பாக உள்ள மருத்துவமனையை விரிவுபடுத்துதல்.

வினா எண் 9432—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பாக பழனி நகர் தெப்பக்குளம் அருகே அமைக்கப்பட்டு செயல்பட்டு வரும் திருக்கோயில் மருத்துவமனையை விரிவாக்கும் திட்டம் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) இல்லை. (ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

185—

அர்ச்சகர்களை அரசு ஊழியர்களாக மாற்றுதல்.

வினா எண் 9937—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தின் திருக்கோயில்களில் தெய்வப் பணி புரியும் அர்ச்சகர் அரசு ஊழியராக்கப்படுவார்களா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

186—

பழனி கோவில் சார்பாக பல் மருத்துவக் கல்லூரி தொடங்குதல்.

வினா எண் 10178—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பாக பல் மருத்துவக் கல்லூரி ஒன்று தொடங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

187—

பரமக்குடியில் மகளிர் கல்லூரி ஏற்படுத்தல்.

வினா எண் 14737—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம் திருக்கோயில் மூலம் பரமக்குடியில் மகளிர் கல்லூரி ஆரம்பிக்க அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

188—

பேரூர் பட்டீஸ்வரர் கோவிலில் உள்ள சிற்பங்களை புதுப்பித்தல்.

வினா எண் 14884—திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் பட்டீஸ்வரர் கோயிலில் உள்ள சிற்பங்களைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் அருள்மிகு பட்டீஸ்வரர் திருக்கோயிலில் சிற்பங்கள் நல்ல நிலையில் உள்ளதால் இச்சிற்பங்களைப் புதுப்பிக்கும் திட்டம் ஏதும் இல்லை.

189—

காரமடை ரங்கநாதர் கோவிலில் இராஜகோபுரம் கட்டுதல்.

வினா எண் 16327—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரமடை அருள்மிகு ரங்கநாதர் கோயிலில் (கோயம்புத்தூர் மாவட்டம்) ஸ்ரீரங்கம் கோயில்போல் இராஜகோபுரம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

190—

சென்னை பார்த்தசாரதி கோயிலுக்கு பாதுகாப்புப்படை அமைத்தல்.

வினா எண் 16631— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதிப் பெருமாள் திருக்கோயிலுக்குப் பாதுகாப்புப்படை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர்:

பாதுகாப்புப்படை அமைக்கப்பட்டுள்ளது.

191—

அரசு வழங்கும் இலவச சீருடைகள் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுதல்

வினா எண் 9635-ஏ— டாக்டர் வே. சரோஜா: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்படுத்தப்பட்ட குழந்தைகளுக்கு அரசு கொடுக்கும் இலவச பாட நூல்கள், சீருடைகள் காலம் தாழ்த்தி வழங்கப் படுவதால் மாணவ, மாணவிகள் கல்வித்தரம் குறைவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றை கல்வி ஆண்டின் தொடக்கத் திலேயே வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை.—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்படுத்தோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

(அ) இலவச பாட நூல்கள் மற்றும் சீருடைகள் காலம் தாழ்த்தி வழங்கப்படுவதில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

192—

பூம்புகாரில் மீனவர்களுக்கு கடன் வழங்கும் திட்டம்

வினா எண் 15204—எம். பூராசாமி: மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் மீனவர்களின் மீன்பிடி படகுகளில் ஆயில் என்சின்கள் அமைக்க மானிய விலையில் கடன் வழங்கும் செயற்குறிடபு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) பாரம்பரிய கட்டுமரங்களுக்கு வெளிப் பொருத்தும் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் (மைய-மாநில அரசு உதவியுடன், நடைமுறைப்படுத்தும் திட்டம்) சீர்காழி வட்டத்தில் இதுவரை (1991—92 மற்றும் 1992—93) பெறப்பட்ட 89 விண்ணப்பங்களில் 88 பேருக்கு அரசு மானியம் வழங்கப்பட்டு விட்டன. மீதியுள்ள ஒருவருக்கு மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

193—

கெலவரப்பள்ளி அணையில் மீன் குஞ்சு வளர்க்கும் திட்டம்.

வினா எண் 16387— திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

(அ) கெலவரப்பள்ளி அணையில் மீன்குஞ்சு வளர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அத்திட்டம் செயல்படுத்தப் படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

194—

மீன் வள வங்கி தொடங்கும் திட்டம்.

வினா எண் 19641-ஏ—திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனவர்களுக்கு தனியாக 'மீன்வள வங்கி' தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) ஆயினும், மீனவர்களுக்கு தனியாக 'மீன்வள வங்கி' தொடங்கும் திட்டம் ஒரு நல்ல திட்டம் என்ற வகையில் இவ்வரசு அத்திட்டத்தை முழுமையாக ஆதரித்து மைய அரசின் உரிய நடவடிக்கைக் கோரி வலியுறுத்தியுள்ளது.

195—

தோகூர் ஊராட்சி மீனவர்களுக்கு நிலப்பட்டா வழங்கும் திட்டம்.

வினா எண் 20289—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தோகூர் ஊராட்சி மீனவர்களுக்கு நிலப்பட்டா வழங்கி, வீடுகட்ட கடன் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

நிலப்பட்டா வழங்கும் பணி, வருவாய்த் துறையைச் சார்ந்ததாகும். மீனவர்கள் தங்கள் சொந்த நிலம் 3 செண்ட் அரசிடம் ஒப்படைத்து மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தீர்மானத்துடன் அரசை அணுகினால், அவர்களுக்கு மீனவர் இலவச வீடுகட்டும் திட்டத்தின் கீழ் இலவசமாக வீடு கட்டித் தருவது குறித்து அரசு பரிசீலிக்கும்.

196—

வேதாரண்யம் பகுதியில் தோல் பதனிடும் தொழிற்சாலை தொடங்குதல்.

வினா எண் 21206—திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் பகுதியில் இறால் பதனிடும் மற்றும் டின்களில் அடைக்கும் தொழிற்சாலை நிறுவிட அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

(அ) வேதாரண்யம் பகுதியில் இறால்களை பதனிட்டு டின்களில் அடைக்கும் தொழிற்சாலை நிறுவிட அரசிடம் தற்போது திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

1993 அக்டோபர் 29]

197—

மீனவ கிராமங்களுக்கு அடிப்படை வசதி செய்து கொடுக்கும் திட்டம்.

வினா எண் 21681—திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்பு மிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளதுறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனவ மக்கள் வசிக்கும் மீனவ கிராமங்களுக்கு சாலை வசதி, குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி போன்ற அடிப்படை வசதிகள் முன்னுரிமை அடிப்படையில் செய்து கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்றை அமைச்சர்:

(அ) மீனவர் கிராமங்களுக்கு சாலை வசதி, குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி போன்ற அடிப்படை வசதிகள் மீனளதுறை யின் மூலம் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தும் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை.

(ஆ) முந்தைய காலத்தில் மீனள துறையின் மூலம் சாலை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. தேசிய மீனவர் நலத் திட்டத்தின் மூலம் 7 கிராமங்களில் 24 ஆழ்குழாய் கிணறு கள் அமைத்து குடிநீர் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

198—

EXTENTION OF TECHNICAL TRAINING PROGRAMME TO ANGLO INDIANS

Question N . 22148 Dr. BEATRIX D'SOUZA : Will the Hon Minister for Backward classes Welfare and Fisheries be pleased to state—

(a) Whether there is a proposal with the Government to extend to the anglo indian community Teehnical Trainning Programme available to backward classes Christians and

(b) if so the details there of?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இந்த வினாவுக்கு இடமில்லை.

199—

அழகர் கோவிலில் இளைஞர் சுற்றுலா விடுதி கட்டுதல்.

வினா எண் 9057—திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுற்றுலா மையமாகிய மதுரை மாவட்டம் அழகர் கோவிலில் இளைஞர் சுற்றுலா விடுதி கட்டுவதற்கு அரசிடம் செயற் குறிப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

200—

வாத்தலையில் தமிழ்நாடு உணவு விடுதி தொடங்கும் திட்டம்.

வினா எண் 9706—திரு. எம். தங்கவேல்: மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சிறந்த சுற்றுலா மையமாகவுள்ள வாத்தலையில் சுற்றுலாத் துறையின் மூலம் தமிழ்நாடு உணவு விடுதி ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

201—

பூம்புகாரில் பனை ஓலை குடிசைத் தொழில் நிறுவுதல்.

வினா எண் 15342—திரு. எம். பூராசாமி: மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் கிடைக்கும் பனை ஓலையைக் கொண்டு குடிசைத் தொழில் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

விடை —

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

202—

பூம்புகாரில் வெல்லம் தயாரிக்கும் தொழில்களை தொடங்கும் திட்டம்.

வினா எண் 15343—திரு. எம். பூராசாமி: மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் கடற்கரையோர ஊராட்சிகளில் அதிக அளவில் கிடைக்கும் பதனீரைக் கொண்டு வெல்லம் தயாரிக்கும் தொழில்கள் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

203—

கதர் வாரியத்தில் தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு நடைமுறைப் படுத்தல்.

வினா எண் 19097—திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர் வாரியத்திலும், விற்பனை நிலையங்களிலும் தாழ்த்தப்பட்டோருக்கான ஒதுக்கீடு பின்பற்றப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) கதர் கிராமத் தொழில் வாரியத்திலும், விற்பனை நிலையங்களிலும் ஏற்படும் காலியிடங்கள் அனைத்தும் தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியப் பணிவிதி 6 (2)ன்படி சம்பந்தப்பட்ட வேலை வாய்ப்பகங்களிலிருந்து பட்டியல் பெறப் பட்டு தாழ்த்தப்பட்டோருக்கான ஒதுக்கீடு 18 சதவீதம் என்ற அரசு ஆணை பின்பற்றப்பட்டு வாரிய தேர்வாணைய குழுவின ரால் தேர்வு செய்து பணி நியமனம் செய்யப்பட்டு நிரப்பப்படு கிறது.

1— இருபத்தொன்றாம் பட்டியல்.

ஒட்டங்காட்டில் கிராம மருத்துவமனையை துணைப் பிரதமர் சுகாதார நிலையமாக்குதல்

வினா எண் 7369—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காட்டில் இயங்கும் கிராம மருத்துவமனையை துணை பிரதம சுகாதார நிலையமாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியத்தை சேர்ந்த ஒட்டங்காடு ஊராட்சி ஒன்றிய மருந்தகம் அலோபதி மருந்தகமாகும். இம்மருந்தகம் கடந்த பல ஆண்டுகளாக செயல்படாமலிருக்கிறது. இங்கு பணியாளர்கள் யாருமில்லை. இம்மருந்தகத்திற்கு அருகில் குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையமும் 8 கி.மீ. தொலைவில் பேராவூரணியில் அரசு மருத்துவமனையும் இயங்கி வருகின்றது.

மேலும், பேராவூரணி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 97,778. இவ்வூராட்சி ஒன்றியத்தில் (1) சிருவாவிடுதி, (2) குறிச்சி, (3) காலகம் ஆகிய மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. 30,000 மக்கள் தொகைக்கு, ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அரசின் கொள்கைப்படி மேலும் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு இயலாது.

2—

திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் தனியார் ஆரம்ப சுகாதார நிலையம்.

வினா எண் 7988—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் தனியார் துறையின் கீழ் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் தனியார் துறையின் கீழ் ஆரம்ப சுகாதார நிலையம் ஏதும் இயங்கவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

3—

சின்கோனா மருத்துவமனையை செவிலியர் பயிற்சி மையமாக உயர்த்துதல்.

வினா எண் 8545—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சின்கோனா மருத்துவமனையை செவிலியர் பயிற்சி மையமாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

இல்லை.

4—

தருமபுரி மாவட்ட மருத்துவமனைகளில் போதிய மருந்துகள் ஒதுக்குதல்.

வினா எண் 8619—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் தாலுக்கா-ஒன்றிய தலை நகரங்களில் உள்ள மருத்துவமனைகளில் போதிய மருந்துகள் ஒதுக்கீடு இன்மையை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், ஒதுக்கீடு அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா ?

(இ) எந்த அடிப்படையில் ஒதுக்கீடு அதிகரிக்கப்படுகின்றது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) தருமபுரி மாவட்டத்தைச் சார்ந்த எல்லா மருத்துவ மனைகளுக்கும் தேவையான மருந்துப் பொருட்களையும் விநியோகிப்பதற்கேதுவாய் தேவைப் பட்டியல்கள் அந்தந்த மருத்துவ மனைகளிடமிருந்து பெறப்பட்டு மருந்தாக்கங்களுக்கு கொள்

முதல் செய்வதற்காக ஆணைகள், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அலுவலகத்திலிருந்து ஒப்பந்தப் புள்ளி அடிப்படையில் கொடுக்கப்பட்டு மருந்துப் பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன.

(ஆ) மருத்துவமனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான அளவுக்கு மருந்துப் பொருட்களைக் கொள்முதல் செய்வதற்கு ஏதுவாய் வரவு-செலவில் நிதி ஒதுக்கப்படுகிறது.

(இ) ஆண்டுதோறும் புற மற்றும் உள் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பின் அதற்கேற்ப நிதி ஒதுக்கீடும் அதிகரிக்கப்படுகிறது.

5—

மேலாய்க்குடி மற்றும் மூவலூரில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பித்தல்.

வினா எண் 9112—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஒன்றியம், மேலாய்க்குடியிலும் மற்றும் நயினார்கோவில் ஒன்றியம் மூவலூரிலும் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை ஏறத்தாழ 61,500. இவ்வூராட்சி ஒன்றியத்தில் (1) பார்த்திபனூர், (2) பாம்பூர், (3) வெங்கிடகுறிச்சி ஆகிய மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. நயினார் கோயில் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை ஏறத்தாழ 51,200. இவ்வூராட்சி ஒன்றியத்தில் (1) நயினார்கோயில் (2) பி.கொடிக்குளம் ஆகிய இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன.

30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அரசின் கொள்கைப்படி மேற்குறிப்பிட்ட இரண்டு ஊராட்சி ஒன்றியங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு தற்போது சாத்தியமில்லை.

6—

தொண்டமான் ஊராட்சிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுதல்.

வினா எண் 10552—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை ஒன்றியம், தொண்டமான் ஊராட்சிக்,கு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : புதுக்கோட்டை ஒன்றியம், தொண்டமான் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏதும் இயங்கவில்லை. எனவே, ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் கட்ட வேண்டும் என்ற கேள்விக்கே இடமில்லை.

7—

சீதாம்பாள்புரம் பிரதம சுகாதார நிலையத்தில் போதிய மருந்துகள் வழங்குதல்.

வினா எண் 13468—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சீதாம்பாள்புரம் பிரதம சுகாதார நிலையத்தில் போதிய மருந்துகள் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

அரசு ஆணை (நிலை) எண் 1080, சுகாதாரம், நாள் 4—8—1993-ன் படி ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் 1993-94 ஆம் ஆண்டு முதல் ரூ. 75,000 மதிப்பிற்கான

1993 அக்டோபர் 29]

மருந்துகள் வழங்க உத்தரவு இடப்பட்டுள்ளது. இவ்வரசாணையின்படி பேராவூரணி தொகுதி, சீதாம்பாள்புரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ. 75,000 மருந்துகள் வழங்கப்படும்.

8—

சென்னையிலிருந்து பொள்ளாச்சிக்கு திருவள்ளுவர் போக்குவரத்து பேருந்து விடுதல்.

வினா எண். 9449—திரு. ஏ. தா. பொன்னுவேலு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து பெரம்பலூர் வழியாக பொள்ளாச்சிக்கு சென்று வந்த தடம் எண் 592 என்ற திருவள்ளுவர் போக்குவரத்து பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

தற்பொழுது சென்னையிலிருந்து பெரம்பலூர் வழியாக பொள்ளாச்சிக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்துகள் விடும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

9—

தலைவாசலிலிருந்து பாலக்காட்டிற்கு அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் மூலம் நகரப் பேருந்து விடுதல்.

வினா எண் 10268—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தலைவாசலிலிருந்து வீரகனூர் பூலாம்பாடி வழியாக வேப்படி–பாலக்காட்டிற்கு அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் மூலம் நகரப் பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): பாலக்காட்டிலிருந்து வேப்படி செல்லும் சாலையில் கி.மீ. 0/8-ல் நீர் குறுக்கீடு உள்ளதால், கி.மீ. 0/ — 2/8 வரை பேருந்து செல்லத்தக்க சாலையில்லை என சேலம் கோட்டப் பொறியாளர் அவர்கள் சான்றளித்துள்ளதால், வேப்படி - பாலக்காட்டிலிருந்து வேப்படி வரை உள்ள சாலைகள் பேருந்து இயக்கத்தக்க வகையில் அமைந்த பின்னர் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

10—

பேராவூரணியிலிருந்து பழனிக்கு பேருந்து விடுதல்.

வினா எண் 12428—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணியிலிருந்து மதுரை வழியாக பழனிக்கு பேருந்துவிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

இல்லை.

11—

பேராவூரணியில் சோழன் போக்குவரத்துக் கழகம் மூலம் புதிய நகர வழித்தடம் அமைத்தல்.

வினா எண் 12432—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பை ஊராட்சியில் அடங்கிய முறுமாக்காடு, குண்டா மறைக்காடு, சி. கள்ளங்காடு, பெ. கள்ளங்காடு கிராம மக்கள் பயன்பெறும் வகையில் பேராவூரணியை இணைக்க சோழன் போக்குவரத்துக் கழகம் மூலம் 1992-93-ல் புதிய நகர வழித்தடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

பேராவூரணி தடம் எண் 3 நகரப் பேருந்து பேராவூரணி-சேதுபாவாசத்திரம் (வழி) குண்டாமரைக்காடு, கள்ளங்காடு, குருவிக்கரம்பை, மருங்காபள்ளம் தடத்தில் நான்கு நடைகள் இயங்கி வருகின்றன. தற்பொழுது இயக்கப்படுகின்ற நடைகளே போதுமானதாக உள்ளதால் புதியதாக ஒரு நகரப் பேருந்து இத்தடத்தில் இயக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

12—

கூவத்தூரிலிருந்து காட்டாத்தூர் வழியாக புதிய நகரப் பேருந்து விடுதல்.

வினா எண் 12711—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, கூவத்தூரிலிருந்து காட்டாத்தூர் வழியாக புதிய நகரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

இல்லை.

13—

புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிய பேருந்து வசதி செய்தல்.

வினா எண் 13031—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நகர் பகுதி முழுமையும் சென்றுவர புதிய பேருந்து வசதி செய்து கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

புதுக்கோட்டையிலிருந்து பல ஊர்களுக்குச் செல்லும் நகரப் பேருந்துகள் புதுக்கோட்டை நகராட்சியின் எல்லைக்குள் எல்லா திசைகளின் வழியாக இயங்கி வருகின்றன. எனவே, புதுக்கோட்டை நகராட்சி பகுதிக்கென தனி நகரப் பேருந்து இயக்கிட செயற்குறிப்பு ஏதுமில்லை.

14—

புதுக்கோட்டை ரயில்வே நிலையத்திற்கும் பேருந்து நிலையத்திற்கும் புதியதாக பேருந்து விடுதல்.

வினா எண் 13032—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை ரயில்வே நிலையத்திற்கு ரயில் வரும் நேரங்களில் பேருந்து நிலையத்திற்கும் ரயில் நிலையத்திற்கும் புதியதாக பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

தற்போது ஒரு நகரப் பேருந்து பல்முனைத் திட்டத்தில் புதுக்கோட்டை புகைவண்டி நிலையத்திற்கு 14 நடைகள் இயங்கி வருகிறது. புதுக்கோட்டை பேருந்து நிலையத்திலிருந்து புகைவண்டி நிலையத்திற்கு பேருந்து இயக்கிட செயற்குறிப்பு ஏதுமில்லை.

15—

பட்டுக்கோட்டையிலிருந்து பேராவூரணி வரை நகரப் பேருந்து விடுதல்.

வினா எண் 13763—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையிலிருந்து அதிராம்பட்டினம், ஏரிப்புறக் கரை, கீழத்தோட்டம், ராஜாமடம். சின்ன ஆவுடையார்கோவில், ஆண்டிவயல், ஆண்டிகாடு, பள்ளத்தூர், தில்லாங்காடு, செருபாலக்காடு வழியாக பேராவூரணி வரை 1992-93-ல் நகரப் பேருந்துவிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை—பேராவூரணி (வழி) அதிராம்பட்டினம் ராஜாமடம், சின்ன ஆவுடையார்கோயில, ஆண்டிவயல், ஆண்டிக்காடு, பள்ளத்தூர், தில்லங்காடு, செருபாலக்காடு தடத்தின் நீளம் 50 கி.மீ, அரசு ஆணைப்படி பேருந்து வசதிபெற்ற தடங்களில் 30 கி.மீ. தூரம் வரையிலும் பேருந்து வசதி பெறாத தடங்களில் 35 கி.மீ. தூரம் வரையிலும் நகரப் பேருந்துகள் இயக்க இயலும். இத்தடத்தின் நீளம் 35 கி.மீ.-க்கு மேல் உள்ளதால் நகரப் இயக்க இயலாது.

16—

தென்னாற்காடு மாவட்டத்தில் வேளாண்மைப்பயிற்சி பெற்று வேலையில்லாதவர்களை வயல் விளக்க அலுவலர் பணிக்கு நியமித்தல்.

வினா எண் 19731—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டத்தில் வேளாண்மை ஓராண்டு பயிற்சி பெற்று வேலையில்லாதவர்களை வயல் விளக்க அலுவலர் பணிக்கு நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

இல்லை.

17—

திருவண்ணாமலை மாவட்டத்தில் வேளாண்மை பயிற்சி பெற்று வேலையில்லாதவர்களை வயல் விளக்க அலுவலர் பணிக்கு நியமித்தல்.

வினா எண் 19735— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டத்தில் வேளாண்மை ஓராண்டு பயிற்சி பெற்று வேலையில்லாதவர்களை வயல் விளக்க அலுவலர் பணிக்கு நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

இல்லை.

18—

இராமநாதபுரம் மாவட்டத்தில் மத்திய மாநில அரசின் முதலீட்டு மானியம் பெற்று ஆரம்பிக்கப்பட்ட நிறுவனங்கள்.

வினா எண் 1666— டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் 1989-90, 1990-91 ஆம் ஆண்டுகளில் மத்திய, மாநில அரசின் முதலீட்டு மானியம் மற்றும் சலுகைகள் பெற்று ஆரம்பிக்கப்பட்ட தனியார் மற்றும் பொது நிறுவனங்கள் எத்தனை ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டத்தில் மத்திய மாநில அரசின் முதலீட்டு மானியம் மற்றும் சலுகைகள் பெற்று ஆரம்பிக்கப்பட்ட நிறுவனங்கள் வருமாறு :—

வருடம்		எண்ணிக்கை
1989-90	..	9
1990-91	..	42

1993 அக்டோபர் 29]

இதைத் தவிர தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், பொதுத் துறையில் தமிழ்நாடு மக்னீசியம் மற்றும் மரைன் கெமிக்கல்ஸ் லிமிடெட் என்னும் நிறுவனத்தை பொதுத் துறையில் தொடங்கி உள்ளது.

19—

இராமநாதபுரம் மாவட்டத்தை தொழில் துறையில் பிற்படுத்தப் பட்ட பகுதியாக அறிவித்தல்.

வினா எண் 2019—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிலில் முன்னேற்றம் அடையாத இராமநாதபுரம் மாவட்டம் முழுவதையும் தொழில் துறையில் பிற்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் :

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஆறு வட்டங்களும் ஏற்கனவே தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளன. எனவே இக்கேள்விக்கு இடமில்லை.

20—

புதுக்கோட்டை மாவட்டத்தில் சர்க்கரை ஆலை தொடங்குதல்.

வினா எண் 2100—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் சர்க்கரை ஆலை தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): புதுக்கோட்டை மாவட்டத்தில் கரும்பு பயிரிடுவதற்குப் போதுமான நீர்ப்பாசன வசதி இல்லாத காரணத்தால், அறந்தாங்கி தாலுக்காவில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஒன்றை அமைக்க மத்திய அரசு இசைவுக் கடிதம் வழங்கியுள்ள போதிலும், அங்கு சர்க்கரை ஆலை அமைக்கும் செயற்குறிப்பு தற்சமயம் ஏதும் அரசிடம் இல்லை.

21—

வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களின் தொழில் திறமையை நம் நாட்டு பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்துதல்.

வினா எண் 2384— திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களின் தொழில் திறமையை நம் நாட்டு பொருளாதார வளர்ச்சிக்குப் பயன் படுத்திக் கொள்ள மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்:

மாநில அரசு தமிழகத்தில் அயல்நாட்டு இந்தியர்களின் முதலீட்டை பெரிதும் வரவேற்கிறது. அயல்நாட்டு இந்தியர்களுக்கு தமிழ்நாட்டில் தொழில் துவங்குவதில் ஏதாவது இடையூறு ஏற்படுமானால் மைய அரசை அணுகி சிக்கல்களை நீக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்கும்.

22—

Sugar quota issued to M/s Parry and Company.

Question No. 2824—Tmt. V. G. Manimegalai:

Will the Hon'ble Industries Minister be pleased to state—

(a) Whether sugar quota is issued to M/s Parry and Company Madras for their confectionary production?

(b) the details thereof; and

(c) the rates at which sugar is supplied to this firm?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) : நெல்லிக்குப்பத்தில் அமைந்துள்ள இ.ஐ.டி. பாரி கன்பெக்ஷனரி நிறுவனத்திற்கு தனியாக சர்க்கரை கோட்டா எதுவும் வழங்கப்படவில்லை. மத்திய அரசால் மாதா

மாதம் ஒதுக்கப்படும் வெளிச்சந்தை சர்க்கரை விடுவிப்பிலிருந்து திருவாளர்கள் இ.ஐ.டி. பாரி நிறுவனம், மாதம் ஒன்றுக்கு சுமார் 350 டன்கள் சர்க்கரையை மற்றவர்களுக்கு (பெரிய அளவு உபயோகிப்பாளர்கள்) அவ்வப்போது நிர்ணயிக்கப் பட்டுவரும் சந்தை விலையிலேயே பெற்றுக்கொள்கிறது.

23—

Federation of Danish Industries

Question No. 3214—Tmt. V. G. Manimegalai:

Will the Hon'ble Minister for Industries be pleased to state—

(a) Whether Federation of Danish Industries is to sponsor industrial undertakings in this State shortly; and

(b) the details thereof?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது இல்லை.

24—

கொடுமுடி ஒன்றியத்தில் உடல் ஊனமுற்றோருக்கு தையல் இயந்திரம் வழங்குதல்.

வினா எண் 19202—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், அஞ்சூர் கிராமத்தில் வாய்க்கால் மேடு, வாழைத் தோட்டம் ஆகிய கிராமத்திலுள்ள உடல் ஊனமுற்ற தையல் தொழில் தெரிந்த 50 பேருக்கு தையல் இயந்திரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

சமூக நல இயக்ககத்தின் மூலம் விதவைகள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற பெண்கள், ஏழைப் பெண்கள் மற்றும் ஊனமுற்ற ஆண், பெண் ஆகியோருக்கு இலவச தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன.

இலவச தையல் இயந்திரங்கள் பெற விரும்புபவர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட சமூக நல அலுவலருக்கு உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பம் செய்தல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பம் செய்கிறவர்களுக்குமுதுநிலை வரிசையின்படி தேர்வுக் குழு மூலம் தேர்வு செய்யப்பட்டு, மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவில் தேர்வு செய்யப்பட்ட மனுதாரர்களுக்கு இலவச தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே, தனியாக ஒரு தொகுதிக்கென்று தையல் இயந்திரம் வழங்கும் நிலை எழாது.

25—

வெள்ளோட்டம் கிராம ஊனமுற்றோர்களுக்கு உதவித் தொகை வழங்கல்

வினா எண் 19249—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், வெள்ளோட்டம் பரப்பு கிராமத்தில் 13 ஊனமுற்றோர்களுக்கு மாதா மாதம் உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், வெள்ளோட்டம் பரப்பு கிராமத்தில் உதவித்தொகை கோரி உடல் ஊனமுற்றவர்களிடமிருந்து மனு எதுவும் பெறப்படவில்லை. எனினும் வெள்ளோட்டம் பரப்பு கிராமத்திலுள்ள உடல் ஊனமுற்றவர்கள் மனு செய்தால் அம்மனுக்களை விசாரித்து அவர்களுக்குத் தகுதி இருப்பின் அரசு உதவித் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

26—

அண்ணா அருங்காட்சியகத்தில் டாக்டர் எம்.ஜி.ஆர்.-ம் அண்ணாவும் சேர்ந்த படம் வைத்தல்.

வினா எண் 7483—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

(அ) சென்னை கடற்கரையிலுள்ள அண்ணா அருங்காட்சியகத்தில் டாக்டர் எம்.ஜி.ஆர்.-ம் அண்ணாவும் சேர்ந்த படம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை படங்களில் டாக்டர் எம்.ஜி.ஆர். உள்ளார் ?

(இ) மற்ற படங்கள் வைக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) ஒன்று.

(இ) பரிசீலனையில் இல்லை.

27—

திரைப்படத் தொழில் நுட்பவியல் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துதல்.

வினா எண். 13664—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திரைப்படத் தொழில் நுட்பவியல் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் :

இல்லை.

28—

விளையாட்டுத் துறையையும் விளையாட்டு வளர்ச்சி வாரியத்தினையும் இணைக்கும் திட்டம்

வினா எண் 7840—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 29

விளையாட்டுத் துறையையும் விளையாட்டு வளர்ச்சி வாரியத்தினையும் இணைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இளைஞர் விளையாட்டுப் பயிற்சித் துறையினையும், தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சி வாரியத்தினையும் இணைத்து "தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் குழுமம்" என்ற அமைப்பினை ஏற்படுத்தி அரசாணை நிலை எண் 641, கல்வி, நாள் 18-7-1992-ல் அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது (இது பற்றிய குறிப் பொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது).

குறிப்பு

மாநில அரசு விளையாட்டு முன்னேற்றத்திற்கென பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு ஒரு அரசாக விளங்கி வருகின்றது. மாநில அரசு 1979-ம் ஆண்டு விளையாட்டிற்கென "இளைஞர் விளையாட்டுப் பயிற்சித் துறை" என்ற தனித் துறையை உருவாக்கியது. "தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகம்" என்ற ஒரு அமைப்பினை அரசாணை எண் 289, கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள் 16—3—1984—ல் நிறுவியது.

2. தமிழ்நாட்டு இளைஞர்கள், தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று அரசுக்குப் பெருமை சேர்த்துள்ளனர். மாநில அரசும் சிறந்த விளையாட்டு வீரர்/வீராங்கனைகளை கௌரவிக்கிறது. ஆண்டுதோறும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலப் பணிகளுக்கென நிதி ஒதுக்கீடும் அதிகரிக்கப்பட்டு வருகிறது. அரசு விளையாட்டுக்கள் முன்னேற்றமான வெற்றியை ஈட்டித் தருகிறது. நாட்டின், முழுமையான விளையாட்டு வளர்ச்சிக்காக மத்திய அரசு "இந்திய விளையாட்டுக் குழுமம்" என்ற அமைப்பினை உருவாக்கியுள்ளது.

3. இந்திய விளையாட்டுக் குழுமம் என்ற அமைப்பினை போன்றே பல்வேறுவிளையாட்டு முன்னேற்ற அம்சங்களை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் குழுமம் என்ற அமைப்பினை உருவாக்கிட அரசு முடிவு செய்தது. இதன்படி தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் கழகத்தையும் மற்றும் இளைஞர் விளையாட்டு பயிற்சித் துறையையும் இணைத்து, "தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் குழுமம்" என்ற அமைப்

1993 அக்டோபர் 29]

பினை அரசு உருவாக்கியது. இக்குழுமம் 1975-ம் ஆண்டு தமிழ் நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

29—

காலகம் உயர்நிலைப் பள்ளிக்கு ஆசிரியர்களை நியமித்தல்.

வினா எண் 8117—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் காலகம் உயர்நிலைப் பள்ளிக்கு தலைமை ஆசிரியர் (கணிதம்) விளையாட்டு ஆசிரியர், எழுத்தர், கடைநிலை ஊழியர் நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

தலைமையாசிரியர் பணியிடம் 3–9–1992 அன்று நிரப்பப் பட்டுவிட்டது. உடற் கல்வி ஆசிரியர் மற்றும் எழுத்தர், கடைநிலை ஊழியர் பணியிடங்கள் நிதி நிலைமைக்கேற்ப அரசால் அனுமதிக்கப்படும்போது பரிசீலிக்கப்படும்.

30—

ஆசிரியர்களுக்கு இசைப் பயிற்சி அளித்தல்

வினா எண் 8158—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசால் தொடக்கப் பள்ளிகளுக்கு வழங்கப் பட்ட இசைக் கருவிகள், ஆய்வகப் பொருள்கள் யாவும், மாணவர் களுக்கு கற்றுக் கொடுக்க ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) தொடக்கப்பள்ளி ஆசிரியர்களில் இதுவ ர 86,000 ஆசிரியர்களுக்கு 10 நாள் பணியிடைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது இப்பயிற்சியில், புதிய பாடத் திட்டம், சார்ந்ததும், கரும்பலகைத் திட்டத்தின்கீழ் மத்திய அரசால் வழங்கப்பட்ட கல்வி உபகரணங் களை கையாள்வது சார்ந்தும், பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

31—

சுதந்திர போராட்ட வீரரை பல்கலைக் கழகங்களின் செனட் உறுப்பினராக நியமித்தல்

வினா எண் 8663— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்பு மிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்களில் செனேட் மற்றும் கவுன்சில்களில் அரசு நியமிக்கும் உறுப்பினர்களில் சுதந்திரப் போராட்ட வீரர்களில் இருந்தும் ஒருவரை நியமிக்க அரசு முன்வருமா ?

விடை—

இத்திருக்கோயிலின் நிர்வாகத்தை திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் நிர்வாகத்துடன் இணைத்திட தமிழ்நாடு நிர்வாக வாரிய கூட்டத்தின் தீர்மானம் எண் 140, நாள் 20–6–1992-ன்படி தீர்மானிக்கப்பட்டதன் பேரில், 17–7–1992-ஆம் நாளன்று அதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

96—

இராமநாதபுர திருக்கோயிலுக்கு சொந்தமான தென்னை மூலம் வரும் வருமானம்.

வினா எண் 15792—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான தென்னை மூலம் வரும் வருமானம் 1992—93-ல் எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் :

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள திருக்கோயில்களில் உள்ள மொத்த தென்னை மரங்கள் 175. அவற்றின் மூலம் 1992–93-ஆம் ஆண்டு வரப்பெற்ற வருமானம் ரூ. 2,522 ஆகும்.

97—

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மடங்களைப் பராமரித்தல்.

வினா எண் 15795— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மடங்கள், அவைகளுக்கு உள்ள நிலங்கள், கட்டிடங்கள் மதிப்பு எவ்வளவு ?

(ஆ) அவைகளை பராமரிக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்யுமா ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்துசமய அறநிலையச் சட்டவிதி 6(13) மற்றும் இதர விதிகளின் கீழ் மடம் எதுவுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

98—

பேரூர் பட்டீஸ்வரர் கோயில் நிலங்களைக் கையகப்படுத்துதல்.

வினா எண் 16073—திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பேரூர் பட்டீஸ்வரர் கோயிலின் சொத்து மதிப்பு எவ்வளவு ?

(ஆ) நிலங்கள் எவ்வளவு ?

(இ) தனியார் வசம் உள்ள அக்கோயில் நிலங்களைக் கையகப்படுத்த அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) ரூ. 74,55,693.75.

(ஆ) பேரூர் கிராமத்தில் இத்திருக்கோயிலுக்கு 50.48.0 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்கள் உள்ளன. இதில் 33.75.0 ஹெக்டேர் நிலம் 44 நபர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. 6.82.0 ஹெக்டேர் நிலம் ஆலய வசமுள்ளது. 9.91.0 ஹெக்டேர் நிலம் 50 ஆண்டுகளுக்கும் மேலாக தனியார் ஆக்கிரமிப்பில் உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(இ) நீதிமன்றம் மூலமாகவும், பேச்சு வார்த்தைகள் மூலமாகவும் தனியார் ஆக்கிரமிப்பில் உள்ள நிலங்களை திருக்கோயிலின் சுவாதீனத்திற்குக் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

99—

வேப்ப எண்ணெய் உற்பத்தி மையத்திற்கு மின்சார வசதி.

வினா எண் 15086—டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கம் நகரின் தோக்கவாடியில் அமைந்துள்ள தமிழக அரசின் கதர் கிராம வாரியத்தின் வேப்ப எண்ணெய் உற்பத்தி மையத்திற்கு மின்சார வசதி கிடைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த்துறை அமைச்சர் :

தோக்கவாடி எண்ணெய் பிழியும் அலகிற்கு தற்போது ஒரு வாரத்தில் இரவில் 10.00 மணி முதல் காலை 6.00 மணி வரையிலும் மறுவாரத்தில் பகல் 12.00 மணி முதல் மாலை 6.00 மணி வரையிலும் மின் சப்ளை கிடைக்கிறது. கிட்டத்தட்ட 14 மணிநேரம் மின்சப்ளை கிடைப்பதால் எண்ணெய் பிழியும் அலகு இயங்குவதில் எந்த இடற்பாடும் இல்லை.

100—

பரமக்குடி தாலுக்காவில் வழங்கப்பட்ட கடன்கள்.

வினா எண் 16643—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காதி வாரியத்தின் மூலம் இராமநாதபுர மாவட்டம், பரமக்குடி தாலுக்காவில் 1992-93-ல் வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு ?

1993 அக்டோபர் 29]

(ஆ) இவற்றால் பயன்பெற்றோர் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர் :

(அ) 1992-93-ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தாலுக்காவில் மொத்தம் ரூ. 3,78,270-க்கு தனிநபர் கடன் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இவற்றால் மொத்தம் 76 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

1— இருபத்திரெண்டாம் பட்டியல்.

ஆலங்குளம் அரசு மருத்துவமனைக்கு பெருந்தலைவர் காமராஜ் பெயர் சூட்டல்.

வினா எண் 14176—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் அரசு மருத்துவமனைக்கு பெருந்தலைவர் காமராஜ் பெயர் சூட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

இல்லை.

2—

உக்கிரன்கோட்டை மருத்துவமனைகளுக்கு போதுமான மருந்துகள் வழங்கல்.

வினா எண் 14189—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் தொகுதியில் உள்ள ஊத்துமனை, வி.கே. புதூர், மானூர், கங்கைகொண்டான், ஆலங்குளம்,

[1993 அக்டோபர் 93

உக்கிரன்கோட்டை மருத்துவ மனைகளுக்கு போதுமான மருந்துகள் வழங்கவும் முழு நேரமும் மருத்துவர்கள் இருக்கவும் ஏற்பாடு செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(1) கடந்த நிதியாண்டில் (1992—93) ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் தேவையான மருந்துகள், மற்றும் மாத்திரைகள் வாங்கி வழங்க அரசு ரூ. 50,000-நிதி ஒதுக்கீடு செய்திருந்தது. அதன்படி அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் தலா ரூ. 50,000- மதிப்பிற்கான மருந்து, மாத்திரைகள் வழங்குவதற்கான வழங்கல் ஆணைகள் அனுப்பப்பட்டு, மருந்து மற்றும் மாத்திரைகள் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் சம்பந்தப்பட்ட துணை இயக்குநர்கள் மூலம் சென்றடைந்துள்ளது.

(2) தவிர நடப்பு நிதியாண்டில் முதல் தவணையாக ரூ. 20,000-ம் மதிப்பிற்கான மருந்து மற்றும் மாத்திரைகள் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் வழங்குவதற்கான வழங்கல் ஆணைகள் அனுப்பப்பட்டுள்ளன.

(3) மருத்துவ அலுவலர்கள் ஆரம்ப சுகாதார நிலைய குடியிருப்புகளில் தங்கி, நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க தகுந்த அறிவுரைகள் ஏற்கனவே வழங்கப்பட்டு உள்ளன. இவ்வறிவுரைகளை மருத்துவ அலுவலர்கள் தவறாது பின்பற்ற தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

TRUTH ALONE TRIUMPHS

3—

எடமணலில் ஆரம்ப சுகாதார நிலையம் பயன்படுத்த நடவடிக்கை?

வினா எண் 15475—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதில் எடமணலியில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டி 5 வருடங்களாக பயன்படுத்தப் படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைப் பயன்படுத்த எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்.

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) சீர்காழி தொகுதி எடமணலில் ஆரம்ப சுகாதார நிலையம் துவங்குவதற்கு அரசினால் கட்டிடம் ஒன்று அவ்வூரில் கட்டப்படவில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

4—

கப்பளாஞ்சேரி ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்துதல்.

வினா எண் 15673—டாக்டர். க. கோபால்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி திருமருகல் ஒன்றியம் கப்பளாஞ்சேரி ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்தும் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி துவங்கப்படும்.

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): நாகை காயிதே மில்லத் மாவட்டம், திருமருகல் ஒன்றியத்தின் கப்பளாஞ்சேரி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் இயங்கவில்லை. அக் கிராமத்தில் சித்த மருந்தகம் செயல்பட்டு வருகிறது. மேற்படி மருந்தகம் விரிவு படுத்துவது குறித்து செயற் குறிப்பு எதுவுமில்லை.

5—

கிண்டியில் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்திற்கு கட்டிடம் கட்ட அரசு கையகப்படுத்திய நிலம்.

வினா எண் 16034—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு கட்டிடம் கட்ட கிண்டியில் அரசு கையகப்படுத்திய நிலத்தின் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

21-10-1992 நாளிட்ட அரசு ஆணை எண் 1165, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையில், சென்னை, கிண்டி கிங் இன்ஸ்டிடியூட்டின் ஒப்படைப்பில் உள்ள நவாப் கார்டன் என்ற இடத்தில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக் கழகத்திற்கு கட்டிடம் கட்ட நிலம் பெறப்பட்டு ஒப் படைக்கப்பட்டுள்ளது. இதில் பல்கலைக்கழக நிர்வாக கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. இதில் உள்ள மொத்த நிலங்கள் எவ்வளவு மற்றும் எவ்வளவு நிலம் பல்கலைக் கழகத்திற்கு கொடுக்கலாம் என்ற விவரம் நில நிர்வாக ஆணையரிடம் கலந்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

6—

தருமபுரி மாவட்டத்தில் புதியதாக ஆரம்பிக்கப்பட்ட சுகாதார மையங்கள்.

வினா எண் 16988—திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் புதியதாக ஆரம்பிக்கப்பட் டுள்ள சுகாதார மையங்கள் எத்தனை ?

(ஆ) காவேரிப் பட்டினம் தொகுதியில் எத்தனை சுகா தார மையங்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): தற்சமயம் புதிதாக சுகாதார மையங் கள் அமைக்கும் சாத்தியக் கூறு இல்லை.

1993 அக்டோபர் 29]

7—

திருமங்கலம் அரசு பொது மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளுக்கு தொட்டில் வசதி செய்தல்.

வினா எண் 17489—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் அரசு பொது மருத்துவமனையில் மகப்பேரு பிரிவில் பிறக்கும் குழந்தைகளுக்குப் பயன்படுத்த தொட்டில்கள் இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், தொட்டில்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): மதுரை மாவட்டம் திருமங்கலம் அரசு பொது மருத்துவமனையில் மகப்பேரு பிரிவுக்கென ஒதுக்கப்பட்ட 12 படுக்கைகளுக்கு 16 குழந்தைத் தொட்டில்கள் உள்ளன. அங்கு தினசரி சராசரியாக 4 குழந்தைகளே பிறக்கின்றன. எனவே, இம்மருத்துவமனையில் மகப்பேறு பிரிவில் பிறக்கும் குழந்தைகளுக்குப் பயன்படுத்த போதுமான தொட்டில்கள் உள்ளன.

8—

கொத்தன் குளத்திற்கு பேருந்து வசதி செய்தல்.

வினா எண் 14134—திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி கொத்தன்குளத்திற்கு பேருந்து வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

ராதாபுரம் தொகுதியில் உள்ள கொத்தன்குளத்திற்குச் செல்லக்கூடிய சாலையில் சிறிய வாகனங்கள்கூட செல்ல இயலாத நிலை உள்ளதால், அக்கிராமத்திற்கு உடனடியான பேருந்து வசதி செய்ய இயலாத நிலை உள்ளது.

[1993 அக்டோபர் 29

9—

சீர்காழியிலிருந்து நாகப்பட்டினத்திற்கு பேருந்து வசதி.

வினா எண் 14273—திரு. து. மூர்த்தி ; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழியிலிருந்து நாகப்பட்டினத்திற்கு பேருந்து வசதி சோழன் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் செய்து கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): சீர்காழியிலிருந்து நாகப்பட்டினத்திற்கு தற்சமயம் பேருந்து வசதி சோழன் போக்குவரத்துக் கழகம் இதர போக்குவரத்துக் கழகம் மற்றும் தனியார் மூலம் 40 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. சீர்காழி நாகப்பட்டினம் தடம் பேருந்து வசதி பெற்ற தடமாகும்.

10—

பரமக்குடி பணிமனையில் இயங்குகின்ற பலவழிப் பேருந்துகளை இரு வழிப் பேருந்துகளாக மாற்றுதல்.

வினா எண் 14871—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி பணிமனையில் இயங்குகின்ற பலவழி பேருந்துகள் எத்தனை ?

(ஆ) பலவழிப் பேருந்துகளை இருவழி பேருந்துகளாக மாற்ற அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. எ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): பரமக்குடி பணிமனையில் பயணிகள் விகிதாச்சாரம் குறைவாகவுள்ள வழித்தடங்களில் பல்முனைத் திட்டத்தின் கீழ் மூன்றும் அதற்கு மேற்பட்ட வழித்தடங்களிலும் 13 நகரப் பேருந்துகள் 49 வழித்தடங்களில் இயக்கப்பட்டு வருகின்றன.

1993 அக்டோபர் 29]

மேற்படி 49 வழித்தடங்களுக்கும் இரண்டு வழித்தடங்களுக்கு ஒரு பேருந்து வீதம் இயக்குவதற்கு கூடுதலாக 12 பேருந்துகள் தேவைப்படுகின்றன. எனவே, 12 பேருந்துகளை கூடுதலாக இயக்குவதற்குரிய சாத்தியக்கூறுகள் இல்லை.

11—

பரமக்குடி பணிமனையில் இயங்குகின்ற மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்.

வினா எண் 14872—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி பணிமனையில் இயங்குகின்ற மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் எத்தனை?

(ஆ) அதில் புதிய பேருந்துகள் எத்தனை?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பரமக்குடி பணிமனையில் தற்சமயம் 50 வழித்தடப் பேருந்துகளும் 5 உபரிப் பேருந்துகளும் ஆக மொத்தம் 55 பேருந்துகள் இயங்கி வருகின்றன.

(ஆ) அதில் புதிய பேருந்துகள் 5 ஆகும்.

12—

நட்டத்தில் இயங்குகின்ற மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம்.

வினா எண் 11952—திரு ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மற்றப் போக்குவரத்துக் கழக பேருந்துகளை விட மருதுபாண்டியர் கழகம் மட்டும் அதிகமாக நட்டத்தில் இயங்குகிறதா?

(ஆ) ஆம் எனில் அதற்கு என்ன காரணம்?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்.

(அ) மற்றும் (ஆ) மற்ற போக்குவரத்துக் கழகங்களைவிட மருதுபாண்டியர் கழகம் மட்டும் அதிகமாக நட்டத்தில் இயங்கவில்லை.

13—

அழகிய பாண்டியபுரம், ரெட்டியார்பட்டி ஆகிய ஊர்களுக்கு பேருந்து வசதி.

வினா எண் 14875—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி அழகியபாண்டியபுரம் ரெட்டியார்பட்டி வீராணம் அதிசயபுரம் பனங்குன்றுபுரம் வழியாக வி. கே. புதூருக்கு பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பேருந்து விடப்படும்.

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்.

(அ) மற்றும் (ஆ) ஏற்கனவே திருநெல்வேலியிலிருந்து வினாவில் உள்ள ஊர்கள் வழியாக (பரங்குன்றாபுரம் நீங்கலாக) வி. கே. புதூருக்கு நேரடிப்பேருந்து வசதிகள் தற்போது உள்ளன. தவிர சுரண்டை வி.கே. புதூர் பிரதான சாலையிலிருந்து பிரிந்து சுமார் 1.0 கி.மி. தூரத்திற்கும் குறைவான தொலைவில் அமைந்துள்ள பரங்குன்றாபுரத்தில் வசிக்கும் கிராம மக்கள் பிரதான சாலைக்கு வந்துவிட்டால் வி. கே. புதூர் வருவதற்கு ஏராளமான பேருந்து வசதிகள் உள்ளன. ஆகவே வினாவில் கேட்டுள்ள சுற்று வழித்தடத்தில் புதிதாக பேருந்து இயக்க அவசர சூழ்நிலை தற்போது இல்லை.

14—

பரமக்குடியிலிருந்து மஞ்சக்கொல்லைக்கு பேருந்து வசதி.

வினா எண் 15391—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் இருந்து மஞ்சக் கொல்லைக்கு பேருந்துகள் விட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியிலிருந்து மஞ்சக் கொல்லை ஊருக்கு 22—10—1992 முதல் நாள் ஒன்றுக்கு ஆறு சிங்கிள்களாக மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயங்கி வருகிறது.

15—

பரமக்குடி எம். பி. டி. சி. டிப்போவில் உள்ள பேருந்துகள்,

வினா எண் 15396—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி எம். பி. டி. சி. டிப்போவில் உள்ள பேருந்துகள் எத்தனை?

(ஆ) அவற்றில் புதிய பேருந்துகள் எத்தனை?

(இ) மற்ற போக்குவரத்து கார்ப்பரேஷனில் இருந்து வாங்கி ஓடுகிற பேருந்துகள் எத்தனை?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத் துத்துறை அமைச்சர்.

(அ)	பரமக்குடி எம்.பி.டி.சி. டிப்போவில் உள்ள பேருந்துகள். ..	55
(ஆ)	இவற்றில் புதிய பேருந்துகள் ..	4
(இ)	மற்ற போக்குவரத்துக் கழகங்களில் இருந்து வாங்கி ஓடுகின்ற பேருந்துகள். ..	3

16—

இராமநாதபுர வேலைவாய்ப்பு அலுவலகத்தில் எம்.பி.டி.சி.—இல் வேலைவாய்ப்பு பெற்ற ஓட்டுனர்கள் மற்றும் நடத்துனர்கள்.

வினா எண் 15398—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுர வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் 1991–92 இல் எம்.பி.டி.சி. இல் வேலைவாய்ப்பு பெற்ற ஓட்டுனர்கள் நடத்துனர்கள் எத்தனை பேர்?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்.

இராமநாதபுரம் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் 1991–92 ல் எம்.பி.டி.சி. யில் வேலை வாய்ப்புப் பெற்ற ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

1991 ஆம் ஆண்டு ஓட்டுநர்கள் 18 நடத்துனர்கள் 16.

1992 ஆம் ஆண்டு ஓட்டுனர்கள் 75, நடத்துனர்கள் 103.

17—

கைத்தறி தொழிலில் சிட்டா நூல் விற்பனைக்கு விதிக்கப்படும் வரியை நீக்குதல்.

வினா எண் 4589—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கைத்தறி தொழிலில் சிட்டா நூல் விற்பனைக்கு விதிக்கப்படும் 2 சதவிகிதம் வரியை நீக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரித் துறை அமைச்சர் :

இல்லை.

1993 அக்டோபர் 29]

18—

சிவகாசியில் வசூலாகும் விற்பனை வரிகள்.

வினா எண் 10686—திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

சிவகாசியில் இருந்து வரிகள் மூலம் ஆண்டு ஒன்றுக்கு எந்தெந்த இனங்களிலிருந்து எவ்வளவு வசூலாகிறது ?

விடை—

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரித் துறை அமைச்சர் :

சிவகாசியில் இருந்து கீழ்க்கண்ட இனங்களில் 1992–93-ம் ண்டில் வசூல் செய்யப்பட்ட வரிகள் விபரம் பின்வருமாறு;—

வரிசை எண்.	பொருள்.	1992–93 ஆண்டில் வசூல் செய்யப்பட்ட வரி. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம் (மொத்தம்.)
(1)	(2)	(3) (ரூபாய் இலட்சத்தில்)
1	அச்சிட்ட பொருள்கள்	641.15
2	வெடிகள்	846.42
3	கெமிக்கல்ஸ்	74.20
4	பேப்பர் மற்றும் போர்டு	14.44
5	எண்ணெய்	1.15
6	மரம்	43.42
7	கழிவு பேப்பர்	28.83
8	பேக்கரி	0.40

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

53—312—47

(1)	(2)	(3)
9	கடப்பைக்கல்	1.05
10	தீக்குச்சி மற்றும் அட்டைக்கட்டு ..	4.44
11	அச்சுமை	29.85
12	காகு கேட்டடு அட்டை	2.18
13	சிட்டு கட்டு	11.78
14	ரப்பர் பெல்ட்	5.19
15	பாலித்தீன் பைகள்	61.63
16	மிஷனரி	7.96
17	பேப்பர் குழாய்	2.09
18	யானா வண்டி பாகங்கள்	0.44
19	தீப்பெட்டி மூலப்பொருள்கள்	1.62
20	ரெடிமேட்ஸ்	1.25
21	வெடிகள் தயார் செய்யும் பொருள்கள்	0.33
22	பெயிண்ட்ஸ்	16,24
23	சணல்	0.34
24	நகைகள்	0.18
25	கிழங்கு மாவு	1.24
26	ஸ்டீல் உல்	1.05
27	சிமெண்ட் பூக்கல்	0.12
28	ஐஸ்	0.05
29	பிளாஸ்டிக் பொருள்கள்	8.44
30	சாவி கொத்து	0.12

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)
31	உணவு (ஹோட்டல்)	0.48
32	அலுமினியம் பவுடர்	6.97
33	நூல்	31.97
34	கழிவு பஞ்சு	2.24
35	டின் கட்டிங்ஸ்	1.49
36	மெழுகு	1.74
37	சைக்கிள் சாமான்கள்	8.18
38	மின்சாதன பொருட்கள்	1.32
39	ஹார்டுவேர்ஸ்	4.01
40	சித்தா மருந்து	10.05
41	இதர பொருட்கள்	16.60
		1,892.65

19—

காரைக்குடியில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக அலுவலகம் துவக்குதல்.

வினா எண் 4412—திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

''காரைக்குடியில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக (Tamil Nadu Industrial Investment Corporation Limited) அலுவலகம் துவக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

மானாமதுரையில் இயங்கிவந்த தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக கிளை அலுவலகத்தை காரைக்குடிக்கு மாற்றப்பட்டு 11–6–1992 முதல் காரைக்குடியில் இயங்கி வருகிறது.

20—

தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகத்தால் தொழில் வளாகம் உருவாக்குதல்.

வினா எண் 5459— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகத்தால் எங்கெங்கு தொழில் வளாகம் உருவாக்கப் பட்டன.

(ஆ) நத்தம் தாலுக்காவில் ஒரு தொழில் வளாகம் உருவாக்க அரசு அந்தக் கழகத்திற்கு அறிவுறுத்துமா?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டு நிறுவனம் தமிழகத்தில் ஏழு இடங்களில் தொழில் வளாகங்களை உருவாக்கி உள்ளது. அவைகள் :

(1) ஓசூர், (2) இராணிப்பேட்டை, (3) கும்மிடிப்பூண்டி, (4) கடலூர், (5) புதுக்கோட்டை, (6) மானாமதுரை, (7) தூத்துக்குடி.

(ஆ) தற்சமயம் நத்தம் தாலுக்காவில் வளாகம் உருவாக்க எந்தவித உத்தேசமும் இல்லை.

21—

அரசு நிறுவனங்களில் எல்லா தொழில் பிரிவுகளிலும் வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு செய்தல்.

வினா எண் 6131— திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

75 சதவீதத்திற்கு மேல் நிதி நிறுவனங்களிடமிருந்து உதவி பெறும் தனியார் நிறுவனங்கள் மிகக் குறைந்த அளவே தங்கள் பங்காக முதலீடு செய்வதால் அந்தத் தொழில் நிறுவனங்கள் வேலைக்கு ஆள் எடுக்கின்றபொழுது தற்பொழுதுள்ள இடஒதுக்கீடு முறையை அமுல்படுத்த அரசு முன்வருமா ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் :

அரசு நிறுவனங்களில் எல்லாத் தொழில் பிரிவுகளிலும் வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு முறை பின்பற்றப்படுகிறது. ஆனால் அரசு நிறுவனங்களிடம் நிதி உதவி பெறும் தனியார் துறை மற்றும் இணைத்துறை நிறுவனங்களில் வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு முறை அமுல்படுத்தப்படுவதோ, பின்பற்றப்படுவதோ இல்லை. இம்முறையைப் பின்பற்றும்படி வற்புறுத்தவும் விதிகளில் இடமில்லை. பெரிய தொழில் நிறுவனங்களில் நிர்வாக விஷயங்கள் அவற்றின் முனைவர்களிடமே விடப்பட்டுள்ளது. அவற்றில் தலையிட்டு வற்புறுத்த முன்வந்தால், தமிழகத்தில் தொழில் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படும்.

22—

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் செய்தித்தாள் காகிதத்தின் விற்பனை விலையை நிர்ணயித்தல்.

வினா எண் 6245—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனம் தயாரிக்கும் நியுஸ்பிரின்ட் காகிதத்திற்கு டன் ஒன்றுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள விலை என்ன ?

(ஆ) இந்த விலை நிர்ணயம் மத்திய அரசு குறிப்பிடுகிறபடி நிர்ணயிக்கப்படுகிறதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

(ஈ) ஆண்டொன்றுக்கு தற்போதுள்ள உற்பத்தித் திறன் மேலும் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் செய்தித்தாள் காகிதத்தின் விற்பனை விலை தற்போது டன் ஒன்றுக்கு ரூ. 19,070 ஆகும்.

(ஆ) இல்லை: இக்காகிதத்தின் விலை, அங்காடி நிலவரம் மற்றும் உற்பத்திச் செயலுக்கேற்ப காகித உற்பத்தியாளர்களால் நிர்ணயிக்கப்படுகிறது.

(இ) இக்கேள்விக்கிடமில்லை.

(ஈ) ஆம், தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் உற்பத்தித் திறனை, ஆண்டுக்கு 90,000 டன்னிலிருந்து 1,80,000 டன்னாக இரட்டிப்பாக்கும் விதத்தில் ரூ. 525 கோடி செலவில் உலக வங்கிக் கடனுதவியுடன் விரிவாக்கத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

23—

அந்தியூரில் நலிவடைந்த சிறு ஸ்டவ்விக் இண்டஸ்ட்ரீஸ் தொழில் தொடங்க கடனுதவி வழங்குதல்.

வினா எண் 6926—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூரில் நலிவடைந்த சிறு ஸ்டவ்விக் இண்டஸ்ட்ரிஸ் தொழில் தொடங்க அரசு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் எத்தனை பேருக்கு கடன் வழங்கியுள்ளது?

(ஆ) இதுவரை கட்டிய வட்டியும், அசலும் வாங்கியத் தொகை வரை கட்டியிருந்தால் அவர்களுக்குச் சிறப்புச் சலுகையினை அரசு வழங்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூரில் திரி அடுப்பு தயாரிப்பதற்காக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 1984–85-ம் ஆண்டில் 8 பிரிவுகளுக்கு ரூ. 8.16 இலட்சம் கடனுதவி அளித்திருக்கிறது.

(ஆ) தொழில் பிரிவுகளுக்கு அளிக்கப்பட்ட கடனுதவி இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கி/இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து பெற்ற மறு நிதியுதவி

1993 அக்டோபர் 29]

யின் மூலம் அளிக்கப்பட்டாலும், கழகம் அந்தக் கடனை வட்டியோடு திருப்பி செலுத்த வேண்டியிருப்பதாலும் அந்த கடனுக்கு வட்டியைத் தள்ளுபடி செய்வது போன்ற சிறப்புச் சலுகைகளை அளிக்க இயலாது. அதனால் மொத்த வட்டியையும் தள்ளுபடி செய்ய இயலாது.

24—

தமிழ்நாட்டில் இரசாயனப் பொருட்கள் மற்றும் மின் அணுச் சாதனங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பு அளித்தல்.

வினா எண் 7718— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இராசாயனப் பொருட்கள், மின் அணுச்சாதனங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அரசு மற்றும தனியார் துறையின் கீழ் எங்கெங்கு இயங்குகின்றன?

(ஆ) அவற்றினால் வேலைவாய்ப்பு பெற்றோர் எண்ணிக்கை விவரம் என்ன ?

(இ) தனியாரின் கீழ் இயங்கும் இத்தகு தொழிற்சாலைகளில் தொழிலாளர் நல சட்டங்கள் புறக்கணிக்கப்படுவதாக அரசுக்கு ஏதேனும் முறையீடுகள் வந்தனவா ?

(ஈ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் இரசாயனப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. மின்னணு சாதனங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் மதுரை, திண்டுக்கல்—அண்ணா, திருநெல்வேலி—கட்டபொம்மன், இதம்பரனார், கன்னியாகுமரி, பெரியார் மாவட்டங்கள் தவிர அனைத்து மாவட்டங்களிலும் உள்ளன.

(ஆ) இரசாயனப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அரசுத்துறையின் 54-ம் தனியார் துறையில் 1231-ம் உள்ளன. இவற்றில் 1,14,278 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். மின்னணுத் தொழிற்சாலைகள் அரசுத்துறையில் 5-ம், தனியார் துறையில் 113-ம் உள்ளன. இவற்றில் 4,307 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர்.

(இ) முறையீடு எதும் பெறப்படவில்லை.

(ஈ) வினா எழவில்லை.

25—

தருமபுரி மாவட்டத்தில் வயது முதிர்ந்தோர் உதவித்தொகை மற்றும் உடல் ஊனமுற்றோர் உதவித்தொகை வழங்குதல்

வினா எண் 19398—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் வயது முதிர்ந்தோர் உதவித் தொகை உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை பெறுவோர் எத்தனை பேர் ?

(ஆ) அரசுக்கு மனுச் செய்து உதவித்தொகை பெறக் காத்திருப்போர் எத்தனை பேர் ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

(அ) தர்மபுரி மாவட்டத்தில் 12,766 பேர் முதியோர் உதவித்தொகை பெறுகின்றனர், 951 பேர் உடல் ஊன முற்றோர் உதவித்தொகை பெறுகின்றனர்.

(ஆ) உதவித்தொகை அனுமதிக்காக நிலுவையிலுள்ள மனுக்கள்.

(i) முதியோர் உதவித் தொகை : 371.

(ii) உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை : 38.

26—

ஆவுடையார் பாளை கிராமத்தில் ஊனமுற்றோர்களுக்கு உதவி செய்தல்.

வினா எண் 19255—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

1993 அக்டோபர் 29]

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், ஆவுடையார் பாளை கிராமத்தில் உள்ள ஊனமுற்றோர்களுக்கு உதவி செய்ய ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திராகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், ஆவுடையார் பாளை கிராமத்தில் உள்ள ஊனமுற்றோர்களுக்கு உதவி செய்ய அரசு ஆவன செய்யும். எல்லா இடங்களிலும் ஊனமுற்றோர்களுக்கு உதவி தரப்படுகிறது. மொடக்குறிச்சியில் பார்த்து ஆவன செய்யும்படி ஊன முற்றோர் நல்வாழ்வு இயக்குநர் பணிக்கப்பட்டுள்ளார்.

27—

ஆசிரியர்கள் போராட்டம் நடத்தும்போது அவர்களை அழைத்துப்பேசி கோரிக்கைகளை நிறைவேற்றுதல்.

வினா எண் 12163—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆசிரியர்கள் போராட்டம் நடத்தும்போது அவர்களை அழைத்துப் பேசி கோரிக்கைகளை நிறைவேற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

ஆசிரியர்கள் போராட்டம் நடத்தும்போது மட்டுமல்லாமல், ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளோடு, கோரிக்கைகளின் தன்மைக்கேற்ப, அவ்வப்போது பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்படுகிறது.

28—

கோட்டூர் ஒன்றிய பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு சொந்த கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 13785—திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டிணம் காயிதேமில்லத் மாவட்டம், கோட்டூர் ஒன்றியம் பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு அரசுக்குச் சொந்தமான இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆமெனில் அத்திட்டம் எப்போது நிறைவேற்றப் படும்.

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இப்பள்ளிக்கு தற்போது சொந்த இடமில்லை. எனவே கோட்டூர் அருள்மிகு கொழுந்தீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான 4.64 ஏக்கர் நிலத்தை வாங்க இப்பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் முயற்சி மேற்கொள்ளப்பட்டு இந்து அறநிலைய ஆட்சித் துறையின் அனுமதி கோரப்பட்டு இக்கோரிக்கை அத்துறை யினால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

29—

ஓசூர் வட்டத்திலுள்ள அரசு பள்ளிகளில் ஒவ்வொரு பள்ளிக்கும் தனித்தனியே கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 14686—திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓசூர் வட்டத்தில் உள்ள அரசு பள்ளிகளில் கூடுதல் மாணவர்கள் எண்ணிக்கை உள்ளதால் ஒவ்வொரு பள்ளிக்கும் கட்டிட வசதிக்காக அரசு எவ்வளவு தொகையினை வழங்கி யுள்ளது.

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

ஓசூர் வட்டத்தில் மொத்தம் 16 அரசு உயர்நிலை/மேல் நிலைப் பள்ளிகள் உள்ளன. ஒவ்வொரு பள்ளிக்கும் தனித் தனியே கட்டிட வசதிக்கு நிதி ஒதுக்கப்படவில்லை, 1993-94ம்

நிதியாண்டில் 50 சதவிகிதம் மாட்சிங் கிராண்ட் மூலம் அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு கட்டிடம் கட்ட அரசு ரூ. 75 லட்சம் ஒதுக்கீடு செய்யவுள்ளது. எனவே இத்திட்டத்தின் மூலம் மேற்படி பள்ளிகள் 50 சதவிகிதம் தொகையை சமுதாய ஈடுகட்டின் மூலம் செலுத்த முன்வந்தால் மீதி 50 சதவிகிதம் தொகையை மானியமாக வழங்கி கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

30—

குறிச்சிக் கொல்லை கிராமத்தில் நூல்நிலையம் அமைத்தல்

வினா எண் 15442—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள குறிச்சிக் கொல்லை கிராமத்தில் நூல் நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இல்லை.

31—

கா. உஞ்சிய விடுதி ஆதி திராவிடர்களுக்கு நூல் நிலையம் அமைத்தல்

வினா எண் 15566—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம்திருவோணம் ஒன்றியம் கா. உஞ்சிய விடுதி ஆதிதிராவிடர்களுக்கு 92-93ல் ஒரு நூல் நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இல்லை.

32—

நடுவிக் கோட்டை அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு பெரியக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 15573—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம் நடுவிக் கோட்டை அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு பெரியக் கட்டிடம் கட்ட அரசின் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

33—

நாச்சியார் கோயில் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு அரங்கம் அமைத்தல்

வினா எண். 15582—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் ஒன்றியம் நாச்சியார் கோவில் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு அருகிலுள்ள இடத்தை 92-93ல் விளையாட்டு அரங்கமாக அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இல்லை.

34—

உளூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ஆசிரியர் பற்றாக் குறையைப் போக்குதல்

வினா எண் 15583—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

பட்டுக்கோட்டை கல்வி மாவட்டம் புதுக்கோட்டை உளூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு 1992-93ல் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இல்லை.

35—

பணியிலிருக்கும்போது உயிரிழக்கும் அரசு ஊழியரின் வாரிசுதாரர்களுக்கு சலுகை வழங்குதல்

வினா எண். 10874— திரு. காஞ்சி பன்னீர் செல்வம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பணியிலிருக்கும்போது உயிரிழக்கும் அரசு ஊழியரின் வாரிசுதாரர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் என்ன?

(ஆ) அந்த சலுகைகளுக்குரிய நிபந்தனைகள் ஏதேனும் தளர்த்துவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) (1) குறைந்த பட்சமாக குடும்ப ஓய்வூதியம் கடைசியாக பெற்ற சம்பளத் தொகையில் 30 சதவீதம் வழங்கப்படுகிறது. இத்தொகை குறைந்த அளவு ரூ. 375 ஆகவும் அதிகபட்சம் ரூ. 1,250 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ஓராண்டு தொடர்ச்சியாக அரசுப் பணிபுரிந்து அரசுப் பணியில் இருக்கும்போதே இறந்து போகும் அரசு ஊழியரின் குடும்பத்திற்கும் ஓராண்டு பணி முடிக்காத அரசு ஊழியர் அப்பணிக்காலத்திற்கும் அரசுப் பணிக்கும் தகுதி என்று மருத்துவச் சான்றிதழ் சம்பந்தப்பட்ட உயர் அலுவலருக்கு சமர்ப்பித்திருந்தால் அவ்வூழியரின் குடும்பத்திற்கும் பொருந்தும், ஏழு ஆண்டுகள் பணி செய்து, பணியில் இருக்கும் போது இறந்த அரசு ஊழியரின் குடும்பத்திற்கு 50 சதவீத கடைசி ஊதியத் தொகை குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது.

குடும்ப ஓய்வூதியம், இறந்துபோன அரசு ஊழியரின் கணவன், மனைவிக்கு மறுமணம் செய்து கொள்ளும் வரை அல்லது இறக்கும் வரை வழங்கப்படுகிறது. கணவன், மனைவி இறந்த பின்னர், அவரது குழந்தைகளுக்கு 25 வயது வரை 'திருமணம் செய்து கொள்ளும் வரை, வேலை கிடைக்கும் வரை இதில் எது முதலில் நிகழ்கிறதோ அதுவரை இச்சலுகை வழங்கப்படுகிறது. அவ்வாரிசு மனநிலை குன்றியவர் அல்லது வியாதியால் பீடிக்கப்பட்டவர் ஆக இருந்தால் ஓய்வூதியம் நீடிக்கப்படலாம்.

(2) பணிக்கொடை அரசுப்பணியில் இருக்கும் போதே இறந்து போன அரசு ஊழியரின் குடும்பங்களுக்கு அந்த ஊழியரின் பணிக்காலத்தைப் பொறுத்து கீழ்க்கண்டவாறு பணிக்கொடை வழங்கப்படுகிறது:—

பணிக்காலம்.	பணிக்கொடைத் தொகை.
(அ) ஓராண்டுக்கும் குறைவு	ஒரு மாத சம்பளத்தைப் போல் 2 மடங்கு.
(ஆ) ஓராண்டுக்கு மேல் 5 ஆண்டுக்கும் குறைவு	ஒரு மாத சம்பளத்தைப் போல் 6 மடங்கு
(இ) 5 ஆண்டுகளுக்கு மேல் 20 ஆண்டுகளுக்கும் குறைவு	ஒரு மாதசம்பளத்தைப் போல் 12 மடங்கு
(ஈ) 20 ஆண்டுகள், அதற்கும் மேல்.	ஒவ்வொரு பூர்த்தி செய்த ஆறு மாத கால தகுதி வாய்ந்த பணிக்கு $3\frac{1}{2}$ மாத சம்பள அளவில், அதிக பட்சம் 33 மடங்கு மாதச் சம்பளம். இத்தொகை அதிகபட்சம் 1 லட்சம் ரூபாய் ரூபாய் என நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

(3) குடும்ப நல நிதி—

இத்திட்டத்தின் கீழ் மாதம் ரூ. 10 அரசு ஊழியரின் சம்பளத்தில் பிடிக்கப்படுகிறது. அரசு ஊழியர் இறந்துபோனால் அவர் குடும்பத்திற்கு ரூ. 60,000 வழங்கப்படுகிறது.

(4) மருத்துவ வசதி:—

அரசு ஊழியர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் மாதம் ரூ. 15 அல்லது மருத்துவ செலவுத் தொகை திரும்ப பெறும் வசதி உள்ளது. குடும்ப ஓய்வு ஊதியம் பெறுவோரும் அரசு ஊழியர் இறக்கும்போது பெற்ற மருத்துவ் பயனை இத்திட்டத்தின் கீழ் பெறலாம்.

1993 அக்டோபர் 29]

(5) வீடு கட்டும் முன்பணம் தள்ளுபடி ;—அரசு ஊழியர்கள் வீடுகட்ட முன்பணம் பெற்றிருந்து அரசு ஊழியர்களின் சிறப்பு குடும்ப நல நிதித் திட்டத்தின் கீழ் ஒரு விழுக்காடு தொகையை மாதம் செலுத்துபவராயிருப்பின் பணியிலிருக்கும்பொழுது அவர் இறந்து விட்டால், அவர் அரசுக்கு செலுத்த வேண்டிய மீதித் தொகை வட்டியுடன் தள்ளுபடி செய்யப்படுகின்றன.

(6) இறந்துபோன அரசு ஊழியரைச் சார்ந்து வாழும் நபருக்கு வேலை.

(அ) பணியில் இருக்கும்போது ஒரு அரசு ஊழியர் இறந்து போகும் பட்சத்தில் குடும்பம் நிரந்தரமாக இருக்குமானால் அவரைச் சார்ந்து வாழும் ஒரு நபருக்கு அரசுப் பணியில் வேலை வாய்ப்பளிக்கப்படுகிறது. இவ்வாறு பணி பெறக் காத்திருப்போர் நிறைய எண்ணிக்கையில் இருப்பதால் இக்குறையினை நிவர்த்தி செய்ய 500 மிகையான பணியிடங்களைத் தோற்றுவித்து 10—2—1993ல் அரசு ஆணையிட்டிருக்கிறது.

(ஆ) மேலே குறிப்பிட்ட சலுலைகள் பெற விதிக்கப் பட்டுள்ள நிபந்தனைகள் எதையும் தளர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை

நரிமணம் எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலையில் வேலைக்கு அந்த மாவட்டத்தைச் சேர்ந்த படித்த இளைஞர்களுக்கு முன்னுரிமை அளித்தல்

வினா எண். 12268—திரு. எம். பூராசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

(அ) நாகப்பட்டினம்-காயிதே-மில்லத் மாவட்டத்தில் உள்ள நரிமணம் எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலையில் பணிபுரிவதற்கு அந்த மாவட்டத்தைச் சேர்ந்த படித்து வேலையின்றி இருக்கும் இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) வேலை வாய்ப்பு அலுவலக நடைமுறையின்படி ஒரு குறிப்பிட்ட மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தின் எல்லைக்குள் எழும் காலியிடங்களுக்கு சம்பந்தப்பட்ட வேலையளிப்பவர் சம்பந்தப்பட்ட வேலைவாய்ப்புஅலுவலகத்திற்கு உரிய படிவத்தில் தெரிவித்து, பட்டியல் போட வேண்டும். நரிமணத்தில் மண்ணெண்ணெய்சுத்திகரிப்பு ஆலைநிறுவனம்அங்கு ஏற்படும் காலியிடங்களுக்கு மேற்சொன்னவாறு நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திற்கு உரிய படிவத்தில் தெரிவித்து பட்டியல் கோர வேண்டும். பதிவு மூப்பின் படி உரிய தகுதியுடைய பதிவுதாரர்களின் பெயர்களை நரிமணம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவனத் திற்கு மாவட்ட வேலை வாய்ப்பு நிறுவனம் அனுப்பும். குறிப்பிட்ட தகுதியுடைய பதிவுதாரர்கள் நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் இல்லை யென்றால் மற்ற மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்கு அல்லது சென்னை யிலுள்ள தொழில் மற்றும் செயல் வேலை வாய்ப்பு அலுவலகத் திற்கு தெரிவிக்கப்பட்டு பெயர்கள் கோரப்படும். மேற்கண்ட நடைமுறையின்படி கூடியவரை நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தைச் சேர்ந்த படித்த, வேலையின்றி மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளவர்களைப் பதிவுமூப்பு அடிப்படையில் பரிந்துரை செய்யப்படும்

37—

சோப்பு மற்றும் மாசு அகற்றும் பொருள் தயாரிக்கும் தொழிற் சாலைகளில் பாதுகாப்பு முறைகள் கையாளப்படுதல்.

வினா எண் 14382—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோப்பு மற்றும் மாசு அகற்றும் பொருள் தயா ரிக்கும் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு முறைகள் கையாளப் படுபவை யாவை ? அதன் விவரம்.

(ஆ) இத்தொழிற்சாலைகளில் பாதுகாப்பு முறைகள் கையாளப் படுவதை ஊர்ஜிதம் செய்யும் வகையில் எடுக்கப் பட்டுள்ள நடைமுறைகள் யாவை ? அதன் விவரம்.

விடை—

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாட்டில் 28 சோப்பு மற்றும் மாசு அகற்றும் பொருள் தயாரிக்கும் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் உள்ளன. இத்தொழிற்சாலைகளில் (Detergent Industries) இயந்திரங்களுக்கு பாதுகாப்பு கவசங்கள், தீயணைப்பான்கள், தீ வாளிகள் அமைக்கப்பட்டுள்ளன. தூசுகளை நீக்க சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு சாதனங்களாக கையுறை, கண் கவச கண்ணாடிகள் (Goggles) காலுறை ள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) இத்தொழிற்சாலைகள், தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை அலுவலர்களால் கால முறை ஆய்வு (6 மாதத்திற்கு ஒரு முறை) செய்யப்பட்டு, தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர சட்டங்களில் கூறியுள்ள நடைமுறைகள் அமுலாக்கப் பட்டுள்ளதா என சரிபார்க்கப்படுகின்றன. குறைகள் காணப் பட்டால் சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படு கிறது.

38—

கட்டுமானத் தொழிலாளர்களின் நலன் காக்க நலவாரியம் அமைத்தல்.

வினா எண் 17528—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கட்டுமானத் தொழிலாளர்களின் நலன் காக்க அதற் கென்று நலவாரியம் அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில் விபரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாடு உடலுழைப்புத் தொழி லாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்து தல்) சட்டம், 1982-ன் கீழ், கட்டுமானத் தொழிலாளர்களின் நலன் காக்க ஒரு நலத்திட்டம் வகுக்கப்பட்டு அது அரசின்

தீவிர பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தில் இத் தொழிலாளர்களுக்கான நலத் திட்டங்களுக்கான நடவடிக்கைகளை அமுல் படுத்துவதற்காக ஒரு வாரியம் அமைப்பதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

39—

பரமக்குடி நிலவளவங்கி மூலம் பால் பண்ணை அமைத்தல்.

வினா எண் 16558—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நிலவள வங்கி மூலம் பால் பண்ணை அமைக்க 1991–92-ல் வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு ?

(ஆ) எத்தனை மாடுகள் வாங்கப்பட்டன ?

(இ) இதில் பயனடைந்த ஆதிதிராவிடர்கள் எத்தனை பேர் ?

விடை—

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன், கூட்டுறவுத்துறை அமைச்சர் :

(அ) பரமக்குடி கூட்டுறவு நிலவள வங்கி மூலம் பால் பண்ணை அமைக்க 1991–92 ஆம் ஆண்டில் ரூ. 3.92 இலட்சங்கள் கடன் வழங்கப்பட்டது.

(ஆ) பால் பண்ணை அமைக்க மொத்தம் 92 மாடுகள் வாங்கப்பட்டன.

(இ) பால் பண்ணை அமைக்கும் திட்டத்தின்கீழ் பயனடைந்த 12 உறுப்பினர்களில் 2 நபர்கள் ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள்.

40—

பரமக்குடி நிலவள வங்கிக்கு சொந்தக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 16557—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நிலவள வங்கிக்கு சொந்தக் கட்டிடம் கட்ட அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) வரவில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

41—

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றும் விற்பனையாளர்களின் ஊதியத்திற்கு இணையாக அனைத்து கூட்டுறவு விற்பனையாளர்களுக்கும் உயர்த்துதல்.

வினா எண் 16596—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுத் துறையில் நியாய விலைக் கடைகளில் உள்ள விற்பனையாளர்களுக்கு ரூ. 350-ம் நுகர் பொருள் வாணிபக் கழகத்தில் ரூ. 1,000-ம் ஊதியம் வழங்கப்படுவதை சமமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர் :

கூட்டுறவு நிறுவனங்கள் நடத்தும் நியாயவிலைக் கடைகளில் பணியாற்றும் விற்பனையாளர்களின் குறைந்த அளவு மாத தொகுப்பு ஊதியம் (Minimum Consolidated Monthly pay) ரூ. 600-ஆக 1-3-1993 முதல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றும் விற்பனையாளர்களின் ஊதியத்திற்கு இணையாக அனைத்து கூட்டுறவு நியாய விலைக் கடை விற்பனையாளர்களின் ஊதியத்தை உயர்த்துவதற்கு கூட்டுறவு நிறுவனங்களின் நிதி நிலை இடமளிக்காது. எனவே இது பற்றி நடவடிக்கை எடுக்க இயலாது.

42—

நாட்டாணிக் கோட்டை ஆதிதிராவிட மக்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல்.

வினா எண் 12587— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் நாட்டாணிக் கோட்டை வீடற்ற ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் 1992–93 ஆம் ஆண்டில் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல் படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

43—

ஆவணம் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம்.

வினா எண் 12591— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஆவணம் வீடற்ற ஆதி திராவிடர்களுக்கு புதிய காலனி வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் 1992–93 ஆம் ஆண்டில் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப் பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

44—

நடுவிக்கோட்டை ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தல்.

வினா எண் 12592—திரு ஆர் சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் நடுவிக்கோட்டை வீடற்ற ஆதி திராவிட மக்களுக்கு புதிதாக காலனி வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் 1992-93 ஆம் ஆண்டில் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு, டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

45—

நல்லமான் புஞ்சை ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தல்.

வினா எண் 12593—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

[1993 அக்டோபர் 29

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் நல்லமான் புஞ்சை, வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் 1992–93ஆம் ஆண்டில் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படித் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

46—

செங்கமங்கலம் ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 12594—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் செங்கமங்கலம் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டித் தர 1992–93ஆம் ஆண்டில் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

47—

பண்ணைவயல் ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 12596—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை ஒன்றியம் பண்ணை வயலில் வீடு இல்லாத ஆதிதிராவிட மக்களுக்கு புதிய காலனி வீடுகள் கட்டித்தர 1992-93ஆம் ஆண்டில் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங் ப் பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

48—

பள்ளிகொண்டா ஆதி திராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 12597—திரு. ஆர். ங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், பள்ளிக் கொண்டானில் வீடு இல்லாத ஆதிதிராவிட மக்களுக்குப் புதிய காலனி வீடுகள் கட்டித்தர 1992-93ஆம் ஆண்டில் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வ ய்ப்பத் ட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய ப களைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது, எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

49—

பெரியநாயகிபுரம் ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 12595—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஆவணம் பெரியநாயகிபுரம் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு காலனி விடுகள் கட்டித்தர 1992-93ஆம் ஆண்டில் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

50—

முதல்சேரி ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 12598—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் முதல் சேரியில் வீடு இல்லாத ஆதிதிராவிட மக்களுக்கு புதிய காலனி வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் 19 2-93ஆம் ஆண்டில் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து

1993 அக்டோபர் 29]

செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

51—

ஏரிப்புறக்கரை ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 12600— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புறக்கரை வீடு இல்லாத ஆதிதிராவிடர் மக்களுக்கு புதிய காலனி வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் 1992-93ஆம் ஆண்டில் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

52—

பின்னவாசல் ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம்.

வினா எண் 12603— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பின்னவாசல் வீடு இல்லாத ஆதிதிராவிட மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் 1992—93-ல் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் ஏதுவுமில்லை.

53—

திருப்பர்ணிக்காடு ஆதிதிராவிட மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம்.

வினா எண் 12605— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், திருப் பர்ணிக்காடு வீடற்ற ஆதிதிராவிட மக்களுக்கு வீடுகட்டிக் கொடுக் கும் திட்டம் 1992–93-ல் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டியபணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

54—

கொரட்டூர் ஆதிதிராவிட மக்களுக்கு புதிய வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம்.

வினா எண் 12610— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கொரட்டூர் வீடற்ற ஆதிதிராவிட மக்களுக்குப் புதிய வீடு கட்டி கொடுக்கும் திட்டம் 1992–93ஆம் ஆண்டில் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

55—

திருச்சிற்றம்பலம் ஆதிதிராவிடர்களுக்கு புதிய வீடுகள் கட்டிக் கொடுத்தல்.

வினா எண் 12614—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம் பலம் வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு 1992–93ல் புதிய வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந் தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

56—

செறுவாவிடுதி வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு புதிய வீடு கட்டிக்கொடுத்தல்.

வினா எண் 12615—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், செறுவாவிடுதி வடக்கு வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு 92–93ல் புதிய வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து, செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

57—

ஈச்சவிடுதி ஆதிதிராவிடர் மக்களுக்கு புதிய வீடுகள் கட்டிக் கொடுத்தல்.

வினா எண் 12616—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், ஈச்சவிடுதி, வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு 92–93ல் புதிய வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து,

செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவும் இல்லை.

58—

கா. உஞ்சிய விடுதி ஆதிதிராவிடர்கள் குடியிருப்பை விரிவாக்கம் செய்தல்.

வினா எண் 12602—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம் பாதரங்கோட்டை (வ) ஊராட்சி கா. உஞ்சிய விடுதி ஆதிதிராவிடர்கள் குடியிருப்பை விரிவாக்கம் செய்ய 1992–93-ம் ஆண்டில் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து, செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

59—

கல்லூர்க்காடு ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம்.

வினா எண் 12606—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம், கல்லூர்க்காடு வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் 92–93ல் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல் படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

60—

வெட்டிக்காடு ஆதிதிராவிடர் மக்களுக்கு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 12617—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், செருவாவிடுதி வடக்கு வெட்டிக்காடு வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு 1992–93ல் புதிய வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து, செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

61—

செறுவாவிடுதி மேற்கு ஆதிதிராவிடர் மக்களுக்கு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 12618—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், செறுவாவிடுதி மேற்கு வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு 92–93-ல் புதிய வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து, செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

62—

பெரியகத்திக்கோட்டை கிராமத்தில் மேல்நிலை நீர்த்தொட்டி.

வினா எண் 12661—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெரியகத்திக் கோட்டை கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட 1992–93 ஆம் ஆண்டில் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஆம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஊராட்சி பெரியகத்திக் கோட்டைக்கு ஒரு மின்விசைத் திட்டம் நிறுவும் பணிகள் நடப்பில் உள்ளது.

63—

பெரிய நற்குணம் காலனிக்கு குடிதண்ணீர் வசதி.

வினா எண் 12756—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய பெரிய நற்குணம் காலனிக்கு குடிதண்ணீர் வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா ?

[1993 அக்டோபர் 29

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1993-ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செய்து தரப்படும்.

64—

வத்தராயன் தெத்து காலனிக்கு குடிதண்ணீர் வசதி.

வினா எண் 12779—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றியம், வத்தராயன் தெத்து காலனிக்கு குடிநீர் வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை. இது ஒரு முழு அளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்பாகும். இடையில் பழுதுபட்ட மின்னிறைப்பானும் தற்போது சரிபார்க்கப்பட்டுவிட்டது.

(ஆ) கேள்வி எழவில்லை.

65—

ஜெயங்கொண்டான் காலனிக்கு குடிநீர்.

வினா எண் 12882—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம், ஜெயங்கொண்டான் காலனி மக்களுக்கு குடிநீர் வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 1993-94 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் இக்குடியிருப்பு சேர்த்துக் கொள்ளப்பட்டு திட்டப் பணிகள் மேற்கொள்ளப் படும்.

66—

வெளிவயல் ஆதிதிராவிடர்களுக்கு ஆழ்குழாய்க் கிணறு.

வினா எண் 12918—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, வெளிவயல் ஆதிதிராவிடர்களுக்கு 1992-93-ல் ஆழ்குழாய்க் கிணறு போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

67—

செங்கமங்கலம் ஆதிதிராவிடர்களுக்கு ஆழ்குழாய்க் கிணறு

வினா எண் 12920—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், செங்கமங்கலம் ஆதிதிராவிடர்களுக்கு 1992-93-ல் ஆழ்குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1993 அக்டோபர் 29

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. செங்கமங்கலம் ஆதிதிராவிடர் காவனி மக்கள் செங்கமங்கலம் மின்விசைத் திட்டத்தின் மூலம் உள்ள ஒரு பொதுத் தொலை மேடையிலிருந்து தண்ணீர் எடுத்து வருகிறார்கள். எனவே, இக்கிராமத்திற்கு வரும் நிதியாண்டுகளில் நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு ஒரு கைப்பம்பு திட்டம் அமைத்துத்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

98—

முட்டாச்சிக்காடு புதுக் குடியிருப்பிற்கு ஆழ்குழாய் கிணறு.

வினா எண் 12922—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் முட்டாச்சிக்காடு ஊராட்சி, புதுக்குடியிருப்பில் 1992-93-ல் ஒரு ஆழ்குழாய்க் கிணறு போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

69—

கட்டயங்காடு வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு வீடு கட்டுதல்.

வினா எண் 12931—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கட்டயங்காடு வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு 1992-93-ல் வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

70—

சின்னமனை ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 12932— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சின்னமனை வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு 1992-93-ல் புதிய வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

71—

வெளிவயல் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 12943— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சியைச் சேர்ந்த வெளிவயல் ஆதி திராவிடர்களுக்கு 1992-93-ல் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

72—

வாடியக்காடு ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 12945— திரு ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், வாடியக்காடு வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு 1992-93-ல் புதிய வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

1993 அக்டோபர் 29]

73—

பூவாளம் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 12946— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பூவாளம் வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு 1992-93-ல் புதிய வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

74—

சொக்கநாதபுரம் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 12747— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சொக்கநாதபுரம் வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு 1992-93-ல் புதிய வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை —

மாண்புமிகு திரு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை

தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

75—

பள்ளத்தூர் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 12948—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு 1992–93-ல் புதிய வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

76—

ஆண்டிக்காடு ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 12949—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஆண்டிக்காடு வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு 1992—93-ல் புதிய வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்து செயல்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து

[1993 அக்டோபர் 29

செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

77—

கஞ்சங்காடு ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 12950—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கஞ்சங்காடு வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு 1992–93-ல் புதிய வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

78—

முனுமாக்காடு ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 12951—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், முனுமாக்காடு வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு 1992–93-ல் புதிய வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை

தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

79—

வெள்ளாளர் பகுதிக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண் 12969—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (மே) வெள்ளாளர் தெருவின் மேல் பகுதிக்கும் கீழ் பகுதிக்கும் 1992–93-ல் இரண்டு ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

80—

பெரியநாயகிபுரம் ஆதிதிராவிடர்களுக்கு மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டி அமைத்தல்.

வினா எண் 12980—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், ஆவணம் பெரியநாயகிபுரம் (கி) ஆதிதிராவிடர்களுக்கு 1992–93-ல் தனியாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை. பெரியநாயகிபுரம் ஊராட்சியில் புதுச்சேரி ஆதிதிராவிடர் தெரு கிராமம் உள்ளது. இங்கு ஒரு கையிறைப்பான் திட்டம்தான் உள்ளது. வரும் நிதியாண்டுகளில் நிதிநிலைமைக்கேற்ப புதிய மின்விசைத் திட்டம் அமைத்துத்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

1993 அக்டோபர் 29]

81—

நரியங்காட்டில் மேல்நிலைத்தொட்டி அமைத்தல்.

வினா எண். 12987— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சி நரியங்காட்டில் 1992–93-ல் மேல்நிலைத் தொட்டி அமைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. நரியங்காடு கிராமமானது, திருச்சிற்றம்பலம் ஊராட்சி பேராவூரணி ஒன்றியத்தைச் சேர்ந்ததாகும். இங்கு 1990-91 ஆம் நிதியாண்டில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமக்கப்பட்டுள்ளதால் இது இப்பகுதிக்கு போதுமானதாகும்.

82—

பைங்கால் வடக்கு ஆதிதிராவிடர் தெருவிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்.

வினா எண் 12982— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பைங்கால் வடக்கு ஆதிதிராவிடர் தெருவிற்கு 1992-93ல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

[1993 அக்டோபர் 29

83—

ஆலடிக்காட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 12983—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஊராட்சி ஆலடிக்காட்டில் 1992-93-ல் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குப்பத்தேவன் வரைக்கும் தண்ணீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஊராட்சி, ஆலடிக்காடு கிராமத்தில் ஒரு கையிறைப்பானும் 91-92-ல் நிறுவப்பட்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி திட்டமும் பயனில் உள்ளது. இதுவே போதுமானதாகும்.

84—

ஊமத்தநாடு பள்ளியருகில் ஆழ்குழாய்க் கிணறு போடுதல்.

வினா எண் 12984—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு பள்ளியருகில் 1992-93ல் ஒரு ஆழ்குழாய்க் கிணறு போட்டுக் கொடுத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

1993 அக்டோபர் 29]

85—

இடையாத்தி கோலார் தெருவில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண் 12990—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (மே) கோலார் தெருவில் வடக்கு சாலை பாஸ்கரன் தெருவிலும், ஊரின் பள்ளி ஓரத்திலும், கீழ் பகுதியிலும் நடுப் பகுதியிலும் 1992–93-ல் ஆழ் குழாய்க் கிணறுகள் அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

86—

புதுக்கோட்டை நகராட்சியில் பஸ் பயணிகளுக்கான நிழற்குடை.

வினா எண் 13011—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை நகராட்சியில் 1-வது வார்டில் இருக்கும் பஸ் பய்ணிகளுக்கான நிழற்குடை (மியூசியம் பஸ் ஸ்டாப்)-யில் இருக்கும் ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு.டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

புதுக்கோட்டை நகராட்சி 1-வது வார்டு மியூசியம் பஸ் ஸ்டாப்பில் உள்ள பயணிகளுக்கான நிழற்குடையில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்த லாட்டரிச் சீட்டு விற்பனை கடை 2-3-1993 அன்று அகற்றப்பட்டு விட்டது. மேலும், மேற்கண்ட மியூசியம் அருகில் உள்ள பஸ் ஸ்டாப் அமைந்துள்ள சாலை (திருச்சி சாலை) பெரு வழித் துறையைச் சார்ந்தது

என்பதினால் சம்பந்தப்பட்ட கோட்டப் பொறியாளர், கிராமம் மற்றும் நெடுஞ்சாலைத் துறை, புதுக்கோட்டை அவர்களுக்கு மேற்படி சாலையில் உள்ள சாலையோர ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள கோரப்பட்டுள்ளது.

87 —

இடையூர் அருந்ததியர் காலனிக்கு தொகுப்பு வீடுகள்.

வினா எண் 13310—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்ககிரி, தேவண்ண கவுண்டனூர் ஊராட்சி, கிடையூர் அருந்ததியர் காலனிக்கு தொகுப்பு வீடு கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

88—

மாரியம்மன் கோவில் அருகில் மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 13350—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, ரெட்டவயலில் மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி குடிநீர் பற்றாக் குறையாக இருப்பதால் மாரியம்மன் கோவில் அருகில் ஒரு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

89—

அஞ்சூரணிக் காட்டிற்கு மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 13385—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், அஞ்சூரணிக் காட்டில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

90—

சூரங்கொல்லைக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 13386—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக் கோட்டை ஊராட்சி, சூரங்கொல்லைக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்ட 1992—93-ல் அரசிட செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. இக்கிராமத்திற்கு ஏற்கனவே அடி பம்பு திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு அடி பம்பு போதுமானதாக உள்ளது. எனவே, மேலும் ஒரு விசைப்பம்பு திட்டம் அமைக்க திட்டமிடப்படவில்லை.

91—

பள்ளிக்கொண்டானில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 13391—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், பள்ளிக்கொண்டானில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு மின் மோட்டார் இணைப்புக் கொடுத்து 1992–93ல் இயங்க வைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. பள்ளிக்கொண்டான் குடிநீர்த் திட்டத்திற்கு மின் மோட்டர் இணைக்கப்பட்டு மின் இணைப்பு பெறப்பட்டு இதர பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு திட்டம் பராமரிப்புக்காக பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒப்படைக்கப்பட்டு விட்டது. மேலும் திட்டம் சில மாதங்களாக நல்ல நிலையில் இயங்கிக்கொண்டிருக்கிறது.

92—

காயாவூரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 13396—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காயாவூரில் உள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியை 1 இலட்சம் காலன் கொள்ளளவு உள்ள நீர்த் தேக்கத் தொட்டியாக 1992–9 -ல் கட்டித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

19 3 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

93—

புதுக்கோட்டை தொகுதி, ஆதி திராவிட கூட்டுக் குடியிருப்புகளுக்கு மின்சார வசதி செய்தல்.

வினா எண் 10543—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதியில் உள்ள அனைத்து ஆதி திராவிட கூட்டுக் குடியிருப்புகளும் மின்சாரம் மற்றும் குடிநீர் வசதி பெற்றுவிட்டதா ?

(ஆ) ஆம் எனில், குடிநீர் மற்றும் மின்சாரம் வசதி பெறாத கூட்டுக் குடியிருப்புகளுக்கு உடன் வசதிகள் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : புதுக்கோட்டை தொகுதியில், புதுக்கோட்டை, கந்தர்வக்கோட்டை, குன்னாண்டார்கோவில் ஆகிய மூன்று ஒன்றியங்கள் அடங்கியுள்ளன. இதில் குன்னாண்டார் கோவில் ஒன்றியத்தில் 15 ஊராட்சிகள் மட்டும் புதுக்கோட்டை தொகுதியில் வருகின்றன. இந்த மூன்று ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள அனைத்து ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கும் குடிநீர் மற்றும் மின்சாரம் வசதி செய்யப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நான்கு குடியிருப்புகள் புதிதாக கட்டப்பட்டதாகும். இக்குடியிருப்புகளுக்குக் கையிறைப்பான் அமைக்கும் பணி கீழ்க்கண்டவாறு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது :

1. நந்தமாடிப்பட்டி :

இக்குடியிருப்பில் 1993–94 ஆம் ஆண்டில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. 1993–94 ஆம் ஆண்டில் ஒரு கையிறைப்பான், ஆழ்குழாய்க் கிணறு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2. நாட்டானி :

இக்குடியிருப்புக்கு அருகில் 1992--93- ல்ஓர் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று கட்டுவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

3. வடுகப்பட்டி :

இக்காலனிக்கு கிராம குடிநீர் திட்டத்தில் கையிறைப்பான் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

4. மோகனூர் :

இக்காலனிக்கு 1993–94 ஆம் ஆண்டில் கையிறைப்பான் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதே போல் புதிதாக கட்டப்பட்ட (1989–90) தொகுப்பு வீடுகளுக்கு மின்விளக்கு வசதி செய்து தரப்பட்டுள்ளது. 1990–91 மற்றும் 1991-92 ஆண்டுகளில் கட்டப்பட்டுள்ள தொகுப்பு வீடுகளுக்கு மின் விளக்கு வசதி செய்வதற்கு விண்ணப்பங்கள் மின்வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

94—

பரமக்குடி ஆதிதிராவிட மாணவர் விடுதி கட்ட தடையாணையை நீக்குதல்.

வினா எண் 14586—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பரமக்குடி ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்டுவது தொடர்பாக நீதிமன்றத்தில் தடை ஆணை பெறப்பட்டு இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், தடையாணையை நீக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

1993 அக்டோபர் 29]

(ஆ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் ஆதி திராவிடர் மாணவர் விடுதி கட்ட தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டு கழகத்தால் 1986—இல் ஒப்பந்தம் கோரப்பட்டது. மதுரை, இராமநாதபுரம் அணை மற்றும் கால்வாய் தொழிலாளர் ஒப்பந்த கூட்டுறவு சங்கம் இது தொடர்பாக ஒப்பந்தப் புள்ளியுடன் விண்ணப்பித்து இருந்தது. இந்தச் சங்கத்தின் முந்தைய வேலைகள் திருப்தி இல்லாததால் அதன் ஒப்பந்தப் புள்ளி ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனவே, இச் சங்கத் தலைவர் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து தடையாணை பெற்றுள்ளார். இந்தத் தடையாணையை எதிர்த்து அரசு தரப்பில் 10—11—1987—ல் உயர்நீதி மன்றத்தில் உறுதி ஆவணம் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் இந்த வழக்கு இன்னமும் உயர்நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

இந்தத் தடையாணையை உடனே ரத்து செய்யக் கோரி உயர்நீதி மன்றத்தை அணுகுமாறு சிறப்பு அரசு வழக்கறிஞர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

95—

ஆதி திராவிட மக்களுக்கு மின் இணைப்பு வழங்குதல்.

வினா எண் 16168—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிட இனத்தவருக்கு கொடுக்கப்பட்டுள்ள தனி மின் இணைப்பு (single point connection) பல கிராமங்களுக்குச் செய்து தரப்படவில்லை என்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவை உடனடியாக செய்து தரப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

(அ) ஒவ்வொரு ஆண்டிற்கும் 40,000 என இலக்கு நிர்ணயித்து ஆதி திராவிடர்கள் விண்ணப்ப முதுநிலை வரிசை அடிப்படையில் தொடர்ந்து தனி மின் வசதி செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

96—

தமிழகத்திற்கு வந்த இலங்கை அகதிகள் விவரம்.

வினா எண் 7469—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமீபத்தில் தமிழகத்திற்கு வந்த இலங்கை அகதிகள் திரும்ப இலங்கைக்கே அனுப்பப்படுகின்றார்களா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர் அனுப்பப்பட்டார்கள்?

(இ) எத்தனை பேர் அனுப்பப்படவில்லை?

(ஈ) மீதி பேர் அனுப்பப்படாதது ஏன்?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மொத்தம் 29,102 நபர்கள்.

(இ) முகாம்களில் உள்ள 82,208 நபர்கள்.

(ஈ) இலங்கைக்கு திரும்பச் செல்ல விருப்பம் தெரிவித்தவர்கள் கணிசமான அளவு இல்லாததினாலும், கப்பல்/விமானம் மூலம் திருப்பி அனுப்புவதற்கு பருவநிலை உகந்ததாக இல்லாத காரணத்தினாலும் கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்திற்குப்பின் தற்காலிகமாக திருப்பி அனுப்பும் பணி நிறுத்தப்பட்டு உள்ளது. கணிசமான நபர்கள் இலங்கைக்கு திரும்பச் செல்ல தற்போது விருப்பம் தெரிவித்துள்ளதால், மத்திய அரசு அவர்களை திரும்ப அனுப்ப கப்பல் மற்றும் விமானம் ஏற்பாடு செய்து வருகிறது.

97—

மீனவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டும் திட்டம்.

வினா எண் 9862—திரு. ஏ. டி. செல்லசாமி: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் அண்ணா மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?

1993 அக்டோபர் 29]

(ஆ) கிராமப்புற மீனவர்களுக்கும் இந் நிதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : கடலோர மீனவருக்கு மட்டுமே மீனவர் இலவச வீடு கட்டும் திட்டம் பொருந்துமாதலால் இத்திட்டத்தின் கீழ் அண்ணா மாவட்டத்திற்கு நிதி ஏதும் ஒதுக்கீடு செய்யப்பட வில்லை.

98—

தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளை மீண்டும் இலங்கைக்கு அனுப்புதல்

வினா எண் 13172—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இருந்த எல்லா இலங்கை அகதிகளும் இலங்கைக்கு அனுப்பப்பட்டார்களா?

(ஆ) மீதம் உள்ளோர் இருப்பின் எப்போது அனுப்பப்படு வார்கள்?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) 1990 ஆம் ஆண்டு வரை முகாம்களில் அனுமதிக்கப் பட்ட சுமார் 1,15,680 இலங்கை அகதிகளில், 29,102 அகதிகள் அவர்களின் விருப்பத்தின்படி 1992 ஆம் ஆண்டு கப்பல்/விமானம் வழியாக இலங்கைக்கு திரும்ப அனுப்பப்பட்டார்கள். மீதம் உள்ளோர் அவர்கள் விருப்பம் தெரிவித்தால் அவ்வப்போது திரும்ப அனுப்பப்படுவார்கள். தற்போது விருப்பம் தெரிவித்த அகதிகளை கப்பல் மூலம் திரும்ப அனுப்ப மத்திய அரசு ஏற்பாடு செய்து வருகிறது.

99—

காலகம் அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு பிற்பட்டோர் மாணவர் நல வடுதி கட்டுதல்.

வினா எண் 15576—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், காலகம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு மாணவியர் பிற்பட்டோர் நல விடுதி கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், காலகம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் மாண வியர் விடுதி கட்ட அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

100—

பாமக்குடி தொகுதியில் ஆரம்பிக்கப்பட்ட செக்குகள்.

வினா எண் 17154—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்பு மிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி யில் ஆரம்பிக்கப்பட்ட செக்குகள் எத்தனை?

(ஆ) இதில் செயல்படாமல் நின்ற செக்குகள் எத்தனை?

(இ) காரணங்கள் யாவை?

விடை—

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்:

(அ) 42 மின்விசை செக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ஆ) 17 மின்விசை செக்குகள் இயங்காமல் உள்ளன.

1993 அக்டோபர் 29]

(இ) மூலப் பொருளான எள் கிடைக்கும் காலத்தில் மொத்தமாக கொள்முதல் செய்து, இருப்பு வைக்க வசதி இல்லாத தால், அவ்வப்போது எள் கொள்முதல் செய்து தொழில் நடத்தி வருகின்றனர். எள்ளின் விலை அதிகரித்து இருப்பதாலும், சொற்ப இலாபம் கிடைப்பதாலும், மின்விசை செக்குகளை இயக்காமல் உள்ளனர். இருப்பினும், இயங்காத செக்குகளை தொடர்ந்து இயக்குவதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகிறது.

101—

சின்ன சேலத்திற்கு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரிய உதவி இயக்குநர் அலுவலகம் அமைத்தல்.

வினா எண் 19423—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரம் கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரிய உதவி இயக்குநர் அலுவலகத்தை சின்ன சேலத்திற்கு மாற்றிவிடும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கதர் மற்றும் கிராமத் தொழில் மாவட்ட அலுவலகங் கள் அந்தந்த வருவாய் கோட்டத்தின் தலைமையிடத்தில் மட்டுமே அனுமதிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. விழுப்புரம் கதர் மற்றும் கிராமத் தொழில் அலுவலகம் விழுப் புரத்தின் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருவதால் மேற்படி மாவட்டத்தின் கதர் கிராமத் தொழில் அலுவலகத்தை சின்ன சேலத்திற்கு மாற்றிவிடும் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இருபத்தி மூன்றாம் பட்டியல்.

1—

ஏழுநூத்திபாளையம் கிராம துணை ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுத்துதல்.

வினா எண் 19229—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், ஏழுநூத்திபாளையம் கிராம துணை ஆரம்ப சுகாதார நிலையம் உரிய முறையில் செயல்பட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், எழுநூத்திபாளையம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் இல்லை. அருகில் உள்ள கணபதிபாளையம் ஆரம்ப சுகாதார நிலைய எல்லைக்குட்பட்ட இலமத்தூரில் ஒரு துணை சுகாதார நிலையம் அரசு கட்டிடத்தில் இயங்கி வருகின்றது. இத்துணை சுகாதார நிலையத்தில் ஒரு கிராம சுகாதார செவிலியர் இத்துணை சுகாதார நிலைய எல்லையில் தனது பணிகளை செய்து வருகின்றார். இந்நிலையம் சரிவர இயங்கி வருகின்றது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2—

கருங்கரட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவ வசதி.

வினா எண் 19485—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், கொளாநல்லி கிராமம், கருங்கரடில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தேவையான அனைத்து மருத்துவ வசதியையும் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,05,760. இவ்வூராட்சி ஒன்றியத்தில் கொளாநல்லி, சிவகிரி, தாமரைப்பாளையம், சென்னசமுத்திரம், தண்டாம்பாளையம் மற்றும் கொண்பாளைபுதூர் ஆகிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அரசின் கொள்கைப்படி மேலும் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கொடுமுடி ஊராட்சி ஒன்றியம், கருங்கரடில் அமைப்பதற்கு சாத்தியமில்லை.

3—

டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் ஆண்டறிக்கை.

வினா எண் 19952—ஏ—திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் ஆண்டறிக்கைகளை அவைமுன் வைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

தமிழ்நாடு டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் ஆண்டறிக்கையை சட்டமன்றப் பேரவை முன் வைப்பதற்கான விதிகள் ஏதும் 1987 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட அப்பல்கலைக் கழகத்தின் சட்டத்தில் இல்லை. ஆதலால் டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின், ஆண்டறிக்கை அவை முன் வைக்கப்படுவதற்கில்லை.

4—

அரசு மருத்துவமனையின் மருத்துவர், செவிலியர் எண்ணிக்கை.

வினா எண் 20082—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1993 அக்டோபர் 29

தமிழ்நாட்டிலுள்ள அரசு மருத்துவமனையில் எத்தனை மருத்துவர்கள், எத்தனை செவிலியர்கள் பணிபுரிகிறார்கள் என்பதை அரசு அறிவிக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளில் (இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி உள்ளிட்டது) பணிபுரியும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் எண்ணிக்கை துறை வாரியாக கீழே தரப்பட்டுள்ளது.

	மருத்துவக் கல்வித் துறை.	மருத்துவம் (மற்றும்) ஊரக நலப் பணித்துறை.
(1)	(2)	(3)
1. மருத்துவர்கள்	3,266	2,462
2. செவிலியர்	3,604	4,322

	இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை.			
	சித்தா.	ஆயுர் வேதம்.	யுனானி.	ஓமியோ பதி.
(1)	(4)	(5)	(6)	(7)
1. மருத்துவர்கள் ..	571	17	25	47
2. செவிலியர் ..	69	11	2	4

5—

குடும்பக்கட்டுப்பாடு அதிகம் செய்துகொண்ட மாவட்டம்.

வினா எண் 21367—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மக்கள் குடும்பக்கட்டுப்பாடு அதிகமாக செய்து கொண்டவர் உள்ள மாவட்டம் எது?

1993 அக்டோபர் 29]

(ஆ) அதில் எந்த தாலுகா முதன்மையாக உள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மக்கள் குடும்பக் கட்டுப்பாடு அதிகமாக செய்து கொண்டவர்கள் உள்ள மாவட்டம் திண்டுக்கல்—அண்ணா மாவட்டமாகும். தமிழ்நாட்டில் திண்டுக்கல்—அண்ணா மாவட்டத்தில் 66.5 விழுக்காடு தகுதி வாய்ந்த தம்பதியினர் பல்வேறு குடும்பக் கட்டுப்பாடு முறைகளை கடைபிடித்து வருகின்றார்கள்.

(ஆ) திண்டுக்கல்—அண்ணா மாவட்டத்தில் கொடைக்கானல் தாலுக்கா முதன்மையாக உள்ளது. பழனி தாலுகா இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. மேலும், பழனி தாலுக்காவில் உள்ள ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம் முதல் இடத்தை வகிக்கின்றது.

6—

நடத்துனர், ஓட்டுனர் பணி நிரந்தரம்.

வினா எண் 15632—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகப் போக்குவரத்துக் கழகங்களில் 59 நாளும், அதற்கு மேலும் பணி செய்த தற்காலிக நடத்துனர், ஓட்டுனர்களை பணி நிரந்தரம் செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

செயற் குறிப்பு ஏதும் இல்லை. அரசு போக்குவரத்துக் கழகங்களில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக ஓட்டுநர் மற்றும் நடத்துனர்கள் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு தினச் சம்பள தொழிலாளர்களாக பணியில் அமர்த்தப்படுகின்றனர். அவ்வாறு பணியில் அமர்த்தப்படுபவர்கள் 240 பணி நாட்களை திருப்திகரமாக முடித்த பின் பணிமுறைபடுத்தப்படுகின்றனர்.

7—

சீர்காழியிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் பேருந்து.

வினா எண் 15771— **திரு. எம். பூராசாமி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழியிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப்பேருந்து விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இல்லை. சீர்காழியிலிருந்து சிதம்பரம், கடலூர், பாண்டிச்சேரி, திண்டிவனம் மார்க்கமாக சென்னை செல்லும் தடத்தின் நீளம் 260 கி.மீ. சீர்காழி என்ற இடமானது மயிலாடுதுறைக்கும் சிதம்பரத்திற்கும் இடையே 20 கி.மீ. தொலைவில் உள்ளது. சீர்காழியிலிருந்து மயிலாடுதுறைக்கும் மற்றும் சீர்காழியிலிருந்து சிதம்பரத்திற்கும் மற்றைய போக்குவரத்துக் கழகங்களால் நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. சீர்காழியிலிருந்து சென்னைக்குப் பயணம் மேற்கொள்ள விரும்பும் பயணிகள் சிதம்பரம் மற்றும் மயிலாடுதுறையிலிருந்து இயக்கப்படும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம். சீர்காழியிலிருந்து சென்னைக்கு பேருந்துகள் இயக்குவது இயக்க ரீதியில் சாத்தியமில்லை.

8—

காட்டுமன்னார் கோயிலிலிருந்து அணைக்கரை வரை பேருந்து விடுதல்.

வினா எண் 15873— **திரு. என். ஆர். ராஜேந்திரன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார் கோயிலிலிருந்து சிறுகாட்டூர், குஞ்சங்கொல்லை வழியாக அணைக்கரை செல்ல தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் மூலம் பேருந்து விடப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், பேருந்தை மீண்டும் விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) கடந்த ஆண்டு பெய்த பெரு மழையின் காரணமாக இச்சாலை பேருந்தின் பாதுகாப்பான இயக்குதலுக்கு ஏற்றதாக இல்லை. பழுதுபட்ட சாலைப் பகுதிகள் செப்பனிடப்பட்ட பின்னர் மீண்டும் கஞ்சங்கொல்லை வழியாக பேருந்து வசதி அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

9—

ஆலங்குடி, கருக்காகுறிச்சி வழியாக பட்டுக்கோட்டைக்கு பேருந்து வசதி.

வினா எண் 16267—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியில் இருந்து கருக்காகுறிச்சி வழியாக பட்டுக்கோட்டைக்குப் பேருந்து வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

ஆலங்குடியிலிருந்து கருக்காகுறிச்சி வழியாக பட்டுக் கோட்டை செல்லும் வழித்தடத்தின் தூரம் 43.3 கி.மீ. ஆகும். இதில் கருக்காகுறிச்சி விலக்கிலிருந்து திருச்சிற்றம்பலம் வரை சுமார் 10.2 கி.மீ. பேருந்து செல்லாத பகுதி மேற்படி பேருந்து செல்லாத சாலையில் இரண்டு குறுகலான பாலங்கள் பேருந்து செல்ல இயலாத நிலையில் உள்ளன. எனவே தற்போது பேருந்து விடுவதற்கான செயற்குறிப்பு ஏதுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1993 அக்டோபர் 29

10—

உளுந்தூர் அரவை மில் வரை பேருந்து இயக்குதல்.

வினா எண் 16373—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தலைக்குளம் (எண் 9) பேருந்தை உளுந்தூர் அரவை மில் வரை இயக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக டி.26 மற்றும் டி.21 நகரப் பேருந்துகள் மூலம் நாளொன்றுக்கு 12 நடைகளில், உளுந்தூர் அரவை மில்லிற்கும் தலைக்குளத்திற்கும் நேரடி நகரப் பேருந்து வசதிகள் உள்ளதாலும், இப்பகுதி பயணியர் போக்குவரத்து எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருப்பதாலும், சிதம்பரத்திலிருந்து தலைக்குளத்திற்கு இயக்கப்பட்டுவரும் டி.9 நகரப் பேருந்தை உளுந்தூர் அரவை மில் வரை நீட்டித்திட வேண்டிய அவசியமில்லை.

11—

உளுந்தூர் வழியாக விழுப்புரம் வரை புதிய பேருந்து.

வினா எண் 16374—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம், உளுந்தூர் வழியாக விழுப்புரம் வரை புதிய பேருந்து விட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

1993 அக்டோபர் 29]

சிதம்பரம்-விழுப்புரம் (வழி) உளுந்தூர் தடத்தில் பேருந்து வசதி பெறாத பகுதிகள் ஏதும் இல்லை. எனவே, சிதம்பரம் - விழுப்புரம் (வழி), உளுந்தூர் தடத்தில் தனியாக ஒரு பேருந்தினை இயக்கிடத் தேவையில்லை.

12—

உப்பிலியாபுரத்தில் பணிமனை அமைத்தல்.

வினா எண் 19133—திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரத்தில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை அமைக்க அரசு ஆவண செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) உப்பிலியாபுரத்தில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை அமைக்க திட்டம் இந்த நிதி ஆண்டின் செயற்குறிப்பில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

13—

வெள்ளப்பாளையம் நான்கு ரோடு பேருந்து நிறுத்தம்.

வினா எண் 19270—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், வெள்ளோட்டம் பரப்பு கிராமத்தில் வேலப்பம்பாளையம் நான்கு ரோடு நிறுத்தத்தில் ஜீவா பேருந்து நிறுத்தப்பட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், வெள்ளோட்டம் பரப்பு கிராமம், வேலப்பம்பாளையம் நான்கு ரோடு பேருந்து நிறுத்தத்தில், இவ்வழித்தடத்தில் இயக்கப்படும் ஜீவா போக்குவரத்துக் கழக புறநகர் பேருந்து ஒன்றும் நகரப் பேருந்துகள் நான்கும் மேற்படி இடத்தில் ஆரம்ப காலத்திலிருந்தே நிறுத்தி பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்லும் வண்ணம் இயக்கம் செய்யப்படுகிறது.

14—

பூதப்பாண்டி, கொட்டாரம் பகுதியில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனைப் பிரிவுகள் தொடங்குதல்.

வினா எண் 17532—டாக்டர் அ. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பூதப்பாண்டி, கொட்டாரம் ஆகிய பகுதிகளில் கோ-ஆப்டெக்ஸ் மூலம் விற்பனைப் பிரிவுகள் தொடங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் :

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் ஏற்கெனவே கிளை விற்பனை நிலையங்களை அமைத்துள்ளது. எனவே, பூதப்பாண்டி மற்றும் கொட்டாரம் பகுதிகளில் வாழும் மக்கள் தங்களுக்குத் தேவையான கைத்தறித் துணிகளை அருகாமையிலுள்ள கன்னியாகுமரி மற்றும் நாகர்கோவில் கிளை விற்பனை நிலையங்களில் வாங்கிப் பயன் அடையலாம். எனவே, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் பூதப்பாண்டி மற்றும் கொட்டாரம் ஆகிய இடங்களில் கிளை விற்பனை நிலையங்களை நிறுவும் உத்தேசம் ஏதும் தற்போது இல்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 29]

15—

பொங்கல் திருவிழாவன்று குமரி ஏழை மீனவர்களுக்கு வேட்டி சேலை வழங்குதல்.

வினா எண் 19619—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பொங்கல் திருவிழாவன்று ஏழை மக்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் குமரி மாவட்ட ஏழை மீனவர்களுக்கும் வேட்டி சேலை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் :

நிலமற்ற ஏழை விவசாயிகள் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் நகர்ப்புற ஏழை எளிய மக்களுக்கு, பொங்கல் திருநாளை முன்னிட்டு 60 லட்சம் ஆண்கள் மற்றும் 60 லட்சம் பெண்களுக்கு இலவசமாக வேட்டி சேலைகள் வழங்கும் திட்டத்தை முறையாக கணக்கிட்டு அரசு செயல்படுத்தி வருகிறது. எனவே, கன்னியாகுமரி மாவட்ட ஏழை மீனவர்களுக்கு வேட்டி, சேலை வழங்கும் திட்டம் அரசிடம் இல்லை.

16—

தருமபுரி மாவட்டத்தில் வீட்டு வசதித்துறையின் கீழ் வீடு கட்டுதல்

வினா எண் 16102—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் 1992-93ஆம் ஆண்டில் வீட்டு வசதித் துறையின் வாயிலாக கட்டப்படும் வீடுகள் எத்தனை ?

(ஆ) மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதிகளில் எவ்வளவு வீடுகள் கட்டப்படுகின்றன ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

(அ) 1,150 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டு கூடுதலாக மொத்தம் 1,228 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

(ஆ) விவரங்கள் : நடப்பு நிதியாண்டில் (1992-93) குறைந்த வருவாயினருக்காக 569 வீடுகளும் நடுத்தர மக்களுக்காக 420 வீடுகளும், உயர் வருவாயினருக்காக 161 வீடுகளும், ஆக மொத்தம் 1,150 குடியிருப்புகள் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டது. ஆனால் முடிவில் 1,228 வீடுகள் கட்ட திட்டமிட்டதை விட கூடுதல் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. கட்டப்பட்ட வீடுகள் குறித்த விவரங்கள் பின்வருமாறு :

வரிசை எண்ணும் இடத்தின் பெயரும்.	எல்.ஐ.ஜி.	எம்.ஐ.ஜி.	எச்.ஐ.ஜி.	மொத்தம்.
1. காவேரிப்பட்டினம் ..	95	159	80	334
2. ஒசூர் நிலை-பத்து ..	394	189	48	631
3. ஒசூர் நிலை-எட்டு ..	..	47	39	86
4. பாலக்கோடு ..	65	79	33	177
மொத்தம் ..	554	474	200	1,228

17—

மாவட்டம் தோறும் செயற்பொறியாளர் நியமித்தல்

வினா எண் 16189— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாநில வீட்டு வசதி வாரியத்தின் ஒரு நிர்வாக அலுவலகம் அமைத்து அதற்கு ஒரு செயற்பொறியாளரை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாநில வீட்டு வசதி வாரியத்தின் ஒரு நிர்வாக அலுவலகம் அமைத்து அதற்கு செயற்பொறியாளரை நியமிக்க இயலாது. எந்தெந்த

1993 அக்டோபர் 29]

மாவட்டத்தில் வீட்டு வசதித் திட்டங்களுக்கு அத்தியாவசியத் தேவை இருக்கிறதோ, எந்தெந்த மாவட்டத்தில் வீட்டு வசதி திட்டங்கள் அதிகமான அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளனவோ, அந்தந்த மாவட்டத்தில் தான் நிர்வாக அலுவலகம் அமைக்கப்பட்டு, செயற்பொறியாளர் நியமிக்கப்படுவார். தற்போதைய நிலவரப்படி வீட்டு வசதித் திட்டங்கள் அதிகமாக உள்ள மாவட்டங்கள் யாவற்றிலும் வீட்டு வசதி நிர்வாக அலுவலகம் உள்ளது. தற்போது 29 கோட்டங்கள் தமிழ்நாடு முழுவதும் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நிர்வாக அலுவலகம் அமைப்பதற்கான தேவை இல்லை என்று கருதப்படுகிறது,

18—

நிலக்கடலைக்கு கம்பளிப்புழுவால் ஏற்படும் பாதிப்பை தடுக்க நடவடிக்கை.

வினா எண் 19649—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நிலக்கடலைக்கு கம்பளிப் புழுவால் பாதிப்பு ஏற்படாமல் இருக்க அரசு என்னென்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

நிலக்கடலையை தாக்கும் சிகப்புகம்பளிப் புழுவினை தடை செய்ய 1991-92 ஆம் ஆண்டு சமுதாய அளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் இதற்கென விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 300 ஊக்கத்தொகை அளிக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகளில் கோடைக்கால உழவு செய்வது கம்பளிப் புழுக்களை சேகரிப்பது, சிறு பொறிகள் வழங்குவது மற்றும் பயிர் பாதுகாப்பு ரசாயனங்கள் (P. P. Chemical) வழங்குவது ஆகியவை அடங்கும். ஒருங்கிணைந்த எண்ணெய்வித்து வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ. 50 இலட்சம் செலவு செய்து 4,000 ஹெக்டேரில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டது. அதில் ரூ. 12 இலட்சம் இக்கம்பளி பூச்சியினை தடை செய்யும் பொருட்டு இவற்றால் அதிகம் தாக்கப்பட்ட சேலம், பெரியார், பசும்பொன், தர்மபுரி மாவட்டங்களில் குறிப்பாக சிறிய/மிகச்சிறிய விவசாயிகளின் நிலங்களுக்காக செலவிடப்பட்டது.

2. 1992–93 ஆம் ஆண்டில் செங்கை எம்.ஜி.ஆர்., தென் ஆற்காடு, வட ஆற்காடு, சேலம், கோவை, பெரியார், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை ஆகிய மாவட்டங்களில் உள்ள 4,589 ஹெக்டேர் பரப்பில் இக்கம்பளிப் புழுவை கட்டுப்படுத்தும் பொருட்டு ரூ 6.7 இலட்சம், விவசாயிகளுக்கு செலவழிக்கப்பட்டது நடப்பு ஆண்டில் (1993–94) இத்திட்டத்தினை தொடர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

19—

கோடை சாகுபடிக்கு விதைகள் வழங்குதல்.

வினா எண் 20326— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை — பேராவூரணி பகுதியில் கோடை சாகுபடியாக கடலை, எள், உளுந்து அதிக அளவில் சாகுபடி செய்வதால் 1993-94 ஆம் ஆண்டு தரமான கடலை, எள், உளுந்து விதைகளை வழங்க அரசு ஏற்பாடு செய்துள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

1993–94 ஆம் ஆண்டில் பட்டுக்கோட்டை, பேராவூரணி பகுதியில் கோடை சாகுபடி பருவத்தில் கடலை, எள், உளுந்து விநியோகம் செய்ய உத்தேசித்துள்ளது பற்றிய விபரம் :

வரிசை எண்.	பயிர்.	இலக்கு விநியோகம்.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)
		பட்டுக்கோட்டை.	
1.	கடலை	31 டன்	கோடை பருவத்திற்கு தற்போது விதைக்க கடலை விதை பண்ணையிலிருந்து விதைகள் நவம்பர், டிசம்பர் 1993 மாதங்களில் கொள்முதல் செய்து விநியோகம் செய்யப்படும்.

1993 அக்டோபர் 29]

(1)	(2)	(3)	(4)
2.	எள்	2 டன்	ஜூலை 1993—ல் கொள்முதல் செய்யப்பட்டு ஜனவரி-பிப்ரவரி 1994ல் விநியோகம் செய்யப்படும்.
3.	உளுந்து	4 டன்	ஜூலை—ஆகஸ்ட் 1993-ல் கொள்முதல் செய்யப்பட்டு கோடை பருவத்தில் விநியோகம் செய்யப்படும்.
		பேராவூரணி	
1.	கடலை	31 டன்	கோடை பருவத்தில் விதைக்க கடலை, விதைப் பண்ணையிலிருந்து விதைகள் நவம்பர்–டிசம்பர் 1993-ம் மாதங்களில் கொள்முதல் செய்து விநியோகம் செய்யப்படும்.
2.	எள்	2.55 டன்	ஜூலை 1993—ல் கொள்முதல் செய்யப்பட்டு கோடை பருவத்திற்கு ஜனவரி - பிப்ரவரி 1994ல் விநியோகம் செய்யப்படும்.
3.	உளுந்து	6 டன்	ஜூலை — ஆகஸ்ட் 1993-ம் மாதங்களில் கொள்முதல் செய்யப்பட்டு கோடை பருவத்தில் விநியோகம் செய்யப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

20—

சிப்காட் வளாகங்களை விரிவாக்கம் செய்தல்.

வினா எண் 7730—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எங்கெங்கு சிப்காட் வளாகங்கள் உள்ளன ?

(ஆ) அவற்றில் எந்தெந்த வளாகங்களை விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. ம.சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) ஒசூர், இராணிப்பேட்டை, கும்மிடிப்பூண்டி கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரை மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் சிப்காட் வளாகங்கள் உள்ளன.

(ஆ) விரிவாக்கத்திற்காக கும்மிடிபூண்டியில் 600 ஏக்கர் நிலமும் கடலூரில் 220 ஏக்கர் நிலமும் ஒசூரில் (பகுதி 2) 190 ஏக்கர் நிலமும் கூடுதலாக கையகப்படுத்த சிப்காட் நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

21—

வேதாரண்யம், தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய வட்டமாக அறிவித்தல்.

வினா எண். 8530—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பொருளாதாரத்திலும், தொழில் வளர்ச்சியிலும் மிகவும் பின்தங்கியுள்ள வேதாரண்யம் தொகுதியை தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய வட்டமாக அரசு அறிவிக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்;

தொகுதி அடிப்படையில் மிகவும் பின்தங்கிய பகுதியாக அறிவிகரும் முறை பின்பற்றப்படவில்லை. வட்ட அளவில்தான் மிகவும் பின்தங்கிய பகுதிகள் நிர்ணயிக்கப்படுகின்றன. ஆகவே வேதாரண்யம் தொகுதியை மிகவும் பின்தங்கிய தொகுதியாக அறிவிக்கும் சாத்தியக்கூறு இல்லை.

22—

மதுராந்தகம் தொகுதியில் எரிசாராய ஆலை தொடங்குதல்.

வினா எண். 8551—திரு. பி. சொக்கலிங்கம் : மாண்புமிகு பதொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

மதுராந்தகம் தொகுதி படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உருவாக்கப்படும் மொலாசசைப் பயன்படுத்தி, எரிசாராய ஆலை ஒன்று மதுராந்தகம் தொகுதியில் புதியதாக திறக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

மதுராந்தகம் தொகுதி, படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உருவாக்கப்படும் மொலாசசைப் பயன்படுத்தி எரி சாராய ஆலை ஒன்று மதுராந்தகம் தொகுதியில் அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசிடமில்லை.

23—

நயினார்கோவில் அரசு தொழிற்சாலைகளின் எண்ணிக்கை.

வினா எண். 14956—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், நயினார்கோவில் ஒன்றியத்தில் உள்ள அரசு நடத்தும் தொழிற்சாலைகள் எத்தனை ?

(ஆ) அதனால் வேலைவாய்ப்பு பெற்றவர் எத்தனை பேர் ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், நயினார்கோவில் ஒன்றியப் பகுதியில் அரசு நடத்தும் தொழிற்சாலைகள் ஏதும் இல்லை.

(ஆ) எனினும் இங்கு 23 தனியார் சிறு தொழில் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் 65 நபர்கள் வேலை வாய்ப்பு வசதி பெற்றுள்ளனர்.

24—

இராமநாதபுரம் மாவட்டத்திற்கு தொழில் முதலீட்டு ஒதுக்கீடு.

வினா எண் 15187—டாக்டர் எஸ். சுந்தரராஜ் ; மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் தமிழ்நாட்டிற்கு குறியீடு 1992-93ல் எவ்வளவு ?

(ஆ) இதில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 1991-92ல் ஒதுக்கீடு எவ்வளவு ?

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம், அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

101—

உசூர் ஆதிதிராவிட தெருவிற்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 14813—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உசூர் ஆதிதிராவிட தெருவிற்கு 1992–93-ல் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

102—

மிலாரிக்காட்டில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 14814—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், மழவேனிற்காடு ஊராட்சி, மிலாரிக்காட்டில், 1992–93-ல் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

103—

தாமரங்கோட்டை தென்பாதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 14817—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், தாமரங்கோட்டை, தென்பாதியில் இருக்கும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியை, 1992–93-ல் விரிவாக்கம் செய்து, தண்ணீர் பற்றாக்குறையைப் போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

104—

மாவடுகுறிச்சி நாடன் குடியிருப்பில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்.

வினா எண் 14822—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, மாவடுகுறிச்சி ஊராட்சி 3-வது வார்டு நாடன் குடியிருப்பில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

105—

கீழப்பழஞ்சூர் கிராமத்திற்கு குடிதண்ணீர் வசதி.

வினா எண் 14824—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பட்டுக்கோட்டை ஒன்றியம், கீழப்பழஞ்சூர் கிராமத்தில் குடிதண்ணீர் குழாயை மேலும் விஸ்தரிப்பு செய்துதர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை

106—

வண்ணாங்குடி கொல்லைக்கு போர்வெல் அமைத்தல்,

வினா எண் 14825—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (மே) வண்ணாங்குடி கொல்லைக்கு 1992-93-ல் ஒரு போர்வெல் போட்டுத் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

107—

இடையாத்தி ஆதிதிராவிடர் தெருவிற்கு போர்வெல் அமைத்தல்.

வினா எண் 14826—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (மே) ஆதிதிராவிடர் தெருவிற்கு 1992-93-ல் ஒரு போரவெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

108—

கப்பம்மாள் சத்திரத்தில் பெரிய குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண் 14827—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கடலோரப் பகுதி கப்பம்மாள் சத்திரத்தில் 1992-93-ல் பெரிய குழாய்க் கிணறு அமைத்து கடலோர பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

[1993 அக்டோபர் 29

109—

தொக்காலிக்காடு கீழ்ப்பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 14828—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், தொக்காலிக்காடு கீழ்ப்பகுதியில் ரயில்வே கேட் அருகில், 1992–93-ல் ஒரு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

110—

வேலாகுடிக்கு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 14829—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், இரண்டாம்புளிக்காடு ஊராட்சி, வேலாகுடிக்கு 1992-93-ல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், இரண்டாம்புளிக்காடு ஊராட்சி வேலாகுடியில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மின்விசைத் திட்டம் 1992-93-ல் நிறுவப்பட்டுள்ளது. அனைத்துப் பணிகளும் பூர்த்தியாகிவிட்டது.

1993 அக்டோபர் 29]

111—

செம்மங்குடியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்.

வினா எண் 14830—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், செம்மங்குடியில் 1992-93-ல் ஒரு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

112—

நாகரசம்பேட்டை ஊராட்சியில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டுதல்.

வினா எண் 14831—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், நாகரசம்பேட்டை ஊராட்சியில் 1992-93-ல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை

113—

திருச்சேறை ஊராட்சியில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 14832—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், திருச்சேறை ஊராட்சியில் 1992-93-ல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆம். ரூபாய் 3.71 லட்சம் செலவில் குடிநீர்த் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

114—

ராமகிருஷ்ணாபுரத்திற்கு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டுதல்.

வினா எண் 14833—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், ராமகிருஷ்ணாபுரத்திற்கு, 1992-93-ல் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

115—

வீரியங்கோட்டை மேல்நிலைத் தொட்டியை விரிவாக்குதல்.

வினா எண் 14834—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, வீரியங்கோட்டை மேல்நிலைத் தொட்டியை விரிவாக்கி எல்லா வார்டுகளுக்கும் குடிநீர் வழங்க 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

1993 அக்டோபர் 29]

116—

அடையாறு காந்தி நகர் தார்ச்சாலையைப் பழுது பார்த்தல்.

வினா எண் 15014— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, அடையாரைச் சேர்ந்த காந்தி நகர் தார்ச்சாலை பழுதடைந்துள்ளதைப் பழுதுபார்த்து சீரமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். சென்னை, அடையாரைச் சேர்ந்த காந்தி நகர் சாலைகள் 1991-92-ம் ஆண்டில் ரூபாய் 1,13,613-ம், 1992-93-ம், ஆண்டில் ரூபாய் 20,17,656 செலவில் சீரமைக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் (1993-94) ரூபாய் 4,12,600 செலவில் காந்தி நகரில் உள்ள மற்ற நான்கு தெருக்கள் சீரமைக்கப் பட உள்ளன.

117—

கஸ்தூரிபாய் நகர் இரண்டாவது மெயின் சாலையை பழுது பார்த்தல்.

வினா எண் 15015—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, அடையாரைச் சேர்ந்த கஸ்தூரிபாய் நகர் இரண்டாவது மெயின் தார்ச்சாலை பழுதடைந்து உள்ளதைப் பழுதுபார்த்து சீரமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

சென்னை, அடையாறு, கஸ்தூரிபாய் நகர், இரண்டாவது பிரதான தார்ச்சாலை ரூபாய் 35,500 செலவில் பழுதுபார்த்து சீரமைக்கப்படும்.

118—

மயிலாடுதுறை பேருந்து நிலையம் தொலைதூர பேருந்துகள் செல்வதற்கும் நகரப் பேருந்துகள் டாக்டர் வரதாச்சாரிய பூங்காவில் உள்ள பழத் தோட்டத்திலிருந்து செல்வதற்கும் வழிவகை செய்தல்.

வினா எண் 15029—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகை காயிதேமில்லத் மாவட்டம், மயிலாடுதுறை நகரில் தற்போது செயல்படும் பேருந்து நிலையம் தொலைதூரப் பேருந்துகள் செல்வதற்கும், நகரப்பேருந்துகள் டாக்டர் வரதாச்சாரியர் பூங்காவில் உள்ள பழத்தோட்டத்திலிருந்து செல்வதற்கும் வழிவகை செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

119—

பாரதி நகரில் நகராட்சி சார்பில் சந்தை அமைத்தல்.

வினா எண் 15197—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி, பாரதி நகரில் நகராட்சி சார்பில் சந்தை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) பரமக்குடி நகராட்சி பாரதி நகரில் சந்தை அமைக்க செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

1993 அக்டோபர் 29]

120—

பரமக்குடி நகராட்சிக்கு நகர்ப்புற வளர்ச்சி நிதியிருந்து தொகை ஒதுக்குதல்.

வினா எண் 15200—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகராட்சிக்கு நகர்ப்புற வளர்ச்சி நிதியிலிருந்து 1991-92-ல் எவ்வளவு கிடைத்துள்ளது?

(ஆ) திட்டமிட்டு இன்னும் கிடைக்காத தொகை எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) 1991-92-ம் ஆண்டில் நகர்ப்புற வளர்ச்சி நிதியிலிருந்து பரமக்குடி நகராட்சிக்கு நிதி உதவி ஏதும் வழங்கப்படவில்லை.

(ஆ) பரமக்குடி நகராட்சிக்கு கலந்தாய்வர் நியமனம் செய்யப்பட்டு, அதன்பேரில் கலந்தாய்வர் அவரது நிதி ஆதார அறிக்கையில் ரூபாய் 33.98 லட்சத்திற்கான பல்வேறு திட்டங்கள் பரிந்துரைக்கப்பட்டு அக்கருத்துரு திட்ட மேலாண்மைக் குழுவின் ஆய்வில் உள்ளது.

121—

கண்ணாடிகுளம் கிராமத்தில் சமுதாயக்கூடம் அமைத்தல்.

வினா எண் 15208—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் ஒன்றியம், கண்ணாடிகுளம் கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தற்போது இல்லை.

122—

கோயம்புத்தூர் மாநகராட்சியில் சாலை பராமரித்து மற்றும் கழிவுநீர் கட்டுதல்.

வினா எண் 15219—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சி முக்கிய ரோடுகள் ஒப்பனக்கார வீதி, சலிவன் வீதி, திவான் பகதூர் ரோடு, ராஜவீதி, பெரியகடை வீதி, தடாகம் ரோடு பகுதிகளில் மழை நீர் செல்ல சாலயையின் இருபுறமும் கழிவுநீர் வாய்க்கால்கள் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாநகராட்சி முக்கிய ரோடுகளில் ஒன்றான ஒப்பனக்கார வீதியில் மழைநீர் சாக்கடை தற்போது தூர் எடுக்கப்பட்டு மராமத்துப் பணி எடுக்கப்பட உள்ளது. சலிவன் வீதியில் கழிவு நீர் கால்வாய் தற்பொழுது பயனிலும், திவான்பகதூர் ரோட்டில் 1994-95-ம் ஆண்டிலும் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. ராஜ வீதி மற்றும் பெரிய கடைவீதி பகுதிகளில் மழைநீர் கால்வாய் தற்பொழுது தூர் எடுக்கப்பட்டு பயனிலுள்ளது. தடாகம் ரோடு பகுதியில் இந்த நிதியண்டில் மழைநீர் கால்வாய் கட்டப்பட உள்ளது.

123—

பல்லிக்கோட்டை ஊர்களுக்கு குடிநீர் வழங்குதல்.

வினா எண் 15268—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், மானூர் ஒன்றியம், ஆலவன்தூண்குளம், நெல்லை திருத்து, பல்லிக்கோட்டை ஊர்களுக்கு வழங்கப்படும் குடிநீர் குடிப்பதற்கு உகந்ததாக இல்லாததால் வேறு நீர் ஆதாரம் உருவாக்கி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

1980-81 ஆம் ஆண்டில் கிராமக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் ஆழ்குழாய்க் கிணற்றை நீராதாரமாக வைத்து நெல்லை திருத்து, ஆலவன்துாண்குளம் மற்றும் பல்லிக்கோட்டை மூன்று கிராமங்களையும் சேர்த்து கூட்டுக்குடிநீர் திட்டம் மூலம் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. தற்போது மேற்கூறிய திட்டத்திற்கான நீராதாரமான ஆழ்குழாய்க் கிணற்றின் நீரை சோதனைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஆய்வு செய்தபின், இந்நீர் குடிநீருக்கு உகந்தது இல்லையெனில் வரும் ஆண்டில் மாற்று நீராதாரம் திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்பட்டு, திட்டப்பணிகள் எடுக்க பரிசீலனை செய்யப் படும்.

124—

பள்ளமடை கிராமத்தில் பேருந்து நிழற்குடை அமைத்தல்.

வினா எண் 15269—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், பள்ளமடை கிராமத்தில் பயணிகள் வசதிக்குப் பேருந்து நிழற்குடை ஒன்று அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

1993-94 ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் இவ்வேலையை எடுத்துச் செய்ய பிரேரணை சேர்க்கப் பட்டுள்ளது.

125—

குப்பனாபுரம் கிராமத்திற்கு சமுதாயக் கிணற்றில் மேல்நிலைத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 15276—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், மானூர் ஒன்றியம், கானார்பட்டி, குப்பனாபுரம் கிராமம் குடிநீர்ப் பிரச்சனையைப் போக்க சமுதாயக் கிணற்றில் மேல்நிலைத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

மானூர் ஒன்றியத்தைச் சேர்ந்த கானார்பட்டி, குப்பனாபுரம் ஆகிய இரு குடியிருப்புகளுக்கும் நடப்பு நிதியாண்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள விசையிறைப்பான் திட்டத்திற்கு, வினாவில் குறிப்பிட்டுள்ள சமுதாயக் கிணற்றில் நீராதாரம் போதுமானதாக உள்ளதா என்பது பரிசீலிக்கப்பட்டு, போதுமான நீராதாரம் இருந்தால் திட்டம் எடுத்துக் கொள்ளப்படும். சமுதாயக் கிணற்றில் போதுமான நீராதாரம் இல்லாதிருந்தால் வேறு நீராதாரம் தோற்றுவிக்கப் பட்டு, மதிப்பீடு தயாரிக்கப்பட்டு திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

126—

வடகரை கிராமத்தில் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி அமைத்தல்.

வினா எண் 15367—திரு. எஸ் எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குலம் தொகுதி, மானூர் ஒன்றியம், வடகரை கிராமத்தில் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கோவில்பட்டி குடிநீர்த் திட்டத்தினை அபிவிருத்தி செய்ய திட்டம் ஆய்வில் இருந்து வருகிறது. அதில், வடகரை கிராமத்திற்கு தனியாக மேல்நிலைத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க திட்டமிட்டு வருகிறது.

127—

திருமலாபுரத்திற்கு குடிநீர் வசதி

வினா எண் 15377—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், திருமலாபுரம் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருமலாபுரத்தில் இரு கையிறைப்பான்கள் உள்ளன. இக்கிராமம் முழு அளவு குடிநீர் வசதி செய்யப்பட்டதாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

128—

நரிக்குறவர்களுக்கு ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் மூலம் ரேஷன் கார்டு வழங்குதல்

வினா எண் 15410—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ரேஷன் கார்டு இல்லாமல் இருக்கும் நரிக்குறவர்களுக்கு ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் மூலம் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை:—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் அனைத்துக் குடும்பங் களும், உணவுப் பொருள் வழங்கல் அட்டை இருந்தாலும், இல்லாவிட்டாலும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத் தில் நிதியுதவி பெறத் தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

129—

கோட்டாக்குடி ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்

வினா எண் 15592—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடை யளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பெருமகளூர் நகரம், காந்திநகர், புதுக்கோட்டை, உள்ளூர், ஏனாதி, கூத்தாடிவயல், நெல்லியடிக் காடு, உடையநாடு மரக்காவலசை, கா. உஞ்சியவிடுதி, மேலக் கொள்ளுக்காடு, புதுநகர், கோட்டாக்குடி ஆகிய இடங்களில் ஆதிதிராவிடர்களுக்கு 1992-93-ல் காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அர சால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத் தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந் தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சி களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனி யாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

130—

பொதுவக்குடியில் ஆழ்குழாய்க் கிணற்றில் மின்மோட்டார் பொருத்தி மேல்நிலைத் தொட்டி கட்டுதல்.

வினா எண் 15723—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, பொதுவக்குடியில் உள்ள ஆழ்குழாய்க் கிணற்றில் மின்மோட்டார் பொருத்தி மேல்நிலைத் தொட்டி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பரமக்குடி தொகுதி, பொதுவக்குடி குடியிருப்பில் மக்கட் தொகை 1320 ஆகும். இக்குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் (1993-94ல்) மின்னிறைப்பான் திட்டம் அமைக்க நீராதாரமாக ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மின் அறை, விசைப்பம்பு, மேல்நிலைத் தொட்டி, பொதுக்குழாய் ஆகியவை அமைக்கப்படும். இத்திட்ட மதிப்பீடு ரூபாய் 3.00 இலட்சங்கள் ஆகும். அனைத்துப் பணிகளும் முடிக்க துரித நடவடிக்கை வாரியத்தால் எடுக்கப்பட்டு வருகிறது.

TRUTH ALONE TRIUMPHS

131—

நகராட்சி கடைகள் ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்குதல்:

வினா எண் 15731—திரு. து. மூர்த்தி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிக் கடைகள் ஒதுக்கப்படும்போது அதில் ஆதிதிராவிடர்களுக்கும் கடைகள் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை:—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பொது ஏலம் தவிர்த்து தனி நபர்க்கோ அல்லது ஜாதி அடிப்படையிலோ நகராட்சிக் கடைகள் ஒதுக்கீடுசெய்ய நகராட்சி விதிகளில் வழிவகை இல்லை.

132—

அதம்பை ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்:

வினா எண் 15827—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம் அதம்பை (வடக்கு) ஆதிதிராவிடர்களுக்கு 1992-93-ல் காலனி வீடு கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ்மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

133—

சுந்தர்ராசபுரம் ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடு கட்டுதல்.

வினா எண் 15836—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், பண்ணவயல் ஊராட்சி சுந்தர்ராசபுரம் ஆதிதிராவிடர்களுக்கு 1992-93-ல் காலனி வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

134—

தர்மபுரி மாவட்டத்தில் கட்டப்பட்ட கசிவு நீர்க்குட்டைகள்.

வினா எண் 16106—திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் 1992-93ம் வருடத்தில் கட்டப்பட உள்ள கசிவு நீர்க் குட்டைகள் எத்தனை?

(ஆ) காவேரிப்பட்டினம் தொகுதியில் எத்தனை கட்டப்பட உள்ளன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) 1992-93ம் வருடத்தில் தருமபுரி மாவட்டத்தில் கட்டப்பட்ட கசிவு நீர்க் குட்டைகள்—129.

(ஆ) காவேரிப்பட்டினம் சட்டமன்ற தொகுதியில் 1992-93ம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் சிறப்புத் தன்னிறவுத் திட்டத்தின் கீழ் 3 கசிவு நீர்க் குட்டைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 1993-94ம் ஆண்டில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இரண்டு கசிவு நீர்க்குட்டைகள் கட்டப்படுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது

135—

பரமக்குடியில் ஆழ்குழாய்க்கிணறுகளின் எண்ணிக்கை

வினா எண் 16501—டாக்டர் எஸ். சுந்தரராஜ் ; மாண்பமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகராட்சியில் ஆழ்குழாய்க் கிணறுகள் மற்றும் திறந்தவெளிக் கிணறுகள் எத்தனை?

(ஆ) நகராட்சியின் தேவைக்கு ஏற்படும் குடிநீர்ப் பற்றாக் குறையைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) பரமக்குடி நகராட்சியில் 59 ஆழ்குழாய்க் கிணறுகளும் 6 திறந்தவெளிக் கிணறுகளும் நகராட்சியின் பராமரிப்பில் உள்ளன.

(ஆ) நகராட்சியிலுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளிலிருந்து தேவைக்கேற்ப குடிநீர் விநியோகம் சீராக செய்யப்பட்டு வருகிறது. வறட்சிக் காலங்களில் மேடான பகுதிகளுக்கும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி இல்லாத இடங்களுக்கும் லாரி/டிராக்டர் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இதைத்தவிர மேற்கூறிய ஆழ்குழாய்க் கிணறுகள் திறந்தவெளிக் கிணறுகள் மூலமும் பொதுமக்கள் குடிநீர் பெறுகின்றனர்.

136—

பரமக்குடி நகராட்சியின் மாட்டுச்சந்தையை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம்

வினா எண் 16697—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி நகராட்சியில் மாட்டுச் சந்தையை வேறு இடத்திற்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பரமக்குடி நகராட்சியில் மாட்டுச் சந்தையை வேறு இடத்திற்கு மாற்ற தற்போது உத்தேசம் ஏதும் இல்லை.

137—

கழுக்காணி முட்டம் கிராமத்தில் பேருந்து நிழற்குடை அமைக்கும் திட்டம்

வினா எண் 16760—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை தொகுதி கழுக்காணி முட்டம் கிராமத்தில் பேருந்து நிழற்குடை அமைத்துக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

138—

ஆதிதிராவிடர் கூட்டு குடியிருப்பு கட்டும் திட்டம்

வினா எண். 16778—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை தொகுதி 44, வள்ளாலகரம் ஊராட்சியில் இந்த நிதியாண்டில் ஆதிதிராவிட கூட்டு குடியிருப்பு கட்டி கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

139—

மயிலாடுதுறையில் ஆதிதிராவிடர் கூட்டுக் குடியிருப்பு கட்டுதல்

வினா எண் 16799—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை தொகுதியில் 62-ம் நெடுந்திடல் பகுதியில் ஆதிதிராவிட கூட்டு குடியிருப்பு கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

1993 அக்டோபர் 29]

140—

பரமக்குடியில் கட்டப்பட்ட கழிப்பிடங்களின் எண்ணிக்கை

வினா எண் 16825—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியில் 1989-90-ஆம் ஆண்டில் இருந்து நேரு வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் கட்டப்பட்ட கழிப்பிடங்கள் எத்தனை?

(ஆ) இத்திட்டத்திற்கான மானியம் எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ); பரமக்குடியில் 1989-90ஆம் ஆண்டில் இருந்து நேரு வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் கழிப்பிடங்கள் கட்டப்படவில்லை. இத்திட்டத்தின்கீழ் சூரமங்கலத்தில் ரூபாய் 3,840.00 செலவில் ஒரு கழிப்பிடமும், அருப்புக் கோட்டையில் ரூபாய் 1,23,964.35 செலவில் இரு கழிப்பிடங் களும் பெரியகுளத்தில் ரூபாய் 65,000 செலவில் ஒரு கழிப் பிடமும் ஆக மொத்தம் ரூபாய் 1,92,804.35 செலவில் நான்கு கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

141—

பரமக்குடியில் கழிவு உரங்களில் வரும் வருவாய்

வினா எண் 16832—டாக்டர் எஸ். சுந்ததரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்றை அமைச்சர் கீழ்க்ககாணும் வினாக்களுக்கு களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகராட்சியில் 1990-91, 1991-92-ஆம் ஆண்டுகளில் கழிவுகளால் ஏற்படும் கம்போஸ்ட்டினால் (Compost) நகராட்சிக்கு கிடைத்த வருமானம் எவ்வளவு?

(ஆ) கம்போஸ்ட் சேகரிக்க நகரின் வெளிப்புறத்தில் நிலம் கையகப்படுத்த அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி, எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) பரமக்குடி நகராட்சில் 1990-91-ஆம் ஆண்டில் 430 டன்களும், 1991-92 ஆம் ஆண்டில் 1331 டன்களும் கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்பட்டது. மேற்படி ஆண்டுகளில் இப்பகுதியில் வறட்சியின் காரணமாக வேளாண்மைப் பணிகள் வழக்கம்போல் நடக்காமையால் கம்போஸ்ட் உரம் வாங்க வேளாண்குடி மக்கள் முன்வரவில்லை. ஏலம் மூலம் விற்பனை செய்ய தற்சமயம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

142—

நெடுஞ்சேரி கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைக்கும் திட்டம்

வினா எண் 17080—டாக்டர் க. கோபால்:—மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி—உபயவேதாந்தபுரம் பஞ்சாயத்து நெடுஞ்சேரி கிராமத்திற்கு ஒரு சமுதாயக்கூடம் அமைத்து தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

1993 அக்டோபர் 29]

143—

அண்டூரில் நீர்மேலேற்று இயந்திர அறை வசதி செய்தல்

வினா எண் 17375—திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவட்டார் தொகுதியில் அய்யக்கோடு ஊராட்சி அண்டூர் குடிநீர் திட்டத்திற்கு நீர்தேக்க தொட்டிக்கு நீர் மேலேற்று இயந்திர அறை வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருவட்டார் தொகுதியில், அய்யக்கோடு ஊராட்சிக்குட்பட்ட அண்டூர் குடிநீர் இயந்திர அறை கட்டும் பணி தவிர அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. இக்குடிநீர் திட்டத்தில் நீர் மேலேற்றும் இயந்திர அறை அரசு புறம்போக்கு நிலத்தில் கட்டப்பட்டுள்ளது. வேலை முடிவடையும் தருவாயில் பம்பு ரூம் (Pump Room) கட்டப்பட்டுள்ள தளம் தனக்கு உரிமைப்பட்டது என பக்கத்து நிலச் சொந்தக்காரர் சொந்தம் கொண்டாடி பத்மநாபபுரம் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார். வழக்கு அரசுக்கு சாதகமாக தீர்ப்பளிக்கப்பட்டது. மறுபடியும் அவர் சென்னை நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து தற்காலிக தடையுத்தரவு கோர்ட்டிலிருந்து பெற்றுள்ளார். வழக்கு முடிந்தவுடன் அண்டூர் குடிநீர்த் திட்டத்தின் பணிகள் முடிக்கப்பட்டு மக்களின் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

144—

தோவாளை ஊராட்சி ஒன்றியத்தில் ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டும் திட்டம்

வினா எண் 17482—டாக்டர் மு. அம்ம முத்துபிள்ளை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் தோவாளை ஊராட்சி ஒன்றியத்தில் ஆதிதிராவிடர்களுக்கு புதிதாக வீடு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

145—

நாகர்கோவிலில் நகராட்சி நூலகத்தை பொது நூலகமாக மாற்றும் திட்டம்

வினா எண் 17487—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் நகராட்சிக்குச் சொந்தமான நகர் பூங்கா நூலகத்தை (Park Library) பொது நூலகத் துறையின் கீழ் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகர்கோவில் நகராட்சி பூங்காவில் உள்ள நூலகம் முந்தைய கொச்சி அரசினரால் நாகர்கோவில் நகராட்சிக்கு வழங்கப்பட்டதாகும். இது கடந்த 50 ஆண்டுகளாக நல்ல முறையில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. இந்நூலகத்தில் 6,312 நூல்கள் உள்ளன. அவை நூலக உறுப்பினர்களுக்கு படிக்க எடுத்துச் செல்ல வழங்கப்படுகின்றன. இது தவிர, தினசரி பத்திரிகைகள் மற்றும் அனைத்து வாராந்திர, மாதாந்திர சஞ்சிகைகளும் இந்நூலகத்திற்கு வாங்கப்படுகின்றன. இதற்காக நகராட்சி ஒரு வருடத்திற்கு ரூபாய் 41,000 செலவு செய்கிறது. நகராட்சி நூலகம் தவிர இந்நகரில் பொது நூலகத் துறையினரால் ஒரு நூலகம் நடத்தப்

பட்டு வருகிறது. எனவே நாகர்கோவில் நகராட்சிக்குச் சொந்த மான பூங்கா நூலகத்தை பொது நூலகத் துறையின் கீழ் கொண்டு வர திட்டம் இல்லை.

146—

பூம்புகார் தொகுதியில் ஆதிதிராவிடர் மயானத்திற்கு சாலை வசதி ஏற்படுத்தல்

வினா எண் 16867—திரு. எம். பூராசாமி: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் ஆதிதிராவிட மயானங்கள் சிலவற்றிற்கு சாலை வசதிகள் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பட்டா நிலங்களை கையகப்படுத்தி சாலை வசதி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) பூம்புகார் தொகுதியைச் சேர்ந்த கீழ்க்குறித்த கிராமங்களில் ஆதிதிராவிடர் மயானங்களுக்குப் பாதை வசதி தேவைப்படுகிறது. இது தொடர்பாக எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கை விவரம் பின்வருமாறு:—

1. 81, கீழையூர் கிராமம்	..	மயானப்பாதை வசதிக்காக நிலம் கையகப்படுத்தப் பட்டுவிட்டது. தீர்ப்பாணை எண். 5/92-93, நாள் 17.12.1992.
2 79, எ. திருவெங்காடு கிராமம்	..	மயானப்பாதை வசதிக்காக நிலம் கையகப்படுத்தப் பட்டுவிட்டது. தீர்ப்பாணை எண் 3/92-93, நாள் 10.12.1992.

3	83 வானகிரி	மயானப்பாதை வசதிக்காக நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
4	82, மேலையூர்	மயானப்பாதை வசதிக்காக நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
5.	91, திருச்சம்பள்ளி	மயானப்பாதை வசதிக்காக நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
6.	70, நத்தம்	மயானப்பாதை வசதிக்காக நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
7.	வேப்பஞ்சேரி	மயானப்பாதை வசதிக்காக நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
8.	33, மாணிக்கப்பங்கு	மயானப்பாதை வசதிக்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு விட்டது. தீர்ப்பாணை எண் 1-92-93, நாள் 10-12-92.

147—

குடியுரிமைப் பாதுகாப்பு சட்டப்படி பதிவாகியுள்ள வழக்குகளின் விவரம்.

வினா எண் 20131—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த ஐந்து ஆண்டுகளில் குடியுரிமை பாதுகாப்பு சட்டப்படி எத்தனை வழக்குகள் பதிவாகி உள்ளன ?

(ஆ) எத்தனை பேர் தண்டிக்கப்பட்டுள்ளனர் ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) கடந்த ஐந்து ஆண்டுகளில் (1988–92) குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்படி 4,155 வழக்குகள் பதிவாகி உள்ளன.

(ஆ) 195 பேர் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

148—

தமிழ்நாட்டில் உள்ள மலையாளி, லம்பாடி ஆகிய இனத்தினரை ஆதிவாசிகள் பட்டியலில் சேர்த்தல்

வினா எண் 21449—திரு. வெ. பெரியசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள மலையாளி, லம்பாடி ஆகிய இனத்தினரை ஆதிவாசிகள் பட்டியலில் சேர்க்க மைய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு செய்ததின் மீது மைய அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

லம்பாடி மற்றும் சத்தியமங்கலத்திலுள்ள மலையாளி இனங்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்காக மைய அரசுக்கு தமிழக அரசு செய்த பரிந்துரை மீது மைய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

149—

வால்பாறை மலைப்பகுதிக்கும் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டமிடுதல்.

வினா எண் 313—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்திற்கு மட்டுமே உரிய மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் கோவை மாவட்டத்திலுள்ள வால்பாறை மலைப் பகுதிக்கும் கொண்டுவர வாய்ப்புள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வால்பாறை பகுதியைச் சுற்றுலா மையமாக ஆக்க அரசு முயற்சி செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

150—

பெரிய தொட்டிப் பாலத்தை சுற்றுலா மையமாக்கும் திட்டம்.

வினா எண் 432—திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதிக்கு உட்பட்ட அருவிக் கரையிலுள்ள பெரிய தொட்டிப்பாலத்தை சுற்றுலா மையமாக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர் :

மாவட்ட ற்சுறுலாத்தலத் திட்டத்தின்கீழ், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள திருவட்டாறு தொகுதிக்கு உட்பட்ட அருவிக் கரையிலுள்ள பெரிய தொட்டிப் பாலம் மாவட்ட சுற்றுலாத் தலமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

151—

திருச்செந்தூரை சுற்றுலா மையமாக்கும் திட்டம்.

வினா எண் 1322—திரு. ஆ. செல்லத்துரை : மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்செந்தூருக்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருவதால் திருச்செந்தூரைச் சுற்றுலா மையம் ஆக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர் :

திருச்செந்தூர் ஏற்கனவே தமிழகத்தின் முக்கிய சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக விளங்குவதால் இவ்வினாவிற்கு இடமில்லை.

152—

இராமேஸ்வரத்தில் ஒலி. ஒளிக் காட்சி அமைத்தல்

வினா எண் 2231—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் ஒலி, ஒளிக் காட்சி அமைக்க அரசுக்கு பரிந்துரைகள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர் :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் ஒலி, ஒளிக் காட்சி அமைக்க அரசுக்கு பரிந்துரைகள் எதுவும் வரவில்லை.

(ஆ) பரிந்துரைகள் எதுவும் பெறப்படாததால் இவ்விவரம் பற்றிய கேள்விக்கு பதில் எழவில்லை.

153—

பூம்புகாரை அழகு படுத்தும் திட்டம்

வினா எண் 3303—திரு. எம். பூராசாமி : மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுற்றுலா மையமாக பூம்புகாரை விரிவுபடுத்தும் திட்டமும், அழகுபடுத்தும் திட்டமும் அரசின் பரிசீலனையில் உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர் :

(அ) சுற்றுலா மையமான பூம்புகாரை விரிவுபடுத்தவும், அழகுபடுத்தவும் புதிய திட்டங்கள் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

154—

திருமூர்த்தி நகரில் சுற்றுலாக் கழகம் மூலம் தங்கும் விடுதி கட்டுதல்

வினா எண் 4653—திரு. கே. பி. மணிவாசகம் : மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை அருகே திருமூர்த்தி நகரில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் தங்கும் விடுதி கட்டும் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா ?

(ஆ) ஆம் எனில், இதற்கு ஆகும் திட்டச்செலவு எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர் :

(அ) தற்போது இத்திட்டம் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

155—

கல்லணையில் தங்கும் விடுதி கட்டுதல்

வினா எண் 4969—திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

கல்லணைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் நலன் கருதி அங்கு தங்கும் விடுதியும் உணவகமும் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர் :

இல்லை.

156—

கயத்தாறு, திருமலை நாயக்கர் மகால் மற்றும் சரஸ்வதி மஹாலில், ஒலி, ஒளிக் காட்சி அமைத்தல்

வினா எண் 5594—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கயத்தாறு, மதுரை திருமலை நாயக்கர் மகால், தஞ்சை சரஸ்வதி மகால் போன்ற இடங்களில் அவற்றின் வரலாற்றுச் சிறப்பினை விளக்கும் வகையில், ஒலி, ஒளிக் காட்சி நடத்த அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர் :

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மதுரை திருமலை நாயக்கர் மகாலில் வரலாற்றுச் சிறப்பினை விளக்கும் வகையில் ஒலி, ஒளிக் காட்சி, தமிழக அரசு, சுற்றுலாத் துறையின் மூலம் நடத்தப்பட்டு வருகின்றது.

மேலும் கயத்தாறு, தஞ்சை சரஸ்வதி மகால் போன்ற இடங்களில் ஒலி, ஒளிக் காட்சி நடத்தும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

157—

குரங்கு நீர் வீழ்ச்சிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை

வினா எண் 11863— டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலுள்ள குரங்கு நீர்வீழ்ச்சி (Monkey Falls)-யை காணவரும் சுற்றுலாப் பயணிகள் ஆண்டு ஒன்றுக்கு தோராயமாக எவ்வளவு ?

(ஆ) அதனால் அரசுக்குக் கிடைக்கும் வருமானம் ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர் :

(அ) வால்பாறையிலுள்ள குரங்கு நீர்வீழ்ச்சி (Monkey Falls) யைக் காண சுமார் 43,789 சுற்றுலாப் பயணிகள் ஆண்டு ஒன்றுக்குத் தோராயமாக வருகை புரிகின்றனர்.

(ஆ) இதன் மூலம் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,11,500 வருமானம் கிடைக்கிறது.

இருபத்தி நான்காம் பட்டியல்

1—

தமிழகத்தில் தனி நபர் வருமானம்.

வினா எண் 16667—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தற்போது தனி நபர் வருமானம் எவ்வளவு ?

(ஆ) தனி நபர் வருமானத்தை உயர்த்த அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

(அ) தமிழகத்தின் தனி நபர் ஆண்டு வருமானம் 1990-91 ஆம் ஆண்டு வரை கணக்கிடப்பட்டுள்ளது. 1990—91—ஆம் ஆண்டுக்கு தனி நபரின் வருமானம் நடப்பு விலையில் (at current prices) ரூ. 4,428 எனவும், 1980-81—ஆம் ஆண்டு விலையை அடிப்படையாகக் கொண்ட நிலையான விலையில் (at constant prices) ரூ. 1,965 எனவும் கணக்கிடப் பட்டுள்ளது.

(ஆ) தமிழக மக்களின் தனி நபர் வருமானத்தை உயர்த்தி அவர்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு ஐந்தாண்டு திட்டங்களைத் தீட்டி குறிப்பாக வேலை வாய்ப்பு களை அதிகப்படுத்தும் இனங்களான விவசாயம், விவசாயம் சார்ந்த தொழில்கள், நீர்ப்பாசனம், தொழில்கள், மின் உற்பத்தி ஆகிய இனங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து நிறைவேற்றி வருகிறது.

2—

ஓமவயல் பாலச்சேரிக் காட்டில் அமுத அங்காடி.

வினா எண் 7331— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப் பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாச்சத்திரம் ஒன்றியம் ஓமவயல் பாலச்சேரிகாட்டில் ஒரு நிரந்தர கிராம அமுத அங்காடி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன், உணவுத் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாச்சத்திரம் ஒன்றியம் ஓமவயல் பாலச்சேரிகாட்டில் கங்காதரபுரம் முதன்மை வேளாண்மைக் கூட்டுறவு வங்கியினால் கரம்பக்காடு கிராமத்தில் நடத்தப்பட்டு வரும் நியாய விலைக் கடையில் இருந்து 346 குடும்ப அட்டைகளை பிரித்து நிரந்தர பகுதி நேர நியாய விலைக் கடை திறக்க 13-7-1993-ல் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஆணையிடப்பட்டுள்ளது.

3—

எலச்சிபாளையம் — உற்சனையில் நியாய விலைக் கடை

வினா எண் 16446—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எலச்சிபாளையம் ஒன்றியம், உற்சனையில் ஒரு நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம் எலச்சிபாளையம் ஒன்றியம் உற்சனையில், உற்சனை மேட்டுப்பாளையம் முதன்மை வேளாண்மைக் கூட்டுறவு வங்கியினால் 281 குடும்ப அட்டைகளுடன் பகுதி நேர நியாய விலைக் கடை திறக்கப்பட்டு 19–7–1993 முதல் செயல்பட்டு வருகிறது.

4—

பகைவென்றி கிராமத்தில் பகுதி நேரக் கடை.

வினா எண் 17158—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் வல்லம் கிராம நியாய விலைக் கடையின் மூலம் பகைவென்றி கிராமத்திற்கு வாரத்திற்கு இரு முறை பகுதி நேரக் கடைகள் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன், உணவு அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி பகைவென்றிக் கிராமத்தில் 320 குடும்ப அட்டைதாரர்கள் தற்போது 3 கிலோமீட்டர் தூரத்திற்கப்பாலுள்ள வல்லம் தொடக்க வேளாண்மைக்கூட்டுறவு வங்கியினால் நடத்தப்படும்

1993 அக்டோபர் 29]

நியாய விலைக் கடையில் பொருள் பெற்று வருகின்றனர். இவர்களின் நன்மையினைக் கருத்திற்கொண்டு பகைவென்றிக் கிராமத்தில் 320 குடும்ப அட்டைகளுடன் பகுதி நேர நியாய விலைக் கடை திறக்க இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கூட்டுறவுச்சங்க பதிவாளரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதியுடன் வல்லம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியினால், வல்லம் கிராமத்தில் நடத்தப்பட்டு வரும் கூட்டுறவு நியாய விலைக் கடையை பிரித்து மேற்படி தொடக்க வேளாண்மைக்கூட்டுறவு வங்கியால், பகைவென்றி கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை திறக்கப்படும்.

5—

நாச்சியார்கோவிலில் ஆரம்ப சுகாதார நிலையக் கிளை

வினா எண் 659—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம் நாச்சியார் கோவிலில் ஆரம்ப சுகாதார நிலையக்கிளை அமைக்கும் திட்டம் அரசு செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

இல்லை.

6—

ஊராட்சி ஒன்றியங்களில் மருத்துவமனைகள்

வினா எண் 1616—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு மருத்துவமனை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

—

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இந்த வினாவுக்கு இடமில்லை.

7—

மாவட்ட மருத்துவமனைகளில் செவிலியர் பயிற்சிப் பள்ளி.

வினா எண் 1235—டாக்டர் மு. சின்னியம்மாள் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து மாவட்ட மருத்துவமனைகளிலும் செவிலியர் பயிற்சிப் பள்ளி தொடங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சென்னையில் இரண்டு மருத்துவக் கல்லூரிகளிலும் மற்றும் சேலம், கோவை, மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர் ஆகிய ஐந்து மருத்துவக் கல்லூரிகளிலும் திருச்சி மாவட்ட தலைமையிட மருத்துவமனையிலும் செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் நடைபெறுகின்றன. மேலும் நாகப்பட்டிணம், தூத்துக்குடி, தர்மபுரி ஆகிய மூன்று மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் தொடங்க 8—3—1993 நாளிட்ட அரசாணை எண் 293–ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே, மேலும் செவிலியர் பயிற்சி பள்ளிகள் தொடங்க வேண்டிய அவசியம் ஏதும் இல்லை.

8—

பித்த வெடிப்பு நோய்க்கு மருந்து.

வினா எண் 3277—திரு, மா. சுந்தரதாஸ் : Will the Hon'ble Health Minister be pledsed to State—

(a) Whether the Tamil Nadu Dadha Pharmaceuticals Drug Manufacturing Unit is manufacturing any drug for the cuts in the leg toes like 'Pitha Vedi'?

(b) The details thereof ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாடு தாதா பார்மசூட்டிகல்ஸ் லிமிடெட், சென்னை, காலில் ஏற்படும் பித்த வெடி வெடிப்புகளுக்கு எந்த மருந்தையும் தயாரிப்பதில்லை. இருந்தபோதிலும் மேற்படி நிறுவனம் ஒயிட் பீல்டு ஆயின்ட்மெண்ட் என்ற மருந்து தயார் செய்கிறார்கள். அம்மருந்தை பித்த வெடிப்பு போன்றவற்றிற்கு உபயோகப்படுத்தலாம்.

9—

நேமம் கிராமம் ஆண்டிரசன்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம்

வினா எண் 5190—திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூந்தமல்லி தொகுதி, நேமம் கிராமம் ஆண்டிரசன் பேட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் நிலை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) நேமம் கிராமம், ஆண்டிரசன்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்ட 3.70 ஏக்கர் புறம்போக்கு நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு மருத்துவத் துறைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மருத்துவத் துறைக்கு நிலம் மாற்றம் செய்யப்பட்ட பின்னர் அரசின் நிதி நிலைமைக்கு ஏற்ப இனி வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

[1993 அக்டோபர் 29

10—

தமிழ்நாட்டில் தனியார் மருத்துவக் கல்லூரிகள்.

வினா எண் 5496—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தனியார் மருத்துவக் கல்லூரிகள் எத்தனை ? மாணவ, மாணவியர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அவற்றில் கல்லூரி எனத்துவங்கிய பின்னரும் இன்னமும் சொந்தக் கட்டிடம் மற்றும் மருத்துவமனை இன்றி செயல்படுபவை உள்ளனவா ?

(இ) அந்த வசதிகளை ஏற்படுத்த காலக்கெடு ஏதேனும் அரசு விதித்துள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) நான்கு.

	தனியார் மருத்துவக்கல்லூரியின் பெயர்.	மாணவர் எண்ணிக்கை.
	(1)	(2)
1.	கிருத்துவ மருத்துவக்கல்லூரி, வேலூர். ..	60
2.	பி.எஸ்.ஜி. மருத்துவ அறிவியல் நிலையம், கோயம்புத்தூர்.	100
3.	ராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி, அண்ணாமலைநகர்.	131
4.	இராமச்சந்திரா மருத்துவக்கல்லூரி, போரூர் ..	100

(ஆ) இல்லை.

(இ) இவ்வினா எழஇடமில்லை.

1993 அக்டோபர் 29]

11—

பொது ஒதுக்கீட்டில் (Open Competition) முற்பட்டவர், பின்தங்கியோர், தாழ்த்தப்பட்டோரின் சதவீதம்.

வினா எண் 6076ஏ—திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவக் கல்லூரிகளில் Open Competition -ல் இடம் பெற்ற மாணவர்களில், Forward Community யைச் சார்ந்தவர் எத்தனை சதவீதம் Backward Community யைச் சார்ந்தவர் எத்தனை சதவீதம், தாழ்த்தப்பட்ட மாணவர்கள் எத்தனை சதவீதம்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

அரசு மருத்துவக் கலூால்ரிகளில் 1991–92 மற்றும் 1992–93-ம் ஆண்டுகளில் Open Competition-ல் இடம் பெற்ற மாணவர்களில் Forward Community Backward Community மற்றும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர்களின் சதவீதம் பின்வருமாறு :—

	1991–92	1992–93
Forward Community	11.49%	5.96%
Backward Community	16.72%	22.78%
Scheduled Cast	0.21%	..

12—

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் பெயர் மாற்றம்.

வினா எண் 1324—திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் பெயரை எம். ஜீ. ஆர். போக்குவரத்துக் கழகம் என்று மாற்றி அமைக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் பெயரை மாற்றி அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

1993 அக்டோபர் 29

13—

மறைமலைநகர் இரயில்வே நிலையத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் பெயர்.

வினா எண். 7555—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மறைமலைநகர் இரயில்வே ஸ்டேஷனுக்கு பெருந்தலைவர் காமராஜ் பெயர் வைக்க மைய அரசுக்கு பரிந்துரை செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

மறைமலை நகர் இரயில்வே நிலையத்தை ''மறைமலை நகர்—காமராசர் ரயில் நிலையம்'' என மாற்றம் செய்வதற்கு மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து 31—1—1993 ஆம் நாள் கடிதம் எழுதியுள்ளது.

14—

கொள்ளிடத்திலிருந்து அளக்குடிக்கு புதிய மினி பஸ்.

வினா எண் 8453—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, கொள்ளிடத்திலிருந்து பின்படுகை வழியாக அளக்குடிக்கு மினி பஸ் புதியதாய் செயல்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

சீர்காழி தொகுதி, கொள்ளிடத்தில் இருந்து பின்படுகை வழியாக அளக்குடிக்கு சோழன் போக்குவரத்துக் கழக மினி பஸ் புதியதாய் இயக்கும் செயற் குறிப்பு இல்லை.

15—

தென்காசியிலிருந்து திருச்செந்தூருக்கு பேருந்து.

வினா எண் 8507—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், தென்காசியிலிருந்து திருச்செந்தூருக்கு கீழ்பாவூர் வழியாக பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

கீழப்பாவூர் என்ற ஊர் தென்காசி திருநெல்வேலி பிரதான சாலையில் அமைந்துள்ள பாவூர் சத்திரத்திலிருந்து பிரிந்து சுரண்டை செல்லும் சாலையில் 2.8 கி.மீ. தூரத்தில் அமைந்து உள்ளது. ஆகவே, தென்காசியிலிருந்து கீழப்பாவூர் வழியாக திருச்செந்தூருக்கு பேருந்து இயக்குவது என்பது சுற்று வழித்தடமாகும். தவிர, பாவூர் சத்திரம் வழியாக கீழப்பாவூருக்கு தினசரி 15 பேருந்துகள் மூலம் 120-க்கும் மேற்பட்ட சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, இப்பேருந்துகளை பயன்படுத்தி பிரதான சாலையில் உள்ள பாவூர் சத்திரம் வந்துவிட்டால் தென்காசி அல்லது திருச்செந்தூர் செல்வதற்கு ஏராளமான பேருந்து வசதிகள் உள்ளதால் சுற்று வழித் தடத்தில் பேருந்து இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

16—

செங்கோட்டையிலிருந்து தூத்துக்குடிக்கு பேருந்து.

வினா எண் 8508—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம், செங்கோட்டையிலிருந்து தூத்துக்குடிக்கு கீழப்பாவூர் வழியாக பேருந்து விடுவதற்கு அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம், செங்கோட்டையிலிருந்து தூத்துக்குடிக்கு கீழப்பாவூர் வழியாக பேருந்து விடும் செயற் குறிப்பு தற்போது இல்லை.

17—

சங்கரன் கோவிலிலிருந்து ஆலங்குளத்திற்கு புதிய பேருந்து.

வினா எண் 8708—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்கரன்கோவிலிலிருந்து வீராணம் வழியாக ஆலங்குளத்திற்கு புதிய பேருந்து ஒன்று விடுவதற்கு அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

வீராணம், ஆலங்குளம் முழு தடத்தில் 2 கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக புறநகர் பேருந்துகள் 8 சுற்றுக்களும், 4 தனியார் புறநகர் பேருந்துகள் 17 சுற்றுக்களும் இயக்கப்பட்டு வருகின்றன. இப் பேருந்துகளில் பயணிகள் விகிதாச்சாரம் ஆய்வு செய்யப்பட்டதில் கூடுதல் பேருந்து இயக்க வேண்டிய அவசியமில்லை. மேற்குறிப்பிட்ட 6 பேருந்துகள் நீங்கலாக சங்கரன்கோவில், ஊத்துமலை, ஆலங்குளம், வீராணம், சோலைச் சேரி ஆகிய இவ் வழித் தடங்களில் தனியாக 5 நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

18—

மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் மொத்த எண்ணிக்கை.

வினா எண் 9234—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான மொத்த பேருந்துகள் எத்தனை?

(ஆ) அவற்றில் புதிய பேருந்துகள் எத்தனை?

(இ) 1989-90-ம் ஆண்டின் வருமானம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பேருந்துகள் எண்ணிக்கை 225.

(ஆ) அவற்றில் 24 பேருந்துகள் புதியனவாகும்.

(இ) 1989-90 ஆம் ஆண்டு மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் வருமானம் ரூ. 3,824.12 இலட்சங்கள் ஆகும்.

19—

பேராவூரணி சோழன் பணிமனையில் பழுதடைந்துள்ள நகரப் பேருந்துகள்.

வினா எண் 8974—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், பேராவூரணி சோழன் டெப்போவில் இயங்கிக் கொண்டிருக்கும் 13 நகரப் பேருந்துகளும் பழுதுபட்ட நிலையில் உள்ளன என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவைகளை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) பேராவூரணி கிளையில் இயங்கும் நகரப் பேருந்துகள் நான்கு வருடங்களுக்கு மேலாக தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. தற்பொழுது பெரும் பழுதுகள் வண்டிகளில் ஏற்பட்டால் அவை நீக்கப்பட்டு தடத்தில் நல்ல முறையில் இயக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) கழகத்தின் நிதி நிலைக்கு ஏற்றவாறு வரும் நிதி ஆண்டுகளிலிருந்து படிப்படியாகப் புதிய பேருந்துகளை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

20—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் படுக்கை வசதி

வினா எண் 9439—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் பேருந்துகளில் படுக்கை வசதிகள் கொண்ட இரவு நேர விரைவு பேருந்து விடப்படுமா?

(ஆ) எப்போது இருந்து விடப்படும்?
(ஆ) ஆம் எனில், தொகுப்பு வீடுகள் எப்போது கட்டப் படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத் தின் கீழ்மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணி களை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

93—

போரூர் — கேசவபுரம் படவேடு கிராமங்களுக்கு நீர்த்தேக்கத் தொட்டிகள்

வினா எண் 10919— திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், போரூர் ஒன்றியம், கேசவபுரம் படவேடு கிராமங்களுக்கு இரண்டு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) கேசவபுரம் குடியிருப்பிற்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டப்படும். படவேடு குடியிருப்பிற்கு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் இல்லை.

(ஆ) கேசவபுரம் குடியிருப்பிற்கு வரும் நிதியாண்டில் (1993–94) நிதி நிலையைப் பொறுத்து திட்டம் எடுத்துக் கொள்ளப்படும். படவேடு குடியிருப்பில் ஆழ் துளைக் கிணறு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

ஒன்றை ஆதாரமாகக் கொண்ட 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி நல்ல முறையில் இயங்கி வருகிறது. எனவே, இக்குடியிருப்பிற்கு மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

94—

போளூர் — அல்லிநகரில் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 10920—திரு. நா. வேடியப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் பேரூராட்சி அல்லிநகர் பகுதியில் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இதற்கான உத்தேச மதிப்பீடு தயாரிக்கும் பணி முடியும் தருவாயிலுள்ளது. அதற்கு வாரியம் மற்றும் அரசின் ஒப்புதல் பெறப்பட்டு திட்டப் பணிகள் துவங்கப்படும்.

95—

பரமக்குடி — டி. கருங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 11320—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியத்தில் டி. கருங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பயன் பெறும் ஊர்களின் விவரம் என்ன ?

TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள டி கருங்குளம் குடியிருப்பு திருவாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்ந்துள்ளது. இத்திட்டத்திற்கு ரூ. 6.85 இலட்சங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன; இக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பயன் பெறும் கிராமங்கள் விவரம் பின்வருமாறு :—

1. திருவாடி
2. தேவேந்திர நல்லூர்
3. பாண்டிக்கண்மாய்
4. டி. இலந்தைக்குளம்
5. டி. கருங்குளம்.

96—

பொள்ளாச்சி — பாலக்காடு சாலையைப் புதுப்பித்தல்.

வினா எண் 11135—திரு. நா.சா. பழனிசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், பொள்ளாச்சி பாலக்காடு சாலையிலிருந்து ஜலத்தூர் செல்லாண்டி, கௌண்டன் புதூர் வழியாக இராமப்பட்டினம் சாலையை இணைக்கும் பழுதடைந்த தார் சாலையை புதுப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், பொள்ளாச்சி பாலக்காடு சாலையிலிருந்து ஜலத்தூர் செல்லாண்டி, கௌண்டன் புதூர் வழியாக ராமப்பட்டினம் சாலையை இணைக்கும் 2 கி.மீ.

சாலையில் 1.40 கி.மீ. சாலையைப் புதுப்பிக்க 1.54 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 0.60 கி.மீ. சாலை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1993—94-ல் புதுப்பிக்கப்படும்.

97—

பரமக்குடியில் குடிநீர்க் குழாய்க் கிணறுகளின் எண்ணிக்கை

வினா எண் 11366—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தாலுக்காவில் குடிநீர் ஆழ்குழாய்க் கிணறுகள் எத்தனை செயல்படுகின்றன ?

(ஆ) இவற்றுள் பயன்படாத ஆழ் குழாய்க் கிணறுகள் எத்தனை ?

விடை —

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப் பெற்றவுடன், அக்கிணறுகளில் கையிறைப்பான்கள் பொருத்தப்பட்டு செயலுக்குக் கொண்டு வரப்படுகின்றன. பரமக்குடி தாலுக்காவில் 306 கையிறைப்பான்கள் செயல்படுகின்றன.

(ஆ) 5 கையிறைப்பான்கள் தற்போது பயன்படாமல் உள்ளன.

98—

சத்தியமங்கலம் — அருள்மிகு பன்னாரி மாரியம்மன் திருக்கோவிலுக்கு புதிய அறங்காவலர் குழு.

வினா எண் 822— திருமதி அ.தி. சரஸ்வதி : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதி அருள்மிகு பன்னாரி மாரியம்மன் திருக்கோவிலுக்கு புதிய அறங்காவலர் குழு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் :

அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோவிலுக்கு 6 பரம்பரை அறங்காவலர்களுடன் 5 பரம்பரை அல்லாத அறங்காவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

99—

திருவாரூர் சிலைகள் பாதுகாப்பு மையத்திற்கு குளிர்சாதன வசதி.

வினா எண் 3265— திருமதி வி.ஜி. மணிமேகலை : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவாரூரில் உள்ள சிலைகள் பாதுகாப்பு மையத்திற்கு குளிர்சாதன வசதி ஏற்படுத்தப்படல் வேண்டுமா ?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : திருவாரூரில் உள்ள சிலைகள் பாதுகாப்பு மையத்திற்கு குளிர்சாதன வசதி ஏற்படுத்த அரசால் ரூ. 9 இலட்சம் அனுமதிக்கப்பட்டு பொதுப்பணித் துறையினரால் நிரந்தர மின் வசதியுடன் 7-10-1992-ல் குளிர்சாதன வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

100—

செங்கற்பட்டு கண்ணாபேட்டை அருள்மிகு சிதம்பர சுவாமிகள் திருமடத்தின் வளர்ச்சிப் பணிகள் குன்றுதல்.

வினா எண் 4487— திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு வட்டம், கண்ணாபேட்டையில் இருக்கும் அருள்மிகு சிதம்பர சுவாமிகளின் திருமடத்தை திருப்போரூர் அருள்மிகு கந்தசாமி திருக்கோவிலின் அரசு நிர்

வாகத்தோடு இணைத்ததிலிருந்து திருமடத்தின் வளர்ச்சி குன்றியுள்ளது என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) திருமடத்தின் வளர்ச்சி குன்றவில்லை. திருமடத்திற்குப் போதுமான வருமானம் இல்லை. இருப்பினும், திருக்கோயிலின் வருமானத்திலிருந்தும் செலவழிக்கப்பட்டு, திருமடத்தில், எல்லா திருவிழாக்களும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு திருமடம் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

101—

புவனகிரி சொக்கன்கொல்லை மாரியம்மன் கோயில் புதுப்பித்தல்.

வினா எண் 8366—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்தில் சொக்கன்கொல்லையில் மாரியம்மன் கோவில் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இந்த திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் ஏற்கெனவே கொண்டு வரப்பட்டு, சிறிய திருக்கோவில்கள் பட்டியலில் பதியப்பட்டுள்ளது. கிராமப் பொது மக்களின் நன்கொடை மூலமாக இத்திருக்கோயில் பழுது பார்க்கப்பட்டு, கடந்த 6—5—1992-ல் கும்பாபிஷேகம் நடத்தப்பெற்றுள்ளது.

1993 அக்டோபர் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. சென்னையில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலை அமைக்க இடம் ஒதுக்கி, நன்கொடை வழங்கியமைக்காக முதல்வருக்கு நன்றி தெரிவித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கு ஒரு முக்கியச் செய்தியை என் சார்பில் அறிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த மாமன்றத்தின் சிறப்புக்குரிய உறுப்பினராகத் திகழ்ந்தவரும், இந்த தேச விடுதலைக்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவருமான, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய ஜெயந்தி விழா நாளைய தினம், வருகிறது. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு, அவர் இந்த தேச விடுதலைக்காகச் செய்திட்ட எண்ணற்ற தியாகங்களை மனதிலே கொண்டு அந்தத் தெய்வீகத் திருமகனுக்கு சென்னை நகரத்தில் சிலை அமைத்திட வேண்டுமென்கிற கோரிக்கையை ஏற்று, அண்ணா சாலையில் பிரதானமான நந்தனம் சந்திப்பில் இடமும் வழங்கி, அந்தச் சிலை வைப்பதற்கு உரியவர்களிடத்தில் பிளவு இருந்த காரணத்தால் அரசாங்கத்தின் சார்பில் ஒரு குழுவையே நியமித்து, அந்தக் குழுவுக்கு என்னைத் தலைவராக இருக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பணித்திருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சிலையை அமைக்கிற பணிக்காக, நாளைய தினம் தேவர் திருமகனுடைய ஜெயந்தி விழா வருவதை முன்னிட்டு, அந்தச் சிலை அமைப்புக்கு என்று முதன் முதலாக தன்னுடைய சொந்த நிதியிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1 லட்சத்து 8 ஆயிரம் ரூபாயை மனமுவந்து (மேசையைத் தட்டும் ஒலி) என்னிடத்திலே வழங்கியிருக்கிறார்கள். பசும்பொன்— தேவர் அவர்களுடைய பிறந்தநாளும், மறைந்த நாளும் ஒரே நாள் என்கிற சிறப்புக்குரிய அந்தப் பெருமகனின் ஜெயந்தி விழா நாளைய தினம் நடைபெறுவதையொட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிற இந்தப் பெரு நிதிக்காக, முதன் முதலில் வழங்கியிருக்கிற இந்த நிதிக்காக, அந்தக் குழுவின் சார்பிலும், என் சார்பிலும் அவர்களுக்கு என்னுடைய இதயபூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

1993 அக்டோபர் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. சென்னையில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலை அமைக்க இடம் ஒதுக்கி, நன்கொடை வழங்கியமைக்காக முதல்வருக்கு நன்றி தெரிவித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கு ஒரு முக்கியச் செய்தியை என் சார்பில் அறிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த மாமன்றத்தின் சிறப்புக்குரிய உறுப்பினராகத் திகழ்ந்தவரும், இந்த தேச விடுதலைக்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவருமான, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய ஜெயந்தி விழா நாளைய தினம், வருகிறது. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு, அவர் இந்த தேச விடுதலைக்காகச் செய்திட்ட எண்ணற்ற தியாகங்களை மனதிலே கொண்டு அந்தத் தெய்வீகத் திருமகனுக்கு சென்னை நகரத்தில் சிலை அமைத்திட வேண்டுமென்கிற கோரிக்கையை ஏற்று, அண்ணா சாலையில் பிரதானமான நந்தனம் சந்திப்பில் இடமும் வழங்கி, அந்தச் சிலை வைப்பதற்கு உரியவர்களிடத்தில் பிளவு இருந்த காரணத்தால் அரசாங்கத்தின் சார்பில் ஒரு குழுவையே நியமித்து, அந்தக் குழுவுக்கு என்னைத் தலைவராக இருக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பணித்திருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சிலையை அமைக்கிற பணிக்காக, நாளைய தினம் தேவர் திருமகனுடைய ஜெயந்தி விழா வருவதை முன்னிட்டு, அந்தச் சிலை அமைப்புக்கு என்று முதன் முதலாக தன்னுடைய சொந்த நிதியிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1 லட்சத்து 8 ஆயிரம் ரூபாயை மனமுவந்து (மேசையைத் தட்டும் ஒலி) என்னிடத்திலே வழங்கியிருக்கிறார்கள். பசும்பொன்—தேவர் அவர்களுடைய பிறந்தநாளும், மறைந்த நாளும் ஒரே நாள் என்கிற சிறப்புக்குரிய அந்தப் பெருமகனின் ஜெயந்தி விழா நாளைய தினம் நடைபெறுவதையொட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிற இந்தப் பெரு நிதிக்காக, முதன் முதலில் வழங்கியிருக்கிற இந்த நிதிக்காக, அந்தக் குழுவின் சார்பிலும், என் சார்பிலும் அவர்களுக்கு என்னுடைய இதயபூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

4. சிறப்புக் குறிப்புகள்.

(அ) பழனித் தொகுதியில் ஆதி திராவிடப் பிரிவினரிடையே மோதல் ஏற்படும் சூழ்நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பழனி நகரத்தில் நடைபெற்ற இனச் சார்பு சண்டை ஒன்றின் காரணமாக கேட்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்களும், திரு. ஆர். சிங்காரம் அவர்களும் ஒரு குறிப்பினை எனக்குக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரக் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11.15.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனியிலே மிகவும் நல்ல முறையிலே இரண்டு சமுதாயத்தினர் ஒற்றுமையோடு இருந்தார்கள். எப்படியோ ஒரு கல்லூரியிலே ஒரு சிறிய நிகழ்ச்சி நடந்து, அதன் மூலமாக பிரச்சினை ஏற்பட்டு, அதனால் இன்றைக்கு சில அசம்பாவிதங்கள் எல்லாம் நடந்து இருப்பதாக பத்திரிகை வாயிலாகக் கேள்விப்பட்டதோடு, எனக்குத் தொலைபேசி மூலமாகவும் தகவல்கள் கொடுத்திருக்கிறார்கள். இதை வேறு விதமாகப் பேசுவதற்கு நான் உண்மையிலேயே விரும்பவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைக்கு ஒரு சமாதானக் குழுவை நியமிக்க வேண்டும். இரண்டு பேரும் அரிஜனங்கள், ஒன்றாக இருந்தவர்கள், அண்ணன்-தம்பியாக இருந்தவர்கள், சகோதர பாசத்தோடு இருந்தவர்கள், அவர்கள் மத்தியிலே இப்படி ஒரு சூழ்நிலை வந்துவிடுமானால், அது பெரிதாகி, யார் மெஜாரிட்டியாக இருக்கிறார்களோ அவர்கள் மைனாரிட்டியாக இருக்கிறவர்களுக்கு பல்வேறு தீங்குகளை விளைவிக்கும் நிலைமை உருவாகுமோ என்று நான் அஞ்சுகிறேன். ஆகையால் உடனடியாக மாண்புமிகு முதல்வரவர்கள் 'பீஸ் கமிட்டி' ஒன்றை நியமித்து, இருபாலரையும் அழைத்துப் பேசி, சமாதானப்படுத்தி, என்றும் போல் ஒற்றுமையோடும், சகோதரத்துவத்தோடும் வாழ்வதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் இதை நான் கொடுத்தேன். மாண்புமிகு முதல்வரவர்கள் அதற்கு என்ன ஏற்பாடு செய்ய இருக்கிறார்கள் என்பதை மட்டும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

1993 அக்டோபர் 29]

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் அண்ணா மாவட்டம், பழனியிலுள்ள அருள்மிகு பழனியாண்டவர் அரசு கலைக் கல்லூரியில் படிக்கும் புதிய ஆயக்குடியைச் சேர்ந்த மாணவர்களுக்கும், பழைய ஆயக்குடியைச் சேர்ந்த மாணவர்களுக்கும் கடந்த ஒரு மாத காலமாகக் கருத்து வேறுபாடுகள் இருந்து வந்துள்ளன. இந்த இரண்டு கோஷ்டியினரும் ஆதி திராவிட இனத்தின் இரு வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்கள். புதிய ஆயக்குடியைச் சேர்ந்த மாணவர் ஆசைத்தம்பியும், அவருடைய கோஷ்டியினரும் அந்தக் கல்லூரியின் முன்பு அம்பேத்கார் இயக்கக் கொடியை ஏற்றுவதற்கு ஆயத்த முயற்சிகளில் ஈடுபட்ட போது பழைய ஆயக்குடியைச் சேர்ந்த மாணவர் கிருஷ்ணனும் அவரது கோஷ்டியினரும் தடுத்துள்ளனர்.

இந்தத் தகராறு பின்னர் தொடர்ந்து, 25—10—1993 அன்று மாலை ஆசைத்தம்பி மற்றும் அவர் நண்பர் குழுவினருக்கும், கிருஷ்ணன் மற்றும் அவர் நண்பர் குழுவினருக்கும் வாய்த் தகராறு முற்றியதில் ஆசைத்தம்பியை கிருஷ்ணனும், அவரது நண்பர்கள் 4 பேரும் கையால் தாக்கியுள்ளனர். இது குறித்து 26—10—1993 அன்று ஆயக்குடி காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுக்கப்பட்டுள்ளது. காவல் துறையினரும் நடவடிக்கை எடுத்துள்ளனர். 26—10—1993 அன்று காலை ஆசைத்தம்பி மற்றும் 15 மாணவர்கள் கிருஷ்ணனைத் தாக்குவதற்காகக் கல்லூரிக்குச் சென்றுள்ளனர். கிருஷ்ணன் கல்லூரியில் இல்லாததால் அவர்கள் கல்லூரியின் ஆய்வகக் கட்டிடத்தின் மீது கற்களை வீசி, கண்ணாடிக் கதவுகளையும், வேறு சில பொருள்களையும் சேதப்படுத்தியுள்ளனர். அக்கல்லூரி முதல்வர் ஆசைத்தம்பியை 26-10-1993 அன்று தற்காலிகமாகக் கல்லூரியை விட்டு நீக்கி உத்தரவிட்டுள்ளார். மேலும் கல்லூரி முதல்வர் கொடுத்த புகாரின் மீது பழனி நகரக் காவல் துறையினர் வழக்கு ஒன்று பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். 26—10—1993 அன்று மாலை ஆயக்குடி கிராமத்தில் ரகுபதி என்ற மாணவரை ஆசைத்தம்பியும் அவரது நண்பர்கள் 6 பேரும் கல் வீசித் தாக்கியுள்ளனர். மாணவர் ரகுபதிக்கு சாதாரணக் காயம் ஏற்பட்டுள்ளது. எனினும் ஆயக்குடி காவல் துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். அன்று இரவு பழைய ஆயக்குடி ஆதி திராவிட இனத்தின் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்களின் 6 தையற் கடைகளையும், 2 சைக்கிள் கடைகளையும் இன்னொரு பிரிவைச் சேர்ந்த இனத்தவர்கள் தாக்கி சேதப்படுத்தி உள்ளனர். பாதிக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர்கள் புதிய ஆயக்குடியில் 20 சென்ட் நிலத்தில் இருந்த கரும்பையும் சேதப்படுத்தி, 2 குடிசைகளுக்கும், ஒரு பம்ப் செட் ரூமுக்கும் தீ வைத்துள்ளனர். சில மரங்களையும் வெட்டி சேதப்படுத்தியுள்ளனர். இந்தச் சம்பவங்களை ஒட்டி அந்த இரண்டு பிரிவினர் மீதும் 3 வழக்குகள் காவல் துறையினரால் பதிவு செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பழனி

நகரத்திலும் ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த ஒரு பிரிவின ருக்குச் சொந்தமான ஒரு தங்கும் விடுதி மற்றும் ஒரு திரை யரங்கத்தின் மீது மற்றொரு பிரிவினர் கற்களை வீசி உள்ளனர்.

பின்னர் 27-10-1993 அன்று காலை 11.30 மணிக்கு ஆயக் குடியிலிருந்து 400 பேர் புது ஆயக்குடிக்குச் சென்று 26 வீடு களுக்கும், வைக்கோல் போர்களுக்கும் தீ வைத்து, பொருள் களைச் சேதப்படுத்தியுள்ளனர். இது தொடர்பாகவும் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, விசாரணையில் உள்ளது. 27-10-1993அன்று மாலை சுமார் 50 பேர் பழனி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆ. சுப்புரத்தினம் அவர்களின் வீட்டைக் கற்களால் தாக்கி, கண்ணாடி சன்னல்களைச் சேதப்படுத்திய தோடு வீட்டுக்கு வெளியில் இருந்த கொட்டகைக்கும் தீ வைத் துள்ளனர். இதில் கொட்டகை சிறிது சேதமடைந்துள்ளது. இந் தச் சம்பவத்தினையொட்டி, வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணையில் உள்ளது. இதுவரை ஒரு பிரிவினைச் சேர்ந்த வர்களில் 15 பேர்களையும், இன்னொரு பிரிவினைச் சேர்ந்த வர்களில் 17 பேர்களையும், ஆக மொத்தம் 32 பேர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக் கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட 26 குடும்பங்களுக்கும் உண வுப் பொருட்கள், துணிகள் மற்றும் உதவித் தொகை தலா 500 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 26-10-1993 நள்ளிரவு முதல் மாவட்ட காவல் துறைக்கண்காணிப்பாளர் 360 காவலர்களுடன் ஆயக்குடியில் முகாமிட்டு, பாதுகாப்பு ஏற்பாடுகளை தனது நேரடிப் பார்வையில் செய்து வருகின்றார்.

முற்பகல் 11.20

மேலும் மாவட்ட வருவாய் அலுவலரும், பழனி கோட் டாட்சித் தலைவரும் 27-10-1993 அன்றும், 28-10-1993 அன்றும் இரு பிரிவினரையும் அழைத்து அமைதிக்குழுக் கூட்டத்தை நடத்தியுள்ளனர். இந்தக் கூட்டத்தில், ஒரு சிறிய சம்பவம் பெரிதுபடுத்தப்பட்டதைக் குறித்து இரு தரப்பினரும் வருந்து வதாகவும், கருத்து வேறுபாடுகள் ஏற்படும்போது இரு தரப்பி னரும் மனப்பூர்வமாகச் சகோதர மனப்பான்மையுடன் ஊர்ப் பெரியவர்கள் முன்பு பேசித் தீர்த்துக் கொள்வது என்றும், அவ் வாறு தீர்க்க முடியாத பட்சத்தில், வருவாய்த் துறை மற்றும் காவல் துறை அலுவலர்கள் மூலம் பரிகாரம் தேடிக் கொள்வது என்றும் உறுதி கூறி, கையொப்பம் இட்டுள்ளனர் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட இரு பிரிவினரும் ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களி டையே நிலவும் கருத்து வேறுபாடுகளைக் களைவதற்கு இந்த அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதைக் கூறி அமைகின்றேன்.

1993 அக்டோபர் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ஒரு முக்கியமான பிரச்சனை. (குறுக்கீடுகள்) இன்றைக்கு நிறையப் பிரச்சினைகள் எடுத்துக் கொள்ளவிருக்கிறோம். இந்த மாதிரி எழுந்திருக்கக் கூடாது.

(ஆ) பாண்டியாறு-புன்னம்புழா நீரை, கேரள மாநிலத்திற்குத் திருப்ப, கேரள அரசு டெண்டர் கோரியிருப்பதாகக் கூறப் பெறுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழக—கேரள எல்லையையொட்டி தமிழகத்திலே இருக்கக் கூடிய பாண்டியாறு—புன்னம்புழா ஆறுகளை, நீலகிரி மாவட்டம் தேவாளாவிலிருந்து சுரங்கப் பாதை மூலம் கேரள மாநிலத்திற்குத் திருப்பி விடுவதற்காகக் கேரள அரசு திட்டமிட்டிருப்பதைக் குறித்து ஒரு பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று திரு. வி. கே. லட்சுமணன் அவர்கள் என்னிடத்தில் அறிவிப்புக் கொடுத்து இருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை எழுப்பக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே, கோவை, பேட்டுப் பாளையம், அவிநாசி, திருப்பூர், பல்லடம் ஆகிய தாலுக்காக்களில் வாழ்கிற விவசாயிகளுடைய வாழ்வா, சாவா என்ற ஒரு பிரச்சினையைப் பற்றி இங்கே பேசுவதற்கு அனுமதி கொடுத்தமைக்கு நான் என்னுடைய.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விரிவாகப் பேச வேண்டாம். நிறையப் பிரச்சினைகள் இன்றைக்கு எடுத்திருக்கிறோம். அந்தப் பிரச்சினையைப் பற்றி மட்டும் பேசினால் அதற்குப் பதில் வாங்கிவிடலாம்.

திரு. வி. கே. லட்சுமணன்: 26—ந் தேதி அன்றைக்கு மத்திய நீர்வள இயக்குநர் அலுவலகத்திலிருந்து ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையில், கோவை மாவட்டம் 87 சதவீதம் நிலத்தடி நீரைப் பயன்படுத்தி விட்டது. 1997 ஆம் ஆண்டு அது 90 சதவீதமாக உயர்ந்து விடும். இந்த மாவட்டத்திலே 8 வட்டாரங்களைக் கரும்பு வட்டாரங்கள் என்று அறிவித்து, இவை விரைவிலே பாலைவனமாகிவிடும் என்று சொல்லியிருக்கிறது. இந்த நேரத்திலே கேரள மின்சார வாரியம் ஒரு டெண்டரை அறிவித்தது. அந்த டெண்டர் நம்பர் 1/ஈஈ/கே.சி.டி./1993—94. இந்த டெண்டர் எதற்காக வரவழைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், நான் அதை ஆங்கிலத்தில் படித்து விடுகிறேன்,

1993 அக்டோபர் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ஒரு முக்கியமான பிரச்சனை. (குறுக்கீடுகள்) இன்றைக்கு நிறையப் பிரச்சினைகள் எடுத்துக் கொள்ளவிருக்கிறோம். இந்த மாதிரி எழுந்திருக்கக் கூடாது.

(ஆ) பாண்டியாறு-புன்னம்புழா நீரை, கேரள மாநிலத்திற்குத் திருப்ப, கேரள அரசு டெண்டர் கோரியிருப்பதாகக் கூறப் பெறுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழக—கேரள எல்லையையொட்டி தமிழகத்திலே இருக்கக் கூடிய பாண்டியாறு—புன்னம்புழா ஆறுகளை, நீலகிரி மாவட்டம் தேவாளாவிலிருந்து சுரங்கப் பாதை மூலம் கேரள மாநிலத்திற்குத் திருப்பி விடுவதற்காகக் கேரள அரசு திட்டமிட்டிருப்பதைக் குறித்து ஒரு பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று திரு. வி. கே. லட்சுமணன் அவர்கள் என்னிடத்தில் அறிவிப்புக் கொடுத்து இருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை எழுப்பக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே, கோவை, பேட்டுப் பாளையம், அவிநாசி, திருப்பூர், பல்லடம் ஆகிய தாலுக்காக்களில் வாழ்கிற விவசாயிகளுடைய வாழ்வா, சாவா என்ற ஒரு பிரச்சினையைப் பற்றி இங்கே பேசுவதற்கு அனுமதி கொடுத்தமைக்கு நான் என்னுடைய.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விரிவாகப் பேச வேண்டாம். நிறையப் பிரச்சினைகள் இன்றைக்கு எடுத்திருக்கிறோம். அந்தப் பிரச்சினையைப் பற்றி மட்டும் பேசினால் அதற்குப் பதில் வாங்கிவிடலாம்.

திரு. வி. கே. லட்சுமணன்: 26-ந் தேதி அன்றைக்கு மத்திய நீர்வள இயக்குநர் அலுவலகத்திலிருந்து ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையில், கோவை மாவட்டம் 87 சதவீதம் நிலத்தடி நீரைப் பயன்படுத்தி விட்டது. 1997 ஆம் ஆண்டு அது 90 சதவீதமாக உயர்ந்து விடும். இந்த மாவட்டத்திலே 8 வட்டாரங்களைக் கரும்பு வட்டாரங்கள் என்று அறிவித்து, இவை விரைவிலே பாலைவனமாகிவிடும் என்று சொல்லியிருக்கிறது. இந்த நேரத்திலே கேரள மின்சார வாரியம் ஒரு டெண்டரை அறிவித்தது. அந்த டெண்டர் நம்பர் 1/ஈஈ/கே.சி.டி./1993-94. இந்த டெண்டர் எதற்காக வரவழைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், நான் அதை ஆங்கிலத்தில் படித்து விடுகிறேன்,

[திரு. வி. கே. லட்சுமணன்] [1993 அக்டோபர் 29

..N me of the work : Pandiyaru—Punnampuzha High Head HE Scheme—T king bore holes using contractor's own diamond drill, pumpset and all other accessories along the alignment of opencut channel and Tunnel at Devala area in Tamil Nadu',
இந்தத் திட்டமானது, இந்தப் புனல் மின்சாரத் திட்டமானது நிறைவேற்றப்படும் என்று சொன்னால், கோவை மாவட்டம் பெரிதும் நம்பியிருக்கின்ற அந்த பாண்டியாறு—புன்னம்புழா நீர்ப்பாசனத் திட்டமானது வராமலேயே போய்விடும். காரணம், பாண்டியாறு—புன்னம்புழாவை, டனல் மூலமாக மேற்கு நோக்கித் திருப்பி, அதிலே இருந்து மின்சாரம் எடுப்பதற்காகத்தான்........

முற்பகல் 11.25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ரொம்ப முக்கியமான பிரச்சினை. இதை எல்லா உறுப்பினர்களும் கவனிப்பதே நன்று.

திரு. வி. கே. லட்சுமணன் : டெண்டர் வரவழைக்கப்பட்டு இருக்கிறது. தமிழ்நாடு எல்லைக்குள்ளே இந்த சுரங்கம் அமைக்கப்படுவதால், தமிழக அரசினுடைய முன் அனுமதி பெற்று இந்த சுரங்கம் அமைக்கப்படுகிறதா ? தமிழக அரசுக்கு இது தெரியுமா ? இதைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறது என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் .

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு முக்கியமான பிரச்சினையை இந்த அவைக்கு எடுத்து வைத்து இருக்கிறார். அவர் ஆரம்பத்தில், வாழ்வா, சாவா என்று கேட்டார். புரட்சித் தலைவியின் ஆட்சியைப் பொறுத்தமட்டிலே என்றைக்கும் வாழ்வு தான் ; சாவு இல்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாத்திரம் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாண்டியாறு—புன்னம்புழாத் திட்டம் என்பது 1965 ஆம் ஆண்டிலிருந்து இன்றைக்கு வரை விவாதத்திற்கு எடுத்துக் கொடுக்கப்பட்டு, பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு முதலமைச்சர்கள் இருந்த நேரத்திலும் சரி, பல்வேறு பொதுப் பணித் துறை அமைச்சர்கள் இருந்த நேரத்திலும் சரி இந்தத் திட்டத்தைப் பற்றி விரிவான விவாதம் நடைபெற்று இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களினுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர நான் ஆசைப்படுகின்றேன்

1965-லேயும், அதற்குப் பின்னாலே, 1984-லேயும், அதற்கு முன்பு 1982-லேயும், அதற்குப் பின்னாலே 1989-லேயும் பேசப்பட்டு, இன்றைக்கும் நம்முடைய ஆட்சி பொறுப் பேற்றதற்குப் பின்னாலேயும் அது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது.

முதலிலே இருந்த பிரச்சினை, இந்த பாண்டியாறு—புன்னம்புழா போன்ற நதிகளிலே வருகின்ற தண்ணீரை—தேவாலாபுழா ஆறும் இருக்கிறது.—நம்முடைய பகுதிக்கு எவ்வளவு நீரைத் திருப்பி விடுவது, கேரளாவுக்கு எவ்வளவு நீரைக் கொண்டு செல்வது. அதற்குப் பின்னாலே மின் திட்டங்களை யார் நிறைவேற்றுவது, பாசனப் பகுதிகளுக்கு எப்படி தண்ணீரைக் கொண்டு வருவது போன்ற மிக முக்கிய மான பிரச்சினைகள் எல்லாம் இதிலே அடங்கி இருக்கிறது. இது ஒரு நாள், இரண்டு நாட்களிலே தீர்க்கின்ற பிரச்சினை அல்ல.

அது தவிர, காவிரி ஆற்றின் துணை நதியான பவானி ஆற்றினுடைய பிரச்சினையும் இதிலே வருகிறது. அதிலே 10 டி. எம். சி. தண்ணீரை தங்களுக்குத் தர வேண்டுமென்று கேரளாவிலே கேட்கிறார்கள். காவிரிப் பிரச்சினை இருக்கின்ற காரணத்தினாலே, அதற்குள்ளே நாம் செல்ல முடியவில்லை. ஆகவே, பல்வேறு சூழ்நிலைகளில் பின்னிப் பிணையப்பட்டு அமைந்து இருக்கின்ற இந்தப் பாண்டியாறு— புன்னம்புழாத் திட்டத்திற்கு மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற ஒரு ஒப்பந்தம் மூலம் 1985-லேயும் ஒரு பிரச்சினை கொண்டு வந்தார்கள். அதிலே, அவர்கள் மின்சார நிலையங்களை அமைத்து நம்முடைய தமிழகப் பகுதிகளிலே அமைக்கலாம் என்று ஒப்பந்தம் வந்தது. அதற்குப் பின்னாலே நம்முடைய கோவை மாவட்ட விவசாயிகளினுடைய கோரிக்கையை ஏற்று, அவர்கள் நம்முடைய பகுதியிலே நீரைத் திருப்பி விட வேண்டுமென்று சொன்னதற்கு இணங்க, 3 நீர்த் தேக்கங் களைக் கட்ட வேண்டுமென்று நம்முடைய அரசின் சார்பில் சொல்லப்பட்டது. ஆக, கருத்துக்கள் பரிமாறிக் கொண் டிருக்கின்ற நிலையில் நிலையான முடிவு எடுக்கப்படவில்லை. ஆனால், ஒவ்வொரு மாநிலத்தின் சார்பில் இன்வெஸ்டிகேஷன் Tender only for investigation not for construction நம்முடைய மாநிலத்திலேயும் சரி, அவர்களுடைய மாநிலத்திலேயும் சரி, இது சம்பந்தமாக ஆய்வு செய்து கொண்டு இருக்கிறோம். நமக்கு எவ்வளவு தண்ணீரைக் கொண்டு வருவது, எங்கே மின் நிலையம் அமைக்கலாம். எங்கே ஏரிகளைக் கட்டலாம், எங்கே முறைப்படுத்தி பாசனத்தை ஒழுங்குபடுத்துவதற்கு கால்வாய்களை அமைக்கலாம், எப்படி சுரங்கப் பாதை அமைக்கலாம்—It is under investigation. ஆகவே மத்தியிலே இருக்கின்ற நீர்வளக் குழுமமும் இதோடு இணைந்து செயல்படுகின்றது. It is an inter-state problem..

இரண்டு மாநிலங்களுக்கு இடையிலே இருக்கின்ற பிரச்சினை. ஆகவே, அவர்கள் இன்வெஸ்டிகேஷன் செய்வதற்காக டெண்டர் வெளியிட்டு இருக்கலாமே தவிர, எந்த ஒரு கட்டுமானமும், எந்த ஒரு சுரங்கப் பாதையும் அந்த தேவாளா பகுதியில் மாநில அரசினுடைய ஒப்புதல் பெறாமல் கட்ட முடியாது என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டு இருக்கிறேன். அப்படிப்பட்ட அச்சம் தேவையில்லை. அவர்கள் இன்வெஸ்டிகேஷன் செய்யலாம். அதைச் செய்து அந்த ரிப்போர்ட்டை மத்தியில் இருக்கிற அந்த குழுமத்திற்குக் கொடுக்கலாம். அதை அவர்கள் நம்மிடத்திலே கலந்து பேசுவதற்கு பயன்படுத்தலாம். இன்றைக்குக்கூட காவிரிப் படுகையிலே கர்நாடகாவிலே இருக்கின்றவர்கள் வந்து இன்வெஸ்டிகேஷன் செய்கிறார்கள். நாமும் பார்க்கிறோம் என்று கேட்டால், நம்முடைய பகுதியில் இருக்கிற என்ஜினீயர்கள் போகிறார்கள். எக்ஸ்பர்ட்ஸ் போகிறார்கள். ஆகவே, மாநிலங்களுக்கிடையே பிரச்சினை வருகின்றபோது, அவர்கள் வந்து இனவெஸ்டிகேட் செய்யக் கூடாது என்று சொல்ல முடியாது. அதே நேரத்தில் நம்மிடத்திலே இருக்கின்ற என்ஜினீயர்கள் அங்கே சென்று அவர்களுடைய பகுதியிலே இன்வெஸ்டிகேட் செய்கிறார்கள் ஏனென்றால், அவர்கள் சொல்வதை நாம் கேட்க முடியாது. நாம் சொல்வதை அவர்கள் கேட்க மாட்டார்கள். எந்தத் தரப்பினரும் உள்ளே, ஒரு மாநிலத்தில் இருக்கின்ற பிரச்சினைகளைப் பார்த்தால்தான் அதிலே சரியான முடிவுக்கு வர முடியும். அந்த அளவிலே, இன்வெஸ்டிகேஷன் என்று நீங்கள் சொல்கிறீர்கள். எங்களைப் பொறுத்த மட்டிலே எந்த விதமான தாக்கீதும். எங்களுடைய ஒப்புதலைப் பெறுவதற்காக, கன்ஸ்டிரக்ஷன் செய்வதற்கோ, கட்டுமானத்திற்கோ, வரவில்லை, அப்படி வந்தால் மாநில உரிமைகளை விட்டுக் கொடுக்கின்ற அளவுக்கு எந்தவிதமான நடவடிக்கையும் புரட்சித் தலைவியினுடைய அரசு ஏற்றுக் கொள்ளாது என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.30

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இன்வெஸ்டிகேஷன் செய்வதற்குக் கூட தமிழக அரசினுடைய அனுமதியை அவர்கள் பெற்றிருக்கிறார்களா என்பதைத் தான் அறிய விரும்புகிறேன். இந்த ஒப்பந்தத்தைப் பெற்றவர் எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவருடைய கூற்றுப்படி இந்த இன்வெஸ்டிகேஷன் செய்து, சாத்தியம் இருப்பதாக முடிவு எடுக்கப்படுமானால் சுரங்கப்பாதை அமைக்கப்பட்டு, பாண்டியாறு — புன்னம்புழா நீரே ஒட்டுமொத்தமாக கேரளாவிற்குத் திருப்பி விடப்பட்டு அதன்மூலம்

1993 அக்டோபர் 29] [திரு.வி.கே.லட்சுமணன்]

கோவை மாவட்டம் பாதிக்கப்படும் என்பதுதான் எங்களுடைய அச்சம். ஆகவே, தமிழக அரசுக்கு அவர்கள் இந்த இன்வெஸ்டிகேஷன் செய்வதற்காக அனுமதி கேட்டு விண்ணப்பித்து இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இன்வெஸ்டிகேஷன் என்று சொல்லப்படுகிற பணிகளை மேற்கொள்கிறபோது நம்முடைய மாநிலத்தில் அனுமதி பெறுவதில்லை. அரசோடு தொடர்பு கொண்டு அதிகாரிகள் அளவில் பேசுகிறார்கள். முக்கியமான பிரச்சினை என்று வருகிறபோது அதிலே ஒரு தெளிவான முடிவை எடுக்கிறபோது தான் அவர்களுக்கு அனுமதி தருகிறோம். ஆனால் பாண்டியாறு—புன்னம்புழாத் திட்டத்தைப் பொறுத்தவரையில் 50 சதவீதம் நீரை அவர்கள் பயன்படுத்துவது, நாம் 50 சதவீத நீரைப் பயன்படுத்துவது என்று ஏற்கெனவே ஒரு ஒப்பந்தம் வைத்தோம். அதிலே சில பிரச்சினைகள் வந்துவிட்டன. அவர்கள் சில கண்டிஷன்களைப் போட்டார்கள். நாம் சில கண்டிஷன்களைப் போட்டோம். அதிலே ஒத்துவரவில்லை. ஆகவே தான் இந்தப் பிரச்சினை 1965-ஆம் ஆண்டிலிருந்து,—இன்றைக்கல்ல, நேற்றைக்கல்ல, 1965ஆம் ஆண்டிலிருந்து இந்தப் பிரச்சினை இழுத்துக் கொண்டே போகிறது. ஆகவே தான் இன்றைக்கு இன்வெஸ்டிகேஷன் செய்வதை மாத்திரம் வைத்து முடிவு செய்ய முடியாது. அவர்கள் இன்வெஸ்டிகேஷன் செய்தாலும் நம்முடைய அனுமதியைப் பெற வேண்டும். நாம் இந்தத் திட்டத்திற்கு கன்கரன்ஸ் கொடுக்க வேண்டும். அதிலே எந்த விதமான பிரச்சினையும் இருக்காது. நான் ஏற்கெனவே தெரிவித்தபடி எந்த ஆய்வு நடத்தப்பட்டாலும் நமக்கு தண்ணீர் வருகிற பிரச்சினை ஒப்பந்தம் முடிவான பிறகு தான் செயல்படுத்த முடியும். பாண்டியாறு—புன்னம்புழா; சோத்துப்புழா ஆறுகளுடைய ஒப்பந்தத்தை நாம் நிறைவேற்றிய பின்பு தான் அவர்கள் எந்தத் திட்டத்தையும் நிறைவேற்ற முடியும். ஆகவே, அதைப் பற்றி அச்சப்படத் தேவையில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) பின்னி ஆலைத் தொழிலாளர்கள் கோரிக்கை குறித்து :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து பின்னி ஆலைப் பிரச்சினையைப் பற்றி அரசாங்கத்திடமிருந்து சில விளக்கங்களைக் கோர வேண்டுமென்று திரு. வே. தம்புசாமி, திரு. ஜி. பழனிசாமி, திரு. இளம்வழுதி ஆகியோர் என்னிடத்தில் ஒரு அறிவிப்புக் கொடுத்திருந்தார்கள். இன்று காலை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு தடவை விளக்கம் கேட்டார்கள். முதலமைச்சரிடத்தில் பேச இருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். (குறுக்கீடு) நேற்றைய தினம் ஒரு முடிவு செய்து, முதலமைச்சருடைய ஆலோசனைக்கிணங்கத் தொழிலாளர் நலச் செயலாளரும், ஆணையரும் இது சம்பந்தமாக இப்போது பேச இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்திருக்கிறார்கள். (குறுக்கீடு).

(ஈ) சுயநிதிக் கல்லூரிகள் அரசு நிர்ணயித்ததற்கு மேல் கட்டணம் வசூலிப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுய நிதி பொறியியல் கல்லூரிகள் உச்ச நீதிமன்றம் நிர்ணயித்த தொகையை விடக் கூடுதலாகக் கட்டணத்தை வசூலித்து வருவதாக ஒரு பிரச்சினையை இன்று திரு. ஞானசேகரன் அவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து விளக்கம் பெற விரும்பியிருக்கிறார்கள். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நடத்தப்படுகின்ற சுய நிதி பொறியியல் கல்லூரிகளில் தனியார், அரசு நிர்ணயித்து, சுப்ரீம் கோர்ட் ஒப்புதல் அளித்த தொகையைவிட பல மடங்கு கூடுதலாக நிர்வாகங்கள் இன்று வசூல் வேட்டையைத் தொடங்கியிருக்கிறது. கவர்ன்மென்ட் கோட்டாவிற்கு ஆண்டிற்கு ரூ. 6,500 வசூல் செய்ய வேண்டிய நிர்வாகம், ரூ.10,0000, 15,000, 20,000 என்று வசூல் வேட்டையைத் தொடங்கியிருக்கிறார்கள். பேமென்ட் கோட்டாவிற்கு ரூ. 35,000 ஆண்டிற்கு வசூல் செய்ய வேண்டும். ஆனால், இவர்கள் பேமென்ட் கோட்டாவிற்கு, கவர்ன்மென்ட் பிக்ஸ் செய்வதற்குப் பதிலாக ஏதோ மேனேஜ்மென்ட் கோட்டா இருப்பது போலவே, இலட்சக்கணக்கிலே ரூபாய்களை மாணவர்களிடத்திலிருந்து பெற்று சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நாம் இங்கே இந்த மாமன்றத்திலே இயற்றிய அந்த பிரிவென்ஷன் ஆப் கேபிடேஷன் பீ ஆக்ட்டும் சரி, அதே போல அரசு நிர்ணயித்திருக்கிற அந்தத் தொகையை எல்லாம்விட இவர்கள் அதிகமாக வசூல் வேட்டையில் ஈடுபட்டிருக்கிற காரணத்தால், இன்று ஏழை எளிய மாணவர்கள் எல்லாம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசு ஏற்கெனவே ஒரு எச்சரிக்கை விடுத்திருக்கிறது. எச்சரிக்கை மட்டும் போதாது. அதைப் பொறுத்தவரையில் அரசு கடுமையான நடவடிக்கை எடுத்து, இதுபோன்ற நிர்வாகங்களை, உடனடியாக இதுபோன்ற வசூல் வேட்டை செய்வதிலிருந்து தடை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

1993 அக்டோபர் 29]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த கட்டணப் பிரிவில் அனுமதிக்கப்படும் மாணவர்களிடம் ஆண்டிற்கு ரூ. 6,500 மட்டும் வசூலிக்க வேண்டுமென்றும், அதிகக் கட்டணப் பிரிவில் அனுமதிக்கப்படும் மாணவர்களிடம் ஆண்டிற்கு ரூ. 32,000 மட்டும் இன்றைக்கு கல்விக் கட்டணமாக வசூலிக்க வேண்டுமென்றும், வேறு எந்தக் கட்டணமும் எந்த வகையிலேயும் வசூலிக்கக் கூடாது என்றும் தனியார் பயிலகங்களுக்கு அந்த நிர்வாகங்களுக்கு முன்பே அறிவுறுத்தப்பட்டுள்ளது. என்னும், குறைந்த கட்டணப் பிரிவில் அனுமதிக்கப்படும் மாணவர்களிடமிருந்து ரூ. 6,500க்குப் பதிலாக ரூ. 10,000 முதல் 12,000 வரை அதிகக் கட்டணத் தொகை கேட்டு, தனியார் பயிலக நிர்வாகங்கள் வற்புறுத்துவதாக பல பெற்றோர்கள் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்திற்கு நேரடியாக வந்து, வாய் மொழியாகவும், எழுத்து வடிவிலும் புகார் செய்திருக்கிறார்கள். அப்படி 2 புகார்கள் இங்கே வந்திருக்கின்றன. இரண்டு கல்லூரிகளைப் பற்றி இது தொடர்பான அந்தப் புகார்களைப்பரிசீலித்து, தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கடித எண். 108526/எச்.1/93-1, நாள் 22—10—1993இல் அனைத்து தனியார் சுய நிதி பொறியியல் கல்லூரி தலைவர்களுக்கும், தாளாளர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. இவ்வறிக்கையில் அரசு நிர்ணயித்துள்ள பயிற்சிக் கட்டணத்தைவிட தனியார் பயிலக நிர்வாகிகள் அதிக அளவில் வசூலிப்பதாகக் கூறப்படுவது பற்றியும், அவ்வாறு செய்யாமல் அரசு குறித்துள்ள கட்டண விகிதங்களை மட்டுமே வசூலிக்க வேண்டுமென்று பொதுவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதைப் போலவே புகார்களுக்கு உட்பட்ட இரண்டு கல்லூரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. மேலும், முக்கிய ஆங்கிலம் மற்றும் தமிழ்ச் செய்தித்தாள்களில் இப்பொருள் குறித்து ஒரு செய்திக் குறிப்பு 27-10-93 அன்று வெளியிடப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமான உண்மை நிலையினை அறிந்து தமிழ்நாடு சட்டம் 57-92 ‘‘ கேப்பிடேஷன் ஃபீ அபாலிஷன் ஆக்ட்’’—அதன்படி மேல் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அனைத்திந்திய தொழில்நுட்பப் பயிலகத்திற்கும்—ஏ.ஐ.சி.டி.ஈ. —இதுகுறித்து கடிதம் எழுதி ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளக் கோரப்பட்டிருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல எங்கெங்கு இப்படிப்பட்ட தவறுகள் நடக்கின்றன என்று குறிப்பாகச் சுட்டிக்காட்டி புகார்கள் கொடுக்கப்படுமேயானால், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1993 அக்டோபர் 29

முற்பகல் 11-45

5. விதி 111-இன் கீழ் பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சரின் திருத்த அறிக்கை

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்படும் பங்கு மூலதனத் தொகை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 111-இன் கீழ் அறிக்கை அளித்தல். மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இவ்வருடம் பங்கு மூலதனத் தொகையாக ஒதுக்கீடு செய்து தந்த ரூபாய் 5 இலட்சத்தில், ரூபாய் ஒரு இலட்சம் வீதம் தேர்ந்து எடுக்கப்படும் 5 மீனவக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் என்ற செய்தி 15—4—1993ஆம் தேதியன்று சட்டமன்றப் பேரவையில், மானியக் கோரிக்கை எண் 21 மீதான விவாதத்திற்கான பதிலில் தெரிவிக்கப்பட்டது. ரூபாய் ஒரு இலட்சம் வீதம் 5 கூட்டுறவுச் சங்கங்கள் தான் பயன் பெற இயலும், இந்தப் பங்கு மூலதனத் தொகையால் அதிகப் படியான மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் பயன் பெறுகின்ற வகையில் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 50 ஆயிரம் வீதம் தேர்ந்து எடுக்கப்படுகின்ற 10 மீனவக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குவதற்கு இசைவு தந்துள்ளார்கள். அவ்வாறாக 10 மீனவக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூபாய் 50 ஆயிரம் வீதம் வழங்கப்படுகிறது என்ற செய்தியை மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

6. கவன ஈர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழவுகள் குறித்த கவன ஈர்ப்பு. இரண்டு கவன ஈர்ப்புகள் தான் ஒரு நாளைக்கு எடுத்துக் கொள்வது என்ற விதியை மீறி, கடைசி நாள் என்கிற காரணத்தால் சிறப்பு விதியைப் பயன்படுத்தி இன்றைக்கு 14 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. எந்த அளவுக்குப் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுக்கின்ற கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்குப் பதில் பெற்றுக் கொடுப்பதில் சட்ட மன்றப் பேரவைச் செயலகம் முனைந்து செயல்பட்டிருக்கிறது என்பதை இதிலிருந்து அறியலாம். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு வார சட்டமன்றக் கூட்டத் தொடரில் இந்த அளவுக்கு அதிகமான கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொண்டதாக இதுவரையிலும் நீங்கள் கேள்விப்பட்டிருக்க முடியாது. (குறுக்கீடு) இது வரையிலும் இந்த அளவுக்கு இல்லை. ஏற்கெனவே,

3 எடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது 14. ஆக 17 எடுத்துக் கொண்டதாக சரித்திரமே இல்லை. எனவே, அந்த அளவுக்கு முயன்று துறைகளோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு, அமைச்சர்களோடு தொடர்பு கொண்டு —ஒரு அமைச்சரே 4, 5 கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு பதில் சொல்கிற அளவில் அவர்களும் ஒத்துழைப்புக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, அதைப் பயன்படுத்தி—இவ்வளவு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்திருக்கிறோம். இது தவிர, ஒன்றிரண்டு வராமல் இருக்கிறது என்கிற வருத்தம் சில உறுப்பினர்களுக்கு இருந்தாலும், அதற்கும் உடனடியாகப் பதில் வாங்குவதற்கு உரிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) உங்களுக்கு ஏற்கெனவே முக்கியமானவை என்று எடுத்திருக்கிறேன். இன்னும் ஒன்று வரவில்லை என்றாலும் அதற்கும் பதில் வாங்குவதற்கு உரிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பதில் வந்தவுடன் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். இவ்வளவு கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்திருக்கிற காரணத்தால் ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு கேள்வி மட்டுமே கேட்க அனுமதிக்கப்படுகிறார்கள். அதுவும் கேள்வியாக மட்டுமே கேட்கவும், அமைச்சர்களும் பதிலாக மட்டுமே சொன்னால் போதும் என்ற அந்தக் கோரிக்கையோடு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

(அ) சேலம், வேலூர் மற்றும் சென்னை அண்ணா நகர் பகுதிகளில் புதிதாக குடும்ப அட்டை கோரியவர்களுக்கு குடும்ப அட்டை வழங்க தாமதமாவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் சி. ஞானசேகரன், திரு. க. அர்ச்சுனன், டாக்டர் அ. செல்லக்குமார் ஆகியோரில் ஒருவர் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச்சருடைய கவனத்திற்குக்கொண்டு வருவார். டாக்டர் அ. செல்லக்குமார்.

டாக்டர் அ. செல்லக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ''சேலம், வேலூர் மற்றும் சென்னை அண்ணா நகர் பகுதிகளில் புதிதாக குடும்ப அட்டை கோரியவர்களுக்கு குடும்ப அட்டை வழங்குவது தாமதமாவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு அமைச்சர்.

*மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

ஏற்கனவே புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகள் 1993-98-க்கான காலக் கட்டத்திற்கு புதுப்பிக்கும் பணி 1993 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் மேற்கொள்ளப்பட்டது. ஏறக்குறைய 123 இலட்சம் குடும்ப அட்டைகள் புதுப்பிக்கப்பட்டு 31—1—1993க்குள் உரியவர்களுக்கு வழங்கப்பட்டன.

ஏற்கனவே குடும்ப அட்டைகள் இல்லாதவர்களிடமிருந்து குடும்ப அட்டைகள் வழங்கக் கோரும விண்ணப்பங்கள் பெறுவதற்கான கடைசி நாள் 28—2—1993 என்று பரவலாக அறிவிக்கப்பட்டது. அதன்படி சுமார் 36 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டன. அவைகள் அனைத்தும் தல விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு சுமார் 14 இலட்சம் மனுக்கள் தகுதியானவை என்று முடிவு செய்யப்பட்டு, அவைகளுக்கும் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. எனினும், நிராகரிக்கப்பட்ட மனுக்கள் மீது மறு விசாரணை மேற்கொள்ள வேண்டுமென்று பல மாவட்டங்களிலிருந்தும் கோரிக்கைகள் வந்தன. வேறு விலாசத்திற்குக் குடியேறியவர்கள், விசாரணையின்போது வீட்டில் இல்லாதவர்கள், விசாரணையின்போது தகுந்த சான்று அளிக்க இயலாதவர்கள் போன்றவர்களுடைய மனுக்கள் சில இடங்களில் தவறுதலாக நிராகரிக்கப்பட்டுள்ளது தெரிய வந்தது. எனவே, இதுவரை நிராகரிக்கப்பட்ட அனைத்து மனுக்கள் மீதும் மறு விசாரணை செய்து தகுதியான நபர்களுக்கு புதிய குடும்ப அட்டைகள் உடனடியாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் உத்தரவு இடப்பட்டுள்ளது. மேலும் 1—3—1993க்கு பிறகுப் பெறப்பட்ட மனுக்கள் மீதும் விசாரணை மேற்கொண்டு தகுதியானவர்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இப்பணிகளை மாவட்டங்களிலுள்ள பல்வேறு துறை அலுவலர்களின் உதவியோடு 15—11—1993-க்குள் முடித்துவிட வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

சேலம், வடஆற்காடு அம்பேத்கார் ஆகிய மாவட்டங்கள் மற்றும் சென்னை அண்ணாநகர் தொகுதியைப் பொறுத்தவரையில் தற்பொழுதுள்ள நிலவரம் இணைக்கப்பட்ட பட்டியலில் காட்டப்பட்டுள்ளது.

இந்த உத்தரவுகள் சரியான முறையில் நிறைவேற்றப்படுகின்றனவா என்று மேற்பார்வையிடுமாறு ஆணையர் கோரப்பட்டுள்ளார்.

பட்டியல்

	சேலம்.	வடாற்காடு அம்பேத்கார்.	அண்ணா நகர் மண்டலம்.
(1)	(2)	(3)	(4)
1. 28—2—1993 வரை பெறப்பட்ட புதிய குடும்ப அட்டைக்கான மனுக்கள் ..	2,62,817	1,47,652	35,171
2. 1—3—1993-க்குப் பின்னர் பெறப்பட்ட புதிய குடும்ப அட்டைக்கான மனுக்கள் ..	6,078	7,461	1 947
3. 31—8—1993-க்குள் விசாரணை முடிக்கப் பட்ட மனுக்கள். (28—2—1993 வரை பெறப்பட்ட மனுக்கள்)	2,62,817	1,47,652	35,171
4. குடும்ப அட்டை பெற தகுதியான மனுக்கள்	1,18,054	67,974	12,772
5. குடும்ப அட்டை வழங்கப்பட்டவை	1,18,054	67,974	12,772
6. தள்ளுபடி மனுக்கள்	1,44,763	79,678	22,399
7. தற்போது மனு விசாரணை (ம) காலம் 2-ல் உள்ள மனுக்கள் மொத்தம்.	1,50,841	87,139	24,346

டாக்டர் அ. செல்லக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சருடைய அறிக்கையினை நான் படித்தேன். இதிலே என்னுடைய அண்ணா நகர் மண்டலத்திலே மட்டும் அதிகாரிகள் விசாரணை செய்து தள்ளுபடி செய்த மனுக்கள் 24,346 இருப்பதாகவும் அவைகளின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு மீண்டும் உத்தரவு போடப்பட்டு இருப்பதாகவும் இங்கே குறிப்பிடப்

பட்டிருக்கிறது. ஆனால் அந்த விசாரணையில் ஒரு சிக்கல் இருந்துக் கொண்டிருக்கிறது. அதிகாரிகள் அங்கே விசாரணைக்கு வருகிறபோது அங்கே சிலர் தங்களுடைய பெயர்களை பெற்றோர்களுடைய குடும்ப அட்டையிலிருந்து நீக்கம் செய்து சான்றிதழ் வாங்க வேண்டும் என்று அதிகாரிகளை வற்புறுத்துகிறார்கள். அதிலே காதல் திருமணங்கள் செய்தவர்கள் தங்களுடைய பெற்றோர்களை பகைத்துவிட்டு இங்கே வந்து குடும்பம் நடத்துகிறபோது அவர்களுடைய குடும்ப அட்டையிலேயிருந்து நீக்கல் சான்றிதழ் வாங்குவதற்கு மிகுந்த சிரமம் அவர்களுக்கு இருக்கிறது என்பதையும், இதே போன்று மற்ற மாநிலங்களிலேயிருந்து—சென்னை நகர் என்பது ஒரு காஸ்மாபொலிடன் சிட்டி என்ற காரணத்தால் ஏனைய மாநிலங்களிலேயிருந்து இங்கே வந்து தஞ்சம் புகுந்தவர்கள், வேலை பார்ப்பவர்கள், தொழில் துவங்கியவர்கள் ஆகியோருக்கு அவர்களுடைய மாநிலத்திலேயிருந்து பெற்றோர்களின் குடும்ப அட்டையிலேயிருந்து நீக்கல் சான்றிதழ் வாங்குவதற்கு சிரமங்கள் இருக்கிற காரணத்தாலே, அதேபோல ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், சென்னை நகரம் என்பது இன்றையதினம்........(குறுக்கீடு).

ஒரே கேள்வியாகக் கேட்டு முடித்துவிடுகிறேன். இன்றையதினம் கிராமங்களில் கூட்டுக் குடும்பம் என்பது கூட இன்றைக்கு அரிதாக இருக்கின்றபோது சென்னை நகரத்திலே கூட்டுக் குடும்பம் என்பது பேச்சுக்கே கூட இல்லாத சூழ்நிலை. சென்னை நகரத்தினுடைய பொருளாதார சூழ்நிலையைக் கருதி, வீட்டு வாடகை அதிகமாக இருப்பதைக் கருதி, செலவினை குறைப்பதற்காக பெற்றோர்களோடு அந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் 4, 5 குடும்பங்களாக தனிக் குடும்பங்களாக இருந்தாலும் கூட, ஒரே இல்லத்திலே வாழ்கின்ற சூழ்நிலை இருந்து வருகிறது. எனவே அதுபோன்ற தனிக் குடும்பம் நடத்துகின்றவர்கள் ஒரே இல்லத்தில் இருந்தாலும் கூட குடும்பத்தில் முதல் மாடியிலே பெற்றோர்கள் இருக்கிறார்கள். மேல்தளத்திலே அவர்களுடைய குழந்தைகள் தனிக் குடித்தனமாக இருக்கின்ற சூழ்நிலை எல்லாம் சென்னை நகரில் இருக்கிறது. இது போன்றவற்றை எல்லாம் அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இங்கே கடந்த 2 மாதமாக விசாரணை செய்வதற்கு உத்தரவு போடப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே இருக்கிறது. ஆனால் ஏறத்தாழ 1 1/2 மாத காலமாக என்னுடைய அண்ணாநகர் ஏ. சி. அலுவலகத்திற்கு பொதுமக்கள், ஏழை எளிய மக்கள் குடும்ப அட்டை கோரி செல்கின்றபோது............

(முற்பகல் 11-50)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செல்லக்குமார். நிறைய இருக்கிறது. கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் அ. செல்லக்குமார் : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்குகின்ற அந்தப்பரிந்துரைக் கடிதங்களை அங்கு இருக்கின்ற உதவி ஆணையர்கள் சிறிது கூடப் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கின்ற பரிந்துரைகளுக்கு மறுத்து அறிக்கை அனுப்பியபிறகு, ஏறத்தாழ 200, 300 ரூபாய் கொடுத்தால் உடனடியாக அந்த அட்டைகளை வழங்குகின்ற சூழ்நிலை இன்றைக்கு இருந்து வருகிறது. அதுபோன்று இந்த $1\frac{1}{2}$ மாத காலமாக ஏழை எளிய மக்கள் அந்த உதவி ஆணையருடைய அலுவலகத்திற்குச் செல்கின்றபோது..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் அ. செல்லக்குமார் : அவர்கள் சொல்கின்ற பதில், இந்த ஒரு மாத காலம் இங்கே விசாரணை செய்வதற்கு அதிகாரிகள் இல்லை. அத்தனை பேரையும் மைலாப்பூரிலே விசாரணை செய்வதற்கு நாங்கள் அனுப்பியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து கேள்வியாகக் கேளுங்கள், இல்லையென்றால் அடுத்த உறுப்பினரை அழைக்க வேண்டியிருக்கும். இதிலே நான் அவ்வளவு அனுமதிப்பதில்லை. (குறுக்கீடு) உங்கள் கேள்வி என்ன? அதைக் கேளுங்கள்.

டாக்டர் அ. செல்லக்குமார் : அந்த அதிகாரிகள் மைலாப்பூருக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மைலாப்பூருக்கு ஏன் அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்று பார்த்த போது அவர்கள் புதிதாகக் குடும்ப அட்டை..................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கே கேள்வியைக் கேட்க வில்லை என்றால் நான் அனுமதிக்க முடியாது. கேள்வி கேட்க வேண்டும் என்றால் கேட்கலாம். நீங்கள் பேசுவது இதற்குத் தொடர்பு இல்லாத பொருள்.

டாக்டர் அ. செல்லக்குமார் : தலைவர் அவர்களே, குடும்ப அட்டை வழங்குவதில் சிக்கல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இதையெல்லாம் பேசிக்கொண்டிருந்தால் நான் அனுமதிக்க முடியாது. நீங்கள் ஒரு கேள்வியாகக் கேளுங்கள். அதிகாரிகள் இல்லை என்கிறார்கள், அதிகாரிகளை இருக்கச் செய்து வழங்குவீர்களா என்று கேளுங்கள்.

டாக்டர் அ. செல்லக்குமார் : தலைவர் அவர்களே, 15—11—1993-க்குள் விசாரணையை முடித்துவிட வேண்டும் என்று இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற காரணத்தினால் இன்னும் 15 நாட்கள் இருக்கின்ற காரணத்தினால் நான் சொல்கிறேன். ஏறத்தாழ 24,000 பேர்கள் மறு விசாரணை செய்யப்பட வேண்டியிருக்கிறது. அதிகாரிகள் அத்தனை பேரும் மைலாப்பூரில் விசாரணை செய்துகொண்டிருந்தால் இங்கே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. க. அர்ச்சுனன், நீங்கள் கேட்கலாம். (குறுக்கீடு) திரு. செல்லக்குமார், நீங்கள் கேள்வியாகக் கேட்கவில்லை என்றால் நான் என்ன பண்ணமுடியும்?

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிமட்டத்திலே இருக்கின்ற மக்களுக்காக குடும்ப அட்டை 15—11—1993 தேதிக்குள் வழங்கப்பட வேண்டும் என்று உத்தர விட்டதற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை சேலம் மாவட்டத்தின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏறத்தாழ தற்போது நிலுவையில் இருக்கின்ற 1,40,000க்கு மேற்பட்ட மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன. இதை விசாரணை செய்த முறை, ஒரு கிராமத்தில் இருக்கின்ற வில்லேஜ் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீசர்களை அடுத்த கிராமத்திற்கு அனுப்பிய காரணத்தினால் அவசரக்கோலத்தில் அள்ளித்தெளித்துவிட்ட முடிவாக, வீடு பூட்டியிருப்பதாக எழுதிவிட்டு இவ்வளவு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன. எனவே, அந்தந்த கிராமத்தில் இருக்கின்ற வி.ஏ.ஓக்களிடம் இந்தப்பொறுப்பை ஒப்படைத்து அவர்களை விசாரிக்க வைத்தால் இப்படி மனுக்களைத் தள்ளுபடி செய்யக்கூடிய நிலைமை உருவாகாது. மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து குடும்ப அட்டை கேட்பவர்களுக்கு அனைவருக்கும் வழங்குவதற்குண்டான நடவடிக்கையை மேற்கொள்வாரா என அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன், உங்கள் கேள்வியையும் கேளுங்கள்,

திரு. சி. ஞான சேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இதற்கு முன்னால் இருந்த மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்தால் உடனடியாக அந்தக்குடும்ப அட்டைகள் வழங்க வேண்டும் என்று ஒரு அரசு ஆணையைப்பிறப்பித்திருந்தார். அந்த ஆணை மதிக்கப்படாமல், நாங்கள் - சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பரிந்துரைத்த கார்டுகள் மாதக் கணக்கிலே குப்பைக் கூடைகளிலே தூங்கிக் கொண்டிருக்கக் கூடிய ஒரு அவலம் இருந்துகொண்

டிருக்கிறது. ஆகவே, நாங்கள் கையெழுத்துப்போட்டு பரிந்துரை செய்த கார்டுகளை இன்னும் ஒரு மாத காலத்திற்குள் - எங்களுடைய வட ஆற்காடு மாவட்டத்தில் 87,139 கார்டுகள் வழங்கப் படவேண்டும் என்று அவர்களே குறிப்பிட்டு இருக்கிறார்கள். பணம் கொடுத்தால் மட்டுமே சில கார்டுகள் வெளியே வருகின்றன. பணம் கொடுக்காதவை எல்லாம் மீண்டும் அப்படியே உறங்கிக் கொண்டு இருக்கின்ற அவல நிலையை அரசு உடனடியாக மாற்றியமைத்து ஒரு மாத காலத்திற்குள் தமிழகத்திலே பெண்டிங்காக இருக்கக்கூடிய அப்ளிகேஷன்களை அவர்கள் விசாரணை செய்து குடும்ப அட்டைகள் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.55.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவுத் அமைச்சர்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு 3 உறுப்பினர்கள் அவரவர்களுடைய பகுதியிலே குடும்ப அட்டைகள் வழங்குவதில் ஏற்படுகிற தாமதம் குறித்து இங்கே அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். நீங்கள் ஆணையிட்டு இருக்கிறபடி அவர்கள் ஒவ்வொரு கேள்வியாகக்கேட்டிருந்தால் நானும் ஒவ்வொரு கேள்விக்கும் பதில் சொல்லி முடித்திருக்க முடியும். ஆனால், மிகப் பெரிய பிரச்சினைகளை எழுப்பி என்னை சங்கடத்திலே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார்கள். நான் எல்லாவற்றிக்கும் விளக்கமாகப்பதில் சொல்ல முடியும். இன்று தமிழகம் முழுவதும் குடும்ப அட்டைகள் என்பது ஒரு சிக்கல் நிறைந்தபிரச்சினையாகக் கருதப்பட்டு மக்களிடத்திலே ஒரு புதிய எதிர்பார்ப்பை உண்டாக்கிக் கொண்டிருக்கிற ஒரு பிரச்சினை. ஆகவே, நான் அதிகமான நேரம் எடுத்துக்கொள்ள முடியாத சூழ்நிலையில் இந்த விளக்கங்களை சுருக்கமாகச் சொல்லிவிட வேண்டுமென்று விரும்புகிறேன். அண்ணா நகர் தொகுதியினுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லக்குமார் அவர்கள், அதைப் போல வேலூர் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினரும் நியாயமாக அட்டைகள் கிடைக்க மாட்டேன் என்கிறது, ஆனால், 200, 300 கொடுத்தால் கிடைக்கிறது என்று குறிப்பிடுகிறார்கள். அதற்கு நான் முதலில் பதில் சொல்லிவிட விரும்புகிறேன். போகிற இடங்களில் எல்லாம் இப்படிப் புகார் சொல்கிறார்கள். அப்படி 200, 300 கேட்கிறவர்கள் யார்? வாங்குகிறவர்கள் யார் என்று சுட்டிக்காட்டினால்தான் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியுமே தவிர, வாங்குகிறார்கள், வாங்குகிறார்கள் என்று பொதுவாகச் சொன்னால் யாரிடத்தில் போய் நடவடிக்கை எடுப்பது ? யார் மீது நடவடிக்கை எடுப்பது என்பதை அருள் கூர்ந்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து கொ[illegible] வேண்டும்

அவர்களிடத்தில் ஏதாவது ஆதாரம் இருந்தால், அப்படி யாராவது வாங்குகிறவர்கள் அவர்களுக்குத் தெரிந்தால் தயவுசெய்து சான்றுகளோடு அந்தக் குற்றச்சாட்டைச் சொன்னால், புகாரைச் சொன்னால் அவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப் போலவே அண்ணா நகர் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தான் பல கேள்விகளை இங்கே ஒரே கேள்வியில் இணைத்துக்கேட்டிருக்கிறார்கள். இவ்வளவு அட்டைகள் தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கிறதே என்று குறிப்பிட்டார்கள். அதைப் போல வேலூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்தால அவர்களுக்கு அட்டைகள் வழங்கப்படுவது இல்லை. ஆனால் பணம் கொடுத்தால் தந்து விடுகிறார்கள் என்று சொன்னார்கள். இதிலே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றைத் தெளிவாக்க விரும்புகிறேன். இதிலே பரிந்துரைக்கே இடம் இல்லை. யாரும் பரிந்துரை செய்து இலவசமாக, இனாமாகக் கொடுக்கிற விஷயம் அல்ல இது. உரிமையோடு கேட்கிறார்கள் மக்கள், அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது வழங்குவதற்கு. ஆகவே அந்த மனுக்களை வாங்கித் தருகிற வேலையைத் தான் சட்டமன்ற உறுப்பினர்கள் பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இதிலே வந்த சங்கடம் என்னவென்றால் நான் இந்த வரலாற்றைச் சுருக்கமாகச்சொன்னால்தான் இதற்கு விடை அதிலே வந்து சேரும். ஒன்றாம் தேதி (குறுக்கீடு) பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. நான் தான் சொல்கிறேன்.... (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொன்னதைத் தான் அமைச்சர் சொல்கிறார். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் மனுவை வாங்கிக் கொடுக்கிற வேலையைத்தான் செய்கிறீர்களே தவிர, சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்தால்தான் தரவேண்டும் என்பதற்கு எந்த விதியும் கிடையாது. எல்லோருக்கும் உரிமையிருக்கிறது. எல்லோருக்கும் அட்டைகள் வழங்கப்பட்டு ஆகவேண்டும். இதிலே மாண்புமிகு உறுப்பினர்கள் ஆகிய உங்களிடத்திலே மக்கள் வந்து கேட்கிறார்கள், எங்களுக்கு அட்டை வாங்கித் தாருங்கள் என்று. அந்த அட்டைக்கான மனுவை நீங்கள் வாங்கித் தருகிறார்கள். அதைப்பரிசீலனை செய்து.... (குறுக்கீடுகள்) அதைத்தான் பரிசீலனை என்றால்.... (குறுக்கீடுகள்) தயவு செய்து....(குறுக்கீடுகள்).

1993 அக்டோபர் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் (குறுக்கீடுகள்) மனுவை வாங்கிக் கொடுக்கிறீர்கள் என்று பழையபடி அமைச்சர் அதைத்தான் சொல்லுகிறார். (குறுக்கீடுகள்) இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன இருக்கிறது? எல்லோரும் உட்காருங்கள், அதற்கு அமைச்சர் பதில் சொல்லுவார்.

டாக்டர் அ. செல்லக்குமார் : ஜி. ஓ. இருக்கிறது,

திரு. சி. ஞானசேகரன் : நாங்கள் என்ன போஸ்ட்மேன் வேலையா செய்கிறோம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் எல்லாம் 28 ஆயிரம் மனுக்களில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறோம். ஏற்கனவே அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட அந்தத் தாளிலேயே சட்டமன்ற உறுப்பினர் கையெழுத்துப் போடுவந்த இவர்களுக்குக் குடும்ப அட்டை இல்லை என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும் என்றுதான். இவர்களுக்கு இதுவரை குடும்ப அட்டை இல்லாத காரணத்தினாலே, இவர்களுக்குக் குடும்ப அட்டை வழங்குவதற்கு சிபாரிசு செய்கிறேன் என்று ஒரு குறிப்பே அதிலிருந்து, அந்தக் குறிப்பிலே தான் நாங்கள் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தோமே தவிர வேறு ஒன்றும் இல்லை. ஆகையால், கையெழுத்துப் போட்டுக் கொடுத்தோம்.

நண்பகல் 12.00.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதைத்தான் சொல்ல வருகிறார். (குறுக்கீடு) மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் ஒரு சட்டமன்ற உறுப்பினர், சென்னை நகரைப் பொறுத்தவரையில என்ற வகையில் என்னுடைய அனுபவம் நம்மிடத்திலே பலர் வருகிறார்கள். ஆனால் அந்த உண்மைகள் நமக்குத் தெரியாது. கட்டாயத்தின் பேரில் நாம் பரிந்துரை செய்கிறோமே தவிர, அவர்களுக்குத் தகுதி இருக்கிறதா, இல்லையா என்பதனை அந்த அதிகாரிகள்தான் நிர்ணயம் செய்ய வேண்டிய பொறுப்பிலே இருக்கிறார்கள். அப்படி என்னுடைய தொகுதியிலேயே சில ஆயிரம் மனுக்கள் இன்றைக்கு நிராகரிக்கப்பட்டு இருக்கின்றன. என்னிடத்திலே அவ்வளவு பேர் வந்து நான் போட்டுக் கொடுத்தது, இன்றைய அரசியல் கட்டாயம்; எம். எல். ஏ. கட்டாயம்; வாக்குகள் வாங்கிய கட்டாயம்; ஒரு கையெழுத்து போடக்கூடாதா

அண்ணே; எனக்கு ஒரு பரிந்துரை செய்யுங்கள், என்று வருகின்ற மனுக்கள் அத்தனைக்கும் நாம் பரிந்துரை செய்கிறோமே தவிர, அதற்குத் தகுதி இருக்கிறதா இல்லையா என்பதல்ல. அப்படி எல்லாத்தொகுதிகளிலும் இன்றைக்கு ஆயிரம் விளக்கு தொகுதி யிலேகூட, சில ஆயிரம் மனுக்கள் நிராகரிக்கப்பட்டு இருக்கின்றன. எனவே, ஒரு எம்.எல்.ஏ. கொடுத்தாலே அதற்குத் தகுதி இருக் கிறது என்று ஏற்றுக்கொள்வது என்பது அவ்வளவு உசிதம் அல்ல என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு அமைச்சர். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் எழுந்து நின்றால் அது முறையல்ல. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கே அவையைக் கொடுத்து விட முடியாது. விளக்கம் கேட்டவருக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். எல்லோரும் எழுந்து நின்றால் நல்லதல்ல. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு உணவு அமைச்சர்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இது ஒரு சிக்கல் நிறைந்த பிரச்சினை யாக இருக்கிறது என்று சொல்லிவிட்டுத்தான் இந்த விவரங்களைச் சொல்ல வந்துகொண்டிருக்கிறேன். அதனாலே இந்தப் பிரச் சினை சிக்கலாகிக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் சொல்லி யாக வேண்டும். இது முக்கியமான பிரச்சினை. பொது மக்க ளிடத்திலே, அன்றாடம் அவர்களுக்குத் தேவைப்படுகிற ஒரு குடும்ப அட்டை வழங்குகிற பிரச்சினை என்பதனாலேதான் இதிலே இவ்வளவு கவனம் செலுத்தப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குற்றச்சாட்டையும் சொல்லி அவர்களு டைய குறைகளையெல்லாம் சொல்வதற்கு உரிமை இருக்கிற பொழுது, இதிலே அரசாங்கத்திற்கு எவ்வளவு சிக்கல் இருக்கிறது என்பதையும், அது எந்த அடிப்படையிலே தீர்க்கப்படுகிறது என்பதையும் எடுத்து விளக்குவதற்கு நீங்கள் அனுமதிக்கவில்லை யானால், எப்படி இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்பதை என்னாலே புரிந்து கொள்ள முடியவில்லை.

இந்த வரலாற்றைச் சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன். ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்படுகிற குடும்ப அட்டைகள் இந்த ஆண்டினுடைய தொடக்கத்திலே புதுப்பிக்கப்பட்டது. அப்படிப் புதுப்பிக்கப்பட்டபோது, இந்தக் குறிப்பிலேயே இருக் கிறது. அதைப் படித்து இருக்கிறீர்கள். ஆனாலும், சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். சுமார் ஒரு கோடியே இருபத்திமூன்று இலட்சம் அட்டைகள் வழங்கப்பட்டன. அதற்கு பிறகு எங்களுக்குக் கிடைக்கவில்லை என்று புகார்கள் வந்ததை யொட்டி, அது இயற்கையாக இருக்கக்கூடும் என்பதனாலே

1993 அக்டோபர் 29] [திரு. இராம வீரப்பன்]

அரசாங்கம் பிப்ரவரி மாதத்திற்குள் யார் யாருக்குக் குடும்ப அட்டைகள் கிடைக்கவில்லையோ அவர்கள் மனு அளிக்கலாம் என்று ஆணை பிறப்பித்தது. அப்படி மனுக்கள் அளிக்கலாம் என்றபொழுது அதற்காக அச்சிடப்பட்ட படிவங்கள் வழங்கப்பட்டன. மாண்புமிகு உறுப்பினர்கள் தயவுசெய்து, இதிலே பரிந்துரை செய்ய முடியாது என்பதற்காக—ஏன் சட்டப்படி செய்ய முடியாது என்றால்—இந்தக் குடும்ப அட்டைகள் வழங்குவது என்பது ஒரு சட்டத்தின் அடிப்படையிலே வழங்குகிறோம். அந்தச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுப்பதற்கும் அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறது. யாராவது தவறாக ஒரு குடும்ப அட்டையை வைத்திருந்தால் அவர்களைக் கைது செய்யலாம், தண்டிக்கலாம்.

ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் எங்களுக்குத் தெரிந்தவர்கள் என்று அனுப்புவதின் மூலம் அந்த உரிமைகள் அனைத்தையும், அந்தப் பொறுப்புகள் அனைத்தையும் சட்டமன்ற உறுப்பினர்களே ஏற்றுக்கொள்ள முடியாது. நாளைக்கே ஒரு தவறு நிகழ்ந்தால், மனுக் கொடுத்தவர்கள் தவறான தகவல்களைக் கொடுத்திருந்து, சட்டமன்ற உறுப்பினர்களையே ஏமாற்றியிருந்தால் அந்தப் பொறுப்பை சட்டமன்ற உறுப்பினர்களும் ஏற்றுக்கொள்ள முடியாது. அரசாங்கமும் சட்டமன்ற உறுப்பினர்கள் மீது சுமத்த முடியாது. ஆகவே, நான் அதற்குத்தான் வருகிறேன், எப்போது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்த உரிமைகள் வழங்கப்பட்டது என்றால், இந்த மனுக்கள் கொடுக்கலாம் என்று சொன்னபொழுது, அச்சிடப்பட்ட படிவங்களிலே முறைப்படி அந்த வினாக்களுக்கெல்லாம் விடைகள் தரப்படவேண்டுமென்று சொல்லப்பட்டது. அச்சிடப்பட்ட படிவங்கள் அப்போது கிடைக்கவில்லை. அது பிப்ரவரி மாதத்திற்குள்ளே வழங்கப்படவேண்டுமென்று ஒரு நாள் குறிப்பிட்டு விட்டதால் எல்லோரும் அதிலே அதிகமாக அக்கறை காட்டி, அந்த அலுவலகங்களில் கூட்டமாகக்கூடத் தொடங்கினார்கள்.

பிற்பகல் 12-05

ஆகவே, அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாகவும் மனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டதே தவிர, அரசு ஆணை அல்ல; அரசு, ஆணை போட முடியாது. தயவுசெய்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலம் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்; ஒரு ஜி.ஓ. போடமுடியாது. ஆனால், சட்டமன்ற உறுப்பினர்கள் மூலம் பெறப்படுகிற மனுக்களையும் மக்கள் நேரடியாகவே இந்த அச்சடிக்கப்பட்ட படிவங்களிலே தரவில்லையேயானால், சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமும் பெறலா

மென்றவுடன், என்ன நடந்தது என்றால், சட்டமன்ற உறுப்பினர்களும் கையெழுத்துப் போட்டு பரிந்துரையாக அப்படி அனுப்பினார்கள்; சட்டமன்ற உறுப்பினர்களுடைய செயலாளர்கள் என்று சொல்லப்படுகிற பி.ஏ.-க்களும் அனுப்பினார்கள். இதுவும் ஆயிரக்கணக்கில் வந்து சேர்ந்தது. அதற்குப் பிறகும் நெருக்கடி தணியவில்லை. அதற்குப் பிறகும், அமைச்சர் அவர்கள்—முன்னாலே இருந்த அமைச்சர் அவர்கள் வெள்ளைக் காகிதத்திலேயும் மனுக்களை அனுப்பலாமென்று சொன்னார்கள். பல விவரங்கள் தெரிவிக்கப்பட வேண்டிய ஒரு படிவத்தை வாங்கிக் கொண்டு தீர்க்க முடியாத ஒரு பிரச்சினைக்கு, வெள்ளைக் காகிதத்திலே மனு வந்தால், குடும்ப அட்டை வழங்குவது என்பது எப்படி இயலும்? ஒரு அட்டையை அச்சடித்துக் காடுத்து விடுவதோடு பிரச்சினை தீர்ந்து விடுவதில்லை. இன்றைக்கு இருக்கிற கணக்கின்படி, ரூ. 400 கோடிக்கு அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது, இதற்கான மானியத் தொகைக்காக. இதிலே ஒரு லட்சம் கூட்டுகிறபோது, அரசாங்கம் பணத்தையும் கூட்டிக் கொடுத்தாக வேண்டும். பணத்தை புரட்சித் தலைவி அவர்கள் கொடுத்து விடுங்கள் என்று சொன்னாலும், உடனடியாக அதற்கான பொருள் வேண்டும். அரிசி வேண்டும்; மண்ணெண்ணெய் வேண்டும்; சர்க்கரை வேண்டும். இவ்வளவு பொறுப்புகளும் இந்த ஒரு குடும்ப அட்டைக்குள்ளே இருக்கிறது. ஆகவேதான், இவற்றைக் கேட்டுப் பெற்று, பரிசீலித்து அட்டை வழங்குகிற முறை அறிமுகப் படுத்தப்பட்டது.

ஆகவே, அந்த அச்சடிக்கப்பட்ட படிவங்கள் முறை மாறி, சட்டமன்ற உறுப்பினர்கள் செய்கிற பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ளலாம் என்று மாற்றி, அதற்குப் பிறகு வெள்ளைத் தாளிலே கொடுக்கலாம் என்று அறிவிக்கப்பட்டதற்குப் பிறகு, என்ன நடைபெற்றது என்றால், நாங்கள் நான்கு பேர் குடும்பத்திலே இருக்கிறோம்; எங்களுக்குக் குடும்ப அட்டை இல்லை; குடும்ப அட்டை தாருங்கள்; கருப்பையா, 30 வயது; சுப்பாயி 28 வயது; இன்னொருவர் 15 வயது; குடும்ப அட்டை தாருங்கள் என்று இப்படி மனுக்கள் வந்து சேர்ந்ததுதான் ஏறத்தாழ 36 லட்சம் மனுக்கள். அதற்குப் பிறகு, பிப்ரவரி முடிந்தது. அதற்குப் பிறகும் மனுக்கள் வாங்கலாம் என்று அரசாங்கம் அனுமதித்தது. சுமார் 4 லட்சம் மனுக்கள் வந்தன. முன்னாலே வழங்கப்பட்ட அட்டைகள் 1 கோடியே 23 லட்சம். மொத்தம் இப்போது வந்திருக்கிற மனுக்கள் எல்லாம் உண்மையான மனுக்கள்; அட்டை தரப்பட வேண்டிய மனுக்கள் என்று நாம் எடுத்துக் கொண்டால், 1 கோடியே 63 லட்சம் ஆகிறது. இது எப்படி? அரசாங்கம் இதிலே ஒரு கணக்குப் பார்க்க வேண்டாமா? இந்த 40 லட்சத்தை எடுத்துக் கொண்டால், மூன்றிலே ஒரு பங்கை உயர்த்தினால், 130 கோடி ரூபாய் அரசாங்கம் அதிகமாகச்

1993 அக்டோபர் 29] [திரு. இராம. வீரப்பன்]

செலவழிக்க வேண்டிவரும். இந்த 130 கோடி ரூபாயை புரட்சித் தலைவி அவர்கள் அனுமதித்து விடுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். 40 லட்சம் இருக்கிறார்களா என்ற ஒரு கணக்கை அரசு ஆராய்ந்தது 1991-ஆம் ஆண்டிலே, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்ட விவரம் அரசாங்கத்திடத்திலே இருக்கிறது. மத்திய அரசாங்கம் தந்திருக்கிறது. அன்றைக்கு இந்த மாநிலத்தினுடைய குடும்பம்-வீடுகள்-1 கோடியே 24 லட்சத்து 13 ஆயிரத்து 282 குடும்பங்கள் என்று புள்ளி விவரக் கணக்கு நமக்குத் தருகிறது. இது 1991-ஆம் ஆண்டிலே $1\frac{1}{2}$ ஆண்டிலே எவ்வளவு கூடியிருக்கலாம் என்றால் 1 கோடியே 25 லட்சம், 1 கோடியே 26 லட்சம் அல்லது 1 கோடியே 30 லட்சம் என்று வையுங்கள். ஆனால், இன்றைக்கு வந்திருக்கிற விவரப்படி, முன்பு 1 கோடியே 23 லட்சம் கார்டுகள் வழங்கியிருக்கிறோம். இப்போது புது மனுக்கள் 40 லட்சம். ஆக, 1 கோடியே 63 லட்சம். ஆகவேதான், அரசாங்கம் அதிகாரிகளை அனுப்பி இந்த புதிய மனுக்களைப் பரிசிலித்தபோது, இந்தக் குழப்பம் வந்தது. நீங்கள் சொல்வதைப் போல, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர்ச்சுனன் சொல்வதைப் போல, சேலத்திலே 2 லட்சத்து 62 ஆயிரத்து 817 புது மனுக்கள்; வடாற்காடு அம்பேத்காரிலே 1 லட்சத்து 47 ஆயிரத்து 652 புது மனுக்கள்; அண்ணா நகரிலே 35 ஆயிரத்து 171 புது மனுக்கள். அவற்றைப் பரிசிலனை செய்து, குறைந்த அளவிலே சேலத்திலே 1 லட்சத்து 18 ஆயிரத்து 54; வடாற்காடு அம்பேத்காரிலே 67 ஆயிரத்து 974; அண்ணா நகர் மண்டலத்திலே 12 ஆயிரத்து 772 என்று அவர்கள் குறிப்பிட்டு விட்டார்கள். இதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் இந்தக் கணக்கு வழக்கையெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பதிலே பயனில்லை. இதை எப்படியாவது கவனமாக ஆராய்ந்து, இந்தக் குடும்ப அட்டைகளை வழங்குவதிலே குறையில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்; அதற்கு எப்படியாவது, எப்பாடுபட்டாவது அதிகாரிகளை ஒன்றுதிரட்டி, மீண்டும் அந்த, நிராகரிக்கப்பட்ட மனுக்களைப் பரிசிலனை செய்து, உரியவர்கள் அனைவருக்கும் அட்டைகள் வழங்கப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பித்து இருக்கின்றார்கள். அப்படி ஆணை பிறப்பிக்கப்பட்டபோதுதான் நம்முடைய அண்ணா நகர் தொகுதி உறுப்பினர் சொன்னதுபோல, விசாரணைக்குச் சென்றவர்கள், குடும்பங்கள் மாறியிருக்கிறது; பிரிந்து இருக்கிறோம் என்று சொன்னதை நம்பாமல் வீடு பூட்டி இருக்கிறது, ஆள் இல்லை என்று சொன்னதன் காரணமாக, பல்வேறு காரணங்களினாலே இந்த மனுக்கள் நிராகரிக்கப்பட்டு இருக்கின்றன. அப்படி மனுக்கள் நிராகரிக்கப்படக் கூடாது என்று அரசாங்கம் இப்போது அறிவித்து இருக்கிறது. ஆணை பிறப்பித்திருக்கிறது.

[திரு. இராம. வீரப்பன்] [1993 அக்டோபர் 29

ஆனால் இதிலே ஒரு கஷ்டம் என்னவென்றால், தயவு செய்து மாண்புமிகு உறுப்பினரும் இதற்குத் துணை புரிய வேண்டும். எங்களுககுப் புதிய கார்டு வேண்டும் என்று கேட்கிறார்களே தவிர, அவர்களுடைய பெயர் முன்னாலே எந்தக் கார்டிலே இருக்கிறது என்று சொல்ல மறுக்கின்றார்கள். அந்தக் கார்டிலேயிருந்து அவர்களுடைய பெயரை நீக்க வேண்டும். இந்தக் கஷ்டத்தையும் பொதுமக்களுக்கு வைக்க வேண்டாம் என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அப்படி யாராவது நாங்கள் புதிதாக குடும்பம் வைத்திருக்கின்றோம், தந்தையிடமிருந்து பிரிந்து வந்திருக்கின்றோம்; கல்யாணம் ஆகி புதிதாக வந்திருக்கின்றோம் என்று சொன்னால், அவர்களுடைய பெயர், எந்த இடத்திலே, எந்தக் கார்டிலே இருக்கிறது என்று கேட்டு வாங்கிக் கொள்ளுங்கள். இவர்களுக்குக் கார்டைக் கொடுத்து விடுங்கள் நீங்கள் அலுவலகத்திலேயிருந்து அவர்கள் சொன்ன இடத்திலேயுள்ள கார்டிலேயிருந்து அவர்களுடைய பெயர்களை ரத்துச் செய்யுங்கள் என்று இப்போது அறிவுரை வழங்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, அண்ணா நகர் உறுப்பினரும், மற்ற உறுப்பினர்களும், இங்கே விரும்புவது போலச் செய்ய வேண்டும் என்று சொன்னால், இதிலே இருக்கிற சங்கடங்கள் அனைத்தையும் தீர்த்து வைக்கவேண்டும் என்று சொன்னால், அதற்கு அதிகாரிகள் போதவில்லை. இத்தனை கோடி மக்களுக்கு, இத்தனை கோடி குடும்பங்களுக்கு உணவு அட்டை வழங்க வேண்டும் என்றால் இதற்கென்று 'ஸ்டாஃப்' இல்லை.

மைலாப்பூரைப் பற்றி ஏதோ குற்றச்சாட்டுபோல் நினைத்துக் கொண்டு சொன்னார். நான் கணக்குகளுக்குள் நுழையவில்லை. நேரம் இல்லை. சென்னையில் மொத்தம் 10 மண்டலங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மண்டலத்தைப் பற்றியும் ஒவ்வொரு புகார் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் இந்த குடும்ப அட்டை வழங்குவதிலே மிகத் தவறுகள் அதிகமாக நடப்பதும் நகர்ப் பகுதிகளிலேதான். மக்கள் குடும்ப அட்டை இல்லாமல் திண்டாடுவதும் நகரப் பகுதிகளிலேதான். ஆகவே, இரண்டையும் அரசாங்கம் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற அளவுக்கு ஆளாக வேண்டியிருக்கிறது. ஆனால், அதிகாரிகள் விசாரணைக்குப் போகின்ற போது வேலைக்குப் போய் விடுகிறார்கள். ஆள் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. இதைத் தீர்ப்பதற்கு இந்தத் துறையினிடத்திலே ஆள் இல்லை. இந்தப் 10 மண்டலங்களிலே இருந்தும் 100 பேர்களை எடுத்து, ஒவ்வொரு மண்டலமாகப் பரிசீலித்து வரலாம் என்ற அளவில் ஒரு பரிட்சார்த்தமாகத்தான் மைலாப்பூர் மண்டலம் எடுத்துக் கொள்ளப்பட்டதே தவிர வேறு காரணம் இல்லை. அவர்களும் மக்கள்தான். தெற்கே இருந்து தொடங்குவதா, வடக்கே

இருந்து தொடங்குவதா, எங்கே பிரச்சினை தீரும் என்று எண்ணி மைலாப்பூரிலிருந்து தொடங்கப்பட்டது. இப்போது(குறுக்கீடு)

டாக்டர் அ. செல்லக்குமார் : பேரவைத் தலைவர் அவர்களே, அகர வரிசைப்படி என்று பார்த்தால் அண்ணா நகர்தான் முதலில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே அகர வரிசை அவசியம் இல்லை. எந்தப் பகுதியிலே இருப்பவர்களும் மக்கள்தான். எங்கே பிரச்சினை அதிகமாக இருக்கிறது என்று அரசு கருதியதோ, அங்கேயிருந்து தொடங்கியது. அதிலே கிராமப் பகுதிகள் எல்லாம் இந்தச் சென்னைக்குள்ளே சேருகின்றன. புறநகர்ப் பகுதிகள் எல்லாம். ஆகவே தொடங்கினோம். இப்போது மைலாப்பூரை, முடித்து விட்டோம். இதற்கு அடுத்து, பகுதிகள் வரிசையாகத் தொடங்குவது அல்ல. அதற்கு நேரம் ஆகும். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆணைப்படி மாவட்டங்கள் முழுவதும், இந்த நவம்பர் 15-ஆம் தேதிக்குள் முடித்தாக வேண்டும். அட்டை வழங்கப்பட்டாக வேண்டும் என்று ஆணை பிறப்பித்ததையொட்டி, சென்னையிலே இத்தனை அலுவலர்கள் நம்மிடத்திலே இல்லை என்ற காரணத்தினாலே, வேறு அரசுத் துறைகளிலேயிருந்து அலுவலர்களைக் கேட்டுப்பெற்று, பல்வேறு துறைகளிடத்திலேயிருந்து கேட்டுப் பெற்று, ஒவ்வொரு மண்டலத்திற்கும் சுமார் 100 பேர் என்ற அளவில் அந்தப் பணியிலே ஈடுபடப் போகின்றார்கள். ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட மனுக்கள், இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் வந்திருக்கின்ற பகுதிகள், சேலம், 1,50,841, வடஆற்காடு—அம்பேத்கார் 87,139, அண்ணா நகர் 24,346. ஆகவே, அதிகமான அலுவலர்கள், பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் எல்லா மண்டலங்களிலேயும் ஒரே நேரத்தில் ஈடுபடப் போகின்றார்கள். மிக விரைவில் எல்லா பிரச்சினைகளையும் தீர்த்துக் கொண்டு, அநேகமாக நவம்பர் 15-ஆம் தேதிக்குள் அனைவருக்கும்—தகுதியுள்ளவர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்படும். அருள்கூர்ந்து மாண்புமிகு உறுப்பினர்கள் இதிலே ஒத்துழைத்து, உதவி செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) சங்கரன்கோவில் ஒன்றியம் வடக்கு ஆலங்குளம் வழியாக திருவேங்கடம் சென்றுகொண்டிருந்த பேருந்து நிறுத்தப்பட்டதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு ஆர். சிங்காரம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு ஆர். சிங்காரம்.

திரு ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சங்கரனகோவில் ஒன்றியம், வடக்கு ஆலங் குளம் வழியாகத் திருவேங்கடம் சென்று கொண்டிருந்த கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிறுத்தப் பட்டது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன.

பிற்பகல் 12-15

*மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

தேவையான பேருந்துகள் அங்கே இயக்கப்பட்டு வருகின்றன. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்று 8—8—1993 வரை தென்காசியிலிருந்து புளியங்குடி, வடக்கு ஆலங்குளம், சங்கரன்கோயில் வழியாக திருவேங்கடத்திற்கு 2 சுற்றுக்களும், தென்காசியிலிருந்து புளியங்குடி, வடக்கு ஆலங்குளம் வழியாக சங்கரன் கோவிலுக்கு 6 சுற்றுக்களும் இயக்கப்பட்டு வந்தது. அதில் திருவேங்கடம் செல்லும் சுற்றுக்களில் பயணிகள் பயண விகிதாச்சாரம் மிகவும் குறைவாக இருந்ததாலும், திரு வேங்கடம் செல்ல நேரடி பயணிகள் இல்லாததாலும், மேற்படி பேருந்தை 9—8—1993 முதல் தென்காசியிலிருந்து புளியங்குடி, வடக்கு ஆலங்குளம், சங்கரன்கோவில் வழியாக சிவகிரிக்கு 4 சுற்றுக்களும், தென்காசியிலிருந்து புளியங்குடி, வடக்கு ஆலங்குளம் வழியாக சங்கரன்கோயில் வரையில் 2 சுற்றுக்களும் இயக்கப்பட்டு வருகிறது. சங்கரன்கோவிலி லிருந்து திருவேங்கடம் செல்ல மிகுந்த அளவு பேருந்து வசதிகள் உள்ளன. மேலும் வடக்கு ஆலங்குளம் பகுதி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மக்களின் முக்கிய கோரிக்கையான அருகில் உள்ள சங்கரன்கோவிலுக்கும், புளியங்குடிக்கும் முன்பு இயக்கப் பட்ட 8 சுற்றுக்களும் வேண்டும் என தெரிவிக்கப்பட்டதால் 30–10–1993 முதல் புளியங்குடியிலிருந்து வடக்கு இலங் குளம் வழியாக சங்கரன்கோவிலுக்கு மேலும் 2 சுற்றுக்கள் வேறொரு பேருந்தைக் கொண்டு சிவகிரி வட்டாட்சியர் கூட்டிய சமாதான கூட்டத்தின் முடிவின்படி இயக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கும் இன்று காலையில் தொலைபேசி மூலமாக பஸ் இயக்கப்படுவதாக தகவல் வந்துவிட்டது. சட்டெனச் சொன்னால் சிட்டெனப் பறந்து செயல்படும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நம் முடைய தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) தொப்பூர் தேசிய நெடுஞ்சாலை ஏழாம் எண் மலைப்பாதை யில் வாகனங்கள் பழுதடைந்தால் போக்குவரத்துத் தடை ஏற்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. க. அர்ச்சுனன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு க. அர்ச்சுனன்.

திரு க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தொப்பூர் தேசிய நெடுஞ்சாலை எண் 7 மலைப் பாதையில் வாகனங்கள் பழுதடைந்தால் ஏற்படும் போக்கு வரத்துத் தடை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

தொப்பூர் அருகே மலைப்பாதையில் செல்லும் தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல், ஓசூர்— அதியமான்கோட்டை தொப்பூர்— மேட்டூர் செல்லும் நெடுஞ்சாலைகள் கூடுவதால்

மக்களின் முக்கிய கோரிக்கையான அருகில் உள்ள சங்கரன்கோவிலுக்கும், புளியங்குடிக்கும் முன்பு இயக்கப் பட்ட 8 சுற்றுக்களும் வேண்டும் என தெரிவிக்கப்பட்டதால் 30–10–1993 முதல் புளியங்குடியிலிருந்து வடக்கு இலங் குளம் வழியாக சங்கரன்கோவிலுக்கு மேலும் 2 சுற்றுக்கள் வேறொரு பேருந்தைக் கொண்டு சிவகிரி வட்டாட்சியர் கூட்டிய சமாதான கூட்டத்தின் முடிவின்படி இயக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கும் இன்று காலையில் தொலைபேசி மூலமாக பஸ் இயக்கப்படுவதாக தகவல் வந்துவிட்டது. சட்டெனச் சொன்னால் சிட்டெனப் பறந்து செயல்படும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நம் முடைய தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) தொப்பூர் தேசிய நெடுஞ்சாலை ஏழாம் எண் மலைப்பாதை யில் வாகனங்கள் பழுதடைந்தால் போக்குவரத்துத் தடை ஏற்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. க. அர்ச்சுனன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு க. அர்ச்சுனன்.

திரு க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தொப்பூர் தேசிய நெடுஞ்சாலை எண் 7 மலைப் பாதையில் வாகனங்கள் பழுதடைந்தால் ஏற்படும் போக்கு வரத்துத் தடை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

தொப்பூர் அருகே மலைப்பாதையில் செல்லும் தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல், ஓசூர்— அதியமான்கோட்டை தொப்பூர்— மேட்டூர் செல்லும் நெடுஞ்சாலைகள் கூடுவதால்

போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளன. மலைப் பகுதியில் அடிக்கடி விபத்துக்கள் இரவிலேயே ஏற்படுவதாலும், உடனடியாக மீட்புப்பணியில் ஈடுபட வாகன லாரிகள் இல்லாததாலும், இருபுறங்களிலும் இருந்து வரும் வாகனங்களை உடனடியாக திருப்பிவிட வசதியில்லாமல் இருபுறங்களிலும் மலைகளாகவும் அடர்ந்த வனப் பகுதியாகவும் இருப்பதாலும், வரும் வாகனங்கள் ஆங்காங்கேயே நிறுத்தப் படுகின்றன. தொப்பூர் காவல் நிலையத்தில் போதிய காவலர்கள் போக்குவரத்தைச் சீர் செய்து கொண்டு இருந்தாலும் வாகனங்களைக் கட்டுப்படுத்த இயலாத நேர்வுகளில் தொப்பூருக்கு அருகாமையில் உள்ள தீவட்டிப் பட்டி, மேச்சேரி மற்றும் தர்மபுரி காவல் நிலையங்களுக்கு தகவல் தந்து ஆங்காங்கே வாகனங்களை திருப்பி மாற்று வழியில் செல்ல ஏற்பாடு செய்யும்போது மாற்று வழிப்பாதைகள் மிகவும் மோசமாகவும், குறுகலாகவும் மிகவும் தொலை தூரமாகவும் இருப்பதாலும் வெளி மாநில ஓட்டுநர்கள் வாகனங்கள் பழுதடையக்கூடும் என அஞ்சி மேற்படி தேசிய நெடுஞ்சாலையிலேயே செல்வது நலம் எனக் கருதி சாலை யிலேயே வாகனங்களை நிறுத்திவிட்டு தூங்கிவிடுகின்றனர். இங்கு ஒரு வாகனம் பழுதாகிவிட்டால் அதனை வேறு பாதைக்கு மாற்ற இயலாது. சில சமயங்களில் பழுதடைந்த வாகனத்தை அகற்றுவதற்கு (Weeker) கொண்டு செல்ல இயலாத நிலை ஏற்படும். இது ஒரு குறுகிய பாதையாதலால் இந்த இன்னல் ஏற்படுகிறது. மேற்படி காரணங்களால் காலதாமதம் ஏற்படுகிறது.

2. போக்குவரத்தைச் சீர் செய்ய காவல்துறையினர் பின் வரும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர் :

(1) தொப்பூர் மலைப்பாதையில் மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரை போக்குவரத்தை ஒழுங்கு செய்ய போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் அடங்கிய காவலர்கள் குழு (காவல் உதவி ஆய்வாளர், 1, தலைமைக் காவலர் 1 மற்றும் காவலர்கள் 6) காவல் வாகனத்துடன் நியமிக்கப்பட்டு பணியாற்றி வர நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

(2) போக்குவரத்தைக் கட்டுப்படுத்த சோதனைச் சாவடியை 3 இடங்களில் பிரித்து அமைக்க கோவையிலுள்ள வணிகவரித் துறைத் துணை ஆணையாளரிடம் காவல் கண்காணிப்பாளரும் மாவட்ட ஆட்சியரும் நேரடியாகப் பேசி நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் வர்களே, இந்த விவர அறிக்கையில் அந்தக் காட்ரோட்டில் வாகனங்கள் பழுதடைந்து விடுகிறபோது காவல் துறையே

சேர்ந்து முயற்சி எடுத்தாலும் அதை அப்புறப்படுத்த, முடியாத சூழ்நிலைக் காரணமாகத்தான் அங்கே டிராபிக் ஸ்தம்பித்து விடுகிறது என்று இருக்கிறது. எனவே, தற்போது இருக்கின்ற பிரச்சினை சேலத்திலிருந்து வாணியம்பாடிக்கு, அரூர் வழியாக திருப்பத்தூர் வழியாக வருகிற சாலையை மேம்படுத்துவதன் மூலமாக, வாகனங்களையெல்லாம் இந்தப் பகுதியிலே திருப்பிவிடுகிற வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், எப்படியும் இந்த மலைப்பாதையில் மாற்றுப் பாதை அமைக்க முடியாத காரணத்தினால், இந்தப் பாதையை தேசிய நெடுஞ்சாலை அளவிற்கு உயர்த்தி இந்தப் பகுதி வழியாக அனைத்து வாகனங்களையும் திருப்பி விடுவதற்கான வாய்ப்பை உருவாக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில கருத்துக்களை இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். பொதுப் பணித் துறை அமைச்சரோடு பேசி உறுப்பினருடைய கருத்துக்களை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) திருநெல்வேலி மாவட்டத்தில் கீழப்பாவூர், ஆலங்குளம், சுரண்டை பகுதிகளில் மிளகாய்ச் செடிகள் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. எஸ். எஸ். ராமசுப்பு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம் கீழப்பாவூர் ஆலங்குளம் சுரண்டைப் பகுதிகளில் மிளகாய்ச் செடிகள் தொடர்ந்து நோயினால் பாதிக்கப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

சேர்ந்து முயற்சி எடுத்தாலும் அதை அப்புறப்படுத்த, முடியாத சூழ்நிலைக் காரணமாகத்தான் அங்கே டிராபிக் ஸ்தம்பித்து விடுகிறது என்று இருக்கிறது. எனவே, தற்போது இருக்கின்ற பிரச்சினை சேலத்திலிருந்து வாணியம்பாடிக்கு, அரூர் வழியாக திருப்பத்தூர் வழியாக வருகிற சாலையை மேம்படுத்துவதன் மூலமாக, வாகனங்களையெல்லாம் இந்தப் பகுதியிலே திருப்பிவிடுகிற வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், எப்படியும் இந்த மலைப்பாதையில் மாற்றுப் பாதை அமைக்க முடியாத காரணத்தினால், இந்தப் பாதையை தேசிய நெடுஞ்சாலை அளவிற்கு உயர்த்தி இந்தப் பகுதி வழியாக அனைத்து வாகனங்களையும் திருப்பி விடுவதற்கான வாய்ப்பை உருவாக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில கருத்துக்களை இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். பொதுப் பணித் துறை அமைச்சரோடு பேசி உறுப்பினருடைய கருத்துக்களை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) திருநெல்வேலி மாவட்டத்தில் கீழப்பாவூர், ஆலங்குளம், சுரண்டை பகுதிகளில் மிளகாய்ச் செடிகள் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. எஸ். எஸ். ராமசுப்பு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம் கீழப்பாவூர் ஆலங்குளம் சுரண்டைப் பகுதிகளில் மிளகாய்ச் செடிகள் தொடர்ந்து நோயினால் பாதிக்கப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

[திரு. கு. ப. கிருஷ்ணன்] [1993 அக்டோபர் 29

அறிக்கை.

இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளப் பகுதிகளில் மிளகாய்ப் பயிர் சுமார் 1,850 எக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பகுதி திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் தொடர்ந்து மிளகாய்ப் பயிர் செய்யும் பகுதிகளில் ஒன்றாகும்.

இப்பயிர் இவ்வாண்டு தக்க வளர்ச்சியின்மையால் பாதிக்கப் பட்டது. இவ்வளர்ச்சியின்மையின் காரணத்தினால் செடிகளில் பூக்களின் பிடிப்பு மிகவும் குறைவாக இருந்தது. இதனால் இப் பயிர் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ள வயல்களில் மகசூல் குறை வாக உள்ளது. இப்பயிர் சிறிய அளவில் இலைப்பேன் போன்ற பூச்சியினால் பாதிக்கப்பட்டும் இருந்தது. இது போக இப்பயிரை தாக்கும் பூச்சி மற்றும் பூஞ்சாள நோய்களின் பாதிப்பு அதிக அளவில் இல்லை.

பாதிக்கப்பட்ட பகுதியில் ஒரு சில அதிகமாக பாதிப்படைந்த வயல்களை தோட்டக்கலை மற்றும் வேளாண்மைத் துறை தொழில் நுட்ப வல்லுநர்கள் பார்வையிட்டு இதுபற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த புது வகையான பயிரின் வளர்ச்சி குன்றிய நிலை கீழ்க் கண்ட காரணங்களினால்தான் ஏற்பட்டுள்ளது என அறியப்பட்டது

1. பயிர் சுழற்சி முறையை கடைபிடிக்காமை.

2. இயற்கை உரங்கள் தேவையான அளவில் பயன்படுத் தாமை.

3. பைரித்திராய்டு போன்ற பூச்சி மருந்துகளை அதிக அளவில் பயன்படுத்துதல் மேலும், அதிக அளவில் பயிர் பாது காப்பு மருந்துகளை உபயோகப்படுத்துதல்.

4. பரிந்துரைக்கப்பட்ட அளவுக்கு மேல் இராசாயன உரங் களை பயன்படுத்துதல் மேலும், புரோஜிப் போன்ற பயிர் ஊக்கி களை தேவையற்றபடி பயன்படுத்துதல்.

5. ஒரே விதையை திரும்ப திரும்ப பயன்படுத்துதல்.

இந்த விவரங்களை தோட்டக்கலை மற்றும் வேளாண்மைத் துறை விரிவாக்கப் பணியாளர்களால் விவசாயிகளுக்கு எடுத் துரைக்கப்பட்டது. மேலும், அகில இந்திய வானொலி மற்றும் பத்திரிகைகளில் தொடர்ந்து கருத்துக்கள் விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டது.

1993 அக்டோபர் 29] [திரு. கு. ப. கிருஷ்ணன்]

விவசாயிகள் மேற்சொன்ன முறைகளை கடைபிடிப்பதை தவிர்க்க வேண்டுமென்று தொடர்ந்து தகவல்களும், செய்திகளும் வழங்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட சில விவசாயிகளின் வயல்களில் வருகின்ற நவம்பர் 1993-ம் மாதத்தில் செயல் விளக்க பாத்திகள் மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த செயல் விளக்க பாத்திகளில் அனுசரிக்கப்படும் விவரங்களை அதிகமான விவசாயிகளுக்கு தெரியப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், விவசாயிகளுக்கு இது பற்றி விழிப்புணர்ச்சி ஏற்படுத்த விழிப்புணர்ச்சி முகாம்கள் அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டு விவசாயிகள் அதிக அளவில் தொழு உரம் மற்றும் இயற்கை உரங்களை உபயோகப்படுத்த தகவல்கள் தெரிவிக்கப்படும்.

இது தவிர வாசனை திரவிய வாரிய உதவியுடன் வாசனை திரவிய பயிர்கள் மேம்பாட்டு திட்டம் தயாரிக்கப்பட்டு அரசினுடைய தீவிர பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளின் வயல்களில் செயல் விளக்கப்பாத்திகள் மற்றும் பயிர் பாதுகாப்பு உபகரணங்களான தெளிப்பான்கள் மற்றும் தூவான்கள் போன்ற இனங்கள், உயர் ரக விளைச்சல் தரும் விதைகள் போன்றவை வழங்கப்படவுள்ளது.

இந்த திட்டம் இந்த பகுதியில் உள்ள விவசாயிகள் அதிக அளவில் பயன் பெறும் வகையில் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும் இதுபோன்ற தேவையான அனைத்து சரியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், முத்தரப்பு கருத்தரங்கு வாசனை திரவிய வாரிய உள்ளிட்ட அரசு துறைகள், விவசாயிகள் மற்றும் ஏற்றுமதியாளர்களை இணைத்து மேற்கொள்ளப்படவுள்ளது.

இதனால் விவசாயிகள் தாங்கள் விளைவிக்கும் மிளகாய்ப் பயிரை மிக அதிக அளவில் இலாபம் பெறுகின்ற அளவில் விற்பனை செய்ய வழிவகைச் செய்யும். இது கோவில்பட்டியில் நடத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட காரணங்களினால் அரசு எல்லாவிதமான தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இதனால் மிளகாய் பயிர் செய்துள்ள விவசாயிகளுடைய அனைத்து நலன்களும் தகுந்த முறையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மேலும், இந்த பகுதியில் மிளகாய்ப் பயிர் செய்யும் விவசாயிகள் எந்தவிதமான பயமோ, அச்சமோ கொள்ள வேண்டாமென தெரிவிக்கப்படுகிறது. இக்காரணங்களினால் இந்த கவன ஈர்ப்பு தீர்மானத்தை இந்த நிலையிலேயே விட்டு விடலாமென வேண்டப்படுகிறது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதிகளில் மிளகாய் வற்றல் என்பது வெளி நாடுகளுக்கு எல்லாம் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிலே ஒரு பணப் பயிராக விவசாயிகள் பெருவாரியாக அங்கே பயிர் செய்து வருகின்றார்கள். அதிலும் சிறு விவசாயிகள் அதிகமாக பயிர் செய்யக்கூடியது. இப்பொழுது இரண்டு வருட காலமாக, அதாவது ஓராண்டு ஏற்படும் போதே யாருமே கவனிக்காமல் விட்டதினால், இன்றைக்கு இரண்டு மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து அது வந்ததினால், அந்தப் பகுதியிலே பெரும் விளைச்சல் இல்லாமல் போனதினால், விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாக இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இந்த விவர அறிக்கையிலே சொல்லும்போது பயிர் சுழற்சி முறையை கடைபிடிக்காததினால் பூச்சிக்கொல்லி மருந்துகளை அதிகமாக பயன்படுத்தியதினால், இரசாயன உரங்களை முறையாக பயன் படுத்தாதினால்....................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள் அதெல்லாம் விவர அறிக்கையிலே இருக்கிறது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : அந்தக் காரணத்தினால் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அந்தக் காரணம் சரியான காரணமாக எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் ஆராய்ச்சி செய்து பார்க்கும்போது இந்தக் காரணத்திற்கு உட்பட்டதாகத் தெரியவில்லை. இவற்றையெல்லாம் போடாமல் சாதாரணமாக தொழு உரம் போட்டதில் கூட, சரியாக அந்தப் பயிர் விளை யாமல் இருந்துவிட்டது. ஒட்டுமொத்தமாக அதற்கு ஒரு பெரிய ஆராய்ச்சியை நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதையும், அதோடு அந்தப் பகுதி மக்கள் விவசாயத்தினால் பாதிக்கப்பட்டிருப்பதற்கு நீங்கள் நிவாரணம்..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்,

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிளகாய்ப் பயிரை அந்த மக்கள் தொடர்ந்து அதே பயிரை பயிரிட்டு வந்த காரணத்தினால் அந்தப் பயி ருக்குத் தேவையான சத்துக்களை அது எடுத்துக்கொண்டதால் மீதி இருக்கக்கூடிய அந்த மண்ணுக்கு அந்தச் சத்துக்கள் கிடைப் பதில்லை. எனவே, வருகின்ற நவம்பர் மாதத்தில் அங்கே உள்ள விவசாயிகளை அழைத்து ஒரு செயல் விளக்கப் பாத்தி அமைக் கப்படும் என்பதையும், அரசு, பொது மக்கள், அதேபோல் ஸ்பைசஸ் போர்ட் வைத்து ஒரு ஆராய்ச்சி நடத்துவதிலேயும் மக்களுக்குத் தேவையான அறிவுரை வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(உ) வேலூர் நகரத்திற்கு வாரத்திற்கு ஒருநாள் மட்டுமே குடிநீர் வழங்குவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. சி. ஞான சேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''வேலூர் நகரத்திற்கு வாரத்திற்கு ஒரு நாள் மட்டுமே குடிநீர் வழங்கப்படுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

இந்த ஆண்டு பருவமழை உரிய காலத்தில் பொழியாத காரணத்தால் ஏற்பட்டுள்ள மிக வறட்சியான காலத்திலும் கூட வேலூர் நகரில் ஐந்து நாட்களுக்கு ஒருமுறை சுமார் $1\frac{1}{4}$ மணி நேரம் முதல் 2 மணி நேரம் வரை குடிநீர் விநியோகிக்கப்பட்டு வந்தது.

அண்மையில் பெய்த சிறிதளவு மழையின் காரணமாக பாலாற்று கிணறுகளில் ஊற்றுநீர் கூடுதலாக வந்துள்ளதால் தற்போது 4 நாட்களுக்கு ஒருமுறை சற்று கூடுதலான நேரத்தில் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

குழாய்களின் மூலம் குடிநீர் விநியோகம் இல்லாத நாட்களில் நகராட்சிக்கு சொந்தமான மூன்று லாரிகள் மூலமாகவும், அரசின் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் இரண்டு வாடகை லாரிகள் மூலமாகவும் குடிநீர் வழங்கப்படுகிறது.

வேலூர் நகராட்சிக்கு ஏற்கெனவே உள்ள திட்டங்களின் மூலம் குடிநீர் பற்றாக்குறை இருந்து வருவதால் குடிநீர் அபி விருத்தி திட்டப் பணிக்காக சுழல் நிதி கணக்கிலிருந்து ரூ. 9.75 லட்சம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப் பட்டு ஆய்வுப் பணிகள் நடைபெறுகிறது. இந்த ஆய்வுப் பணிகள் முடிவடைந்ததும் வேலூர் நகராட்சிக்கு நிரந்தரமாக குடிநீர் தட்டுப்பாட்டினை நீக்கும் வகையில் திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது.

........

[1993 அக்டோபர் 29

பிற்பகல் 12-20

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையைப் பார்த்தேன். இதிலே அதிகாரிகள் உண்மையான தகவல்களை அமைச்சரவர்களுக்குத் தரவில்லை; தவறான தகவல்களைத் தந்திருக்கிறார்கள் என்பதை நான் முதலிலே அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். 4 நாட்களுக்கு ஒரு நாள் தண்ணீர் விநியோகிப்பதாக அதிகாரிகள் தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள். 7 நாட்களுக்கு ஒரு முறைதான் தண்ணீர் தந்து கொண்டிருக்கிறார்கள். அதிலும் சில பகுதிகளுக்குத் தண்ணீர் போய்ச் சேருவதே இல்லை. வாடகை லாரி வைத்து தண்ணீர் கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வாடகை லாரியில் ஒரு நாள் கூட தண்ணீர் வந்ததாக வரலாறே இல்லை. அது நன்றாகத் தெரியும். முனிசிபாலிடிக்குச் சொந்தமான லாரியில் தண்ணீர் கொண்டு வருகிறார்கள். அதுவும் கல்யாண மண்டபத்திற்கும் வேறு டானரிகளுக்கும் மற்றவைகளுக்கும் முறைகேடாகக் கொண்டு போகப்படுகிறது. இப்படி முறைகேடாக தண்ணீர் விநியோகம் செய்கிற நிலைமைதான் அங்கே இருக்கிறது. இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பலமுறை நான் புகார் தந்திருக்கிறேன். ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், ஏற்கனவே சுழல் நிதியிலிருந்து 9.75 இலட்சம் ரூபாய் 'கமிஷனர் ஆப் முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷ'னிடமிருந்து பெற்றுத் தந்திருக்கிறோம். ஆனால் குடிநீர் வடிகால் வாரியம் இன்னும் ரிப்போர்ட் தராமல் இருக்கிறது. பெண்ணையாற்றுத் திட்டத்தை.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள். இல்லை என்றால் ஒரு நிமிடத்தில் முடித்துவிடுவேன். அதிலும் ஒரே உறுப்பினர் இரண்டாவது தடவை கொடுத்திருக்கிறீர்கள். அதனால் விதிமுறைகளின்படி, கேள்வி கேட்க முடியாது.

திரு. சி. ஞானசேகரன்: தலைவரவர்களே, நான் உங்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்வதெல்லாம் வேலூர் நகரிலே வாழ்ந்துகொண்டிருக்கிற மக்களுக்கு தினந்தோறும் குடி தண்ணீர் வழங்குவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவல் என்று ஒரு குற்றச் சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். அதை தெளிவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன். கொடுக்கப்பட்டிருக்கிற தகவல்கள் எல்லாம் உண்மையான தகவல்கள்; தவறான தகவலைத் தரவில்லை. மாண்புமிகு உறுப்பினர்

அவர்கள் இந்த அவைக்குத் தவறான தகவலைத் தருவதை வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும். அதிகாரிகளிடம் அறிக்கையைப் பெற்றதற்குப் பின்னால் we have substantiated through other officers also within the department முனிசிப்பல் எஞ்ஜினீயர் சொல்லியிருக்கிறார். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே நேற்று மாஸ் டிபார்ட்மென்டிலும் கேட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் இப்படி எல்லாம் சொல்லுவார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அதற்காகத்தான் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியிருக்கிறேன். கடந்த மாதம் இதே புகாரைக் கொடுத்தபோது மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக வறட்சி நிவாரண நிதியிலிருந்து 2.70 இலட்சம் ரூபாய் கொடுக்கப் பட்டிருக்கிறது. லாரிகளில் தண்ணீர் சப்ளை செய்யப்பட்டிருக் கிறது. ஏதோ அரசியல் முக்கியத்துவத்திற்காகவோ அல்லது விளம்பரத்திற்காகவோ இப்படி ஒன்றையுமே செய்யவில்லை, டானரிக்கும், ஃபாக்டரிக்கும் அனுப்பப்பட்டது என்று சொல்கிறார். (குறுக்கீடு)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> உட்காருங்கள். நீங்கள் குற்றச்சாட்டைச் சொன்னீர்கள். அமைச்சர் அதற்குப் பதில் சொல்கிறார். நீங்கள் தண்ணீர் கொடுக்கவில்லை என்று சொன்னீர்கள். அமைச்சர் கொடுக்கப்பட்டது என்று சொல்கிறார்.

<u>மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி</u> : Even now lorries are plying on the streets. ஒரு மாதத்திற்கு 2.70 இலட்சம் ரூபாய் குடி தண்ணீருக்காக மட்டும் வழங்கப்பட்டிருக்கிறது. தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிறது என்பதைத் தெரிந்து, அதன் அடிப்படையிலேதான் வேலூர் நகரின் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இந்த அரசு சுழல் நிதியிலிருந்து 9.50 இலட்சம் ரூபாயை வழங்கி, அந்த நகருக்கு நிரந்தரமாக பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்திருக்கிறது. அந்த இன்வெஸ்டி கேஷன் எல்லாம் முடிந்துவிட்டது. Investigation is over and this government will definitely take up this scheme to solve this problem.

(ஊ) ஓமலூர், தாரமங்கலம் மற்றும் மேட்டூர் தொகுதிகளில் கூட்டுக் குடிநீர் திட்டங்கள் காலதாமதமாக நிறைவேற்றப்படுவது குறித்து.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> அடுத்த கவன ஈர்ப்பு. திரு. க. அர்ச்சுனன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. க. அர்ச்சுனன்

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஓமலூர், தாரமங்கலம் மற்றும் மேட்டூர் தொகுதிகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதில் காலதாமதம் ஏற்படுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

மேட்டூர் அணை அருகில் காவேரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் சேலம், 11 நகரங்கள் மற்றும் 264 வழியோர கிராமங்களுக்காக கூட்டுக் குடிநீர்த் திட்டம் அனைத்து பணிகளும் முடியும் தருவாயில் உள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பொதுவாக அமைக்கப்பட இருக்கும் தலைமைப் பணியிடம், சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீர் கொண்டு செல்லும் பிரதான குழாய்கள் பதிக்கும் பணிகள் 97 விழுக்காடுகள் முடிக்கப்பட்டு விட்டது, மீதமுள்ள வேலைகள் டிசம்பர் மாத முடிவுக்குள் முடிக்கப்பட்டு இத்திட்டம் முழுப்பயனுக்கு கொண்டு வரப்படவுள்ளது.

இப்பிரதான திட்டம் பயனுக்கு கொண்டு வரப்படும் பொழுது 264 வழியோர கிராமங்களின் குடிநீர் விநியோகம் செயல்படுத்தப்படும்.

மேற்கண்ட 264 வழியோர கிராமக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் 9 தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி, 10 நீரேற்று நிலையங்கள், 266.60 கி.மீ. கிளைப் பிரதானக் குழாய்கள் மற்றும் 104 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது.

98 கி.மீ. பகிர்மானக் குழாய்கள் பதிக்கும் பணியில் இதுவரை 45 சதவிகித வேலைகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. இக்கிராமக் குடிநீர்த் திட்டப் பணிகள் யாவும் டிசம்பர் 1993—க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் ஓமலூர் மற்றும் தாரமங்கலம் தொகுதியைச் சார்ந்த கிராமங்களும் டிசம்பர் 1993ல் குடிநீர் பெறும்.

மேட்டூர் தொகுதியைச் சார்ந்த ஜலகண்டபுரம், வனவாசி, நங்கவள்ளி, தாரமங்கலம் மற்றும் 11 வழியோர கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க தனியான திட்டம் ஒன்று ரூ. 367.17 இலட்சத்திற்கு அரசால் அங்கீகரிக்கப்பட்டு இத்திட்டப் பணிகள் விரைவில் தொடங்க இருக்கிறது.

இத்திட்டத்திற்குத் தேவையான குடிநீரும் உலக வங்கித் திட்டத்தின் கீழ் அமைந்துள்ள நீரேற்று பிரதான குழாயிலிருந்து எடுக்கப்படவுள்ளது.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை மேட்டூர், ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றியது. நான் கேட்டிருக்கிற கேள்வி, ஓமலூர், தாரமங்கலம், மேட்டூர் தொகுதிகளுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்க தனியாக ஒரு இன்வெஸ்டிகேஷன் செய்யப்பட்டிருக்கிறது ; அதைப் பற்றியது. அந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றுதான் என்னுடைய கவன ஈர்ப்பு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கிற கேள்வி மேட்டூர் அணையிலிருந்து ஓமலூர் தொகுதி, தாரமங்கலம் தொகுதி, மேட்டூர் தொகுதி ஆகிய தொகுதிகளைச் சேர்ந்த பல்வேறு கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படுவதிலே ஏற்படும் காலதாமதம் பற்றிக் கேட்டிருக்கிறார். மேட்டூர் அணையிலிருந்து ஒரே ஒரு திட்டத்தைத்தான் நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த ஓமலூர், தாரமங்கலம், மேட்டூர் தொகுதிகளிலுள்ள வழியோரக் கிராமங்களுக்கும் இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நான் ஏற்கெனவே அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். 11 நகரங்கள் உள்ளடங்கியது இந்தத் திட்டம். அடுத்ததாக சுமார் 264 வழியோரக் கிராமங்கள் பயன் படவும் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. சுமார் 60 கோடி ரூபாய் அளவிலே ஓமலூர் பகுதியிலும் சரி, தாரமங்கலம் பகுதியிலும் சரி, மேட்டூர் தொகுதியிலே ஜலகண்டபுரம், வனவாசி, நங்கவள்ளி, தாரமங்கலம் மற்றும் பதினோரு வழியோரக் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குவதற்காக தனியாக ஒரு திட்டமும் இந்தத் திட்டத்தோடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டப் பணிகளும் விரைவாக உடனடியாகத் தொடங்கப்பட இருக்கின்றன என்பதை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறேன். இது போதுமானது என்று கருதுகிறேன்.

பிற்பகல் 12-25

(எ) கரூர், அமராவதி சனப்பிரட்டி வாய்க்கால் மற்றும் புகளூர் காகித ஆலை பகுதிகளில் கழிவு நீர் கலப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

(ஏ) அரவக்குறிச்சி, ஓரத்தப்பாளையம் அணையில் கழிவு நீர் கலப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு, திருமதி கே. மரியம் உல் ஆசியா அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

அதற்கடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானமும் அவர்கள் பெயரில்தான் உள்ளது. அதுவும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தொடர்புடையதுதான். ஆகவே இரண்டையும் சேர்த்தே திருமதி கே. மரியம் உல் ஆசியா அவர்கள் கேட்கலாம்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கரூர் அமராவதி ஆறு, சனப்பிரட்டி வாய்க்கால் மற்றும் புகளூர் காகித ஆலை கழிவுநீர் வெளியேறும் பகுதிகளில் சாயம் மற்றும் சர்க்கரை ஆலை, காகித ஆலை கழிவு நீரால் விவசாய விளை நிலங்களும், குடிநீர் மற்றும் அடிநீரும் கெட்டு சுற்றுப் புறச் சூழல் மாசுபடுவது'' குறித்தும் மற்றும் ''அரவக்குறிச்சி தொகுதியைச் சேர்ந்த நொய்யலாற்றில் ஓரத்தப்பாளையம் அணையில் திருப்பூர் நூல் சாயம் மற்றும் ரசாயன தண்ணீர் கலப்பதால் சுற்றுப்புறச் சூழ்நிலை மாசு ஏற்பட்டிருக்கும் நிலை குறித்தும்'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கைகள் இரண்டு பேரவை முன் வைக்கப்பட்டுள்ளன :

1. அறிக்கை.

திருவாளர்கள் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித ஆலை, திருச்சி மாவட்டம் காகிதபுரத்தில் அமைந்துள்ளது. இத்தொழிற்சாலை கீழ்க்கண்டவற்றைத் தயாரிக்கிறது—

(1) எழுது தாள் : 40,000 டன் / வருடம்

(2) செய்தித்தாள் : 50,000 டன் / வருடம்.

1993 அக்டோபர் 29] [திரு. சு. முத்துசாமி]

இந்நிறுவனத்திலிருந்து நாளொன்றுக்கு 38,000 கிலோ லிட்டர் தொழிற்சாலைக் கழிவு நீரும், 1,500 கிலோ லிட்டர் வடிகால் கழிவு நீரும் வெளியேற்றப்படுகிறது. இந்நிறுவனம், தொழிற்சாலைக் கழிவு நீரை சுத்திகரிப்பு செய்ய கீழ்க்கண்டவாறு சுத்திகரிப்பு நிலையத்தைக் கொண்டுள்ளது

(1) கோர்ஸ் ஸ்கிரீன்

(2) ஃபைன் பார் ஸ்கிரின்

(3) டெட்ரிட்டர்

(4) முதல்நிலைத் தெளியவைப்பான்

(5) ஃபில்டர் பிரஸ் (அழுத்த மண் வடிப்பான்)

(6) படிய வைக்கும் தொட்டி (2)

(7) காற்றிலி உயிரகத் தொட்டி

(8) காற்றேற்றும் தொட்டி.

தொழிற்சாலைக் கழிவு நீர் மேற் கூறப்பட்ட சுத்திகரிப்பு நிலையத்தின் மூலமாக சுத்திகரிப்பு செய்யப்பட்டு புகளூர் நீர்ப்பாசன வாய்க்காலில் விடப்படுகிறது. வடிகால் கழிவுநீர் நச்சுத்தடைத் தொட்டிகள் (Septic tanks) மூலம் சுத்திகரிப்பு செய்யப்பட்டு தொழிற்சாலை வளாகத்தில் அமைக்கப்பட்டிருக்கும் பரவச் செய்யும் தொட்டிகளில் (Dispersion Trench) விடப்படுகிறது. இந்நிறுவனத்திற்கு தமிழ்நாடு நீர் (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974 மற்றும் காற்று (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981-ன்படி, சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர், நீர் நிலைகளில் வெளியேற்றிட தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள அளவுக்குள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் 31-3-1993 முடிய வாரியத்தின் இசைவு வழங்கப்பட்டது. 29-9-1993 அன்று சேகரிக்கப்பட்ட தொழிற்சாலைக் கழிவு நீரின் மாதிரியை பகுப்பாய்வு செய்ததில் மொத்த மிதக்கும் திடப்பொருட்கள் பயோ கெமிக்கல் ஆக்ஸிஜன் டிமாண்ட், கெமிக்கல் ஆக்ஸிஜன் டிமாண்ட் ஆகியன முறையே வாரியம் நிர்ணயித்துள்ள 100 மிகி / லி. 30 மிகி/லி. மற்றும் 250 மிகி/லி. அளவிற்கு எதிராக, முறையே 236 மிகி/லி. 86 மி.கி./லி. மற்றும் 487 மிகி. / லி. உள்ளதாக அறியப்பட்டது. வாரியத் தர நிர்ணயங்களுக்கேற்ப, தொழிற்சாலைக் கழிவுநீரைச் சுத்திகரிக்க, கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையச் செயல்பாட்டை மேம்படுத்த தொழிற்சாலை அறிவுறுத்தப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை வாரியத்தால் முனைப்பாகக் கண்காணிக்கப்படுகிறது.

[திரு. சு. முத்துசாமி] [1993 அக்டோபர் 29

திருவாளர்கள இ.ஐ.டி. பாரி (இந்தியா) நிறுவனம் புகளூர் சர்க்கரை ஆலை) திருச்சி மாவட்டம், கரூர் தாலுக்கா, புஞ்சைப் புகளூர் கிராமத்தில் அமைந்துள்ளது. இந்நிறுவனம் கீழ்க்கண்டவற்றைத் தயாரிக்கிறது.

வெண் சர்க்கரை .. 8,000 டன் / மாதம்

உப பொருட்கள் :

1. கரும்பு சக்கை .. 25,000 டன் / மாதம்
2. ஃபில்டர் கேச் (கழிவு சேறு) 2,700 டன் / மாதம்
3. கடிவுபாகு 4,000 டன் / மாதம்

இத்தொழிற்சாலையிலிருந்து நாளொன்றுக்கு 175 கி. லி. தொழிற்சாலைக் கழிவு நீரும், 75 கி. லி. வடிகால் கழிவு நீரும் வெளியேற்றப்படுகிறது. வடிகால் கழிவு நீர் நச்சுத்தடைத் தொட்டிகள் மூலம் (Septic tanks) சுத்திகரிப்பு செய்யப்பட்டு தொழிற்சாலை வளாகத்தில் அமைக்கப்பட்டிருக்கும் பரவச் செய்யும் தொட்டிகளில் (Dispersion Trench) விடப்படுகிறது.

தொழிற்சாலைக் கழிவு நீர் எண்ணெய் தடுப்பு மற்றும் படிய வைக்கும் தொட்டி. காற்றேற்றும் தொட்டி, தெளியவைப்பான மற்றும் சேறு உலர்த்தும் படுகைகளை கொண்டுள்ள சுத்திகரிப்பு நிறுலயத்தின் மூலமாக சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. தொழிற்சாலைக் கழிவுநீர், சுத்திகரிப்பு செய்யப்பட்டு 7.65 ஹெக்டேர் பரப்புள்ள தொழிற்சாலையின் நிலத்தில், பாசனத்திற்குப் பயன்படுத்த விடப்படுகிறது. இந்த தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு 29,000 கி.லி. குளிரூட்டப் பயன்படும் நீரை புகளூர் வாய்க்காலில் வெளியேற்றுகின்றது. கொதி கலனிலிருந்து வெளியேறும் சாம்பலும் இதனுடன் வெளியேற்றப்படுகின்றது. முன்னதாக இந்த தொழிற்சாலை திருவாளர்கள் டெக்கான் சுகர்ஸ் நிறுவனத்தால் நடத்தப்பட்டது. இதன் நிர்வாகம் 13–11–1992-லிருந்து திருவாளர்கள இ.ஐ.டி. பாரி (இந்தியா) லிமிடெட் நிறுவனத்தால் எடுக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றது. திருவாளர்கள் டெக்கான் சுகர்ஸ் நிறுவனம் நீர் மற்றும் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டங்களின் கீழ் வாரியத்தின் இசைவு பெற்றிருந்தது. அந்த இசைவு ஆணை கடந்த 31–3–1993 உடன் காலாவதி ஆகிவிட்டது. திருவாளர்கள இ.ஐ.டி. பாரி லிமிடெட் (இந்தியா) நிறுவனம் நீர் மற்றும் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டங்களின் கீழ் வாரியத்தின் இசைவைக் கோரி விண்ணப்பம் செய்துள்ளது. அந்நிறுவனத்திற்கு இசைவு வழங்குவது

1993 அக்டோபர் 29] [திரு. சு. முத்துசாமி]

வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. இந்தத் தொழிற்சாலை ஏப்ரல் 1993-லிருந்து பணி இல்லாத காரணத்தால் இயங்க வில்லை. இந்நிறுவனத்தின் சுத்திகரிக்கப்பட்ட தொழிற்சாலைக் கழிவு நீரை பகுப்பாய்வு செய்ததில் பயோ கெமிக்கல் ஆக்ஸ்ஸிஜன் டிமாண்ட் மற்றும் கெமிக்கல் ஆக்ஸிஜன் டிமாண்ட், வாரியம் நிர்ணயித்துள்ள அளவான 30 மி.கி. / லி. 250 மி. கி. / லி. அளவிற்கு எதிராக 62 மி.கி. / லி., 292 மி.கி. / லி. இருப்பதாக அறியப்பட்டது. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை மேம் படுத்த மேலும் ஒரு காற்றிலி நீர்த் தொட்டி, காற்றேற்றும் தொட்டி, பொறியியல் எண்ணெய் பிரிவு சாதனம் ஆகிய வற்றை அமைக்க இந்நிறுவனம் திட்ட முறைகளை வாரியத் திற்கு சமர்ப்பித்துள்ளது. இதனை 31-12-1993-க்குள் கட்டி முடிப்பதாக இந்நிறுவனம் உறுதி செய்துள்ளது. கொதிகலன் களில் இருந்து வரும் சாம்பலை புகளூர் வாய்க்காலில் வெளி யேற்றாமல் இருக்கும்படி தொழிற்சாலைக் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது. வாரியம் நிர்ணயித்துள்ள அளவுகளுக்கு ஏற்ப தொழிற்சாலைக் கழிவு நீரை சுத்திகரிப்பு செய்ய, கழிவு நீர் சுத்திகரிப்பு நிலயைத்தின் செயல் திறனை மேம்படுத்துமாறு தொழிற்சாலை அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கரூரிலும் அதனைச் சுற்றிலும் 334 சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் உள்ளன. இந்தத் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் தொழிற்சாலைக் கழிவு நீர் தற்சமயம் சுத்திகரிப்புச் செய்யப்படாமல் வெளியேற்றப்படுகின்றது. இவை சிறு தொழிற்சாலைகள் ஆகும். போதிய அளவு இடமில்லாத காரணம் மற்றும் அதிகச் செலவு ஆகியவற்றால் தொழிற்சாலை கள் தனித்தனியாக கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க இயலாமையை வாரியத்திற்கு எடுத்துரைத்தனர். பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும்படி இத்தொழிற் சாலைகளை வாரியம் அறிவுறுத்தி உள்ளது. அதற்காக கூட்டு நிறுவனம் அமைக்கும்படி தொழிற்சாலைகள் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளன. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது, செயல் முறை, மற்றும் அதன் பராமரிப்பு போன்றவைகள் இந் நிறுவனத்தின் பொறுப்பாகும். இந்தப் பகுதிகளில் உள்ள சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் ஏழு மண்டலங் களாக பிரிக்கப்பட்டு கீழ்க்கண்ட ஐந்து பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1. கரூர் ஆண்டான் கோவில் பொலுசன் கண்ட்ரோல் கம்பெனி லிமிடெட்.

2. கரூர் தாலுக்கா டையிங் அண்டு பிளிச்சிங் எப்லுயிண்ட் ட்ரீட்மெண்ட் பிளாண்ட் கம்பெனி லிமிடெட்.

3. கரூர் — வாஞ்சி டையிங் என்விரோ டெக் லிமிடெட்.

[திரு. சு. முத்துசாமி] [1993 அக்டோபர் 29

4. கரூர் திருவை டையிங் என்விரோ லிமிடெட்.

5. கரூர் சுக்காலியூர் டையிங் ஆண்டு பிளிச்சிங் எப்லுயுண்ட் ட்ரீட்மெண்ட் பிளான்ட் கம்பெனி லிமிடெட்.

மேலும் டி. செல்லப்பாண்டி பாளையம் பகுதியில் உள்ள சாயம் மற்றும் சலவைத் தொழிற்சாலைகள் தங்கள் பகுதியில் பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ஒரு கம்பெனி ஏற் படுத்தவேண்டும். மண்டலம் 1, 2 மற்றும் 3-க்கு பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான திட்ட அறிக்கை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மற்றும் நாகபுரியில் உள்ள தேசிய சுற்றுச் சூழல் பொறியியல் ஆராய்ச்சிக் கழகம் ஆகிய வற்றால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மற்ற மண்டலங் களுக்கான திட்ட அறிக்கையை தயாரிக்கும் பணி நடைமுறையில் உள்ளது. இதுவரை தொழிற்சாலைகள் ரூபாய் 89.15 லட்சங்கள் பங்குத் தொகையாக கம்பெனிக்குச் செலுத்தியுள்ளன. தமிழக அரசு ரூபாய் 21.14 இலட்சத்தை இத்திட்டத்திற்கு மானியமாக அளித்துள்ளது. மத்திய அரசும் இத்திட்டத்திற் காக மானியமாக ரூபாய் 21.14 இலட்சத்தை அளித்துள்ளது. பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பில் சேராத மற்றும் பங்குத் தொகை கட்டாத தொழிற்சாலைகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டு செயல்படுத்தப் படும்போது சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகளின் கழிவு நீரால் கரூரில் ஏற்படும் மாசுப் பிரச்சினை கட்டுப்படுத்தப்படும். மேலும், சாயம் மற்றும் சலவைத்தொழிற்சாலைகளிலிருந்து வெளி யேற்றப்படும் கழிவு நீர் ஆற்றில் விடப்படுவதையும் நிறுத்தப் படும்.

2. அறிக்கை

திருப்பூரில் 668 சாயம் மற்றும் சலவைத் தொழிற்சாலைகள் உள்ளன. தற்பொழுது, இததொழிற்சாலைகளிலிருந்து வெளி யேறும் தொழிற்சாலைக் கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யப்படா மலேயே வெளியேற்றப்பட்டு நொய்யல் ஓரத்தப்பாளையம் நீர்த் தேக்கத்தை அடைகிறது. இந்நீர்த் தேக்கம், பெரியார் மாவட்டத்தில் நீரோட்டத்துடன் அமைந்துள்ள பாசன நிலங் களில் தேவைகளை பூர்த்தி செய்ய சிறிய அணைக்கட்டாகக் கட்டப்பட்டுள்ளது. மழைக்காலத்தில் இவ்வாற்றில் தண்ணீர் பாய்கிறது. திருப்பூர் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் சுத்திகரிக்கப்படாத தொழிற்சாலைக் கழிவுநீர் பாய்வதைத்தவிர எப்போதும் வறட்சியாகவே உள்ளது. நொய்யல் ஓரத்தப்பாளை யம் நீர்த் தேக்கத்திலிருந்து ஓரத்தப்பாளையம் கிராமம் 100 மீ. தொலைவில் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் மக்கள் தொகை 400 ஆகும். இக்கிராமத்தில் 3 கிணறுகள் உள்ளன. இக்கிணறு

களின் நீர் முன்பு குடிநீராகப் பயன்படுத்தப்பட்டதாகவும் ஆனால் கடந்த இரண்டு வருடங்களாக, நொய்யல், ஒரத்தப்பாளையம் நீர்த்தேக்கத்திலிருந்து ஊடுருவும் நீரினால் இக்கிணறுகளின் நீர் உவர்ப்புத் தன்மை அடைந்ததாகக் கருதப்படுவதால் இந்நீரை குடிப்பதற்குப் பயன்படுத்துவதில்லை என இக்கிராம மக்கள் தெரிவித்தனர். விவசாயத்திற்கு இக்கிணறுகளின் நீரையோ, நீர்த்தேக்க நீரையோ பயன்படுத்தினால், மிகக் குறைந்த அளவு மகசூலே கிடைப்பதாகவும் தெரிவித்தனர்.

நொய்யல்—ஒரத்தப் பாளையம் நீர்த்தேக்க நீரின் மாதிரி சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்ட அறிக்கையிலிருந்து, நீர்ப்பாசனம் மற்றும் குடிநீர் உபயோகத்திற்கு உரிய தர நிர்ணயமான முறையே 600 மி. கி/லி. மற்றும் 250 மி. கி/லி-க்கு எதிராக 2240 மி.கி/லி. குளோரைடைக் கொண்டிருப்பது தெரிய வந்தது. திருப்பூரிலுள்ள சாயம் மற்றும் சலவைத் தொழிற் சாலைகள் சிறிய அளவிலான தொழிற்சாலைகளாகும். தனியாக சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு நிலம் இல்லாததாலும், இதற்கு அதிக அளவில் பணம் தேவைப்படுவதாலும் இத்தொழிற் சாலைகள் அவர்களது இயலாமையைத் தெரிவித்தனர். இத் தொழிற்சாலைகளுக்கு, பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்க லாம் என தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஆலோசனை அளித்துள்ளது. இத்தகைய பொது சுத்திகரிப்பு நிலையத்தை ஏற்படுத்தி அவற்றை இயக்கித் தகுந்த முறையில் நிர்வகிக்க தனி நிறுவனங்களை ஏற்படுத்துமாறு இத்தொழிற்சாலைகள் கோரப்பட்டுள்ளன. இப்பகுதியில் அமைந்துள்ள சாயம் மற்றும் சலவைத் தொழிற்சாலைகள், மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப் பட்டு திருப்பூர் தொழிற்சாலைக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய லிமிடெட் என்ற பெயரில் ஒரு கம்பெனி அமைக்கப்பட்டுள்ளது. மண்டலம் 1 (Zone I)க்கான திட்டக் கருத்துரு தயாரிக்கப் பட்டு நாக்பூர் தேசிய சுற்றுப்புற பொறியியல் ஆராய்ச்சிக் கழகம் (NEERI) மற்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. ஏனைய மண்டலங்களுக்கான திட்டக் கருத்துக்கள் தயாரிப்பு நிலையில் உள்ளன. தற்பொழுது சுத்திகரிப்பு நிலையத்தினை அமைப்பதற்கான பொருளாதாரத் திட்டம் (Pattern of financing) பின்வருமாறு.—

1. தொழிற்சாலைகளின் பங்கு மூலதனம்	தொழிற்சாலைக் கழிவு நீர் நிலையத்தை அமைப்பதற்கான மொத்த முதலீட்டில் **20 சதவிகிதம்.**

2. மத்திய அரசின் உதவித் தொகை	தொழிற்சாலைக் கழிவு நீர் நிலையத்தை அமைப்பதற்கான மொத்த முதலீட்டில் 25 சதவிகிதம் ரூ. 50 லட்சத்திற்கு மிகாமல்.
3. மாநில அரசின் உதவித் தொகை	தொழிற்சாலைக் கழிவு நீர் நிலையத்தை அமைப்பதற்கான மொத்த முதலீட்டில் 25 சதவிகிதம் ரூ. 50 லட்சத்திற்கு மிகாமல்.
4. நிதி நிறுவனங்களிலிருந்து கடனாக	தொழிற்சாலைக் கழிவு நீர் நிலையத்தை அமைப்பதற்கான மொத்த முதலீட்டில் 30 சதவிகிதம்.

இதுவரையில், தொழிற்சாலைகளிலிருந்து ரூ. 94.44 லட்சம், பங்கு மூலதனமாக இந்நிறுவனத்திற்குப் பெறப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு, இந்திய அரசும், தமிழக அரசும் தனித்தனியாக ரூ. 37.5 லட்சம் உதவித் தொகையாக விடுவித்துள்ளது. பொதுக்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தைக் கட்டுவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள், இந்திய தொழில் நுட்பக் கழகத்தால் பரிசீலிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பணி தொடங்குவதற்கான ஆணை, நிறுவனத்தால் பிறப்பிக்கப்பட வேண்டும். இப்பொது தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டு இயங்க ஆரம்பிக்கும்பொழுது நொய்யல், ஒரத்தப்பாளையம் நீர்த் தேக்கம், சாயம் மற்றும் சலவைத் தொழிற்சாலைகளினால் வெளியிடப்படும் தொழிற்சாலைக் கழிவுநீரினால் மாசுபடுவது கட்டுப்படுத்தப்படும். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் இச்சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் முன்னேற்றத்தை முனைப்புடன் கண்காணித்து வருகிறது.

அரசு ஆணை (நிலை) எண் 213, சுற்றுப்புறம்-வனம் (சு1) துறை, நாள் 30—3—1989-ன்படி தமிழ்நாட்டிலுள்ள நீர் நிலைகளுக்கு அருகில் ஒரு கிலோ மீட்டர் தூர வட்டாரங்களில் கடுமையாக மாசுபடுத்தக்கூடிய தொழிற்சாலைகள் (Highly polluting Industries) நிறுவ தடை உள்ளது.

ஆனால், சிறு தொழிற்சாலைகளின் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு, சிறு தொழிற்சாலைகளின் உரிமையாளர்களின் கோரிக்கையை ஏற்று கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் மேற் சொன்ன ஆணையில் உள்ள தடையை அரசு தவிர்த்து தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் இசைவு வழங்க ஆணையிட்டு வருகிறது.

(1) ஒரு தொழில் நிறுவனம் அங்கு அமையவிருக்கும் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் உறுப்பினராகி அதன் பங்குத் தொகையை செலுத்த வேண்டும்.

(2) பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் கட்டி முடிக்கும்படி சம்பந்தப் பட்ட கம்பெனியை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் கேட்டுக்கொள்ள வேண்டும். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நிர்ணயம் செய்துள்ள காலவரையறையை அக்கம்பெனி ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(3) பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் செயல்படும் வரை தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவுநீரை அந்தந்த தொழிற்சாலைகளே கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை உள்ளடக்கி செயல்பட வேண்டும்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகளூர் காகித ஆலை மற்றும் சர்க்கரை ஆலையிலிருந்து வெளி வருகிற கழிவுநீரைப் பயன்படுத்துவதற் காக என்னுடைய தொகுதியில் உள்ள குன்னம்சத்திரம் கிராம விவசாயப் பெருங்குடி மக்களும், கரூர் தொகுதி விவசாயப் பெருங்குடி மக்களும் இப்போது நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள். ஆனால் அந்தக் கழிவுநீர் விவசாயத்திற்குப் போதுமானதாக இருக்காது. குடிநீரும் கெட்டு விடுகிறது. விளைநிலங்களில் எல்லாம் அதிகமாக விளைச்சல் இல்லாமல் போய்விடும். இதன் காரணமாக அங்கே பொது சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு உடனடியாக அரசு ஆவன செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன். அதேபோன்று திருப்பூர் சாயத் தொழிற்சாலையினுடைய கழிவுநீர் நொய்யலாற்றில் கலந்து அங்கே என்னுடைய தொகுதியில் கட்டப்பட்டுள்ள ஆத்துப்பாளையம் மற்றும் பெரியார் மாவட்டத்தில் உள்ள ஓரத்துப்பாளையம் ஆகிய கிராமங்களில் அணை கட்டப்பட்டிருக் கிறது. இந்த அணைகள் முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டு தற்போது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி பொற்கால ஆட்சியில் திறக்கப்பட்டுள்ளன. அந்தக் கழிவு நீர் அங்கே வந்து சேர்கிறது. மழைக் காலங்களில் கழிவு நீர் அடித்துச் செல்லப்படுகிறது. இருந்தாலும் மழை இல்லாத

காலங்களில் அங்கே கழிவுநீர் மட்டும் வருவதன் காரணத்தால் விவசாயத்திற்கு பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது. மேலும் மக்களின் குடி நீருக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக அங்கே ஒரு பொது சுத்திகரிப்பு நிலையம் உடனடியாக அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகளூரில் இருக்கிற காகித ஆலை, சர்க்கரை ஆலை ஆகிய இந்த இரண்டிலும் இருந்து வருகிற கழிவுநீர் அங்கே பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பது உண்மை. எனவே பொதுவான சுத்திகரிப்பு நிலையம் என்றல்ல. அந்தந்தத் தொழிற்சாலைகளிலே தனிப்பட்ட முறையிலே சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டு அது அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதிலிருந்து வெளிவருகிற கழிவு நீர் நாம் குறிப்பிட்ட அளவுக்கு அதிகமாக அசுத்தமாக இருக்கிற காரணத்தால், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் என்ன நிர்ணயம் வைத்திருக்கிறதோ, அந்த நிர்ணயத்திற்கு உள்ளே இல்லாமல் இருக்கிற காரணத்தால்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பிரச்சினை வருகிறது. எனவே அதை அந்த தரத்திற்குள்ளே கொண்டுவர வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்கிறபோது அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

அதோடு மட்டுமல்லாமல் கரூரில் இருக்கிற 334 சாயத் தொழிற்சாலைகளையும் ஒன்றாகச் சேர்த்து ஒரு பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்க இப்போது ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது.

திருப்பூரைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு 3 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அந்த மூன்று பகுதிகளிலும் சுத்திகரிப்பு நிலையங்கள் தனித்தனியாக அமைக்கப்பட வேண்டும் என்று சொல்லி நடவடிக்கை எடுக்கப்பட்டு ஏறத்தாழ அந்த ஒரு அமைப்பு இப்போது துவங்கும் தருவாயில் இருக்கிறது. மற்ற இரண்டு அமைப்புகளும் விரைவாகத் துவங்கப்பட வேண்டும் என்பதற்காக மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் வேகமான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

(ஐ) சிதம்பரம் தொகுதியில் பொதுப்பணித் துறை வேலைகள் தாமதமாவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் ச. அழகிரி மற்றும் எஸ். பீட்டர் அல்போன்ஸ் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ச. அழகிரி.

காலங்களில் அங்கே கழிவுநீர் மட்டும் வருவதன் காரணத்தால் விவசாயத்திற்கு பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது. மேலும் மக்களின் குடி நீருக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக அங்கே ஒரு பொது சுத்திகரிப்பு நிலையம் உடனடியாக அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகளூரில் இருக்கிற காகித ஆலை, சர்க்கரை ஆலை ஆகிய இந்த இரண்டிலும் இருந்து வருகிற கழிவுநீர் அங்கே பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பது உண்மை. எனவே பொதுவான சுத்திகரிப்பு நிலையம் என்றல்ல. அந்தந்தத் தொழிற்சாலைகளிலே தனிப்பட்ட முறையிலே சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டு அது அமைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் அதிலிருந்து வெளிவருகிற கழிவு நீர் நாம் குறிப்பிட்ட அளவுக்கு அதிகமாக அசுத்தமாக இருக்கிற காரணத்தால், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் என்ன நிர்ணயம் வைத்திருக்கிறதோ, அந்த நிர்ணயத்திற்கு உள்ளே இல்லாமல் இருக்கிற காரணத்தால்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பிரச்சினை வருகிறது. எனவே அதை அந்த தரத்திற்குள்ளே கொண்டுவர வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்கிறபோது அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

அதோடு மட்டுமல்லாமல் கரூரில் இருக்கிற 334 சாயத் தொழிற்சாலைகளையும் ஒன்றாகச் சேர்த்து ஒரு பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்க இப்போது ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது.

திருப்பூரைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு 3 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அந்த மூன்று பகுதிகளிலும் சுத்திகரிப்பு நிலையங்கள் தனித்தனியாக அமைக்கப்பட வேண்டும் என்று சொல்லி நடவடிக்கை எடுக்கப்பட்டு ஏறத்தாழ அந்த ஒரு அமைப்பு இப்போது துவங்கும் தருவாயில் இருக்கிறது. மற்ற இரண்டு அமைப்புகளும் விரைவாகத் துவங்கப்பட வேண்டும் என்பதற்காக மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் வேகமான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

(ஐ) சிதம்பரம் தொகுதியில் பொதுப்பணித் துறை வேலைகள் தாமதமாவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் ச. அழகிரி மற்றும் எஸ். பீட்டர் அல்போன்ஸ் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ச. அழகிரி.

1993 அக்டோபர் 29]

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், சிதம்பரம் தொகுதியில் பொதுப்பணித் துறை வேலைகள் நடைபெறாமல் தேங்கிக் கிடப்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது :

அறிக்கை.

சிதம்பரம் கோட்டத்துக்கு பொதுப் பணித்துறை பணிகளுக்கு 1993-94 ஆம் ஆண்டிற்கு ரூ. 189.14 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறை வேலைகளில் 50 சதவீதம் முடிக்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. சாக்காங்குடி அருகே வெள்ளாற்றில் கிராயின்கள் கட்டும் பணி மாதிரி ஆய்வுகள் (model studies) நடத்தப்பட்ட பிறகு செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது தவிர செப்டம்பர் 1993 முடிய கிடைக்கப்பெற்ற கடன் சான்று (எல்.ஓ.சி.) கொண்டு மற்ற பணிகள் சுமார் 50 சதவீதம் முடிக்கப்பட்டன. நிதி ஒதுக்கீடுகளுக்கு ஏற்ப எல்லாப் பணிகளும் முடிக்கப்படுகின்றன.

விவரங்கள் :

அமைப்பு/வேலையின் பெயர்.	1993-94-க்கு ஒதுக்கீடு.	இதுவரை செலவினம்.
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சங்களில்.)	
பொதுப்பணித் துறை/பாசனம் :		
1. சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு பாசன அமைப்பு.	7	3.5
2. கொள்ளிடம் கீழணை அணைக்கட்டு பாசன அமைப்பு.	47	23.5
3. ஏ.பி. மைனர் (பராமரிப்பு மற்றும் மராமத்து).	8	4

4. 3056. உள்நாட்டு நீர் போக்கு வரத்து கொள்ளிடம் (பராமரிப்பு மற்றும் மராமத்து).	19.92	4
5 அடிக்கமலை கிராயின்கள் ..	5.47	1.00
6. சுய தன்னிறைவு திட்டம் ..	59.75	24.51
7. சாக்காங்குடி கிராயின்கள்	31.00	மாதிரி ஆராய்வுகள் அறிக்கை கிடைத்ததும் மதிப்பீட்டுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

பொதுப்பணித் துறை/கட்டிடம் :

1. பராமரிப்பும் மராமத்தும் ..	11.00	1.00
மொத்தம் ..	189.14	61.51

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்துள்ள விவர அறிக்கையில் 7 வேலைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிலே ஒரு வேலை மட்டும்தான் என்னுடைய தொகுதியிலே நடைபெறுகிற வேலை. மற்ற வேலைகள் எல்லாம் சிதம்பரம் கோட்டம் என்று பெயரிடப்பட்டு புவனகிரியிலும், கும்பகோணத்திலும், அணைக்கரையிலும் மற்றும் பிற இடங்களிலும் நடைபெறுகிற வேலையாகும். அந்த 7-வது வேலை கூட அதாவது சாத்தான் குடியில் நடைபெறுகிற வேலைகூட இன்னும் ஆரம்பிக்கப்பட வில்லை என்பதை மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மேலும் நெடுஞ்சாலைத் துறையை பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியிலே ஸ்ரீ ஆதிவராக நல்லூர் நெடுஞ்சாலைத் துறை பத்து லட்சம் ரூபாய்க்கு, அதற்கான வேலை வந்தது. ஆனால் அந்த வேலைக்கான செட்யூல்களை சென்று கேட்டபோது, அதிகாரிகள் தர மறுத்து விட்டார்கள். அதன் பிறகு நானே நேரடியாகச் சென்று அந்த வேலைக்கான ஒப்பந்தப் படிவங்களைக் கேட்டேன்.

பிற்பகல் 12-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

1993 அக்டோபர் 29] [திரு. எஸ். கண்ணப்பன்]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்பிலே பொதுப்பணித் துறை வேலை என்றுதான் கேட்டிருக்கிறார். நெடுஞ்சாலைத் துறையை பற்றிச் சொல்லவில்லை. இருந்தாலும் நெடுஞ்சாலைத் துறையைப் பற்றிக் கேட்டாலும் கூட நெடுஞ்சாலைத் துறையிலே வேலைகள் நடைபெறவில்லை என்ற விவரத்தை இவர் கேட்கலாம். ஷெட்யூல் கொடுக்கவில்லை என்று சொன்னால் அதற்கு ஒரு தனியான கவன ஈர்ப்பை இது சம்பந்தமாக குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆகவேதான் ஏற்கனவே அது சம்பந்தமாக என்ன நடந்தது, எப்படி, அது கொடுத்தார்களா, இவர்கள் கேட்டார்களா? அதனுடைய விவரம் என்ன என்று அதிகாரிகளிடத்திலே கேட்டு நான் பதில் வாங்க முடியும். ஆகவே இல்லாத பிரச்சினையை அவர் சொல்வதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? ஆகவே வேலைகள் சம்பந்தமாக இன்னின்ன பணிகள் இங்கே தடைபட்டுக் கொண்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் முடிக்க வேண்டும் என்று கேட்டால் அரசு நடவடிக்கை எடுக்கும். இது சம்பந்தமாக தனி கவன ஈர்ப்பு கொண்டுவந்தால், அதில் கேட்டால் அது சம்பந்தமான விவரங்களை இந்த அவையிலே நான் விளக்கமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்ததிலே டைப் செய்யப்பட்டதில் பொதுப்பணித் துறை என்று இருக்கிறது. அதில் மேலாக எழுதி இருப்பதில், நெடுஞ்சாலைத் துறையையும் சேர்த்து எழுதியிருக்கிறது. ஆகவே துறையினர் பொதுப்பணித் துறை என்று அனுப்பியிருக்கிறார்கள்.

திரு. ச. அழகிரி : நான் உங்களிடம் கொடுக்கிறபோது நெடுஞ்சாலைத் துறை என்றுதான்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. அதிலே மேலே எழுதப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சின்ன விளக்கம். நெடுஞ்சாலைத் துறை வேலைகளைப் பற்றி அவர் கேட்பதில் எனக்கு ஆட்சேபனையில்லை. இன்னின்ன வேலைகள் வந்திருக்கின்றன. இந்தப் பணிகள் இந்த அளவுக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சில வேலைகள் இன்னும் நடைபெறவில்லை என்றால் அதிகாரிகளிடத்திலே நான் சொல்லலாம். இந்த வேலைகளை முடிக்கச் சொல்லுங்கள். இன்னும் புதிய வேலைகள் எடுங்கள் என்று கேட்பதில் எனக்கு ஆட்சேபனையில்லை. ஆனால் இந்த ஷெட்யூல் கொடுக்கின்ற விவரங்கள் தமிழ்நாடு முழுக்கவும் டெண்டர் வேலை நடைபெறுகிறது. எந்த ஊரிலே கொடுக்கவில்லை. எந்த ஊரிலே அதிகாரிகள் கொடுக்கவில்லை என்ற பிரச்சினை வருகிறபோது, அது சம்பந்தமாக விவரமாக முன்னாலே தெரி

வித்து இருந்தால், அந்த கோட்ட பொறியாளரிடமோ, சம்பந்தப் பட்ட அதிகாரிகளிடத்திலோ விவரங்களைக் கேட்டு அவருக்குச் சரியான தகவலை அளிக்கமுடியும். இப்படி கேட்கிறபோது நான் மேலெழுந்தவாரியாகத்தான் சொல்ல முடியுமே தவிர, முழு விவரத்தை அளிக்க முடியாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். அவருக்கு முழு விவரம் தெரியவேண்டும் என்பதுதான் நோக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதனாலே கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குறிப்பிலே நான் நெடுஞ்சாலைத் துறையைச் சேர்த்துதான் கொடுத்திருக்கிறேன். அது ஏதோ தவறுதல் காரணமாக பொதுப்பணித் துறை மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிவிக்கப்பட்ட வேலை, அந்த வேலையைச் செய்யவேண்டும் என்பதற்காக மாவட்டத்திலே சென்று ஷெட்யூல் கேட்டபோது அவர்கள் தர மறுக்கிறார்கள். நானும் சொன்னேன். அமைச்சர் அவர்கள் எனக்கும் வேண்டியவர்தான் என்று நான் சொன்னேன். அவர்கள் சொல்கிறார்கள், அதை அவர் அல்லவா சொல்ல வேண்டும். நீங்கள் சொன்னால் எப்படி என்று கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் அமைச்சர் வேண்டியவர்தான். தமிழ்நாட்டிலே இருக்கின்ற மக்கள் அத்தனை பேருக்கும் அமைச்சர் பொதுவானவர்தான்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைக்கான ஷெட்யூலைக்கூட பெறமுடியவில்லை என்று சொன்னால், அந்த நிர்வாகத்திலே எவ்வளவு கோளாறுகள் இருக்கின்றன என்பதற்காக நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைக் குற்றச்சாட்டாகச் சொல்லக்கூடாது.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'கோளாறு' என்ற வார்த்தையை நான் ஆட்சேபிக்கிறேன். ஷெட்யூல் கொடுக்கவில்லை என்று வேண்டுமானாலும் அவர் கேட்கலாம். அதற்கான விளக்கத்தை நான் சொல்லலாம்.

1993 அக்டோபர் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் வாபஸ் வாங்கிக் கொள்கிறார். அதைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறார்.

திரு. ச. அழகிரி : நான் அதைத் திரும்பப் பெற்றுக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாமதத்திற்கு மட்டும் காரணம் கேளுங்கள்.

திரு. ச. அழகிரி : ஷெட்யூல் கொடுத்தால்தான் அந்த வேலையைச் செய்ய முடியும். அதிகாரியை ஒரு சட்டமன்ற உறுப்பினரே கேட்டாலும்கூட அதைக் கொடுப்பதற்கு மறுக் கிறார்கள். சென்ற பொதுப்பணித் துறை மானியத்தின்போது அமைச்சர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். இதைப் போன்ற தவறுகள் இனிமேல் நடக்காது என்று சொன்னார்கள். நான் அதையே குறிப்பிட்டு (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : இனிமேல் நடக்காது என்று சொன்னால் ஏற்கெனவே நடந்ததாக அர்த்தம். (குறுக் கீடு) இனிமேல் அல்ல. இது மாதிரி புகார்கள் வந்தால் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சொன்னேன். அது தகுந்த அதி காரிகளுக்கு அறிவுறுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறேன். இனிமேல் நடக்காது என்று சொல்லவில்லை. அப்படி என்றால், நான் ஏற்கனவே நடந்ததை ஒத்துக்கொண்டதுபோல் அர்த் தம். இனிமேல் என்பதை நான் ஒத்துக்கொள்ளவில்லை. நான் அதை ஆட்சேபிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேள்வியாகக் கேளுங்கள். தாமதம் பற்றிக் கேளுங்கள்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, நான் இப்போது கண்கூடாகவே சொல்கிறேன். நானே போய் கேட்டேன். அவர்கள் தர மறுக்கிறார்கள். இதைவிட உங்களுக்கு என்ன அத்தாட்சி வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அதுதான் நான் சொல்லியிருக் கிறேன். அது சம்பந்தமாக விசாரிக்கிறேன். நீங்கள் அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். நான் என்ன விவரம் என்று கேட்கிறேன். அதற்குத் தனியாக ஒரு கவன ஈர்ப்பு கொண்டு வாருங்கள் அல்லது ஒரு கேள்வியாகக் கேளுங்கள். அதை என்னிடத்திலே தனிப்பட்ட முறையிலே வந்துகூட நீங்கள் சொல்லியிருக்கலாம். இந்த சட்டமன்றத் திலே கேட்க வேண்டும் என்று கூட அவசியம் கிடையாது. பல்

வேறு பிரச்சினைகளை இன்றைக்குத் தனிப்பட்ட முறையிலே வந்து சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்கிறார்கள். எல்லாவற்றுக்குமே சட்டமன்றத்தில் கவன ஈர்ப்புப் போட்டுக்கொண்டிருந்தால், ஒரு நாளைக்கு 250 கவன ஈர்ப்பு போட வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகிரி, நீங்கள் கேள்வியாகக் கேளுங்கள், நேரம் ஆகிறது.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு பதில் சொல்லியிருக்கிறோம். நடவடிக்கை எடுத்து இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒரு குறிப்பிட்ட ஒன்றை மட்டும் சொன்னால் பதில் சொல்ல முடியாது.

திரு. ச. அழகிரி : இந்த அரசாங்கத்தினுடைய செலவிலிருந்து செய்யப்படுகின்ற ஒரு வேலை எங்களுக்கு மறுக்கப்படுகிறபோது, நான் அந்த வேலையைக் கூட கேட்கவில்லை. அதற்கான ஷெட்யூல் கேட்கிறபோது அவர்கள் மறுக்கிறார்கள் என்றால், நிர்வாகம் நடக்கிறதா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாகம் நன்றாகத்தான் நடக்கிறது. நீங்கள் சொல்வதற்காக நிர்வாகம் ஒன்றும் நடக்காமல் இருக்காது. நிர்வாகம் நன்றாகவே நடக்கிறது. வேலை நடக்கிறது, ரோடு போடுகிறார்கள். கட்டடம் கட்டுகிறார்கள். நீங்கள் சொல்வதற்காக இல்லை. நிர்வாகமே நடக்கவில்லை என்று சொல்வதை நான் ஆட்சேபிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பேசும்போது குற்றச்சாட்டு எல்லாம் கூடாது என்று விதி இருக்கிறது. நீங்கள் மேற்கொண்டு ஒரு கேள்வி கேட்கலாம் என்றுதான் அனுமதித்தேன். நீங்கள் குற்றச்சாட்டு எல்லாம் இதிலே சொல்லக்கூடாது என்று விதி இருக்கிறது. (குறுக்கீடு) நீங்கள் விதியை மீறிப் பேசி, நேரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

1993 அக்டோபர் 29]

பிற்பகல் 12.35

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, ஸ்ரீ ஆதிவராகநல்லூர் வேலைக்கு செட்யூல் வழங்குவதற்கு இந்தப் பேரவையின் மூலமாக பேரவைத் தலைவர் அவர்கள் உத்தரவாதம் அளிப்பார்களா எனக் கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக, 20 வேலைகள் நடைபெறாமல் இருக்கின்றன.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை வேலைகளைப் பொறுத்தமட்டிலே அலாட்மென்ட் கொடுக்கும்போது மொத்தமாக ஒரு வேலையைச் செய்ய முடியாது. ஒரு வருடத்திற்கு இவ்வளவு என்றுதான் சொல்கிறார்கள். 3 மாதத்திற்கு ஒரு தடவை என்.ஓ. சி. கொடுக்கிறார்கள். இந்த ஆண்டிற்கு சிதம்பரம் கோட்டத்திற்கு 2 கோடி ரூபாய் என்று வைத்துக் கொண்டால், முதல் 3 மாதத்தில் 50 இலட்சம் ரூபாய்க்கான வேலைகளை எடுப்போம். அடுத்த 3 மாதத்தில் 50 இலட்சம் ரூபாய்க்கான வேலைகள். அப்பொழுதுதான் அரசாங்கத்திலே பணம் வரும். பூரா வேலையையும் செய்ய முடியாது. இப்பொழுது நிதியாண்டின் அரை ஆண்டிலே இருக்கிறோம். இன்னும் டிசம்பர் மாதம் கூட வரவில்லை மார்ச் மாதத்திற்குள்ளே முடிக்க வேண்டும் ஆகவே, பாதி அளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. 50 சதவிகித வேலைகள் முடிக்கப்பட்டிருக்கிறது. அவர் சொன்னார் குற்றச்சாட்டுகளை. வெள்ளத் தடுப்பு அபாயத்திற்கு 1 கோடி ரூபாய் அந்தப் பகுதியிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது, நம்முடைய புரட்சித் தலைவியின் ஆட்சியிலே. இதிலே பாகுபாடு கிடையாது. அவருடைய வேண்டுகோளை ஏற்றுத்தான் இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலே வெள்ளத் தடுப்பு அபாயத்திற்காக ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே, சிதம்பரம் தொகுதியைப் புறக்கணிப்பதாக ஆகாது. எங்கே வேலை நடக்க வேண்டுமென்று அதிகாரிகள் அந்த இடத்திலே ஸ்பாட் இன்ஸ்பெக்சனில் பார்க்கிறார்களோ, அங்கே எடுக்கிறார்கள். சில இடங்களிலே, விடுபட்ட இடங்களிலே சட்டமன்ற உறுப்பினர்கள் எங்களிடத்திலே தெரிவிக்கிறார்கள். நாங்கள் அவர்களுக்கு அறிவுறுத்தி அந்த வேலையையும் எடுக்கச் சொல்கிறோம். அந்த அடிப்படையிலே அவர்களுடைய பகுதியிலே வேலையை எடுக்க வேண்டுமென்று சொன்னால், அதை நான் செய்யத் தயாராக இருக்கிறேன். இந்த செட்யூல் சம்பந்தமான குற்றச்சாட்டுகளை நான் மறுக்கிறேன். அது, இது சம்பந்தப்பட்ட பிரச்சினை அல்ல. ரெஜிஸ்டர்ட் காண்ட்ராக்டர்கள் போய் கேட்கின்றபோது செட்யூல் கொடுக்கிறார்கள். சில பேர் காண்ட்ராக்ட் ரெஜிஸ்ட்ரேசன் இல்லாமல் போய் கேட்டிருப்பார்கள். ஆகவே, அதில் கொடுப்

பதற்கு நியாயம் இல்லை. அந்தப் பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் நான் நடவடிக்கை எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஓ) ராமாநதி அணைக்கட்டின் மண் மேடிட்ட மதகுகளைச் செப்பனிட வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு எங்கள் பகுதியிலே ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் காரணமாக......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிலே இருப்பதை அப்படியே படியுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : கடந்த ஆண்டு எங்கள் பகுதியிலே பெய்த பெரு மழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிலே தென்காசித் தொகுதியில் என்று இருக்கிறதா ?

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : அதுதான் இருக்கிறது. அதைத்தான் நான் சொல்கிறேன். கொண்டு வந்த கவன ஈர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுத்திருக்கிறதைப் படியுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : நான் தென்காசி என்று கொடுக்கவில்லை எங்கள் பகுதி என்று தான் கொடுத்தேன். ஆபீசில் வந்து—அதை எல்லாம் நான் படிக்கவில்லை. தலைவர் அவர்களே, ஒரு சின்ன கரக்சன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவலகத்தில் சிறிது திருத்தியிருப்பார்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : அலுவலகத்தில், நான் சொல்லாதது இருந்தால் எப்படிப் படிப்பது என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியானால் விட்டு விட வேண்டியதுதானே, நான் கேட்கவில்லை என்று நீங்கள் சொல்லலாம்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : இல்லை. இல்லை நான் எழுதாத வார்த்தை அதில் இருந்தால்—நான் என் தொகுதி என்று சொல்லவில்லை, எங்கள் பகுதி என்றுதான் சொல்லி யிருக்கிறேன். இதிலே தென்காசி தொகுதியிலுள்ள ராமாநதி அணை என்று இருக்கிறது. அணை அம்பாசமுத்திரம் தொகுதி யிலே இருக்கிறது. அதன் பாசன பகுதி கொஞ்சம் எங்கள் பகுதியிலே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் 'எங்கள் பகுதியில்' என்று கொடுத்திருக்கிறீர்கள் அல்லவா ?

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : ஆம், எங்கள் பகுதியில் என்றுதான் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை, துறையில் உங்களுடைய தொகுதி என்பதற்காக எடுத்திருக்கலாம்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : எங்கள் பகுதியிலுள்ள "ராமாநதி அணைக்கட்டிலுள்ள மதகினை சரி செய்ய வேண்டியது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத் திற்கு நான் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

அறிக்கை.

1992 நவம்பர் மாத புயல் மழையில் ராமாநதி நீர்த் தேக்கத் தில் உள்ள அவசர கால அடைப்பான் சிக்கி இருந்தாலும், சர்வீஸ் கேட் நல்ல முறையில் இயங்கி வருகிறது. அடைப்பானில் வேண்டிய ஒட்டைகள் செய்து பாசனத்திற்கு அவசர கால போதுமான தண்ணீர் கொடுத்துவரப்படுகிறது. இதனால் பாசனத்திற்கு எந்த தடையும் இல்லை. அவசர கால அடைப்பானையும் பழுதுபார்க்க விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட் டிருக்கின்ற தகவல்கள் சரியான தகவல்கள் அல்ல என்று

நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மதகுகள் கடந்த பெருவெள்ளத்தின் காரணமாக ஏற்பட்ட மணல் மேடு சரிவின் காரணமாக அதனுடைய சட்டங்களிலே சிக்கி, மிகுந்த அளவிலே பொருட் செலவிலே அந்த மணல்மேடு அகற்றப்பட்டாலும் கூட, அந்த மதகுகளைத் தூக்க முடிய வில்லை. எனவே, 1992 நவம்பருக்குப் பிறகு இந்த ராமாநதி அணைக்கட்டுக்கான பாசனத்திலே விவசாயிகளுக்கான விவசாய வேலை நடக்கவில்லை. அது, அந்தத் தொகுதியினுடைய சட்ட மன்ற உறுப்பினர் மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகையா பாண்டியன் அவர்களுக்கும் தெரியும். எனவே, விவசாயிகள் 3 பருவங்களாக விவசாயம் செய்ய முடியாமல் அந்த பருவ நிலங்கள் எல்லாம் தரிசாகக் கிடக்கின்றன. இதிலே என்ன சொல்லியிருக் கிறார்கள் என்று சொன்னால்—மதகுகளில் ஓட்டைப் போடப் பட்டு, அதன் மூலம் தண்ணீர் கொடுக்கப்படுகிறது என்று அதிகாரிகள் தகவல்களை அமைச்சருக்கு தந்திருக்கிறார்கள். நான் சின்ன ஒரு நடைமுறை சாத்தியத்தை சொல்கிறேன். முன்னால் என்ன நடக்கும் என்று சொன்னால் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்தால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அமைச்ச ரோடு தொடர்பு கொள்கிறபோது அதில் சம்பந்தப்பட்ட சட்ட மன்ற உறுப்பினரிடம் பேசுங்கள் என்று சொல்லுவார்கள், எங்க ளிடம் அப்படிப் பேசச் சொல்லியிருந்தால் நான் அது தவறு என்று சொல்லிக் காண்பித்திருப்பேன். எனவே, எனக்கு என்ன வருத்தம் என்று சொன்னால், அந்த மதகு உடனே திறக் கப்பட வேண்டும். அதிலும் அமைச்சர் அவர்கள் ஒரு குறிப் பிட்ட காலக் கெடுவாவது—வெள்ளம் முடிந்து ஓராண்டாகி விட்டது—ஓராண்டுக் காலமாக மதகுகள் திறக்கப்படாமல் இருக்கிறது. இனிமேல் விரைவில் சரி செய்யப்பட வேண்டு மென்ற உறுதியைத்தான் அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார் களேயொழிய அது எப்படி முடியும் என்று திட்டப் பணிகளை வரையறுத்துச் சொல்லக் கூட அமைச்சர் அவர்களால் இயல வில்லை என்று சொன்னால், நான் உண்மையிலேயே வருத்தப் படுகிறேன்.

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேளுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : 3000, 4000 விவசாயக் குடும்பங்கள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றபோது இந்த பிசான பருவத்திற்காவது—மழைக்காலம் ஆரம்பித்து விட்டது, அணை நிறைய தண்ணீர் இருக்கிறது—இந்த ஆண்டா வது விவசாயம் துவங்குவதற்கு அந்த மதகுகளைத் திறக்க மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

காலங்களில் அங்கே கழிவுநீர் மட்டும் வருவதன் காரணத்தால் விவசாயத்திற்கு பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது. மேலும் மக்களின் குடி நீருக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக அங்கே ஒரு பொது சுத்திகரிப்பு நிலையம் உடனடியாக அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகளூரில் இருக்கிற காகித ஆலை, சர்க்கரை ஆலை ஆகிய இந்த இரண்டிலும் இருந்து வருகிற கழிவுநீர் அங்கே பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பது உண்மை. எனவே பொதுவான சுத்திகரிப்பு நிலையம் என்றல்ல. அந்தந்தத் தொழிற்சாலைகளிலே தனிப்பட்ட முறையிலே சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டு அது அமைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் அதிலிருந்து வெளிவருகிற கழிவு நீர் நாம் குறிப்பிட்ட அளவுக்கு அதிகமாக அசுத்தமாக இருக்கிற காரணத்தால், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் என்ன நிர்ணயம் வைத்திருக்கிறதோ, அந்த நிர்ணயத்திற்கு உள்ளே இல்லாமல் இருக்கிற காரணத்தால்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பிரச்சினை வருகிறது. எனவே அதை அந்த தரத்திற்குள்ளே கொண்டுவர வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்கிறபோது அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

அதோடு மட்டுமல்லாமல் கரூரில் இருக்கிற 334 சாயத் தொழிற்சாலைகளையும் ஒன்றாகச் சேர்த்து ஒரு பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்க இப்போது ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது.

திருப்பூரைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு 3 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அந்த மூன்று பகுதிகளிலும் சுத்திகரிப்பு நிலையங்கள் தனித்தனியாக அமைக்கப்பட வேண்டும் என்று சொல்லி நடவடிக்கை எடுக்கப்பட்டு ஏறத்தாழ அந்த ஒரு அமைப்பு இப்போது துவங்கும் தருவாயில் இருக்கிறது. மற்ற இரண்டு அமைப்புகளும் விரைவாகத் துவங்கப்பட வேண்டும் என்பதற்காக மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் வேகமான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

(ஐ) சிதம்பரம் தொகுதியில் பொதுப்பணித் துறை வேலைகள் தாமதமாவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் ச. அழகிரி மற்றும் எஸ். பீட்டர் அல்போன்ஸ் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ச. அழகிரி.

1993 அக்டோபர் 29]

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், சிதம்பரம் தொகுதியில் பொதுப்பணித் துறை வேலைகள் நடைபெறாமல் தேங்கிக் கிடப்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது :

அறிக்கை.

சிதம்பரம் கோட்டத்துக்கு பொதுப் பணித்துறை பணிகளுக்கு 1993-94 ஆம் ஆண்டிற்கு ரூ. 189.14 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறை வேலைகளில் 50 சதவீதம் முடிக்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. சாக்காங்குடி அருகே வெள்ளாற்றில் கிராயின்கள் கட்டும் பணி மாதிரி ஆய்வுகள் (model studies) நடத்தப்பட்ட பிறகு செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது தவிர செப்டம்பர் 1993 முடிய கிடைக்கப்பெற்ற கடன் சான்று (எல்.ஓ.சி.) கொண்டு மற்ற பணிகள் சுமார் 50 சதவீதம் முடிக்கப்பட்டன. நிதி ஒதுக்கீடுகளுக்கு ஏற்ப எல்லாப் பணிகளும் முடிக்கப்படுகின்றன.

விவரங்கள் :

அமைப்பு/வேலையின் பெயர்.	1993-94-க்கு ஒதுக்கீடு.	இதுவரை செலவினம்.
(1)	(2)	(3)
		(ரூபாய் இலட்சங்களில்.)
பொதுப்பணித் துறை/பாசனம் :		
1. சேத்தியாத்தோப்பு அணைக் கட்டு பாசன அமைப்பு.	7	3.5
2. கொள்ளிடம் கீழணை அணைக் கட்டு பாசன அமைப்பு.	47	23.5
3. ஏ.பி. மைனர் (பராமரிப்பு மற்றும் மராமத்து).	8	4

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

4.	3056. உள்நாட்டு நீர் போக்கு வரத்து கொள்ளிடம் (பராமரிப்பு மற்றும் மராமத்து).	19.92	4
5	அடிக்கமலை கிராயின்கள் ..	5.47	1.00
6.	சுய தன்னிறைவு திட்டம் ..	59.75	24.51
7.	சாக்காங்குடி கிராயின்கள்	31.00	மாதிரி ஆராய்வுகள் அறிக்கை கிடைத்ததும் மதிப்பீட்டுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

பொதுப்பணித் துறை/கட்டிடம் :

1.	பராமரிப்பும் மராமத்தும் ..	11.00	1.00
	மொத்தம் ..	189.14	61.51

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்துள்ள விவர அறிக்கையில் 7 வேலைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிலே ஒரு வேலை மட்டும்தான் என்னுடைய தொகுதியிலே நடைபெறுகிற வேலை. மற்ற வேலைகள் எல்லாம் சிதம்பரம் கோட்டம் என்று பெயரிடப்பட்டு புவனகிரியிலும், கும்பகோணத்திலும், அணைக்கரையிலும் மற்றும் பிற இடங்களிலும் நடைபெறுகிற வேலையாகும். அந்த 7-வது வேலை கூட அதாவது சாத்தான் குடியில் நடைபெறுகிற வேலைகூட இன்னும் ஆரம்பிக்கப்பட வில்லை என்பதை மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மேலும் நெடுஞ்சாலைத் துறையை பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியிலே ஸ்ரீ ஆதிவராக நல்லூர் நெடுஞ்சாலைத் துறை பத்து லட்சம் ரூபாய்க்கு, அதற்கான வேலை வந்தது. ஆனால் அந்த வேலைக்கான செட்யூல்களை சென்று கேட்டபோது, அதிகாரிகள் தர மறுத்து விட்டார்கள். அதன் பிறகு நானே நேரடியாகச் சென்று அந்த வேலைக்கான ஒப்பந்தப் படிவங்களைக் கேட்டேன்.

பிற்பகல் 12-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்பிலே பொதுப்பணித் துறை வேலை என்றுதான் கேட்டிருக்கிறார். நெடுஞ்சாலைத் துறையை பற்றிச் சொல்லவில்லை. இருந்தாலும் நெடுஞ்சாலைத் துறையைப் பற்றிக் கேட்டாலும் கூட நெடுஞ்சாலைத் துறையிலே வேலைகள் நடைபெறவில்லை என்ற விவரத்தை இவர் கேட்கலாம். ஷெட்யூல் கொடுக்கவில்லை என்று சொன்னால் அதற்கு ஒரு தனியான கவன ஈர்ப்பை இது சம்பந்தமாக குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆகவேதான் ஏற்கனவே அது சம்பந்தமாக என்ன நடந்தது, எப்படி, அது கொடுத்தார்களா, இவர்கள் கேட்டார்களா? அதனுடைய விவரம் என்ன என்று அதிகாரிகளிடத்திலே கேட்டு நான் பதில் வாங்க முடியும். ஆகவே இல்லாத பிரச்சினையை அவர் சொல்வதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? ஆகவே வேலைகள் சம்பந்தமாக இன்னின்ன பணிகள் இங்கே தடைபட்டுக் கொண்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் முடிக்க வேண்டும் என்று கேட்டால் அரசு நடவடிக்கை எடுக்கும். இது சம்பந்தமாக தனி கவன ஈர்ப்பு கொண்டுவந்தால், அதில் கேட்டால் அது சம்பந்தமான விவரங்களை இந்த அவையிலே நான் விளக்கமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்ததிலே டைப் செய்யப்பட்டதில் பொதுப்பணித் துறை என்று இருக்கிறது. அதில் மேலாக எழுதி இருப்பதில், நெடுஞ்சாலைத் துறையையும் சேர்த்து எழுதியிருக்கிறது. ஆகவே துறையினர் பொதுப் பணித் துறை என்று அனுப்பியிருக்கிறார்கள்.

திரு. ச. அழகிரி : நான் உங்களிடம் கொடுக்கிறபோது நெடுஞ்சாலைத் துறை என்றுதான்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. அதிலே மேலே எழுதப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சின்ன விளக்கம். நெடுஞ்சாலைத் துறை வேலைகளைப் பற்றி அவர் கேட்பதில் எனக்கு ஆட்சேபனையில்லை. இன்னின்ன வேலைகள் வந்திருக்கின்றன. இந்தப் பணிகள் இந்த அளவுக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சில வேலைகள் இன்னும் நடைபெறவில்லை என்றால் அதிகாரிகளிடத்திலே நான் சொல்லலாம். இந்த வேலைகளை முடிக்கச் சொல்லுங்கள். இன்னும் புதிய வேலைகள் எடுங்கள் என்று கேட்பதில் எனக்கு ஆட்சேபனையில்லை. ஆனால் இந்த ஷெட்யூல் கொடுக்கின்ற விவரங்கள் தமிழ்நாடு முழுக்கவும் டெண்டர் வேலை நடைபெறுகிறது. எந்த ஊரிலே கொடுக்கவில்லை. எந்த ஊரிலே அதிகாரிகள் கொடுக்கவில்லை என்ற பிரச்சினை வருகிறபோது, அது சம்பந்தமாக விவரமாக முன்னாலே தெரி

வித்து இருந்தால், அந்த கோட்ட பொறியாளரிடமோ, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலோ விவரங்களைக் கேட்டு அவருக்குச் சரியான தகவலை அளிக்கமுடியும். இப்படி கேட்கிறபோது நான் மேலெழுந்தவாரியாகத்தான் சொல்ல முடியுமே தவிர, முழு விவரத்தை அளிக்க முடியாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். அவருக்கு முழு விவரம் தெரியவேண்டும் என்பதுதான் நோக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதனாலே கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குறிப்பிலே நான் நெடுஞ்சாலைத் துறையைச் சேர்த்துதான் கொடுத்திருக்கிறேன். அது ஏதோ தவறுதல் காரணமாக பொதுப்பணித் துறை மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிவிக்கப்பட்ட வேலை, அந்த வேலையைச் செய்யவேண்டும் என்பதற்காக மாவட்டத்திலே சென்று ஷெட்யூல் கேட்டபோது அவர்கள் தர மறுக்கிறார்கள். நானும் சொன்னேன். அமைச்சர் அவர்கள் எனக்கும் வேண்டியவர்தான் என்று நான் சொன்னேன். அவர்கள் சொல்கிறார்கள், அதை அவர் அல்லவா சொல்ல வேண்டும். நீங்கள் சொன்னால் எப்படி என்று கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் அமைச்சர் வேண்டியவர்தான். தமிழ்நாட்டிலே இருக்கின்ற மக்கள் அத்தனை பேருக்கும் அமைச்சர் பொதுவானவர்தான்.

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைக்கான ஷெட்யூலைக்கூட பெறமுடியவில்லை என்று சொன்னால், அந்த நிர்வாகத்திலே எவ்வளவு கோளாறுகள் இருக்கின்றன என்பதற்காக நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைக் குற்றச்சாட்டாகச் சொல்லக்கூடாது.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'கோளாறு' என்ற வார்த்தையை நான் ஆட்சேபிக்கிறேன். ஷெட்யூல் கொடுக்கவில்லை என்று வேண்டுமானாலும் அவர் கேட்கலாம். அதற்கான விளக்கத்தை நான் சொல்லலாம்.

1993 அக்டோபர் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் வாபஸ் வாங்கிக் கொள்கிறார். அதைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறார்.

திரு. ச. அழகிரி : நான் அதைத் திரும்பப் பெற்றுக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாமதத்திற்கு மட்டும் காரணம் கேளுங்கள்.

திரு. ச. அழகிரி : ஷெட்யூல் கொடுத்தால்தான் அந்த வேலையைச் செய்ய முடியும். அதிகாரியை ஒரு சட்டமன்ற உறுப்பினரே கேட்டாலும்கூட அதைக் கொடுப்பதற்கு மறுக் கிறார்கள். சென்ற பொதுப்பணித் துறை மானியத்தின்போது அமைச்சர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். இதைப் போன்ற தவறுகள் இனிமேல் நடக்காது என்று சொன்னார்கள். நான் அதையே குறிப்பிட்டு (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : இனிமேல் நடக்காது என்று சொன்னால் ஏற்கெனவே நடந்ததாக அர்த்தம். (குறுக் கீடு) இனிமேல் அல்ல. இது மாதிரி புகார்கள் வந்தால் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சொன்னேன். அது தகுந்த அதி காரிகளுக்கு அறிவுறுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறேன். இனிமேல் நடக்காது என்று சொல்லவில்லை. அப்படி என்றால், நான் ஏற்கனவே நடந்ததை ஒத்துக்கொண்டதுபோல் அர்த் தம். இனிமேல் என்பதை நான் ஒத்துக்கொள்ளவில்லை. நான் அதை ஆட்சேபிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேள்வியாகக் கேளுங்கள். தாமதம் பற்றிக் கேளுங்கள்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, நான் இப்போது கண்கூடாகவே சொல்கிறேன். நானே போய் கேட்டேன். அவர்கள் தர மறுக்கிறார்கள். இதைவிட உங்களுக்கு என்ன அத்தாட்சி வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அதுதான் நான் சொல்லியிருக் கிறேன். அது சம்பந்தமாக விசாரிக்கிறேன். நீங்கள் அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். நான் என்ன விவரம் என்று கேட்கிறேன். அதற்குத் தனியாக ஒரு கவன ஈர்ப்பு கொண்டு வாருங்கள் அல்லது ஒரு கேள்வியாகக் கேளுங்கள். அதை என்னிடத்திலே தனிப்பட்ட முறையிலே வந்துகூட நீங்கள் சொல்லியிருக்கலாம். இந்த சட்டமன்றத் திலே கேட்க வேண்டும் என்று கூட அவசியம் கிடையாது. பல்

வேறு பிரச்சினைகளை இன்றைக்குத் தனிப்பட்ட முறையிலே வந்து சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்கிறார்கள். எல்லா வற்றுக்குமே சட்டமன்றத்தில் கவன ஈர்ப்புப் போட்டுக்கொண் டிருந்தால், ஒரு நாளைக்கு 250 கவன ஈர்ப்பு போட வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகிரி, நீங்கள் கேள்வியாகக் கேளுங்கள், நேரம் ஆகிறது.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இதுபோன்று எல்லோரும் சொல்லி யிருக்கிறார்கள். அவர்களுக்கு பதில் சொல்லியிருக்கிறோம். நடவடிக்கை எடுத்து இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒரு குறிப்பிட்ட ஒன்றை மட்டும் சொன்னால் பதில் சொல்ல முடியாது.

திரு. ச. அழகிரி : இந்த அரசாங்கத்தினுடைய செல விலிருந்து செய்யப்படுகின்ற ஒரு வேலை எங்களுக்கு மறுக்கப் படுகிறபோது, நான் அந்த வேலையைக் கூட கேட்கவில்லை. அதற்கான ஷெட்யூல் கேட்கிறபோது அவர்கள் மறுக்கிறார்கள் என்றால், நிர்வாகம் நடக்கிறதா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நிர்வாகம் நன்றாகத்தான் நடக் கிறது. நீங்கள் சொல்வதற்காக நிர்வாகம் ஒன்றும் நடக்காமல் இருக்காது. நிர்வாகம் நன்றாகவே நடக்கிறது. வேலை நடக்கிறது, ரோடு போடுகிறார்கள். கட்டடம் கட்டுகிறார்கள். நீங்கள் சொல்வதற்காக இல்லை. நிர்வாகமே நடக்கவில்லை என்று சொல்வதை நான் ஆட்சேபிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர் மானத்தில் பேசும்போது குற்றச்சாட்டு எல்லாம் கூடாது என்று விதி இருக்கிறது. நீங்கள் மேற்கொண்டு ஒரு கேள்வி கேட்க லாம் என்றுதான் அனுமதித்தேன். நீங்கள் குற்றச்சாட்டு எல்லாம் இதிலே சொல்லக்கூடாது என்று விதி இருக்கிறது. (குறுக்கீடு) நீங்கள் விதியை மீறிப் பேசி, நேரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

1993 அக்டோபர் 29]

பிற்பகல் 12.35

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, ஸ்ரீ ஆதிவராகநல்லூர் வேலைக்கு செட்யூல் வழங்குவதற்கு இந்தப் பேரவையின் மூலமாக பேரவைத் தலைவர் அவர்கள் உத்தரவாதம் அளிப்பார்களா எனக் கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக, 20 வேலைகள் நடைபெறாமல் இருக்கின்றன.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை வேலைகளைப் பொறுத்தமட்டிலே அலாட்மென்ட் கொடுக்கும்போது மொத்தமாக ஒரு வேலையைச் செய்ய முடியாது. ஒரு வருடத்திற்கு இவ்வளவு என்றுதான் சொல்கிறார்கள். 3 மாதத்திற்கு ஒரு தடவை என்.ஓ. சி. கொடுக்கிறார்கள். இந்த ஆண்டிற்கு சிதம்பரம் கோட்டத்திற்கு 2 கோடி ரூபாய் என்று வைத்துக் கொண்டால், முதல் 3 மாதத்தில் 50 இலட்சம் ரூபாய்க்கான வேலைகளை எடுப்போம். அடுத்த 3 மாதத்தில் 50 இலட்சம் ரூபாய்க்கான வேலைகள். அப்பொழுதுதான் அரசாங்கத்திலே பணம் வரும். பூரா வேலையையும் செய்ய முடியாது. இப்பொழுது நிதியாண்டின் அரை ஆண்டிலே இருக்கிறோம். இன்னும் டிசம்பர் மாதம் கூட வரவில்லை மார்ச் மாதத்திற்குள்ளே முடிக்க வேண்டும் ஆகவே, பாதி அளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. 50 சதவிகித வேலைகள் முடிக்கப்பட்டிருக்கிறது. அவர் சொன்னார் குற்றச்சாட்டுகளை. வெள்ளத் தடுப்பு அபாயத்திற்கு 1 கோடி ரூபாய் அந்தப் பகுதியிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது, நம்முடைய புரட்சித் தலைவியின் ஆட்சியிலே. இதிலே பாகுபாடு கிடையாது. அவருடைய வேண்டுகோளை ஏற்றுத்தான் இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலே வெள்ளத் தடுப்பு அபாயத்திற்காக ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே, சிதம்பரம் தொகுதியைப் புறக்கணிப்பதாக ஆகாது. எங்கே வேலை நடக்க வேண்டுமென்று அதிகாரிகள் அந்த இடத்திலே ஸ்பாட் இன்ஸ்பெக்சனில் பார்க்கிறார்களோ, அங்கே எடுக்கிறார்கள். சில இடங்களிலே, விடுபட்ட இடங்களிலே சட்டமன்ற உறுப்பினர்கள் எங்களிடத்திலே தெரிவிக்கிறார்கள். நாங்கள் அவர்களுக்கு அறிவுறுத்தி அந்த வேலையையும் எடுக்கச் சொல்கிறோம். அந்த அடிப்படையிலே அவர்களுடைய பகுதியிலே வேலையை எடுக்க வேண்டுமென்று சொன்னால், அதை நான் செய்யத் தயாராக இருக்கிறேன். இந்த செட்யூல் சம்பந்தமான குற்றச்சாட்டுகளை நான் மறுக்கிறேன். அது, இது சம்பந்தப்பட்ட பிரச்சினை அல்ல. ரெஜிஸ்டர்ட் காண்ட்ராக்டர்கள் போய் கேட்கின்றபோது செட்யூல் கொடுக்கிறார்கள். சில பேர் காண்ட்ராக்ட் ரெஜிஸ்ட்ரேசன் இல்லாமல் போய் கேட்டிருப்பார்கள். ஆகவே, அதில் கொடுப்

பதற்கு நியாயம் இல்லை. அந்தப் பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் நான் நடவடிக்கை எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஒ) ராமாநதி அணைக்கட்டின் மண் மேடிட்ட மதகுகளைச் செப்பனிட வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு எங்கள் பகுதியிலே ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் காரணமாக......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிலே இருப்பதை அப்படியே படியுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : கடந்த ஆண்டு எங்கள் பகுதியிலே பெய்த பெரு மழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிலே தென்காசித் தொகுதியில் என்று இருக்கிறதா ?

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : அதுதான் இருக்கிறது. அதைத்தான் நான் சொல்கிறேன். கொண்டு வந்த கவன ஈர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுத்திருக்கிறதைப் படியுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : நான் தென்காசி என்று கொடுக்கவில்லை எங்கள் பகுதி என்று தான் கொடுத்தேன். ஆபீசில் வந்து—அதை எல்லாம் நான் படிக்கவில்லை. தலைவர் அவர்களே, ஒரு சின்ன கரக்சன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவலகத்தில் சிறிது திருத்தியிருப்பார்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : அலுவலகத்தில், நான் சொல்லாதது இருந்தால் எப்படிப் படிப்பது என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியானால் விட்டு விட வேண்டியதுதானே, நான் கேட்கவில்லை என்று நீங்கள் சொல்லலாம்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : இல்லை. இல்லை நான் எழுதாத வார்த்தை அதில் இருந்தால்—நான் என் தொகுதி என்று சொல்லவில்லை, எங்கள் பகுதி என்றுதான் சொல்லி யிருக்கிறேன். இதிலே தென்காசி தொகுதியிலுள்ள ராமாநதி அணை என்று இருக்கிறது. அணை அம்பாசமுத்திரம் தொகுதி யிலே இருக்கிறது. அதன் பாசன பகுதி கொஞ்சம் எங்கள் பகுதியிலே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் 'எங்கள் பகுதியில்' என்று கொடுத்திருக்கிறீர்கள் அல்லவா ?

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : ஆம், எங்கள் பகுதியில் என்றுதான் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை, துறையில் உங்களுடைய தொகுதி என்பதற்காக எடுத்திருக்கலாம்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : எங்கள் பகுதியிலுள்ள ''ராமாநதி அணைக்கட்டிலுள்ள மதகினை சரி செய்ய வேண்டியது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத் திற்கு நான் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

அறிக்கை.

1992 நவம்பர் மாத புயல் மழையில் ராமாநதி நீர்த் தேக்கத் தில் உள்ள அவசர கால அடைப்பான் சிக்கி இருந்தாலும், சர்வீஸ் கேட் நல்ல முறையில் இயங்கி வருகிறது. அடைப்பானில் வேண்டிய ஒட்டைகள் செய்து பாசனத்திற்கு அவசர கால போதுமான தண்ணீர் கொடுத்துவரப்படுகிறது. இதனால் பாசனத்திற்கு எந்த தடையும் இல்லை. அவசர கால அடைப்பானையும் பழுதுபார்க்க விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட் டிருக்கின்ற தகவல்கள் சரியான தகவல்கள் அல்ல என்று

நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மதகுகள் கடந்த பெருவெள்ளத்தின் காரணமாக ஏற்பட்ட மணல் மேடு சரிவின் காரணமாக அதனுடைய சட்டங்களிலே சிக்கி, மிகுந்த அளவிலே பொருட் செலவிலே அந்த மணல்மேடு அகற்றப்பட்டாலும் கூட, அந்த மதகுகளைத் தூக்க முடிய வில்லை. எனவே, 1992 நவம்பருக்குப் பிறகு இந்த ராமாநதி அணைக்கட்டுக்கான பாசனத்திலே விவசாயிகளுக்கான விவசாய வேலை நடக்கவில்லை. அது, அந்தத் தொகுதியினுடைய சட்ட மன்ற உறுப்பினர் மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகையா பாண்டியன் அவர்களுக்கும் தெரியும். எனவே, விவசாயிகள் 3 பருவங்களாக விவசாயம் செய்ய முடியாமல் அந்த பருவ நிலங்கள் எல்லாம் தரிசாகக் கிடக்கின்றன. இதிலே என்ன சொல்லியிருக் கிறார்கள் என்று சொன்னால்—மதகுகளில் ஓட்டைப் போடப் பட்டு, அதன் மூலம் தண்ணீர் கொடுக்கப்படுகிறது என்று அதிகாரிகள் தகவல்களை அமைச்சருக்கு தந்திருக்கிறார்கள். நான் சின்ன ஒரு நடைமுறை சாத்தியத்தை சொல்கிறேன். முன்னால் என்ன நடக்கும் என்று சொன்னால் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்தால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அமைச்ச ரோடு தொடர்பு கொள்கிறபோது அதில் சம்பந்தப்பட்ட சட்ட மன்ற உறுப்பினரிடம் பேசுங்கள் என்று சொல்லுவார்கள், எங்க ளிடம் அப்படிப் பேசச் சொல்லியிருந்தால் நான் அது தவறு என்று சொல்லிக் காண்பித்திருப்பேன். எனவே, எனக்கு என்ன வருத்தம் என்று சொன்னால், அந்த மதகு உடனே திறக் கப்பட வேண்டும். அதிலும் அமைச்சர் அவர்கள் ஒரு குறிப் பிட்ட காலக் கெடுவாவது—வெள்ளம் முடிந்து ஓராண்டாகி விட்டது—ஓராண்டுக் காலமாக மதகுகள் திறக்கப்படாமல் இருக்கிறது. இனிமேல் விரைவில் சரி செய்யப்பட வேண்டு மென்ற உறுதியைத்தான் அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார் களேயொழிய அது எப்படி முடியும் என்று திட்டப் பணிகளை வரையறுத்துச் சொல்லக் கூட அமைச்சர் அவர்களால் இயல வில்லை என்று சொன்னால், நான் உண்மையிலேயே வருத்தப் படுகிறேன்.

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேளுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : 3000, 4000 விவசாயக் குடும்பங்கள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றபோது இந்த பிசான பருவத்திற்காவது—மழைக்காலம் ஆரம்பித்து விட்டது, அணை நிறைய தண்ணீர் இருக்கிறது—இந்த ஆண்டா வது விவசாயம் துவங்குவதற்கு அந்த மதகுகளைத் திறக்க மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மதகுகள் கடந்த பெருவெள்ளத்தின் காரணமாக ஏற்பட்ட மணல் மேடு சரிவின் காரணமாக அதனுடைய சட்டங்களிலே சிக்கி, மிகுந்த அளவிலே பொருட் செலவிலே அந்த மணல்மேடு அகற்றப்பட்டாலும் கூட, அந்த மதகுகளைத் தூக்க முடிய வில்லை. எனவே, 1992 நவம்பருக்குப் பிறகு இந்த ராமாநதி அணைக்கட்டுக்கான பாசனத்திலே விவசாயிகளுக்கான விவசாய வேலை நடக்கவில்லை. அது, அந்தத் தொகுதியினுடைய சட்ட மன்ற உறுப்பினர் மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகையா பாண்டியன் அவர்களுக்கும் தெரியும். எனவே, விவசாயிகள் 3 பருவங்களாக விவசாயம் செய்ய முடியாமல் அந்த பருவ நிலங்கள் எல்லாம் தரிசாகக் கிடக்கின்றன. இதிலே என்ன சொல்லியிருக் கிறார்கள் என்று சொன்னால்—மதகுகளில் ஓட்டைப் போடப் பட்டு, அதன் மூலம் தண்ணீர் கொடுக்கப்படுகிறது என்று அதிகாரிகள் தகவல்களை அமைச்சருக்கு தந்திருக்கிறார்கள். நான் சின்ன ஒரு நடைமுறை சாத்தியத்தை சொல்கிறேன். முன்னால் என்ன நடக்கும் என்று சொன்னால் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்தால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அமைச்ச ரோடு தொடர்பு கொள்கிறபோது அதில் சம்பந்தப்பட்ட சட்ட மன்ற உறுப்பினரிடம் பேசுங்கள் என்று சொல்லுவார்கள், எங்க ளிடம் அப்படிப் பேசச் சொல்லியிருந்தால் நான் அது தவறு என்று சொல்லிக் காண்பித்திருப்பேன். எனவே, எனக்கு என்ன வருத்தம் என்று சொன்னால், அந்த மதகு உடனே திறக் கப்பட வேண்டும். அதிலும் அமைச்சர் அவர்கள் ஒரு குறிப் பிட்ட காலக் கெடுவாவது—வெள்ளம் முடிந்து ஓராண்டாகி விட்டது—ஓராண்டுக் காலமாக மதகுகள் திறக்கப்படாமல் இருக்கிறது. இனிமேல் விரைவில் சரி செய்யப்பட வேண்டு மென்ற உறுதியைத்தான் அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார் களேயொழிய அது எப்படி முடியும் என்று திட்டப் பணிகளை வரையறுத்துச் சொல்லக் கூட அமைச்சர் அவர்களால் இயல வில்லை என்று சொன்னால், நான் உண்மையிலேயே வருத்தப் படுகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி கேளுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: 3000, 4000 விவசாயக் குடும்பங்கள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றபோது இந்த பிசான பருவத்திற்காவது—மழைக்காலம் ஆரம்பித்து விட்டது, அணை நிறைய தண்ணீர் இருக்கிறது—இந்த ஆண்டா வது விவசாயம் துவங்குவதற்கு அந்த மதகுகளைத் திறக்க மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1993 அக்டோபர் 29]

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிவிப்புக் கொடுத்தது அவர்.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : ஏதாவது சிறப்பு விதிகளின் கீழ் பேசுவதற்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சிறப்பு விதிகள் எல்லாம் இல்லை. அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர்தான் கேள்வி கேட்க முடியும். மாண்புமிகு அமைச்சர். பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகின்றபோது தவறான தகவலைச் சொன்னார்கள். 3 பருவங்களாக விவசாயம் செய்ய முடியவில்லை என்று சொன்னார். சென்ற ஆண்டுதான் வெள்ளமே வந்தது, ஆகவே 1992 நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட பிரச்சினை அவருக்கு நன்றாகத் தெரியும். மிகப் பெரிய வெள்ளச் சேதத்தில் அந்த அணை பாதிக்கப்பட்டது என்பதும், மிகப் பெரிய இடர்பாடுகளுக்கிடையே சிக்கி, அவைகளை மீட்பதற்கு இந்த அரசாங்கம் 550 கோடி ரூபாய் கேட்டு, வெறும் 50 கோடி ரூபாயை மத்திய அரசு கடனாகக் கொடுத்த நிதியை வைத்து எப்படி இந்த அரசு செயல்பட்டது என்பதையும் நீங்கள் நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும். இன்றைக்கு இருக்கும் பிரச்சினையை நான் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக ஒன்றை இங்கே பேசுகிற உறுப்பினர்கள் மனதிலே கொள்ள வேண்டும். 550 கோடி ரூபாய் நமக்கு நஷ்டம். இன்றைக்கு அனைத்துப் பணிகளையும் நம்மால் சீரமைக்க முடியவில்லை. பல பணிகளை நாம் தொடர்ந்து செய்து கொண்டு இருக்கிறோம். நாம் 50 கோடி ருபாயை மாத்திரம் கடனாகப் பெற்று, அதிலே பணிகளை முடிப்பது என்பது எந்த அளவுக்கு நடைமுறைச் சாத்தியம் என்பதைப் பார்க்க வேண்டும்.

ஆகவே முழுமையாக அந்தப் பணிகளை நாம் நிறைவேற்றுவதற்குப் பல சங்கடங்கள் இருக்கின்றன. நிதி ஆதாரங்களில் இடர்பாடுகள் இருக்கின்றன. இந்தப் பிரச்சினை வந்தவுடனே நம்முடைய முருகையா பாண்டியன் அவர்கள் என்னிடத்திலே வந்து இந்த விவரத்தைத் தெரிவித்தார்கள். உடனடியாக நம்முடைய பி.டபிள்யூ.டி. ஓர்க்ஷாப்பிலுள்ள எக்ஸ்பர்ட்ஸ், தொழில்நுட்ப வல்லுநர்கள் அத்தனை பேரையும் அனுப்பி, ஒரு இன்டரிம் அரேன்ஜ்மென்ட் பண்ணச் சொன்னோம். உடனே

செய்ய முடியாது மந்திரத்தால். திடீரென்று பிரச்சினை வந்துவிட்டால் நாம் பண்ண முடியாது. ஆகவேதான் உடனடியாக அதிகாரிகளை அனுப்பி, ஏதாவது ஒரு இன்டரிம் அரேன்ஜ்மென்ட் பண்ணி விவசாயிகளுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, மூன்றுக்கு ஒரு அடி என்ற அளவிலே துளை போட்டு, தண்ணீரைத் திறந்து விட்டோம். பாசன வசதிக்கு ஏற்பாடு செய்தோம். எனவே முழுமையாக பாசன வசதி பெறவில்லை என்ற குற்றச்சாட்டை நான் மறுக்கிறேன். ஆகவே சில இடங்களில் தண்ணீர் பிரச்சினை இருக்கிறது. இன்றைக்கும் தட்டுப்பாடு இருக்கிறது. மழை பெய்யவில்லை. அதனாலே பிரச்சினை இருக்கலாம். ஆனால் தண்ணீர் இருக்கின்றவரை நாங்கள் தண்ணீரை ஒழுங்காகத் திறந்து விட்டிருக்கிறோம். விவசாயிகளுக்குப் பாதிப்பில்லை.

அவர் சொன்னார், அதிகாரிகள் கொடுத்தது தவறான தகவல்கள் என்று. அவர் எப்படி சரியான தகவல் சொல்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. அதிகாரிகள் சொல்வது சரியா அவர் சொல்வது சரியா என்பதை விசாரித்துப் பார்த்தால்தான் தெரியும். ஆகவே அதிகாரிகள் ஒரு அமைச்சருக்குத் தகவல் கொடுக்கும்போது தவறான தகவல்களைக் கொடுக்க மாட்டார்கள். என்னுடைய துறையிலே அப்படி நடக்குமென்றால் உடனடியாக நடவடிக்கை எடுப்போம். அப்படி வராது. அங்கே இருக்கும் நிலைமைகளை அவர்கள் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். அங்கே ரிப்பேர் செய்ய வேண்டும். அதற்கு மிக அதிகமான பொருள் செலவாகிறது. அதற்கு பல்வேறு தொழில்நுட்ப வல்லுநர்களை அனுப்பியிருக்கிறேன். இங்கே இருக்கும் பி.டபிள்யூ.டி. ஒர்க்ஷாப்பிலிருந்து அனுப்பியிருக்கிறேன். அவர்கள் காலக்கெடு கேட்டார்கள். இந்த அரசு 'டைம் பவுண்ட்' பிராஜக்ட் போடும் அரசுதான். பல்வேறு காலங்களில் பார்த்திருக்கிறோம், 15 வருடங்கள், 20 வருடங்கள் நடந்த திட்டங்களை எல்லாம், உறுப்பினர் மறந்து போயிருக்கலாம். இன்றைக்கு அப்படியல்ல. இதிலும் காலக்கெடு வைத்திருக்கிறோம். மிக விரைவிலே என்று சொன்னால் கூடிய சீக்கிரம் என்றுதானே தவிர இத்தனை நாட்கள் என்று அறுதியிட்டுக் கூற முடியாது. தொழில்நுட்ப வல்லுநர்கள், அதிகாரிகள், பொறியாளர்கள் எல்லாம் பார்த்து, அதற்கு சிறப்பான நடவடிக்கை எடுத்து, விவசாயிகள் பாதிக்கப்படா வண்ணம் அரசு கவனித்துக் கொள்ளும். ஆகவே இந்த நடவடிக்கைகளை பொதுப்பணித் துறை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஓ) இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சியைப் போக்க வைகை நீரைத் திறந்துவிட வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு டாக்டர் எஸ். சுந்தரராஜ் அவர்கள், அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சி நிலவுவதால் வைகை அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டிய அவசியம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

வைகை அணையில் வைகை கணக்கில் 387 மில்லியன் கன அடி நீர் இருப்பில் உள்ளது. இராமநாதபுரம் மாவட்ட பகுதி களுக்கு தண்ணீர் அனுப்ப குறைந்தது வினாடிக்கு 2000 கன அடிகள் என்ற அளவில் குறைந்தது 5 நாட்கள் தண்ணீர் விடப்பட வேண்டும். இதற்கு 850 மி. க. அடியாவது வைகை கணக்கில் இருக்க வேண்டும். இருப்பில் உள்ள 387 இரண்டு நாட்களுக்குத் தான் வரும். இது இராமநாதபுரம் மாவட்டத்தின் பகுதிகளுக்குச் சென்று பயன் கொடுக்காது.

மேலும் வைகை கணக்கில் உள்ள நீர் மதுரை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். எனவே வைகை கணக்கில் தற்போது சேர்ந்துள்ள இருப்பு நீர் முழு வதையும் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மட்டுமே பகிர்ந் தளிக்க இயலாது.

பெரியாறு நீர்த் தேக்கத்திலும் தற்போது 2800 மில்லியன் கன அடி நீரே உள்ளது. வைகை நீர்த்தேக்கத்தில் பெரியாறு பாசன அமைப்புக் கணக்கில் 3000 மில்லியன் கன அடி நீர் உள்ளது. இதையும் சேர்த்தால் பெரியாறு பாசன அமைப்புக் கணக்கில் 5800 மில்லியன் கன அடி நீர் உள்ளது. இந்த இருப்பு நீர் பெரியாறு பாசன அமைப்பின் முழுத் தேவைக்கே போதுமான தாக இல்லை.

பெரியாறு மற்றும் வைகை நீர்த் தேக்கங்களில் நீர் இருப்பு திருப்திகரமாக இல்லாத நிலையில், மேற்கூறிய காரணங்களினால் இராமநாதபுரம் மாவட்ட பகுதிகளுக்கு தண்ணீர் அனுப்ப இயலாது. இந்திய வானிலைத் துறையினர் தென் மாவட்டங்களில் வடகிழக்குப் பருவ மழையினால் பலத்த மழை பொழியும் எனக் கணித்துள்ளனர். எனவே எதிர்வரும் நாட்களில் இரு நீர்த்தேக்கங்களிலும் நீர் இருப்பு கணிசமாக அதிகரித்தால் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு தண்ணீர் திறந்துவிடுவது குறித்த சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ், கேள்வி கேட்க வேண்டும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் ராமநாதபுரம் மாவட்டத்தினுடைய பங்கு 387 மில்லியன் கன அடி என்றும், ராமநாதபுரம் மாவட்டத்திற்குத் தண்ணீர் வர வேண்டுமென்றால் 850 கன அடியாவது தேவைப்படும் என்றும், எதிர்வரும் காலங்களில் பெருத்த மழை பெய்து, நீர் வரத்து அதிகரித்தால் இது பற்றி ஆராயப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. 1967-ல் வைகை அணை கட்டுவதற்கு முன்பு வைகையினுடைய தண்ணீர் அனைத்தும் ராமநாதபுரம் மாவட்டத்திற்குப் பயன்பட்டது, குடிநீருக்கும், விவசாயத்திற்கும் பயன்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன கேள்வி, அதைக் கேளுங்கள்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: இப்போது ராமநாதபுரம் மாவட்டத்திற்கு வர வேண்டிய நீரின் அளவைக் குறிக்கும் பொறுப்புக்கு இராமநாதபுரம் மாவட்டத்திற்கு என்று தனியாக ஒரு ஈ.ஈ.யும் மதுரை மாவட்டத்திற்கு தனியாக ஒரு ஈ.ஈ.யும் போடுவதற்கு துறை நடவடிக்கை எடுக்குமா?

முற்பகல் 12-45

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவர அறிக்கையில் எல்லா விவரமும் வைத்திருக்கிறேன். ஆகவே அதற்குள் போக விரும்பவில்லை. இன்றைக்கு இருக்கிற நீர் இருப்பைப் பொறுத்து எப்படி ராமநாதபுரம் மாவட்டத்திற்குத் தண்ணீர் விட முடியாது என்பதைச் சொல்லியிருக்கிறேன். ஏனென்றால் பெரியாறு— வைகை நீர்ப்பாசனத் திட்டம் என்பது மூன்று மாவட்டங்களை,

உள்ளடக்கியது. மதுரை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம். அதிலே மதுரை மாவட்டத்திற்குரிய பங்கு இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்திற்குரிய பங்கு இருக்கிறது. முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திற்குரிய பங்கு இருக்கிறது. அந்த விதிகளை மீறி நாம் தண்ணீரைத் திறக்க முடியாது. ஏனென்றால் மதுரையிலே பெரியாறு பாசனத்தில் இருக்கிற விவசாயிகள் இன்றைய தினம் வெசாயத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களுக்கு நிர்ணயித்த அளவைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். சென்ற ஆண்டு மழை அதிகமாக இருந்தது. ஆகவே அதிகமாகத் தண்ணீர் திறந்து விட்டோம். ஆகவே அதற்காக வைத்திருக்கின்ற நிர்ணயங்கள் அந்த முறைகள் படிதான் தண்ணீர் விடப்படும். ஆகவே எதிர்காலத்திலே மழை அளவைப் பொறுத்துத் தான் தண்ணீர் விட முடியும். அப்படி ஏதாவது கடுமையான குடிநீர்ப் பிரச்சினை வருகிறபோது, அரசு அதுபற்றி அதிகாரிகளோடு கலந்துபேசி பரிசீலிக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஔ) கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் விஞ்ஞானக்கூடம் கட்டும் பணி முடிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. கே. முனிவெங்கடப்பன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கே. முனிவெங்கடப்பன்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 1984ஆம் ஆண்டு கட்ட ஆரம்பிக்கப்பட்ட விஞ்ஞானக் கூடக் கட்டிடம், கட்டி முடிக்கப்படாமல் இருப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு ஒரு வகுப்பறையுடன் கூடிய ஆய்வகக் கூடம் கட்டுவதற்கு ஏற்கனவே ரூ. 1,57,140 அனுமதி அளித்து ஆணை வழங்கப்பட்டது.

உள்ளடக்கியது. மதுரை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம். அதிலே மதுரை மாவட்டத்திற்குரிய பங்கு இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்திற்குரிய பங்கு இருக்கிறது. முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திற்குரிய பங்கு இருக்கிறது. அந்த விதிகளை மீறி நாம் தண்ணீரைத் திறக்க முடியாது. ஏனென்றால் மதுரையிலே பெரியாறு பாசனத்தில் இருக்கிற விவசாயிகள் இன்றைய தினம் விவசாயத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களுக்கு நிர்ணயித்த அளவைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். சென்ற ஆண்டு மழை அதிகமாக இருந்தது. ஆகவே அதிகமாகத் தண்ணீர் திறந்து விட்டோம். ஆகவே அதற்காக வைத்திருக்கின்ற நிர்ணயங்கள் அந்த முறைகள் படிதான் தண்ணீர் விடப்படும். ஆகவே எதிர்காலத்திலே மழை அளவைப் பொறுத்துத் தான் தண்ணீர் விட முடியும். அப்படி ஏதாவது கடுமையான குடிநீர்ப் பிரச்சினை வருகிறபோது, அரசு அதுபற்றி அதிகாரிகளோடு கலந்துபேசி பரிசீலிக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஔ) கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் விஞ்ஞானக்கூடம் கட்டும் பணி முடிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. கே.முனிவெங்கடப்பன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கே. முனிவெங்கடப்பன்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 1984ஆம் ஆண்டு கட்ட ஆரம்பிக்கப்பட்ட விஞ்ஞானக் கூடக் கட்டிடம், கட்டி முடிக்கப்படாமல் இருப்பது குறித்த’’ அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு ஒரு வகுப்பறையுடன் கூடிய ஆய்வகக் கூடம் கட்டுவதற்கு ஏற்கனவே ரூ. 1,57,140 அனுமதி அளித்து ஆணை வழங்கப்பட்டது.

[பேராசிரியர் க. பொன்னுசாமி] [1993 அக்டோபர் 29

கட்டடம் கட்டப்படவிருக்கும் நிலம் சம்பந்தமாக குடியிருப்போருக்கு வழி விட வேண்டுமென்ற பொருளில் தனியாருக்கும், பள்ளி நிர்வாகத்தினருக்கும் கருத்து முரண்பாடு ஏற்பட்டது. மேற்காணும் பள்ளிக்கு ஒரு வகுப்பறையுடன் கூடிய அறிவியல் ஆய்வகம் நீதிமன்ற தடை காரணமாக கூரை மட்டம் வரை கட்டப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. சென்னை உயர் நீதிமன்றத்தில் அரசுக்கு பாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டதால் அத்தீர்ப்பினை மறுபரிசீலனை செய்யக் கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. வழக்கினை உச்சநீதிமன்றம் விசாரித்து பள்ளிக்குரிய நிலத்தில் கட்டடம் கட்டுவதற்கு எந்த வித தடையும் இல்லாததால் மேற்காணும் பள்ளிக்கு ஆய்வுக்கூடம் கட்ட பொதுப்பணித் துறை ஆணைகள் வழங்கலாம் என்று தெரிவிக்கப்பட்டதாக தருமபுரி முதன்மைக் கல்வி அலுவலர் தெரிவித்தார். அதன்படி சேலம் தருமபுரி மாவட்டம் தனிக் கட்டட கண்காணிப்பு பொறியாளர், பள்ளியின் இடத்திற்கு தக்கபடி வரைபடம் தயாரித்து திருத்திய மதிப்பீட்டுத் தொகையில் மேலும் கூடுதலாக சுமார் ரூ. 2.53 இலட்சம் செலவில் கட்டடத்தினை முழுமை பெறச் செய்ய கருத்துருவினை அரசுக்கு அனுப்பியுள்ளார். இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் அது கட்டி முடிக்கப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் பார்த்தேன். அதிலே வழக்கு 1990ஆம் ஆண்டிலே தீர்க்கப்பட்டது. ஆகவே அந்தப் பள்ளியிலே 3500 மாணவிகள் இப்போது படித்துக் கொண்டிருக்கிறார்கள். பிளஸ் 1, பிளஸ் 2 வகுப்புகளில் சுமார் 600 மாணவிகள் பயிலுகிறார்கள். அவர்களுக்குச் சரியான விஞ்ஞானக்கூடம் இல்லாத காரணத்தால் அவர்கள் தேர்ச்சி பெறுவது மிகவும் சிரமமாக உள்ளது. ஆகவே இன்றைக்குப் பெண்கள் நன்றாகப் படித்து முன்னேற வேண்டும் என்பதற்காக, தர்மபுரி மாவட்டத்தில் பெண்களுக்கென்று இரண்டு கல்லூரிகளை வழங்கியிருக்கிற எங்கள் கண்கண்ட தெய்வம், பெண்களின் காவல் தெய்வம், புரட்சித் தலைவி ஆட்சியில் இவ்வாண்டு இந்த விஞ்ஞானக் கூடம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்சநீதிமன்றம் அந்தப் பள்ளிக்குச் சாதகமாக தீர்ப்பளித்தது 28—11—1991-ல்தான். அதற்குப் பின்னர் அந்தப் பணிகள் அரைகுறையாக இருந்த காரணத்தால் எஞ்சிய பணிக்காக திருத்திய மதிப்பீடு தயார் செய்யப்பட்டு சேலம்—தர்மபுரி மாவட்ட தனி கட்டிட கண்

காணிப்புப் பொறியாளர் அவர்கள் ரூ. 2,52,810.29 தேவைப்படுகிறது என்று அரசுக்கு மதிப்பீடு அனுப்பியிருக்கிறார். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் கட்டிடம் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(அஅ) சென்னை மாநகரில் குடிநீர்த் தட்டுப்பாட்டால் ஏற்பட்டுள்ள பதட்டநிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன் அவர்கள், அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை மாநகரில் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டுள்ளதால், பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர். (குறுக்கீடு) விவரங்களைச் சேகரிக்கிறார்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

சென்னை மாநகரில் வசிக்கும் 55 லட்சம் மக்களுக்கும் குடிநீர் வழங்குவதற்கு உள்ள முக்கிய ஆதாரம் பூண்டி, சோழவரம், புழல் ஆகிய மூன்று ஏரிகளாகும். இவற்றின் மொத்தக் கொள்ளளவு 6483 மில்லியன் கன அடி. சென்னை நகரிலுள்ள ஒவ்வொருவருக்கும் தினமும் 70 லிட்டர் என்ற அளவில் ஓராண்டிற்கு குடிநீர் வழங்கத் தேவையான கொள்ளளவு 4500 மில்லியன் கன அடி. இது தவிர தாமரைப்பாக்கம், பஞ்செட்டி, மீஞ்சூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஆழ் துளைக் கிணறுகள் மூலம் சுமார் 14 மில்லியன் காலன் நிலத்தடி நீர் எடுக்கப்பட்டு அதில் பெரும்பகுதி மணலியில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டு வந்தது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

காணிப்புப் பொறியாளர் அவர்கள் ரூ. 2,52,810.29 தேவைப்படுகிறது என்று அரசுக்கு மதிப்பீடு அனுப்பியிருக்கிறார். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் கட்டிடம் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(அஅ) சென்னை மாநகரில் குடிநீர்த் தட்டுப்பாட்டால் ஏற்பட்டுள்ள பதட்டநிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன் அவர்கள், அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை மாநகரில் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டுள்ளதால், பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர். (குறுக்கீடு) விவரங்களைச் சேகரிக்கிறார்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

சென்னை மாநகரில் வசிக்கும் 55 லட்சம் மக்களுக்கும் குடிநீர் வழங்குவதற்கு உள்ள முக்கிய ஆதாரம் பூண்டி, சோழவரம், புழல் ஆகிய மூன்று ஏரிகளாகும். இவற்றின்மொத்தக் கொள்ளளவு 6483 மில்லியன் கன அடி. சென்னை நகரிலுள்ள ஒவ்வொருவருக்கும் தினமும் 70 லிட்டர் என்ற அளவில் ஓராண்டிற்கு குடிநீர் வழங்கத் தேவையான கொள்ளளவு 4500 மில்லியன் கன அடி. இது தவிர தாமரைப்பாக்கம், பஞ்செட்டி, மீஞ்சூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஆழ் துளைக் கிணறுகள் மூலம் சுமார் 14 மில்லியன் காலன் நிலத்தடி நீர் எடுக்கப்பட்டு அதில் பெரும்பகுதி மணலியில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டு வந்தது.

2. சென்ற ஆண்டு அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை வழக்கமாக மழை பொழியும் வடகிழக்குப் பருவ மழை பொய்த்துப் போனதின் விளைவாக, ஏரிகளில் போதிய அளவு நீர் சேரவில்லை. இவ்வாண்டு ஜனவரி முதல் வாரத்தில் மொத்த நீர் இருப்பு சுமார் 1500 மில்லியன் கன அடி மட்டுமே ஆகும். சென்ற ஆண்டு இதே காலகட்டத்தில் இருந்த மொத்த நீரின் அளவு 6050 மில்லியன் கன அடி ஆகும். மேலும், குறைவான மழையின் விளைவாக, தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்க உபயோகப்படும் ஆழ்துளைக் கிணறுகளிலும் நீர் மட்டம் மிகவும் தாழ்ந்து விட்டது.

3. இந்தச் சூழ்நிலையை உடனடியாக ஆய்வு செய்த அரசு, முதற்கட்டமாக 10—1—1993 முதல் இரு தினங்களுக்கு ஒரு நாள் குழாய்களின் மூலம் குடிநீர் வழங்கும் முறையை செயலாக்கப்படுத்தியது. மேலும், மக்களுக்கு போதிய அளவு குடிநீர் இல்லாமையால் ஏற்படக்கூடிய இன்னல்களைக் களையும் பொருட்டு, ரூ. 23.22 கோடி அளவில் சென்னைக் குடிநீர் வாரியத்தால் தயாரிக்கப்பட்ட முதல் அவசர கால திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து, போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகள் துவக்கப்பட்டன. இதன் இரண்டாம் கட்டமாக, ஆகஸ்ட் மாதம் மேலும் ரூ. 29.50 கோடிக்கு அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மக்களுடைய குடிநீர்த் தேவையை ஓரளவுக்கேனும் பூர்த்தி செய்யும்பொருட்டு, அரசின் மேற்பார்வையில் சென்னை குடிநீர் வாரியத்தால் போர்க்கால அடிப்படையில் செயலாக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்கவை பின்வருமாறு:

1. வெளியிடங்களில் இருந்து சென்னைக்கு கூடுதல் நீர் கொண்டு வருதல்:

ஏப்ரல் மாதத்திலிருந்து ரயில் மூலம் நெய்வேலி மற்றும் ஈரோட்டிலிருந்து நாளொன்றுக்கு சுமார் 15 லட்சம் லிட்டர் தண்ணீர் சென்னைக்கு கொண்டு வரப்படுகிறது.

செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து ஏப்ரல், மே ஆகிய இரு மாதங்களிலும் தினசரி சுமார் 40 லட்சம் லிட்டர் நீர் போரூர் ஏரிக்குக் கொண்டுவரப்பட்டு, அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் விநியோகத்திற்கு பயன்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு நீர் வாரியத்துடன் இணைந்து செயல்பட்டு, பாலாற்றிலிருந்து ஆலந்தூர் பகுதிக்கு குடிநீர் வழங்கும் குழாய் மூலம் கூடுதலாக தினமும் சுமார் 10 லட்சம் லிட்டர் ஈக்காட்டுத்

1993 அக்டோபர் 29] [திரு. டி. எம். செல்வகணபதி]

தாங்கலில் பெறப்பட்டு சுற்றியுள்ள பகுதிகளுக்கு லாரிகள், டிராக்டர்கள் மூலம் விநியோகிக்கப்படுகிறது. மற்றும் திரு நின்றவூர், நாரவாரிக்குப்பம் ஆகிய இடங்களில் உள்ள தமிழ் நாடு குடிநீர் வாரியத்தின் ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து சுமார் 15 லட்சம் லிட்டர் குடிநீர் பெறப்பட்டு குழாய் மூலம் விநியோகிக்கப்படுகிறது. தவிர, மாங்காடு பகுதியில் உள்ள திறந்தவெளிக் கிணற்றிலிருந்து தினசரி சுமார் 6 லட்சம் லிட்டர் நீர் பெறப்படுகிறது.

நெய்வேலி சுரங்கப் பகுதியிலிருந்து லாரிகள் மூலம் தினசரி சுமார் 55 லட்சம் லிட்டர் நீர் சென்னை நகர மக்கள் தேவைக்காக கொண்டு வரப்படுகிறது.

சென்னை நகரிலிருந்து 70 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பழையசீவரம் என்ற இடத்திலிருந்து லாரிகள் மூலம் தினமும் சுமார் 10 லட்சம் லிட்டர் பாலாற்று நீரும், 95 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள ஒச்சேரி என்ற இடத்திலிருந்து லாரிகள் மூலம் தினமும் 18 லட்சம் லிட்டர் பாலாற்று நீரும் கொண்டு வரப்பட்டு நகரில் விநியோகிக்கப்படுகிறது. இது தவிர, அம்பத்தூர், பூவிருந்தவல்லி ஆகிய இடங்களிலிருந்து லாரிகள் மூலம் தினசரி சுமார் 15 லட்சம் லிட்டர் நீர் கொண்டு வரப் படுகிறது.

சென்னை நகருக்கு தெற்கே அமைந்துள்ள ஒகியம் மதகு ஏரியிலிருந்து முதல் முறையாக தினசரி சுமார் 8 லட்சம் லிட்டர் குடிநீர் அக்கரைக்குக் கொண்டுவரப்பட்டு விநியோகிக்கப் படுகிறது.

மணலியில் உள்ள தொழிற்சாலைகளுக்கு சாதாரணமாக தினசரி 450 லட்சம் லிட்டர் நீர் வழங்கப்பட்டு வந்தது. ஏப்ரல் மாதத்திலிருந்து இந்த அளவு பாதியாக குறைக்கப்பட்டு, இதனால் மீதமாகும் 225 லட்சம் லிட்டர் குடிநீர் சென்னை நகர குடிநீர் தேவைக்கு உபயோகிக்கப்படுகிறது.

தென் சென்னையில் அக்கரை மற்றும் நீலாங்கரை பகுதிகளில் 7 பெரிய திறந்த வெளிக் கிணறுகள் நிறுவப்பட்டு இவற்றின் மூலம் கூடுதலாக 6 லட்சம் லிட்டர் குடிநீர் பெறப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

நகரைச் சுற்றியுள்ள இடங்களில் சென்னைக் குடிநீர் வாரியம் தனியார் மற்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்த மான 46 கிணறுகளை வாடகைக்கு அமர்த்தி, அவற்றின் மூலம் தினசரி சுமார் 40 லட்சம் லிட்டர் நீர் பெற்று விநியோகிக்கப் பட்டு வருகிறது.

[திரு. டி. எம். செல்வகணபதி] [1993 அக்டோபர் 29

2. சென்னை நகரின் குடிநீர் விநியோகம் :

தற்போது சென்னை நகரில் இரு தினங்களுக்கு ஒரு முறை என்ற அளவில் 610 லட்சம் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் குழாய்மூலம் வழங்கப்படுகிறது. இது தவிர தினசரி லாரிகள், டிராக்டர்கள் மூலம் 520 லட்சம் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நகரிலுள்ள சுமார் 7500 தெருக்களில் வழங்கப்படுகிறது. இதற்காக நகரில் 370 லாரிகளும், 486 டிராக்டர்களும் தினசரி சுமார் 6500 நடை (trips) குடிநீர் விநியோக பணி செய்து வருகின்றன.

இவ்வளவு எண்ணிக்கையில் ஓடும் லாரிகள், டிராக்டர்களில் விரைவாக நீர் நிரப்பி, காலதாமதமின்றி மக்களுக்கு விநியோகிக்கும் பொருட்டு கீழ்ப்பாக்கம், அண்ணா பூங்கா, வள்ளுவர் கோட்டம் ஆகிய முக்கிய நீர் நிரப்பு நிலையங்களிலுள்ள நீர் நிரப்பும் அமைப்புகள் விரிவாக்கப்பட்டு நவீனமயமாக்கப்பட்டுள்ளன. இது தவிர, ஈக்காட்டுத்தாங்கல், கே. கே. நகர், அசோக்நகர், ஆகிய பலபகுதிகளில் புதிதாக நீர் நிரப்பும் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சென்னை நகரில் ஜனவரி மாதத்தில் இருந்த மொத்த குடிநீர் விநியோகத் தொட்டிகளின் எண்ணிக்கை 1935 ஆகும். இது படிப்படியாக மக்களின் தேவைக்கேற்ப உயர்த்தப்பட்டு, தற்போது நகரின் பல்வேறு பகுதிகளிலும் மொத்தம் 7005 குடிநீர்த் தொட்டிகள் அமைக்கப்பட்டு, அவற்றின் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. (கூடுதல் தொட்டிகள் 5070)

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY LIBRARY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

3. குடிநீர் இல்லாத இதர தேவைகள் :

1992 இல் வடகிழக்குப் பருவமழை போதிய அளவு இல்லாத காரணத்தினால், நகரில் உள்ள கிணறுகளில் நீர்மட்டம் குறைந்துள்ளது. இதனால் சென்னை நகர மக்களின் குடிநீர் அல்லாத இதர தேவைகளுக்கான நீரளவை அதிகரிக்கும் நோக்கத்துடன் இந்த ஆண்டு சென்னை குடிநீர் வாரியம் புதிதாக நகரின் அனைத்துப் பகுதிகளிலும் 2664 இந்தியா மார்க் 2 பம்புகளை நிறுவியுள்ளது. ஏற்கனவே இருந்த 4531 பம்புகளையும் சேர்த்து, தற்போது 7195 பம்புகள் உபயோகத்தில் உள்ளன.

மற்றும், கடற்கரை ஓரமாக அமைந்துள்ள குடியிருப்புப் பகுதிகளில் 160 ஆழமில்லாத குழாய்க் கிணறுகள் (Shallow Tube Well) புதிதாக அமைக்கப்பட்டு, அங்குள்ள மக்களின் குடிநீர் அல்லாத இதர நீர் தேவையை பூர்த்தி செய்கின்றன.

1993 அக்டோபர் 29] [திரு. டி. எம். செல்வகணபதி]

4. கண்காணிப்பு :

முன்பு எப்போதும் கண்டிராத அளவில் இவ்வாண்டு நகரில் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டை முடிந்த வரையில் போக்கி மக்களின் இடர்பாடுகளை களையும் நோக்கத்துடன், மேற் கூறிய பல்வேறு திட்டங்களை போர்க்கால அடிப்படையில் செயல் படுத்தி வரும் அரசு, இத்திட்டப்பணிகளின் செயற்பாட்டை கண்காணித்து, சீரமைக்கும் நோக்கத்தைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு கண்காணிப்புக் குழுவை அமைத்துள்ளது.

சென்னைக் குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் மக்களின் முறையீடுகளைப் பெற்று உடன் களைய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, 'புகார்ப் பிரிவு' இரவு பகலாக, 24 மணி நேரமும் இயங்கி வருகிறது.

நகரில் குடிநீர் விநியோகம் ஒழுங்காக நடைபெறுகிறதா என்று தொடர்ச்சியான முறையில் கண்காணிக்கும் பொருட்டு, காவல் துறை மற்றும் சென்னைக் குடிநீர் அதிகாரிகளைக் கொண்ட 36 கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப் பெற்று, அவை தினசரி நகரின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று குடிநீர் விநியோகத்தைக் கண்காணித்து வருகின்றன.

மக்களின் இன்னல்களை களையும் எண்ணத்துடன் செயலாக்கப் பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகளையும் மாண்புமிகு முதலமைச்சர் ஒவ்வொரு வாரமும் சம்பந்தப்பட்ட அமைச்சர் பெருமக்களுடனும், உயர் அதிகாரிகளுடனும் விரிவாக ஆய்வு செய்து, தேவையான ஆணைகளை உடனுக்குடன் வழங்கு கிறார்கள்.

5. செயற்கை மழை:

சென்னை நகரில் பொழியக் கூடிய மழையின் அளவை நவீன தொழிற் நுட்பத்தினைப் பயன்படுத்தி ஓரளவு அதிகரிக்கச் செய்யும் நோக்கத்துடன், இத்தொழில் நுட்பத்தினை உலகின் பல்வேறு நாடுகளிலும் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்படுத்தி வரும் அமெரிக்க நிறுவனம் (M/s. Atmospheries Inc., U.S.A.) ஒன்றின் உதவியுடன் மழை மேகங்களை செயற்கை முறையில் குளிர்வித்து கூடுதல் மழை விளைவிக்கும் திட்டத்தை கடந்த ஒரு மாதமாக செயலாக்கி வருகிறோம். இதனால், இயற்கையில் பொழியக்கூடிய மழையளவை சுமார் 15 சதவிகிதம் அதிகப்படுத்த சாத்தியக் கூறுகள் உள்ளன என்று தொழில் வல்லுனர்கள் கூறியுள்ளனர்.

தற்போது வடகிழக்குப் பருவமழை தொடங்கியுள்ளது. இதனால், பொழியக்கூடிய கூடுதல் மழையளவைப் பொருத்து, டிசம்பர் மாத இறுதிவாக்கில், சென்னை மக்களுக்கு தினசரி குழாய்மூலம் நீர் வழங்குவது குறித்து அரசு முடிவெடுக்கும்.

[திரு டி. எம். செல்வகணபதி] [1993, அக்டோபர் 29

அரசு மேற்கண்ட பணிகளின் செயல்பாட்டினை உன்னிப்பாக கவனித்து தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன். நீங்கள் ஏற்கெனவே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திலும் கேள்வி கேட்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) இது, இன்று காலையில் திரு. செல்லக்குமார் அவர்களும், திரு. ரங்கநாதன் அவர்களும் வந்து, நாங்களும் கேட்கிறோம் என்று சொன்னார்கள். விதிமுறை களின்படி அதற்கு இடமில்லை. அதில் அக்கறை காட்டுகிறார் கள் என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம். திரு. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை கொடுத்த பிறகும் இன்னும் விபரங் களைச் சேகரித்துக் கொண்டிருக்கிறார் என்று அமைச்சரைப் பற்றிக் குறிப்பிட்டீர்கள். நன்றி, இருந்தாலும் இங்கே சென்னை யிலே இப்போது குடிநீர் இல்லாமல் மக்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதும், பொதுவாக தினந் தோறும் குழாய்களில் நீர் வருமா என்று மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் சுத்திகரிக்கப்பட்ட நீர் கிடைக்குமா என்றால், ஓட்டல்களில் கொடுக்கும் டீ கலரில் தான் தண்ணீர் கிடைக்கிறது. அமைச்சர் அளித்துள்ள அறிக்கையில், 3 பக்கத்திற்கு விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே முதல் கட்டமாக ரூ. 23.22 கோடியும், இரண்டாவது கட்டமாக ரூ. 29.50 கோடியும் ஒதுக்கப்பட்டு, இன்றைக்கு செயற்கை மழை எல்லாம் பெய்ய வைக்கிற நேரத்தில் தினந்தோறும் இந்த சென்னை நகர மக்களுக்கு தண்ணீர் கிடைக்கிற அளவுக்கு நீரை வழங்க அமைச்சர் அவர்கள் உடனடியாகப் போர்க்கால நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 12.50

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஞானசேகரன் சொன்னார்கள். அவர்கள் எழுப்புகின்றார் என்று சொன்னாலே, மேலும் பல விவரங்களைச் சேகரிக்கின்ற நிலையில், அரசு அந்த அளவுக்கு துரிதமாக இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்று சொன்னால், சென்னை நகர குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரை அந்த அளவுக்கு கடுமையான ஒரு பிரச்சினை யாக, சங்கடத்திற்கு உரிய பிரச்சினையாக கடந்த சனவரி மாதத் திலிருந்து வறட்சியின் காரணமாக இந்த நிலைமை இருந்து வந்தது நம் அத்தனை பேருக்கும் தெரியும். இன்றைக்கு சென்னை மாநகரைப் பொறுத்தவரை சுமார் 60 லட்சம் மக்களுக்கு மேலாக

வசிக்கின்ற மாநகரம் இந்த மாநகரம். இந்த மாநகரத்திற்கு குடிநீர் என்று சொல்கின்றபோது இன்றைக்கு ரெட்-ஹில்ஸ், பூண்டி, புழல் ஏரி போன்ற ஏரிகளிலிருந்து வருகின்ற தண்ணீர் வரத்தை நம்பித்தான் சென்னை மாநகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய நிலையில் சென்னைப் பெரு நகர் குடிநீர் வடிகால் வாரியம் இருந்து வருகின்றது. அந்த அடிப்படையில், பருவ மழை பொய்த்ததன் காரணத்தாலும், கடந்த ஆண்டு பெய்ய வேண்டிய பருவ மழை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் முழு விவரமும் வைத்து இருக்கிறீர்கள். உறுப்பினர் அவர்கள் நாள்தோறும் கொடுக்க முடியுமா என்று கேட்டு இருக்கிறார்கள். அதற்கு மட்டும் பதில் சொன்னால் போதும்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாள்தோறும் இன்றைக்குக் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். அதைத்தான் தெளிவாகக் குறிப்பிட வேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு சென்னை மாநகரைப் பொறுத்தவரை 10,389 தெருக்கள் இருக்கின்றன. கடந்த சனவரி மாதத்திலிருந்து குழாய்களில் தண்ணீர் வரத்தே இல்லை என்ற நிலைமை உருவாகி இருக்கின்றது. ஏன் குறிப்பிட்டுச் சொல்கின்றேன் என்று சொன்னால், ஏரிகளில் தண்ணீர் இல்லை. தண்ணீர் வரத்து இல்லாத காரணத்தினால், மழை பொய்த்ததின் காரணத்தினால் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லாத நிலைமை, வறண்ட நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அதையெல்லாம் சரிக்கட்டுகின்ற வகையிலேதான், இத்தனை தெருக்களுக்கும் தண்ணீர் கிடைக்கின்ற வகையிலே இன்றைக்கு அரசு துரிதமான நடவடிக்கை எடுத்து கிட்டத்தட்ட 5 கோடி ரூபாய்க்கு மேலாக தினந்தோறும் நகர மக்களுக்கு தண்ணீர் கிடைக்க வேண்டும் என்பதற்காக லாரிகள் மூலமாகவும், டிராக்டர்கள் மூலமாகவும், தண்ணீரை வழங்கிக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு சென்னை நகர மக்களே இதை நன்றாக உணர்ந்து இருக்கிறார்கள். இவ்வளவு கடுமையான பிரச்சினைகள் இருந்தும், அரசு இன்றைக்கு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு, சனவரி மாதத்திலிருந்து கிட்டத்தட்ட 120 லாரிகள் அனுப்பி இருக்கிறது; இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் நொடிக்கு நொடி, மணிக்கு மணி, நாளுக்கு நாள் அந்தப் பிரச்சினையை அணுகிக் கொண்டு இருக்கிறார்கள்; (மணி அடிக்கப்பெற்றது) நேரடியாக ஆய்வு செய்து ஒவ்வொரு பிரச்சினையையும் தீர்த்து வைத்து இருக்கிறார்கள். அன்றைக்கு 120 லாரியாக இருந்தது, இன்றைக்கு 370 லாரியாக உயர்த்தப் பட்டு இருக்கிறது. ஒரு லாரியில் தினமும் 10 டிரிப்புகளுக்கு மேலாக தண்ணீரை ஒவ்வொரு தெருக்களுக்கும் வழங்கிக் கொண்டு இருக்கிறோம். அதேபோல் டிராக்டர்களை வாடகைக்கு அமர்த்தி கிட்டத்தட்ட 3,560 டிரிப்புகள் இன்றைக்குக் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். இன்றைக்கு ஹேண்ட் பம்புகளின்

எண்ணிக்கையை இன்கிரீஸ் செய்து இருக்கிறோம். (மணி அடிக்கப்பெற்றது). அதை அதிகமாகக் கொடுத்துக்கொண்டு இருக்கின்றோம். அந்த அடிப்படையிலே இன்றைக்கு தினந்தோறும் தண்ணீர் வழங்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது. இந்த பருவ மழையிலே இந்தப் பிரச்சினை நிச்சயமாக ஏரிகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரிக்கின்ற போது, தீரும் என்று கருதுகிறேன்.

(ஆஆ) ஜெகதாப்பட்டினம் மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்ற போது இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப் பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த, கவன ஈர்ப்பு. திரு. ஆர். கோடிமாரி அவர்கள் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆர். கோடிமாரி.

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒரு மாத காலத்தில் நாகை ஜெகதாப்பட்டினத்தில் இருந்து நமது கடல் எல்லைக்குள் மீன்பிடிக்கச் சென்ற 3 மீனவர்களை இலங்கை கடற்படையினர் சுட்டுக்கொன்றது சம்பந்தமாக ஏற்பட்ட பதட்ட நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

அறிக்கை.

கடந்த 1—9—1993 அன்று நாகை-காயிதே மில்லத் மாவட்டம், ஆற்காட்டுத் துறையைச் சேர்ந்த மீனவர்கள் T.J.C. 883 என்ற எண்ணுள்ள படகில் கோடிக்கரை அருகே மீன் பிடிக்கும் போது, திரு. சுப்ரமணியம், த/பெ. ஆறுமுகம் என்ற மீனவர் இலங்கை கடற்படையினரால் சுடப்பட்டு இறந்தார். அப்படகில் சென்ற மற்ற மீனவர்களான திருவாளர்கள் பழனிச்சாமி, சிதம்பரம், ராஜமாணிக்கம் என்ற மீனவர்கள் அந்தத் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தார்கள். கரைக்கு திரும்பி விட்டார்கள். அதே படகில் சென்ற திரு. தொண்டிச் செட்டியார் த/பெ. காத்தமுத்து என்ற மீனவர் படகோடு கடலில் மூழ்கி விட்டார்.

எண்ணிக்கையை இன்கிரீஸ் செய்து இருக்கிறோம். (மணி அடிக்கப்பெற்றது). அதை அதிகமாகக் கொடுத்துக்கொண்டு இருக்கின்றோம். அந்த அடிப்படையிலே இன்றைக்கு தினந்தோறும் தண்ணீர் வழங்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது. இந்த பருவ மழையிலே இந்தப் பிரச்சினை நிச்சயமாக ஏரிகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரிக்கின்ற போது, தீரும் என்று கருதுகிறேன்.

(ஆஆ) ஜெகதாப்பட்டினம் மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்ற போது இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப் பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த, கவன ஈர்ப்பு. திரு. ஆர். கோடிமாரி அவர்கள் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆர். கோடிமாரி.

திரு. ஆர். கோடிமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒரு மாத காலத்தில் நாகை ஜெகதாப்பட்டினத்தில் இருந்து நமது கடல் எல்லைக்குள் மீன்பிடிக்கச் சென்ற 3 மீனவர்களை இலங்கை கடற்படையினர் சுட்டுக்கொன்றது சம்பந்தமாக ஏற்பட்ட பதட்ட நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

அறிக்கை.

கடந்த 1—9—1993 அன்று நாகை-காயிதே மில்லத் மாவட்டம், ஆற்காட்டுத் துறையைச் சேர்ந்த மீனவர்கள் T.J.C. 883 என்ற எண்ணுள்ள படகில் கோடிக்கரை அருகே மீன் பிடிக்கும் போது, திரு. சுப்ரமணியம், த/பெ. ஆறுமுகம் என்ற மீனவர் இலங்கை கடற்படையினரால் சுடப்பட்டு இறந்தார். அப்படகில் சென்ற மற்ற மீனவர்களான திருவாளர்கள் பழனிச்சாமி, சிதம்பரம், ராஜமாணிக்கம் என்ற மீனவர்கள் அந்தத் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தார்கள். கரைக்கு திரும்பி விட்டார்கள். அதே படகில் சென்ற திரு. தொண்டிச் செட்டியார் த/பெ. காத்தமுத்து என்ற மீனவர் படகோடு கடலில் மூழ்கி விட்டார்.

1993 அக்டோபர் 29] [திரு. டி. ஜெயகுமார்]

அதே மாவட்டத்தில், 3—9—1993 அன்று ஆற்காட்டுத் துறையிலிருந்து படகு எண். டி.ஜே.சி. 31-ல் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களில் திரு. கெம்பளன் என்ற மீனவர் இலங்கை கடற்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் காயம் அடைந்தார்.

கடந்த 4—9—1993 அன்று புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டனத்திலிருந்து, ஜெகதாப்பட்டினத்தைச் சேர்ந்த மீனவர்கள், படகு எண். பி.டி.கே. 712-ல் மீன்பிடிக்கச் சென்றபோது இலங்கை கடற்படை சுட்டதில் திரு. தமிழ்வீரன் காயம் அடைந்தார். மேலும் திரு. ரங்கநாதன் மற்றும் சேகர் ஆகிய மீனவர்களைக் காணவில்லை. அவர்கள் சென்ற படகு கடலில் மூழ்கிவிட்டது.

கடந்த 22—9—1993 அன்று நாகை காயிதே மில்லத் மாவட்டம், தோப்புத்துறையிலிருந்து, அக்கரைப்பேட்டையைச் சேர்ந்த மீனவர்கள், டி.ஜே. 498 என்ற படகில் மீன்பிடிக்க சென்றபோது இலங்கை கடற்படையினர் சுட்டதில் அப்படகில் சென்ற திரு. செல்லபாபு, த/பெ. அம்பலவாணன் என்ற மீனவர் இறந்தார். உடன் சென்ற மீனவர்களான திருவாளர்கள் சுந்தரராஜ், அஞ்சப்பன் மற்றும் மாரியப்பன் ஆகியோர் படுகாயத்துடன் கரைக்கு திரும்பிவிட்டனர்.

மேற்கண்ட நிகழ்ச்சிகள் அரசின் கவனத்திற்கு வந்ததும் மைய அரசிற்கும் இலங்கையில் உள்ள இந்திய தூதுவரகத்துக்கும், FAX செய்தி மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டு, இலங்கை அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லும்படி கோரப்பட்டது. மற்றும் மேற்கண்ட நிகழ்ச்சியில் இறந்த மீனவர்களின் குடும்பத்திற்கும், காயமடைந்த மீனவர்களுக்கும் சேதமடைந்த படகிற்கும் நஷ்ட ஈட்டு தொகையினை இலங்கை அரசிடமிருந்து பெற்றுத் தரும்படி மைய அரசுக்கும், இலங்கையிலுள்ள இந்திய தூதுவரகத்துக்கும் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையினரின் மனிதாபிமானமற்ற இது போன்ற நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த வேண்டுமென்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பிரதம மந்திரி அவர்களுக்கு 4 கடிதங்கள் எழுதியுள்ளார். பிரதம மந்திரி அவர்களும் இதுகுறித்து உறுதியான நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்துள்ளார். மேலும் அப்படிப்பட்ட சம்பவங்கள் இனியும் தொடரா வண்ணம் தடை செய்வதற்காக இந்திய அரசும், இலங்கை அரசும் ஒரு ஒடபந்தம் செய்து கொள்வது என்ற வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோடிமாரி, கேள்வியர்க் கேளுங்கள்.

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலிலே இருந்த மீனவர்களை எப்படி எப்படி எல்லாம் சுட்டார்கள், எப்படி அவர்கள் இறந்தார்கள் என்ற விவரத்தை சற்று விவரமாகச் சொல்ல இந்த மாமன்றத்தில் கொஞ்சம் அவகாசம் வேண்டுமென்று கோருகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சட்டமன்றத் தொகுதி நாகப்பட்டினத்தைச் சேர்ந்த மீனவர்கள் 3 பேர் கடந்த 1—9—1993 முதல் 22—9—1993 முடிய உள்ள நாட்களில் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற நேரத்தில் இலங்கை அரசின் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதயம் உள்ளவர்களின் இரத்தத்தினை உறைய வைக்கின்ற இந்த நிகழ்ச்சி எனது பகுதியில் உள்ள மீனவர்களிடையே பதட்ட நிலையை உருவாக்கி உள்ளது. ஆகவே, அன்றாட ஜீவனத்திற்கு வழிதேடும் மீனவர்கள் மனைவி மக்களைப் பிரிந்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள். அதுபற்றி என்ன தகவல் கேட்க விரும்புகிறீர்கள் ?

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுடப்பட்ட விவரத்தை விளக்கமாகச் சொன்னால்தான் இந்த மாமன்றத்திற்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே விளக்கமாகப் பேச முடியாது. கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது கேள்விதான் கேட்க வேண்டும். கேள்வியாகக் கேளுங்கள். எல்லோருக்கும் தெரியும் அந்த விஷயம்.

பிற்பகல் 12-55

திரு. ஆர். கோடிமாரி : அன்றாட ஜீவனத்திற்கு வழி தேட மனைவி மக்களைப் பிரிந்து, வானமே கூரையாக, மழையிலே வெயிலிலே நனைந்து, காய்ந்து, கடலுக்குள் செல்லும் மீனவர்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேட்பது என்றால் கேளுங்கள். இல்லையென்றால் அடுத்த நிகழ்ச்சிக்குப் போய்விடுவேன். கேள்வியாகக் கேளுங்கள். என்ன தகவல் கேட்க விரும்புகிறீர்கள் என்று அதை மட்டும் கேளுங்கள்.

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எதையும் சாதிக்கக்கூடிய சாதனைத் தலைவி. இந்தப் பிரச்சினையில் நிரந்தரத் தீர்வு கண்டு சாதிக்க வேண்டுமென்று மாண்புமிகு என் தெய்வமாகிய புரட்சித் தலைவி அவர்களை வேண்டி, இறந்தவர்கள் குடும்பங்களுக்கும், காயம் பட்டவர்களுக்கும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவி வழங்குமாறு கோரி, அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செப்டம்பர் மாதத்தில் மட்டும் கிட்டத் தட்ட 5 நிகழ்வுகள். இலங்கைக் கடற்படை நமது மீனவர்களை சுட்டதில் சில மீனவர்கள் இறந்து இருக்கிறார்கள். படகுகள் சேதம் அடைந்திருக்கின்றன. 1—9—1993 அன்றும், 3—9-1993 அன்றும், 4—9—1993 அன்றும், 22—9—1993 அன்றும், 27—9—1993 அன்றும் கிட்டத்தட்ட ஒரே மாதத்தில்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த விவரங்கள் நீங்கள் கொடுத்திருக்கிற அறிக்கையிலே இருக்கிறது. அவர் கேட்டது அதற்கு நிவாரணம் ஏதாவது வழங்கப்படுமா என்று கேட்டிருக் கிறார். அதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: இப்படிப்பட்ட நிகழ்வு கள் நடந்து இருக்கின்றன. இந்த நிகழ்வுகள் எதிர்காலத்தில் நடக்கக்கூடாது என்பதற்காகத்தான் நமது தமிழக மீனவர்களைக் காக்கிற தெய்வமாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிற தமிழக முதலமைச்சர், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 9—9—1993 அன்றும், 22—9—1993 அன்றும் .. (மணியடிக்கப்பெற்றது) அவர் நிரந்தரத் தீர்வு எது என்று கேட்டிருக்கிறார். அதற்கு நான் சொல்கிறேன். 9—9—1993 அன்றும், 22—9—1993 அன்றும், 24—9—1993 அன்றும், 8—10—1993 அன்றும் நமது தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த நிகழ்வுகள் குறித்து தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்து பாரதப் பிரதமருக்கு இந்த நிகழ்வுகளைக் குறித்து இலங்கை அரசுக்குக் கண்டனம் தெரிவிக்க வேண்டுமெனக் கடிதம் எழுதினார். இக்கடிதங்களில் மீனவர்களுடைய கொந்தளிக்கும் உணர்வுகளைக் குறித்து வெளிப்படுத்தினார். இதன் அடிப்படை யில் மைய அரசு இலங்கை அரசுக்குக் கடிதம் எழுதியது. அதோடு மட்டுமல்லாமல் 30—9—1993 அன்றும், 15—10—1993 அன்றும், பாரதப் பிரதமர் மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்குப் பதில் கடிதம் எழுதியுள்ளார். இதிலே இலங்கை அரசுக்குக் கண்டனம் தெரிவிப்பதாகத் தெரிவித்துள்ளார்கள்.

மேலும் நமது தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த உறுதியான நடவடிக்கை காரணமாக, 15—10—1993 அன்று உயர்மட்டக் குழுக் கூட்டம் டெல்லியில் நடத்தப்பட்டு, இலங்கை அரசினுடைய வெளியுறவுச் செயலாளர், மைய அரசினுடைய வெளியுறவுச் செயலாளர், இரு அரசுகளின் கப்பல் படை தளபதிகள், நமது அரசினுடைய கால்நடை பரா மரிப்பு மற்றும் மீன் வளத் துறைச் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டு, அந்த அடிப்படையில் எதிர்காலத்தில் இந்தப் பிரச்சினைகள் எழும்பாத வண்ணம் ஒரு உறுதியை அளித் திருக்கிறார்கள். அந்த வகையில் கடந்த 20 நாட்களாக எந்த

வொரு அசம்பாவிதமும் ஏற்படாத வகையில், அமைதியான முறையில் தொழில் நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்வதோடு, சுடப்பட்ட மீனவர்கள் விபத்துக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருப்பதன் காரணமாக அந்த விபத்து காப்புறுதித் திட்டத்தின்கீழ் நிதியுதவி நிச்சயமாக அவர்களுக்கு வழங்கித்தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. மா. சுந்தரதாஸ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (சிவில்) பொது மறுவாழ்வுத் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் 118-வது அறிக்கையை பொதுக் கணக்குக் குழுவின் தலைவராகிய நான் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையை அளிப்பதற்கு முன் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை இரண்டு ஆண்டுகள் இந்தக் குழுவினுடைய உறுப்பினராக இருக்கச் செய்து, இந்த ஆண்டு இந்தக் குழுவினுடைய தலைவராக்கிய எங்கள் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தாள் பணிந்து, என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் 141 முதல் 144 வரையிலான நான்கு அறிக்கைகளை இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. இரா. அப்பு நடேசன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

வொரு அசம்பாவிதமும் ஏற்படாத வகையில், அமைதியான முறையில் தொழில் நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்வதோடு, சடப்பட்ட மீனவர்கள் விபத்துக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருப்பதன் காரணமாக அந்த விபத்து காப்புறுதித் திட்டத்தின்கீழ் நிதியுதவி நிச்சயமாக அவர்களுக்கு வாங்கித்தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. மா. சுந்தரதாஸ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (சிவில்) பொது மறுவாழ்வுத் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் 118-வது அறிக்கையை பொதுக் கணக்குக் குழுவின் தலைவராகிய நான் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையை அளிப்பதற்கு முன் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை இரண்டு ஆண்டுகள் இந்தக் குழுவினுடைய உறுப்பினராக இருக்கச் செய்து, இந்த ஆண்டு இந்தக் குழுவினுடைய தலைவராக்கிய எங்கள் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தாள் பணிந்து, என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் 141 முதல் 144 வரையிலான நான்கு அறிக்கைகளை இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. இரா. அப்பு நடேசன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

வொரு அசம்பாவிதமும் ஏற்படாத வகையில், அமைதியான முறையில் தொழில் நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்வதோடு, சுடப்பட்ட மீனவர்கள் விபத்துக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருப்பதன் காரணமாக அந்த விபத்துக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் நிதியுதவி நிச்சயமாக அவர்களுக்கு வாங்கித்தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. மா. சுந்தரதாஸ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (சிவில்) பொது மறுவாழ்வுத் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் 118-வது அறிக்கையை பொதுக் கணக்குக் குழுவின் தலைவராகிய நான் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையை அளிப்பதற்கு முன் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை இரண்டு ஆண்டுகள் இந்தக் குழுவினுடைய உறுப்பினராக இருக்கச் செய்து, இந்த ஆண்டு இந்தக் குழுவினுடைய தலைவராக்கிய எங்கள் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தாள் பணிந்து, என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் 141 முதல் 144 வரையிலான நான்கு அறிக்கைகளை இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. இரா. அப்பு நடேசன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

வொரு அசம்பாவிதமும் ஏற்படாத வகையில், அமைதியான முறையில் தொழில் நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்வதோடு, சுடப்பட்ட மீனவர்கள் விபத்துக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருப்பதன் காரணமாக அந்த விபத்து காப்புறுதித் திட்டத்தின்கீழ் நிதியுதவி நிச்சயமாக அவர்களுக்கு வாங்கித்தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. மா. சுந்தரதாஸ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (சிவில்) பொது மறுவாழ்வுத் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் 118-வது அறிக்கையை பொதுக் கணக்குக் குழுவின் தலைவராகிய நான் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையை அளிப்பதற்கு முன் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை இரண்டு ஆண்டுகள் இந்தக் குழுவினுடைய உறுப்பினராக இருக்கச் செய்து, இந்த ஆண்டு இந்தக் குழுவினுடைய தலைவராக்கிய எங்கள் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தாள் பணிந்து, என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் 141 முதல் 144 வரையிலான நான்கு அறிக்கைகளை இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. இரா. அப்பு நடேசன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

1993 அக்டோபர் 29]

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப் பட்ட ஏடுகள் குழுவின் 32-வது, 33-வது, 34-வது மற்றும் 35-வது அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

பிற்பகல் 1-00

8. அறிவிப்புகள்.

(அ) பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1993 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

9. அரசினர் சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்.)

(அ) பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

1993 அக்டோபர் 29]

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப் பட்ட ஏடுகள் குழுவின் 32-வது, 33-வது, 34-வது மற்றும் 35-வது அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

பிற்பகல் 1-00

8. அறிவிப்புகள்.

(அ) பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1993 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

9. அரசினர் சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்.)

(அ) பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993 ஆம் ஆண்டு தமிழ் நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவு. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993 ஆம் ஆண்டு, தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்

எனக் கோருகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் இல்லை' என்க. ('இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

8. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள், 1993-94 அளித்தல் (ஆ.செ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993-94 ஆம் ஆண்டிற்கான கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகளைப் பேரவைமுன் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

(ஆ) தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993 ஆம் ஆண்டு தமிழ் நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவு. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993 ஆம் ஆண்டு, தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்

எனக் கோருகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் இல்லை' என்க. ('இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

8. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள், 1993-94 அளித்தல் (ஆ.செ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993-94 ஆம் ஆண்டிற்கான கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகளைப் பேரவைமுன் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Article 205 read with clause 3 of Article 203 of the Constitution of India, I, M. Channa Reddy, Governor of Tamil Nadu hereby give my recommendation for moving in the Tamil Nadu Legislative Assembly the demands for further grants for the year 1993-94."

10. அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 29 ஐத் தளர்த்துதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993-94 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை. 1993-94 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி நிலை அறிக்கையின்மீது பொது விவாதமும், மேற்படி ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பும். மாண்புமிகு நிதி அமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993-94 ஆம் ஆண்டிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதம் 1-30 மணி அளவிலே முடிய வேண்டும் என்று விதி 29 இருந்தாலும், அதைத் தளர்த்தி, 2 மணி வரையிலும் விவாதத்தை வைத்துக் கொள்ளலாம்.'' எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒரு மனதாகநிறைவேறியது மாண்புமிகு நிதி அமைச்சர்

11. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1993-94 மீது பொது விவாதமும் மேற்படி ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான வாக்கெடுப்பும்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In pursuance of Article 205 read with clause 3 of Article 203 of the Constitution of India, I, M. Channa Reddy, Governor of Tamil Nadu hereby give my recommendation for moving in the Tamil Nadu Legislative Assembly the demands for further grants for the year 1993-94."

10. அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 29 ஐத் தளர்த்துதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993-94 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை. 1993-94 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதமும், மேற்படி ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பும். மாண்புமிகு நிதி அமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993-94 ஆம் ஆண்டிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதம் 1-30 மணி அளவிலே முடிய வேண்டும் என்று விதி 29 இருந்தாலும், அதைத் தளர்த்தி, 2 மணி வரையிலும் விவாதத்தை வைத்துக் கொள்ளலாம்.'' எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒரு மனதாகநிறைவேறியது மாண்புமிகு நிதி அமைச்சர்

11. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1993-94 மீது பொது விவாதமும் மேற்படி ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான வாக்கெடுப்பும்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In pursuance of Article 205 read with clause 3 of Article 203 of the Constitution of India, I, M. Channa Reddy, Governor of Tamil Nadu hereby give my recommendation for moving in the Tamil Nadu Legislative Assembly the demands for further grants for the year 1993-94."

10. அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 29 ஐத் தளர்த்துதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993-94 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை. 1993-94 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி நிலை அறிக்கையின்மீது பொது விவாதமும், மேற்படி ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பும். மாண்புமிகு நிதி அமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993-94 ஆம் ஆண்டிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதம் 1-30 மணி அளவிலே முடிய வேண்டும் என்று விதி 29 இருந்தாலும், அதைத் தளர்த்தி, 2 மணி வரையிலும் விவாதத்தை வைத்துக் கொள்ளலாம்." எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒரு மனதாகநிறைவேறியது மாண்புமிகு நிதி அமைச்சர்

11. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1993-94 மீது பொது விவாதமும் மேற்படி ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான வாக்கெடுப்பும்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சட்டமன்றப் பேரவை
TRUTH ALONE TRIUMPHS

''1993-94 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 27—10—1993 தேதியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 1993-94 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 7—திரு. சி. ஞானசேகரன்.

வெட்டுத் தீர்மானம் எண். . திரு. வே. தம்புசாமி இருக்கையில் இல்லை.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழக விவசாயிகளுக்கு மானிய விலையில் கூடுதலாக எல்லா வகை உரங்களையும் விநியோகம் செய்ய வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''வேளாண்மை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 15,81,66,000-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 8—திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''நமது விவசாயப் பெருமக்களுக்கு நல்ல தரமுள்ள இரசாயன உரங்கள் வழங்குவது குறித்து விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''வேளாண்மை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 15,81,66,000-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானமும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. பேரவையின் விதிகளின்படியும், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தற்போது கோரியுள்ள தீர்மானம் நிறைவேறியதை ஒட்டியும், விவாதமும் பதில் உரையும் 2 மணிக்கு முடிவு அடைந்து, வாக்கெடுப்பு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். எனவே, விவாதத்தில் பங்குகொள்கிற உறுப்பினர்கள் மிகச் சுருக்கமாகப் பேசி முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திரு. கோ. வி. எஸ். மோகனன்.

1993 அக்டோபர் 29]

பிற்பகல் 1-05

*திரு. கோ.வி. எஸ். மோகனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''அறிவ நீ, தரும நீ, உள்ள நீ, இதனிடை மரும நீ, உடலின்கண் வாழ்ந்திடும் உயிர் நீ, நெஞ்சகத்து அன்பு நீ, தோளிடை வன்பு நீ, ஆலயங்கள் தோறும் அறிவுபட விளங்கிடும் தெய்வச் சிலையெல்லாம் தேவி இங்குளதே என்று நாங்கள் எல்லாம் நடமாடும் தெய்வமாய், கொள்கைப் பூவாய், உலவுகின்ற கிள்ளைப் பேரழகாய், நீல வானில் பந்தலிடும் பழச் சோலை எழில் குழம்பாய், மரகத மணி எடுத்து மணி மகுடத்தில் வைத்தது என காவியக் கலையரசன் தூவிய சித்திரைப் பூ மழையாய், சொந்தங்கள் பாடிடும் சிந்தூரச் சிரிப்பாய், சொர்க்கத் தேன் குடமாய், சோபித பொன் எழுத்தாய், சிற்பத் தனி மொழியாய், நெல்லிக் கனி என புரண்டிடும் கவிஞனின் கற்பனைத் தேராய், கற்பனைத் தேரின் வடிவாளக் கயிராய், தென்னைப் பெருமரத்தின் முன்னம் முதிர்ந்துவிட்ட கன்னல் இளநீராய், எங்களின் உயிராய், உணர்வாய், வாழ்வாய், நீழ்கடல் ஓசையில் நிதம் புரண்டு வளர்ந்திடும் புண்ணிய ஸ்வரமாய், சித்திரை மழையாய், முத்திரை பொன்னாய், வித்தகப் பண்ணாய், தமிழகத்தினுடைய ஆற்றல்மிகு தலைவி, அறிவுமிகு தலைவி, வீரம் மிகு தலைவி, வெற்றித் தலைவி, அழகுள்ள தலைவி தமிழகத்திலே இருக்கின்ற தாய்மார்களுடைய தனிப் பெரும் தலைவி, இந்தியத் துணைக் கண்டத்தினுடைய இமாலயத்தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அவர்களாலே நரை பழுத்த துறை தீந்தமிழின் ஒழுகும் நறுஞ்சுவை நனி சொட்ட சொட்ட, அறிவார்ந்த கருத்துக்களை வழங்குகின்ற இந்தத் திருச்சபையிலே காய்தலும், சுடுதலும், உயிர்களுக்கு இல்லை. தாழ்ச்சியும், வீழ்ச்சியும் தொண்டர்களுக்கு இல்லை என்று சொல்கின்ற அந்த அளவிலே 1.20 கோடி தொண்டர்களிலே ஒருவரான என்னை இப்போது இந்த மாமன்றத்திலே பேசுகின்ற அற்புதமான வாய்ப்பை இந்தச் சந்தர்ப்பத்திலே வழங்கிய, நான் வணங்குகின்ற தெய்வமான, நடமாடும் கடவுளாக இருக்கின்ற புரட்சித் தலைவி அவர்கள் அமர்ந்திருக்கின்றஅந்தத்திசைநோக்கி (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே இது என்னுடைய கன்னிப் பேச்சு என்கின்ற காரணத்தாலே அறிவார்ந்தோர், சிந்தனையாளர் நிரம்பியிருக்கின்ற இந்தத் திருச்சபையில், அருள்கூர்ந்து குறுக்கிட மாட்டார்கள் என்ற நம்பிகைக்யோடு, சில கருத்துக்களை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு ஆட்சியாளருக்கு என்ன தகுதி வேண்டும், திறமை வேண்டும் என்பதை ஒரு பழம் பாடல் மிகச் சிறப்பாக எடுத்துச் சொல்கிறது. அந்தப் பாடல் என்னவென்று சொன்னால், 'விளைபடு சிரிடம் நோக்கி வளை சேர் வல்சி கொண்டு, அலை மல்க வைக்கும் எலி முயன்றனையராகி உள்ள

தம், வலம் வலியுறுத்தும் உளம் இலாளரோடு இயைந்த வைகல் இல்லாகியரோ, கடும்கண் கேழல் இடம்பட வீழ்ந்தன, அன்று அவள் உண்ணாதாகி, வழி நாள் பெருமலை விடரகம் புலம்ப, வேட்டு எழுந்து இருள்களின்று ஒறுத்தல் நல் வலம் படுக்கும் புலி பசித்தன்ன மெலிவுஇல் உள்ளத்து, உறனுடையாளர் கேண்மையரோடு இயைந்த வைகல் உல ஆகியரோ' என்று அந்தப் பாடல் சொல்கிறது.

விவசாயியினால் விளைவிக்கப்படுகின்ற கதிரை எடுத்துச் சென்று, வலையிலே வைத்து தின்னுகின்ற எலியைப் போல வாழ மாட்டேன். எதிரே வருகின்ற கடும்கண் கேழல் என்று சொல்கின்ற முரட்டுத்தனமான காட்டுப் பன்றி வீழ்த்துகின்ற போது அது இடது பக்கமாக வீழ்ந்துவிட்டது என்ற காரணத் தாலே உண்ணாமல் இருந்து, ஆகா, மதம் கொண்ட யானை வருகின்றது. அந்த யானை வருகின்ற வரையிலே அங்கே குகை யிலே பசித்த வயிரோடு இருந்து, அந்த மதம் கொண்ட யானை யை வீழ்த்தி, அது வலப் பக்கமாக வீழ்ந்தபோதுதான் உண் கிறதே ஆற்றல் மிக்க புலி, அந்தப் புலியைத்தான் நாங்கள் நண்பராகப் பெறுவோம் என்று சொல்லுகின்ற குணத்தைப் பெற்றவர்களை, நண்பர்களாகப் பெறுபவர்கள் ஆளவே டும். ஆட்சிக்கு வரவேண்டும் என்று சொல்லுகின்ற இலக்கணத்தை ஏற்றிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே தலைவி, ஒப்பற்ற தலைவி, வீரத் தலைவி, துணிச்சல்மிக்க தலைவி, தன் மானம் மிக்க தலைவி, புரட்சித் தலைவி என்பதற்கான அடை யாளம்தான் இன்றைக்கு நடந்து முடிந்திருக்கின்ற ராணிப் பேட்டையும், பழனி இடைத்தேர்தலும் என்பதை இங்கே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த இடைத் தேர்தல் ஒரு சாதாரணமான இடைத் தேர்தல் அல்ல. ஒரு நண்பர் டில்லியி லிருந்து இந்தக் கருத்தை எனக்கு எழுதியிருக்கிறார்.

" The result—the victory of Ranipet bye—election is not an ordinary one. It is a resoundind victory. It is a remarkably victory. It is a reputable victory. It is a self-respect victore of your Hon'ble Puratchi Thalaivi. "

என்று அந்த நண்பர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-10

ஏன் இதைச் சொல்லுகிறேன் என்று சொன்னால் புரட்சித் தலைவியைப் பார்த்து தமிழகத்திலே இருக்கின்றவர்கள் சொன் னார்கள். எங்களால்தான் நீங்கள் ஆட்சிக்கு வந்தீர்கள். நாங்கள் இல்லை என்றால் நீங்கள் கோட்டை கொத்தளத்திலே உட்கார முடியாது என்று சொன்னார்கள். எங்களிடத்திலே பிரிவு 356 இருக்கிறது. ஆகவே ஜனவரி முப்பத்தி ஒன்றோடு இந்த ஆட்சிகாலி என்று சொன்னார்கள். வருகின்ற சுதந்திர தினத்தன்று கொடியை ஏற்ற முடியாது என்று சொன்னவர்கள் மத்தியிலே

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஒப்பற்ற தலைவி ஓங்கு புகழ் தலைவி புரட்சித் தலைவி அவர்கள்—அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வார்களே ஆங்கிலத்திலே அழகாக சொல்வார்களே "vox populi ; vox de என்று கிரேக்க மொழியில் இருக்கிற உதாரணத்தை அண்ணா அவர்கள் சொல்வார்கள்.

"The voice of the people is the voice of Gode
மக்கள் குரலே மகேசன் குரல் என்று அண்ணா அவர்கள் சொன்னார்களே அந்த மக்கள் குரலே மகேசன் குரலாக ஒலித்து ராணிப்பேட்டை தொகுதி வாக்காளப் பெருமக்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். சோழ நாட்டைப் பற்றி சொல்லுகிற போது 'சோழநாடு சோறுடைத்து' என்று சொல்லுவார்கள். 'பாண்டிய நாடு முத்துடைத்து' என்று சொல்வார்கள். 'சேர நாடு வேழமுடைத்து' என்பார்கள். தொண்டை மண்டலமாக இருக்கிற வட ஆற்காடு மாவட்டத்தைப் பற்றிச் சொல்லுகிற போது, 'தொண்டை நாடு சான்றோர் உடைத்து' என்று சொல்லு வார்கள். அப்படிப்பட்ட சான்றோர்கள் நிரம்பிய வட ஆற்காடு மாவட்டத்திலே இருக்கிற ராணிப்பேட்டை தொகுதியிலே இருக் கிற மக்கள் தெளிவாக ஒரு தீர்ப்பை வழங்கி இருக்கிறார்கள். புரட்சித் தலைவி அவர்கள் அயோத்திபிரச்சினை பற்றிய பேசிய போது, அந்தப் பேச்சிலே தெரிவித்த கருத்துக்களை எரித்து, வளைத்து மேடையிலே பிரசங்கம் செய்த போதெல்லாம் கூட, புரட்சித் தலைவி தெளிவாகச் சொன்னார்கள். எல்லா மதங் களும் ஏற்றுக் கொள்ளுகிற அளவுக்கு சுமுகமான பிரச்சினையை தெளிவோடு நேஷனல் இண்டக்கிரேஷன் கவுன்சிலிலே நான் சொன்னேன் என்று சொன்னதை இன்றைக்கு ஏற்று தெளிவாக அறிவித்திருப்பதன் மூலம் சர்வ மதமும் ஏற்றுக் கொண்டிருக்கிற ஒரு தலைவி புரட்சித் தலைவி என்பதை சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

'The holly secular leader ; only dynamic leader ; only charism tic leader and the only popular leader ; '
என்று தெளிவாக உணர்த்திய தேர்தல் ராணிப்பேட்டை தேர்தல் அந்த ராணிப்பேட்டை தேர்தலிலே வெற்றி வாகை சூடி வந் திருக்கிற நான் அடக்கத்தோடு சில கருத்துக்களை இந்த மன்றத் தின் முன்னாலே சொல்லுகிறேன். அடக்கத்தோடு சொல்லுகிற அதே நேரத்தில் நேரம் அதிகமாக ஆகிவிடக் கூடாது என்ற காரணத்தாலே பல கருத்துக்களை சொல்ல வேண்டும் என்று நான் வந்திருந்தாலும் கூட புரட்சித் தலைவி அவர்கள் சாதாரண மாக ஜெயிக்கக் கூடிய அந்த வெற்றி எப்படியெல்லாம் தள்ளிப் போடப்பட்டது என்பதை நான் வேதனையோடு சொல்ல விரும்புகிறேன். நான் எப்படி அதை தாங்கிக் கொண்டேன் என்று எனக்கே புரியவில்லை. இன்றைக்குத்தான் இந்த 5 மாதத்

திற்கு பிறகு எனக்கு சோர்வே வந்திருக்கிறது. அந்த சோர்வே எனக்கு தெரிகிறது. அந்த வகையிலே புரட்சித் தலைவியினுடைய தோல்வியை நிருபிப்பதற்கு 5 மாத காலம் தேர்தலையே தூக்கித் தூக்கி போட்டார்கள். ஒரு முறை அல்ல, 2 முறை அல்ல, 3 முறை போட்டார்கள்.

கம்ப ராமாயணத்திலே சொல்வார்களே "எடுத்தது கண்டான் இற்றது கேட்டான்" என்று அந்த ராமனுடைய வில் வித்தை ஆற்றலை விளக்குகின்ற அந்தக் கவி கம்பன் சொல்கிறான், வில்லை எடுத்தது கண்டார்கள் அது ஒடிந்து விழுந்தது கண்டார்கள் ஒரு நொடியிலே அந்த வில்லை எடுத்து தொறுங்கச் செய்த அந்த வில் ஆற்றலைப் போல, நமது மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய சக்தியை 5 மாத காலம் தூக்கி தூக்கிப் போட்டார்கள்.—அண்ணா அவர்கள் சொல்வார்களே ஆங்கிலத்திலே, Vini: Vidi: Vici:—அந்த கிரேக்க சொல்லிலே சொல்லி விட்டு He saw: he over came: he won

என்று சொல்வார்களே "சென்றார், கண்டார், வென்றார்" என்று சொல்லுகிற அளவுக்கு புரட்சித் தலைவி செல்லுகிற திசை எல்லாம் கூட்டமாக மக்கள் வந்ததைப் பார்த்துவிட்டு மூன்று முறை தள்ளிப் போட்டு 5ஆவது மாதத்திலே வெற்றி பெற்று இந்த அறிவார்ந்த சபைக்கு வந்திருக்கிற நான், புரட்சித் தலைவியினுடைய கடைத் தொண்டனாக, ஒரு கோடியே 20 இலட்சம் தொண்டர்களிலே அந்த ஒரு கோடியே 20ஆவது இலட்சத்திலே கடைசி சிப்பாயாக இருக்கிற நான் சில குறைகளை என்று சொல்லவில்லை, கோரிக்கைகள் என்றும் சொல்லவில்லை, சில தேவைகளை என்னுடைய தொகுதியிலே இருக்கிற சில தேவைகளை, புரட்சித் தலைவி அவர்கள் செய்ய வேண்டும் என்பதற்காக நான் இங்கே சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை ராஜதானி என்று சொல்லப்பட்ட சென்னை, அதாவது சென்னை மொழி வழி மாநிலமாக பிரிக்கப்படாததற்கு முன்னதாகவே உருவாக்கப்பட்ட நகரம் எங்கள் வாலாஜாப்பேட்டை நகரம். அப்படிப் பட்ட சென்னை ராஜதானியின் முதல் நகராட்சியாக, தொன்மையான நகராட்சியாக வாலாஜாப்பேட்டைக்கு—நம்முடைய சட்ட அமைச்சர் அவர்களிடத்திலேயும் முதலமைச்சர் அவர்களிடத்திலேயும் ஒரு வேண்டுகோளை வைக்கிறேன். அங்கேயிருக்கிற முதல் சென்னை நீதிமன்றத்திற்கு பார்ட்-2 ஸ்கீம் என்று சொல்லப்படுகிற அந்த நிதியிலேயிருந்து ஒதுக்கி அதற்கு ஒரு கட்டிடத்தைக் கட்டித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

1993 அக்டோபர் 29] [திரு. கோவி. எஸ். மோகனன்]

அடுத்தபடியாக, அங்கே இருக்கிற உயர்நிலைப்பள்ளியை— ஒரே ஒரு அரசு உயர்நிலைப் பள்ளிதான் பெண்களுக்கென்று வாலாஜாவிலே இருக்கிறது. ஒரு மேல்நிலைப் பள்ளி கூட எங்கள் தொகுதியிலே இல்லை. இருப்பது எல்லாம் தனியார் மேல்நிலைப் பள்ளிகள். ஆகவே, ஒரு மேல்நிலைப் பள்ளியையாவது வாலாஜாப்பேட்டைக்கு நீங்கள் உருவாக்கித் தர வேண்டும். அத்தோடு அந்தத்தொகுதியிலே தரப்படுகிற முதல் மேல்நிலைப் பள்ளியை வாலாஜாப்பேட்டைக்கே நீங்கள் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதே நேரத்திலே பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலே கல்வி அமைச்சராக நம்முடைய நடமாடும் பல்கலைக் கழகம் அவர்கள் இருந்த காலத்திலே வட ஆற்காடு மாவட்டத்திற்கு என்று துவங்கிய அந்தப் பெண்கள் கல்லூரியில் பல இடங்கள் காலியாக இருக்கின்றன, அதை நிறைவு செய்துதர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

அதே நேரத்தில் வாரி வாரி வழங்குவதிலே வள்ளல்களுடைய வாரிசாக, காரி, ஓரி, பாரியினுடைய அவதாரமாக கடையேழு வள்ளல்களுடைய உருவமாக நடமாடிக்கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அவர்கள், பெண்களுக்கு என்று தனி அக்கறை எடுத்துக்கொள்கின்ற அந்த ஆற்றல் மிக்கத் தலைவி அவர்கள் அந்தக் கல்லூரிக்கு ஒரு ஆடிட்டோரியம் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டு பொன்னையிலே இருக்கின்ற அந்த மேல்நிலைப் பள்ளிக்கு எக்ஸ்ரே சென்டர் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே, தொழிற்சாலைகள் மிகுந்து இருக்கின்றன. அங்கே தொழிற்சாலைகள் மிகுந்து இருப்பதால் ஒரு பாலிடெக்னிக்கை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே இன்றைக்கு இந்திய துணைக் கண்டத்திலேயே அதிக வருவாயை ஃபாரின் எக்ஸ்சேன்ஜை பெற்றுத்தருகின்ற லெதர் தொழில் கம்பெனிகள் என்று சொல்லுகின்ற டானரிகள் ஏறத்தாழ 159-க்கும் மேற்பட்டிருக்கின்றன. ஆனால், அந்தத் தொழிலை கற்றுக்கொள்வதற்கு சென்னைக்கு வரவேண்டியிருக்கின்ற காரணத்தினால் அருள் கூர்ந்த நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு லெதர் டெக்னாலஜி கோர்ஸ் அங்கே உருவாக்கி தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே, நேரத்தில் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொன்னை பாசன கால்வாய்க்கு குறுக்கே கொண்டகுப்பம் என்ற இடத்திலேயும் மேல்பாடி என்ற இடத்திலேயும் இரண்டு பாலங்களைக்கட்டித்தருவதற்குஅருள் கூர்ந்துஅனுமதி வழங்க வேண்டும் என்றுகேட்டுக்கொண்டு என்னுடைய கன்னிப் பேச்சுக்குஇவ்வளவு நேரம் அனுமதித்த நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு

நிறைந்த பேரவைத் தலைவருக்கு ஆயிரம் ஆயிரம் கோடிநன்றியையும், அதே நேரத்திலே என்னை இன்றைச்கு உருவாக்கி அழகு பார்த்துக்கொண்டிருக்கின்ற எங்கள் ஆற்றல் மிக்க தலைவி புரட்சித தலைவிக்கு ஆயிரம் ஆயிரம், கோடி கோடி நன்றி மலர்களை அவர்களுடைய புனித திருவடியிலே காணிக்கையாக்கி விடைபெறுகிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாராட்டுக்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர். (குறுக்கீடு). நீங்கள் தினசரி பேசியிருக்கிறீர்கள். பேசாத உறுப்பினர்கள் பலர் இருக்கிறார்கள். இன்றைக்கு நேரத்தின் அருமை முக்கியமானது. (குறுக்கீடு) இதெல்லாம் முறையல்ல. (குறுக்கீடு) எல்லோரும் கேட்க முடியாது. எல்லா உறுப்பினர்களும் கேட்டால் நான் எப்படி பதில் சொல்ல முடியும்? நீங்கள் தினசரி பேசியிருக்கிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) பேர் கொடுத்த பல உறுப்பினர்கள். இங்கேபேசாமலேயே இருக்கின்ற உறுப்பினர்கள் பல உறுப்பினர்கள். அவர்கள் வாய்ப்பை எல்லாம் நீங்கள் எடுத்துக்கொண்டே போகக்கூடாது. (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94 ஆம் ஆண்டுகூடுதல் செலவுக்கான மானியச் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களை கூற விரும்புகிறேன். பொதுவாக ஒரு குறிப்பிட்ட பணிக்காக செலவு செய்வதற்கு நடப்பு நிதியாண்டில் நிதியொதுக்க சட்டத்தின் மூலம் தொகை ஒதுக்கப்படுகிறது. இந்த ஆண்டுப் பணிகளுக்கு அந்தத் தொகை போதாவிடினும் ஆண்டு நிதி அறிக்கையில் சேர்ந்திடாத புதுப்பணிக்கு கூடுதல் செலவிடும் தேவை ஏற்பட்டாலும் இவை மூலம் ஏற்படும் கூடுதல் செலவினைத் தோராய தொகையைக் காட்டும் மற்றொரு அறிக்கையை மாநில சட்டமன்றத்தின் முன் வைக்க வேண்டும் என்று அரசியல் அமைப்புச் சட்டத்தின் 205 ஆவது பிரிவில் கூறப்பட்டு இருக்கிறது. அதன் அடிப்படையில்தான் இந்தத் துணை மானிய கோரிக்கைதாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இதில் காவல்துறை, கல்வித்துறை, வேளாண்மை, கூட்டுறவு, தொழில்கள் வீட்டு வசதி உட்பட 61 இனங்களுக்கான கூடுதல் மானியம் கோரப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தை பொறுத்த வரை ஆண்டு திட்டத்திற்கும், 5 ஆண்டுகளுக்கான திட்டங்களுக்கும் நாம் கோரியபடியே மத்திய திட்டக் குழுவாலும் மத்திய அரசாங்கத்தாலும் அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றன. சுரங்கம், கனிமவளம் குறித்த அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்டிருந்தாலும், நம்முடைய கோரிக்கையை ஏற்று, ஜெயங்கொண்டம் பகுதியில் பழுப்பு நிலக்கரியைத் தோண்டி எடுக்கவும், அந்த பழுப்பு நிலக்கரியை ஆதாரமாகக் கொண்டு அனல் மின்சார

நிலையங்களை அமைக்கவும் மத்திய அரசாங்கம் அனுமதி வழங்கியிருக்கிறது. அதனால்தான் நமது மாநில அரசும் தனியார் நிறுவனமும் ஜெர்மன் நாட்டு முதலீட்டாளர்களும் கூட்டாகச் சேர்ந்துமிகவும் பிரம்மாண்டமான ஒரு திட்டத்தை கூட்டுத் துறையில் மேற்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இடையில் பல தடைகள் மாநில அரசாங்கத்தால் ஏற்பட்டிருந் தாலும் இறுதியில் அந்தத் திட்டம் செயல் வடிவம் பெற்றிருப்பது மன நிறைவை அளிப்பதாகும். இந்தியாவில் உள்ள வேறு எந்த மாநிலத்திற்கும் மத்திய அரசு இத்தகைய வாய்ப்பையும், உரிமையையும் வழங்கவில்லை. தமிழ்நாட்டில் உள்ள நெய் வேலி, ராஜஸ்தானில் உள்ள கோட்டா ஆகிய இரண்டுமே மத்திய அரசு நிறுவனங்களாகவே இருந்து வருகின்றன. இருப் பினும் நம்முடைய மாநிலத்தில் முதன் முறையாக மாநில அரசிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதே போன்று நூற்றுக்கு நூறு ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்டு 1,600 கோடி மூலதனத்தில் மணலியில் ஒரு இரசாயன தொழிற்சாலை அமைய இருந்தது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பிற்பகல் 1.20

ஆர். பி. கோயங்காவும், ஜெர்மன் தொழில் அதிபரும் இணைந்து நடத்துவதாக இருந்த தொழிற்சாலைக்கு மத்திய அரசால் அனுமதியும் வழங்கப்பட்டு இருந்தது. மற்ற மாநிலங்கள் கடுமையாக போட்டிப் போட்ட நேரத்தில் அவர்களுக்கு எல்லாம் கிடைக்காமல் நமக்கு அனுமதி கிடைத் தது பெரிய வெற்றியாக அன்றையதினம் கருதப்பட்டது. இந்த அரசாங்கமும் ஏற்கனவே அதைப்பற்றி குறிப்பிட்டு இருக் கிறது. மணலியில் ஸ்பிக் நிறுவனமும், மத்திய அரசின் எம். ஆர்.எல். நிறுவனமும் கூட்டாக தொடங்கும் மிகப் பெரிய நிறுவனமான ஆரோமெட்டிக் தொழிற்சாலைப் போன்று கோயங்காவின் ஆர்.பி.ஜி. இண்டஸ்ட்ரிஸம் அமைய இருந் தது. அதற்குரிய நிலத்தை கையகப்படுத்தும் பணிக்காக கடந்த தி.மு.க ஆட்சிக் காலத்தில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு பணிகள் தொடங்கப் பட்டு விட்டன. எனினும் இந்த அரசு பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு தொழிற்சாலைக்கான நிலத் தின் ஒரு பகுதியை விவசாய நிலமாக இருப்பதால் அதைக் கையகப்படுத்த இயலாது என்று கூறிய காரணத்தால் இன்றை யதினம் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. அந்தத திட்டம் கைவிடப்பட்டது குறித்து இந்த மன்றத் தில் நான் ஏற்கனவே குறிப்பிட்டு அதற்குரிய விளக்கத்தைக் கோரியும் பலன் ஏதும் ஏற்படவில்லை. பொதுவாக ஒரு திட்டத் திற்காக மொத்தத் தொகையையும் குறிப்பிட்டு அவை அனைத் தும் உடனடியாக இங்கே முதலீடு செய்வது போன்ற ஒரு தோற்-

றத்தை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது. இந்த அடிப்படையில் 27 ஆயிரம் கோடி இங்கே முதலீடு செய்வதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் எத்தனை ஆண்டுகளில் இந்தத் தொகை முதலீடு செய்யப்படும் என்பதையும், தொடக்கத்தில் எவ்வளவு முதலீடு செய்யப்படும் என்பதையும் குறிப்பிட்டுக் கூறுவது இல்லை. இது அரசியல் ஆதாயம் கருதியும், மக்களை திசைத் திருப்பும் நோக்கத்திற்காகச் செய்யப்படும் மலிவான விளம்பரமே தவிர வேறல்ல.

கல்வித் துறையைப் பொறுத்தவரையில் ஒரு சில நிகழ்ச்சிகளை இந்த அரசின் கவனத்திற்காக நான் கொண்டு வர விரும்புகிறேன். சர்வதேச புகழ் வாய்ந்த டெல்லியிலுள்ள ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகம் போன்று இங்கே ஒரு மத்திய பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டும். 1,009 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக் கப்பட்டுள்ள ஜே. என். யூ. (J. N. U.) மற்ற பல் கலைக் கழகங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. மொழி, அறிவியல், சமூகவியல் போன்ற துறைகளில் ஆராய்ச் சிகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்கு சர்வதேச ரீதியில் அங்கீ காரமும், பாராட்டும் கிடைத்து வருகிறது. பல்வேறு அறி ஞர்கள். ஆட்சிப் பணியாளர்கள், எழுத்தாளர்கள், அரசியல் வாதிகள் போன்றவர்களை அந்தப் பல்கலைக் கழகம் உரு வாக்கியிருக்கிறது. இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங் களில் இருந்தும் மாணவர்கள் அங்கே வந்து பயில்கிறார்கள். வெளிநாடுகளிலிருந்தும் மாணவர்கள் அங்கே வந்து பயில் கிறார்கள். முழுக்க, முழுக்க மத்திய அரசின் நிதி உதவியுடன் மிகச் சிறந்த முறையில் உயர்ந்த தரத்துடன் நடத்தப்பட்டு வரும் அந்தப் பல்கலைக் கழகத்தில் நமது மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்கள் மிகக் குறைவான அளவில் இருக் கிறார்கள். மற்ற மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள் மிக அதிகமான அளவில் இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 80-க்கும் குறைவாக நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்கள் அங்கே படிக்கிறார்கள். ஒரு மத்திய பல்கலைக் கழகத்தை நிறுவ மாநில அரசு முன்வர வேண்டும். அப்போதுதான் கே அதேபோல் ஒரு தரமான நல்ல பல்கலைக் கழகத்தை நிறுவுவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் மத்திய பல்கலைக் கழகமாக உயர்த்துவதற்கு மத்திய அரசும், பல்கலைக் கழக மானியக் குழுவும் முன்வந்திருக்கின்றன. அதன் மூலம் பல்கலைக் கழகத்திற்கு அதிகமான நிதியை முழுமையான மானியமாகப் பெறுவதற்கு வாய்ப்பு இருக் கிறது. உலகப் புகழ்ப் பெற்ற சென்னைப் பல்கலைக் கழகம் அந்த நிலைக்கு உயர்த்தப்படுவதும் பொருத்தமாகவே இருக்

கும். ஆனால் நம்முடைய மாநில அரசு அதை ஏற்க மறுப்பதும், புதிதாக ஒரு மத்திய பல்கலைக் கழகத்தை எங்கோ ஒரு முக்கியத்துவம் இல்லாத இடத்தில் அமைக்க வேண்டுமென்று வற்புறுத்துவதும் புரியாத புதிராக இருக்கிறது. மாணவர்கள், பெற்றோர்கள். பேராசிரியர்கள், பொது மக்கள் போன்ற எல்லோருடைய விருப்பத்திற்கும் மாறாக அன்னை தெரசா பல்கலைக் கழகத்தை மீண்டும் கொடைக்கானலுக்கு மாற்றியிருக்கிறோம். அதைப் போன்று மத்திய பல்கலைக் கழகத்தை முக்கியத்துவம் இல்லாத இடத்தில் நிறுவுமாறு வற்புறுத்துவது வருந்தக்கத்தது. பல்கலைக் கழகங்களின் விவகாரங்களில் மாநில அரசு கடைப்பிடிக்கும் அணுகுமுறை ஊக்கம் அளிப்பதாக இல்லை. சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் துணை வேந்தரைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் அரசாங்கத்தின் சார்பில் இடம் பெற வேண்டிய உறுப்பினர் இடம் பெறவில்லை. அதற்கான தேர்தல் நடைபெற்ற போது அரசின் சார்பில் முன்மொழியப்பட்டவரின் ஒப்புதல் கடிதம் பெறப்படவில்லை. எனவே, வேறு ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அரசாங்கத்தின் அலட்சியத்தால் தேவையற்ற ஒரு சிக்கல் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

அதே போன்று, திருச்சியில் உள்ள பாரதிதாசன் பல்கலைக் கழகத்திற்கு பதிவாளர் நியமிப்பதில் விதிமுறைகளை மீறி மாநில அரசு முறைகேடாக ஆணை பிறப்பித்தது. அதன் மூலம் பல்கலைக் கழக அதிகார எல்லைக்குள் ஆக்கிரமிப்பு செய்தது.

பிற்பகல் 1-25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

* மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாரதிதாசன் பல்கலைக் கழகத்திற்கு இன்னும் பதிவாளர் நியமிக்கப்படவில்லை. அங்கிருந்து 'ஆன் டெப்புடேஷன்' வேண்டுமென்று கடிதம் வந்திருந்தது. அதற்கு ஒரு பேனல் வேண்டுமென்று அவர்கள் முதலிலே கேட்காமல் ஒரு பெயரைக் குறிப்பிட்டு கேட்டிருந்தார்கள். அது அனுப்பப்பட்டது. ஆனால் அங்கே சிண்டிகேட்டிலே பேனல் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, 3 பெயர்களைக் கொண்ட பேனல் அனுப்புமாறு இப்போது ஆணையிடப்பட்டிருக்கிறது. அங்கே முறைகேடு எதுவும் நடைபெறவில்லை. யாரும் அங்கே பணியில் இன்னும் அமர்த்தப்படவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கேயிருந்து பரிந்துரை செய்யப்பட்ட பெயரை சிண்டிகேட் ஏற்க மறுத்தது. அதுதான் உண்மை. அதே போன்று திருச்சியிலேயுள்ள. .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். இங்கிருந்து அனுப்பப்பட்ட பெயரை சிண்டிகேட் மறுக்கவில்லை. மூன்று பெயர்கள் வேண்டும்; பேனல் இருந்தால்தான் முடிவெடுக்கலாம் என்று முடிவை ஒத்திவைத்திருக்கிறது என்பது தான் உண்மை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே உண்மைக்குப் புறம்பான செய்திகளைச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டல பொறியியல் கல்லூரிக்கு முதல்வரை நியமிப்பதிலும் இதேபோல விதிமுறைகள் மீறப்பட்டு இருக்கிறது. ஏற்கனவே, மதுரை பல்கலைக்கழகத்தில் சிண்டிகேட் உறுப்பினர்கள் தேர்வு சம்பந்தமாக அரசாங்கம் பிறப்பித்த ஆணை செல்லாது என்று உயர்நீதிமன்றம் ஆணை பிறப்பித்து இருக்கிறது. இதேபோன்று ஆசிரியர் பயிற்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரீஜினல் என்ஜினியரிங் காலேஜிலும் முதல்வரை நியமிப்பதில் முறைகேடு என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதிலே எந்தவிதமான முறைகேடும் இல்லை. முதல்வர் இன்னும் நியமிக்கப்படவில்லை. முதல்வர் பொறுப்பிலேதான் ஒருவர் இருக்கிறார். முதல்வராகப் பணியாற்றிக்கொண்டு இருந்தவர் 5 ஆண்டுகள் பணியிலே இருப்பதற்காக ஆணை வழங்கப்பட்டு இருக்கிறது. ஆனால், மத்திய அரசு ஒரு கடிதத்தின் மூலம், எல்லா ரீஜினல் என்ஜினியரிங் கல்லூரிகளிலும் முதல்வர்களது பணிக்காலம் 3 ஆண்டுகளாக, ஒரே மாதிரியாக இருக்கவேண்டுமென்று கடிதம் அனுப்பி, அந்தக் கடிதத்தை போர்டு

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஆஃப் கவர்னர்ஸ் என்ற கூட்டத்திலே ஏற்றுக்கொண்டு இருக்கிறோம். அப்போது அங்கே முதல்வராகப் பணியாற்றிக் கொண்டு இருந்த ஒருவரும் அதிலேயே செக்கரட்டரியாக இருந்தார். இப்போது அந்த வழக்கு நீதிமன்றத்திலே, இருக்கிறது. ஆகவே, அதைப்பற்றிய முழு விவரங்களையும் சொல்ல முடியவில்லை. ஆகவே, எந்தச் சட்டமும் அங்கே மீறப்படவில்லை என்பதை இங்கே உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே,

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்னைப் பேச அனுமதித்தால் பேசுகிறேன். ஏற்கனவே மிகக் குறைவான நேரம் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. வேர்டு பை வேர்டு,, குறுக்கிட்டுக் கொண்டிருந்தால் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வேர்டு பை வேர்டு அல்ல. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஏற்கனவே, நீங்கள் பேசிய கருத்துக்கு அவர் விளக்கம் சொல்வதற்காக எழுந்தார். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள். [குறுக்கீடு] **

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : I have a very strong objection. I am sorry, we will not participate in the discussion. (Interruption) This is not fair. He is not the concerned Minister. (Interruption)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லா அமைச்சர்களும் குறுக்கிடலாம் (குறுக்கீடு) அதில் விட்டுப் போன கருத்து ஏதாவது இருந்தால்...... (குறுக்கீடு)

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்அவர்களே மாணபுமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள எழுப்புகின்றகுற்றச்சட்டுகளுக்கு கல்வி அமைச்சர் என்ற முறையில் நான் பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். உண்மைக்குப் புறம்பான செய்திகள்

** மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

இந்த அவையிலே வைக்கப்படும்போது அமைச்சர்கள் குறுக்கிடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். சட்ட விதிகளிலும் அதற்கு இடம் இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் பேசுகிறபோது அமைச்சர்கள் எப்போதும் குறுக்கிடுவதற்கு அவர்களுக்கும் உரிமை உண்டு. அமைச்சர்களுக்கு அந்த உரிமை நம்முடைய விதிமுறைகளிலேயே தரப்பட்டிருக்கிறது. எனவே அமைச்சர்கள் குறுக்கிடுவது, கூடாது என்று சொல்லக் கூடாது. அமைச்சர்கள் குறுக்கீடு தேவையா என்பதை தலைவர்தான் முடிவெடுக்க வேண்டும். (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : கில்லட்டின் வேறு வைத்திருக்கிறீர்களே........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குத்தான் நான் சொல்லுகிறேன். இரண்டு மணிக்குள் முடிக்க வேண்டுமென்கிற காரணத்தால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு ஏதாவது விளக்கம் சொல்லவேண்டுமென்று விரும்பினாலும்கூட கடைசியில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்ல இருக்கிறார்கள். அப்போது தெரிவிக்கலாம். அதற்கு முன்பு நீங்கள் ஏதாவது விளக்கம் சொல்ல வேண்டுமென்று கருதினால், அவர் பேசி முடித்த பிறகுகூட நீங்கள் தெரிவிக்கலாம். ஏதாவது மிஸ்லீடிங் ஃபேக்ட் என்று இருந்தால் அந்த மட்டும் நீங்கள் எழுந்து சொன்னால் போதும். மற்றபடி அடிக்கடி குறுக்கிடுவது என்று இருந்தால், இரண்டு மணிக்கு நாம் முடிக்க வேண்டும். அவர்கள் பேசி முடித்து, மாண்பமிகு நிதியமைச்சர் அவர்களும் பதில் சொல்லி இரண்டு மணிக்கு "கில்லட்டின் டைம்" என்கிற காரணத்தால் அதைக் கொஞ்சம் தவிர்ப்பது நல்லது என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டுமென்றே நான் குறுக்கிடவில்லை. முறைகேடு என்று சொல்வதிலேயும் நான் குறுக்கிடவில்லை. முறைகேடு என்று சொல்வதற்கு முன்பு இன்னின்ன காரணங்கள் என்று சொல்லிவிட்டு, ஆகையினாலே முறைகேடு என்று சொல்லவேண்டும் என்று சொல்லுகிறேன். வேறு ஒன்றும் இல்லை. முறைகேடு

என்று சொல்லுவதற்கு முன்னால் இன்னின்ன காரணம் என்று சொல்லிவிட்டு அதற்குப் பிறகு முறைகேடு என்று சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நான் பதில் சொல்லும்போது, ** என்று இங்கே ஒரு குறிப்பைச் சொன்னார்கள். அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவ்வாறு இருந்தால் அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கிவிடுகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோன்று, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு அனுமதி வழங்குவதிலும் இந்த அரசாங்கம் நீதிமன்றத்தின் கண்டனத்திற்கும் விமர்சனத் திற்கும் ஆளாகி இருக்கிறது. மிகவும் பின்தங்கிய மாவட்ட மான தர்மபுரி மாவட்டத்தின் முன்னேற்றத்திலும் வளர்ச்சி யிலும் எல்லோருக்கும் அக்கறை உண்டு. அதிலும் குறிப்பாக மிக மிகப் பின்தங்கிய பர்கூர் பகுதிமீது நமது அரசாங்கம் தனிக்கவனம் செலுத்துவது இயற்கையே. அந்த அடிப் படையில் அங்குள்ள மக்களை அரசாங்கச் செலவில் சென்னைக்கு அழைத்து வருவதும், நலத் திட்ட உதவிகளை வழங்குவதும் வழக்கமாகிவிட்டது. அதற்காக வேலூரிலே நிறுவப்பட்டுள்ள அரசு பொறியியல் கல்லூரியை பர்கூருக்கு மாற்றுவதுதான் வேதனையாக இருக்கிறது. அதேபோன்று

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, பூரா விவரமும் சொல்லாமல் ஏதோ நுனியாகச் சொல்லுவார்கள், நுனிப்புல் மேயக் கூடாது என்று சொல்லுவார்கள். ஆனால் நுனிப்புல்லை யார்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மேய வேண்டுமென்றால், ஏன் மேய்கிறார்கள் என்றால், அதை மேய்கிற உயிரினம் அடிப்புல்லை மேய்ந்தால் அதிலே மண் வரும் என்பதற்காக அவர்கள் நுனிப்புல்லை மேய்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லா விளக்கங்களும் சொல்லிக் கொண்டிருந்தால் நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். தயவுசெய்து அமைச்சரவர்களும் அது என்ன விவரம் என்பதை மட்டும் சொன்னாலும் போதும்.; அதற்கு எல்லா உதாரணங்களையும் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அதே போல, அரசுச் செலவில் அழைத்து வந்து நலத் திட்டங்களை நாங்கள் கொடுக்கிறோம் என்று சொன்னால், அது தொடர்ந்து பர்கூரிலே உள்ளவர்களை மட்டும் அழைத்து வந்து கொடுக்கிறார்கள் என்பதுகூட அல்ல; தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்ற, ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கின்ற நலிந்தோருக்கு நேரடியாகக் கொடுக்கப்படுகிறது. காரணம், விரைவாகக் கொடுக்க வேண்டும் என்பதாலும், முதலமைச்சரே அதிலே நேரடியாக ஈடுபடுகிறபோது பல்வேறுபட்ட அதிகாரிகள் வேகமாகவும், விரைவாகவும், செய்ய வேண்டுமென்பதற்காக, எடுத்துக் காட்டாக பல்வேறு மாவட்டங்களில் இருந்து அழைத்துக் கொண்டு வந்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன் என்பதற்காகத்தான் நுனிப் புல்லை மேய வேண்டாமென்று சொன்னேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: பேரவைத் தலைவரவர்களே, நுனிப்புல்லை மேய்வது யார் என்று தெரியும்.

அதேபோல ரு, 54.22 இலட்சம் செலவில் பர்கூரில் மகளிருக்கான ஒரு அரசினர் கலை அறிவியல் கல்லூரி ஒன்றை நிறுவுவதாகத் திடீரென்று முதலமைச்சர் அறிவிப்பதும், அதனையும் எதிர்பாராத செலவு என்று வர்ணிப்பதும் ஏற்கத்தக்கதுதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பொதுவாகவே ஒரு..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திடீரென்று அது அறிவிக்கப்படவில்லை. அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் பல நாட்களாக, பல மாதங்களாக வைத்த கோரிக்கையின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் முடிவெடுத்து அதை அறிவித்தார்கள் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அப்படியென்றால் அது பட்ஜெட்டிலே வந்திருக்க வேண்டும். அது எதிர்பாராதச் செலவாக வராது. இப்போது எதிர்பாராத செலவாக 54.28 இலட்சம் ஏன் வருகிறது என்றுதான் நான் கேட்கிறேன். எதிர்பாராத செலவு என்று சொன்னால், ஆய்வு செய்யப்படவில்லை, ஆய்வு செய்திருக்க வேண்டும். நிதிநிலைக்குழுவின் முன்னாலே வைத்திருக்கவேண்டும்; விவாதித்து ஆண்டுத் திட்டத்தில் சேர்த்து, சட்டமன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது ஆனால் எந்த நடைமுறை விதிகளையும் பின்பற்றாமல் தன் தொகுதி என்ற ஒரே காரணத்திற்காக அதற்கான.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவரவர்களின் வாதம் என்னவென்றால், திடீரென்று ஒரு திட்டத்தை அறிவித்தது தவறு என்கிறார். என்னுடைய தொகுதி என்பதற்காகத் திடீரென்று ஒரு மகளிர் கல்லூரியை மகளிர் கல்லூரி துவக்கப்படும் என்று நான் அறிவித்ததாக அவர் குற்றம் சாட்டுகிறார். அதாவது ஏற்கனவே அறிவிக்கப்படாத திட்டங்களோடு இதையும் சேர்த்துத் திடீரென்று அறிவித்து விட்டது தவறு என்கிறார். அப்படியானால் இங்கே சட்ட சபையில் எத்தனையோ மாண்புமிகு உறுப்பினர்கள் உதாரணத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் பொன்னம்மாள் அவர்கள் தன்னுடைய தொகுதிக்காகச் சில கோரிக்கைகளை வைத்தார். அது ஏற்கனவே பட்ஜெட்டில் இல்லாவிட்டாலும் அந்தத் தொகுதி மக்கள் முன்னேற்றமடைய வேண்டுமென்பதற்காக நான் அதனைப் பரிசீலிக்கச் சொல்லி, அதற்கெல்லாம் அனுமதி வழங்கியிருக்கிறோமே ஒரு நீர்த் தேக்கத் திட்டத்தை கூட அங்கே நிறுவ வேண்டுமென்று அம்மையார் கேட்டார்களே; அதலெல்லாம் தவறு என்று எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொல்கிறாரா? அப்படி இது ஒரு உதாரணத்திற்காகச் சொன்னேன். மாண்புமிகு பொன்னம்மாள் அவர்களே அதை ஒப்புக் கொள்ளுவார்கள். எத்தனையோ சட்டமன்ற

உறுப்பினர்கள் அவ்வப்பொழுது தங்களுடைய தொகுதி பிரச்சினைகளைச் சொல்லி, நீண்ட நாட்களாக இருக்கிற கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன; நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளும்பொழுது அதனைப் பரிவுடன் பரிசீலித்து அதற்கு ஆணைகள் பிறப்பிக்கின்றோம். இதையெல்லாம் ஒரு தவறு என்று சொல்ல முடியுமா? பர்கூரை ஏன் நான் தேர்ந்தெடுத்தேன்? ஏனென்றால் தமிழகத்திலே இருக்கிற தொகுதிகளில் மிகவும் பின்தங்கிய தொகுதி அது. தமிழகத்திலேயுள்ள மாவட்டங்களிலே மிகவும் பின்தங்கிய மாவட்டம் தர்மபுரி மாவட்டம். விடுதலை பெற்ற நாளிலிருந்து, நான் அங்கே தேர்தலில் நிற்கும்வரை, அந்த மாவட்டத்திற்கென்று ஒரு அமைச்சர்கூட இருந்தது கிடையாது. ஆகவேதான், மிகவும் பிற்படுத்தப்பட்ட, பாவப்பட்ட அந்த மாவட்டத்திற்கு ஒரு விமோசனம் ஏற்பட வேண்டும் என்பதற்காகவே நான் அதைத் தேர்ந்தெடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மாவட்டத்திலேயே மிகவும் பின்தங்கிய தொகுதி எது என்று பார்த்தால் அது பர்கூர் என்று கண்டறிந்து, அதற்காக அங்கு நான் நின்று தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கே மிகவும் பிற்படுத்தப்பட்ட, பாவப்பட்ட மகளிர் முன்னேற்றம் அடையவேண்டும் என்பதற்காக ஒரு கல்லூரியைத் தொடங்கச் சொன்னால் அது தவறு என்று எதிர்க்கட்சித் தலைவர் சொல்லலாமா?

பிற்பகல் 1–35

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்பாராத செலவினத்திலே இது வர வேண்டியது இல்லை. ஆய்வு செய்யப்பட்டிருக்க வேண்டுமென்று தான் சொன்னேன். திருமதி பொன்னம்மாள் அவர்கள் தொகுதியைப் பொறுத்தவரையில், அவருடைய கோரிக்கையை நிறைவேற்றி விட்டதாகச் சொன்னார்கள். நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். ஆனால் ஜி. ஓ. மட்டும்தான் போடப்பட்டிருக்கிறது என்று அவர்கள் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள் என்னிடத்திலே. இன்னும் எந்தவிதமான ஏற்பாடுகளும் இல்லை. ((குறுக்கிடுகள்).

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் மாண்புமிகு உறுப்பினர் பொன்னம்மாள் அவர்கள் என்னிடத்திலே ஒரு கடிதத்தைக் கொண்டு வந்தார்கள்; தந்தார்கள். இன்று இந்தப் பிரச்சினை எழுமென்று தெரிந்திருந்தால் அந்தக் கடிதத்தை எடுத்து வந்திருப்பேன்அவர் அதனை வீட்டில் வைத்து விட்டு வந்துவிட்டேன். அதில் நான் பொறுப்பேற்ற பிறகு, அவருடைய தொகுதிக்கு அவர் என்னென்ன செய்ய வேண்டுமென்று கேட்டு, நான் எதற்கெல்லாம், எத்தனைத்

திட்டங்களுக்கெல்லாம் அனுமதி வழங்கியிருக்கிறேன் என்று குறிப்பிட்டு, நான் அவருடைய தொகுதிக்கு வந்து, அந்தத் திட்டங்களையெல்லாம் தொடங்கி வைப்பதற்கு அடிக்கல் நாட்டு விழாவில் கலந்துகொள்ள வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் என்னிடத்திலே கடிதத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஒரு நீண்ட பட்டியலையே போட்டிருந்தார்கள். அந்தக் கடிதத்தை இப்போது நான் எடுத்து வரவில்லை என்பதைத்தான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள வேண்டியிருக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டங்களையும் நிறைவேற்றுங்கள் என்றுதான் நான் சொன்னேன். வேறொன்றுமில்லை. நீங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றியிருக்கிறீர்கள். அதையும் நிறைவேற்ற வேண்டுமென்றுதான் நான் சொன்னேன்.

திரு எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல் அரசுப் பணிகளை எடுத்துக் கொண்டாலும், மருத்துவக் கல்லூரியில் இடம் அளிப்பதிலும் விதிமுறைகளும் மரபுகளும் மீறப்பட்டிருக்கின்றன. இதன்மூலம் பாராளுமன்ற ஜனநாயக நெறிமுறைகளும் சர்வ சாதாரணமாக மீறப்பட்டிருக்கின்றன. என்னுடைய கட்சி உறுப்பினர் திரு. இராசாராமன் அவர்கள்... (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்கட்சித் தலைவர் எந்தவித ஆதாரமும் இல்லாமல் தொடர்ந்து குற்றச்சாட்டுகளைத் சொல்லிக் கொண்டே போகிறார். அதை அனுமதித்துக் கொண்டிருப்பது நியாயமல்ல என்பதைத்தான் சொல்ல விரும்புகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் ஏதோ ஒரு விதி முறை மீறப்பட்டிருக்கிறது என்று சொல்ல விரும்புகிறார். அவர் சொல்லட்டும். சொன்ன பிறகு பதில் சொல்லலாம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: நான் அதைச் சொல்ல வருகிறேன். என்னைச் சொல்ல விடுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் சொல்ல வருகிறேன் என்கிறார். மற்றவர்கள் உட்காருங்கள். அவர் சொல்லட்டும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சி உறுப்பினர், பாபநாசம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. இராசாராமன்,

எம்.எல்.ஏ. அவர்கள் 22–3–1993 அன்று வெட்டுத் தீர்மானம் எண். 906 என்ற ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார். அதிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ''ஹையர் ஸ்பெஷாலிடி எம். டி. கார்டியாலஜி படிப்புக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கீடு அடிப்படையில் இடம் ஒதுக்காதது குறித்து'' என்று கேட்டிருக்கிறார். ''எம்.டி. கார்டியாலஜியிலே தாழ்த்தப்பட்ட எஸ்.சி. மக்களுக்கு உரிய பங்கீடு கொடுக்கப்படாமல் இருக்கிறது என்று வெட்டுத் தீர்மானம் வந்திருக்கிறது. அது சரியல்ல. காரணம், மொத்தம் அதிலே 5 இடங்கள் உள்ளன. அதை பிரைவேட் டாக்டர், கவர்ன்மென்ட் டாக்டர் என்று இரண்டாகப் பிரித்துக் கொடுக்கிறோம். எனவே, ஆளுக்குப் பாதியாகப் போகிறபோது, 4 இடங்களுக்குக் கீழே இருக்கிற அதற்கும் 'கம்யூனல் ரொடேஷன்' அப்ளை செய்யமுடியாதுஎன்று தெரிவித்துக்கொள்கிறேன் என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார். கீழேயும் சொல்லியிருக்கிறார். இதிலே below 4 years, there is a G.O. ஆனால் 5 பேரையும் கவர்ன்மெண்ட் சர்வீஸ்-லேயிருந்து கொடுத்திருக்கிறார்கள். பெயர்களை வேண்டுமானாலும் கொடுக்கிறேன். 5 பேரும் கவர்ன்மெண்ட் சர்வீசில்; அதுவும் அத்தனைப் பேரும் படித்தது மெட்ராஸ் மெடிக்கல் காலேஜில். அத்தனைப் பேரும் கவர்ன்மெண்ட் சர்வீசில். டாக்டர் ஆர். என். அண்ணாமலை, எம்.டி., அசிஸ்டென்ட் புரபஸர் ஆப் மெடிசின், மெட்ராஸ் மெடிக்கல் காலேஜ், மெட்ராஸ். டாக்டர் ஜி. துரைராஜ், எம்.டி., ட்யூட்டர் இன் மெடிசின், கவர்ன்மெண்ட் ராஜாஜி மெடிக்கல் ஹாஸ்பிடல், மதுரை. டாக்டர் ஜி. ஜெயபால், எம்.டி., ட்யூட்டர் இன் மெடிசின், தஞ்சாவூர் மெடிக்கல் காலேஜ், தஞ்சாவூர். டாக்டர் ஏ. கிருஷ்ணமூர்த்தி, எம்.டி., அசிஸ்டென்ட் புரபஷர் ஆப் மெடிசின், ஸ்டான்லி மெடிக்கல் காலேஜ், மெட்ராஸ். டாக்டர் பி. மணிவாசகம், எம்.டி., அசிஸ்டென்ட் சர்ஜன், கவர்ன்மெண்ட் ஹாஸ்பிடல் மணப்பாறை, திருச்சி ஐந்து பேருமே கவர்ன்மெண்ட் சர்வீசிலே இருப்பவர்கள். அதிலே ஒரு எஸ்.சி. கூட கிடையாது. இது மரபு மீறல் அல்லவா? இட ஒதுக்கீட்டிற்கு எதிராகச் செய்யப்பட்டது அல்லவா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று அரசுத் துறையிலே பணியாற்றுகிற அதிகாரிகள் மருத்துவர்கள். தமிழக அரசிலே பணியாற்றினாலும் சரி, மத்திய அரசிலே பணியாற்றினாலும் சரி, அவர்களுக்காக இருக்கிறது. இது சர்வீஸ் கேண்டிடேட்ஸ். பிரைவேட் கேண்டிடேட்ஸ் என்றும் இருக்கிறது. இரண்டாகப் பிரித்து

கொடுக்கப்படுகிறது. சில நேரங்களில் இதுபோன்ற கோர்ஸ் களுக்கு இது 'சூப்பர் ஸ்பெஷாலிட்டி'. இந்த ஆண்டிலே நமக்குக் கிடைத்திருக்கிற சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்ட்; இதிலே ரிசர்வேஷன் அப்ளை செய்யக் கூடாது; தேவையில்லை என்று ஒரு ஜட்ஜ்மென்ட் வந்திருக்கிறது.

பிற்பகல் 1–40

அதுமட்டுமல்ல, இதற்கு கேண்டிடேட்டே இல்லாத காரணத்தால்தான் அப்படி கொடுக்கப்பட்டிருக்கும். இதை, தனியார், வெளியிலே இருக்கிற மருத்துவர்களுக்குக் கொடுக்கப் படவில்லை என்று சொன்னால் கேண்டிடேட்டே இருந்திருக்க மாட்டார்கள். ஆனால் ஒன்றை மட்டும் நான் தெளிவாகச் சொல்லமுடியும். எம்.பி.பி.எஸ்., அட்மிஷனாக இருந்தாலும் சரி, போஸ்ட் கிராஜுவேட்டாக இருந்தாலும் சரி, சூப்பர் ஸ்பெஷாலிட்டியாக இருந்தாலும் சரி, அதிலே எந்தவிதமான தவறும் இல்லாமல், கம்யூனல் ரொட்டேஷனிலோ, மற்ற பிரச்சினைகளிலோ ஒரு தவறும் நடக்கவில்லை என்பதை என்னாலே தெளிவாகத் திட்டவட்டமாகச் சொல்ல முடியும். ஒன்றை அவர் குறிப்பிட்டுச் சொல்லுகின்ற காரணத்தினால், அதற்கான குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. வேண்டுமானால் இதற்கு நான் தனியாக குறிப்புகளை எடுத்துக் காட்டுகிறேன். ஆனால் இவைகளைப் பொறுத்தவரை ஒரு தவறும் இல்லாத அளவுக்குத்தான், முறையாகத்தான் இந்த அரசாங்கம் செய்திருக்கிறது. அதை என்னால் நிரூபிக்க முடியும் என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் கொடுத்த பதிலைத்தான் நான் சுட்டிக் காட்டினேன், சட்டப்பேரவை உறுப்பினரும், சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்கள் 2 பேர்களும் என்னிடத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். நான் கொடுத்த பட்டியல் தவறு என்று சொல்லமாட்டார்கள் என்று நான் திடமாக நம்புகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே: பட்டியல் தவறு என்று நான் சொல்லவில்லை. அதற்கு பிரைவேட் டாக்டர்கள் அப்ளை செய்திருந்தார்களா, இல்லையா என்ற விளக்கம் என்னிடத்தில் இல்லை. ஒன்று மட்டுமல்ல. இதிலே பல கோர்ஸுகள் உள்ளன. ஏனென்றால் இதில் நூற்றுக்கணக்கானது இருக்கிறது. ஒவ்வொன்றிலும் மூன்று சீட், ஐந்து சீட் இப்படியெல்லாம் இருக்கிறது. எனவே இதற்கு பிரைவேட் டாக்டர்கள் அப்ளை செய்தார்களா இல்லையா என்பதுதான் கேள்வி. அது இல்லாமல் இருக்கும் என்று நான் நம்புகிறேன். அதற்கான குறிப்புகளை எடுத்துக்காட்டுகிறேன். ஒரு சின்னத் தவறுகூட இல்லாத

அளவுக்குத்தான் இதிலே மிகக் கவனமாக நாங்கள் செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பிரைவேட் டாக்டர்கள் இல்லாத பட்சத்தில் நிச்சயமாக ஒரு தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவருக்குக் கொடுத்து இருக்க வேண்டும். அதேபோல, இரசாயன உரங்களைச் சலுகை விலையில் விற்பனை செய்வதில் மத்திய அரசு வழங்கிய மானியம் உரிய நேரத்தில் உரக் கம்பெனிகளுக்குப் போய்ச் சேரவில்லை என்றும், அதனால் அந்தக் கம்பெனிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு மேலும் உரம் வழங்க இயலாத நிலையில் இருப்பதாகச் செய்தி வெளியாகி இருக்கிறது. (மணியடிக்கப் பெற்றது) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. கு. தமிழரசன்'

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, டெல்லி உச்சநீதி மன்றம் ஒரு தீர்ப்பைத் தந்திருக்கிறது. அதிலே சூப்பர் ஸ்பெஷாலிட்டி என்று சொல்லப்படுகிற தனி நிபுணத்துவம் உள்ள கோர்ஸுகளிலே இந்த இட ஒதுக்கீடு கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசோ, இல்லை. இல்லை. நாங்கள் செயல்படுத்தமாட்டோம். என்று கூறுகிறது. ஆக, இது மத்திய அரசின் நிர்வாகக் கோளாறே தவிர, மாநில அரசு இதில் பொறுப்பு ஏற்க முடியாது. (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர். (கூச்சல்-குழப்பம்).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் பேசுகிறார். மற்ற உறுப்பினர்கள் இப்படி கையைத் தூக்குவது தவறான முறை (கூசசல்-குழப்பம்) எதிர்க்கட்சித் தலைவர் பேசுவார். பீட்டர் அல்போன்ஸ், இது முறையல்ல. எதிர்க்கட்சித் தலைவர் பேசுகிறார். (கூச்சல்-குழப்பம்) எதிர்க்கட்சித் தலைவர் உட்கார வேண்டும். ஒரு உறுப்பினர் எழுந்து தன்னுடைய கருத்தைக் கூறுவதற்கு உரிமை இல்லையா? (கூசசல்-குழப்பம்) ஒரு கருத்தைச் சொல்வதற்கு இத்தனை பேர் அடிக்கப் போவது போல் எழுந்து நிற்பது முறையா? 7, 8 பேர்கள் இப்படி கையை ஓங்கிக் கொண்டு ஓடுகிறீர்களே, அது என்ன நியாயம்? ஒரு உறுப்பினருக்கு கருத்தைச் சொல்வதற்கு உரிமை இல்லையா? தமிழரசன் சொன்னதற்குப் பதிலை எதிர்க்கட்சித் தலைவர் சொல்லப் போகிறார். (குறுக்கீடு) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

1993 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. கு. தமிழரசன், உட்காருங்கள் (கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் உட்கார வேண்டும். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சொல்லட்டும்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரும் சேர்ந்து வருத்தப்பட வேண்டிய விஷயம் இது. இந்த சூப்பர் ஸ்பெஷாலிட்டியிலே கம்யூனல் ரொட்டேஷனை அப்ளை செய்ய வேண்டாம்; தேவை யில்லை என்று சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு ஜட்ஜ்மெண்ட் கொடுத் திருக்கிறார்கள். அது தவறானது, அதுபோல இருக்கக்கூடாது, பாதிக்கப்படுவார்கள் என்பதை அவர் சொல்லுகிறார். நீங்கள் (குறுக்கீடுகள்) நான் சொல்லிமுடிக்கிறேன். அப்படி நீங்கள் அவர் களுக்காக இன்று பேசுகிறீர்களே, தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கிடைக்கவில்லை என்று நீங்கள் சொல்லுகிறீர்களே, நான் இப்பொழுதும் சொல்கிறேன் அவர்கள் வந்திருக்க மாட்டார்கள். எனவே, அதனால்தான் மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த விளக்கத்தை நான் எடுத்துக், காட்டுகிறேன். ஆனால் என்னுடைய முழுமையான நம்பிக்கை இதிலே ஒரு சின்னத் தவறு கூட இருக்க முடியாது. குறிப்புகளை நான் எடுத்துப் பார்த்துச் சொல்கிறேன். அவரைப் பொறுத்த வரை என்ன சொல்கிறார் என்றால், சுப்ரீம் கோர்ட் இப்போது ஒரு ஜட்ஜ்மெண்ட் கொடுத்திருக்கிறது. மத்திய அரசாங்கம் அதற்கு ஏதாவது மாற்று ஏற்பாட்டைச் செய்து, சூப்பர், ஸ்பெஷாலிட்டியிலே கம்யூனல் ரொடேஷன் வருகிற வாய்ப்பை ஏற்படுத்தலாமே; அது உங்களுடைய கையிலே இருக்கிறதே நீங்கள் பொறுப்பாக அதை ஏற்றுக் கொள்ளலாமே என்ற கருத்தைத்தான் அவர் தெரிவிக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (கூச்சல்-குழப்பம்) பின்னாலே மிக மிகத் தகாத வார்த்தையை ஒரு உறுப்பினர் பயன்படுத்தியிருக்கிறார். நீங்கள் என்னைப் பேசுவதற்கு அனுமதியுங்கள். நான் ஏதோ சில விஷயங்களைச் சொல்ல வருகின்றேன். மிக மிகத் தகாத வார்த்தை (கூச்சல்-குழப்பம்).

பிற்பகல் 1.45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தமிழரசன் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்கிறபோது இந்தத் தரப்பிலே யிருந்து அத்தனை பேரும் அப்படி எழுந்து போவதைத் தவறு என்று எதிர்க் கட்சித் தலைவர் சொல்வார் என்று எதிர்பார்த்தால் (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களைத் தான் பதில் சொல்லுங்கள் என்று அப்பொழுதே சொல்லிவிட்டேன், எதிர்க் கட்சித் தலைவர் சொல்வார்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் : தமிழ்நாடு அக்ரோ இண்டஸ்டிரீஸ் 3.5 சதவீதம் சர்வீஸ் சார்ஜ் வசூலிக்கிறது. இந்த சர்வீஸ் சார்ஜ் வசூலிக்கப்படக் கூடாது என்று பல உரக் கம்பெனிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, மத்திய அரசாங்கம் வசூலிக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறது...... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். மத்திய அரசு உர மானியத்தை தமிழக அரசுக்கு வழங்கியிருக்கிறது, ஆனால் தமிழக அரசு அதைச் சரியாகப் பயன்படுத்தவில்லையென்றக் குற்றச் சாட்டைச் சொன்னார்கள். இன்று வரை 22 கோடி ரூபாய் உர நிறுவனங்களுக்கு தமிழக அரசு வழங்கியிருக்கிறது. ஆனால், மத்திய அரசு இன்றுவரை கொடுத்திருப்பது 18.81 கோடிதான். மீதி 3 கோடியே 19 இலட்சத்தை தமிழக அரசு செலவிட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, தெளிவான அரசாணையை வெளியிட்டிருக்கிறோம். எந்த சர்வீஸ் சார்ஜும் 'தாய்' நிறுவனத்தால் பெறவில்லை என்பதை பத்திரிகையின் வாயிலாக அரசு அறிவித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் : செய்தி பெரிய அளவிலே வந்திருக்கிறது. 25 நாட்களுக்கு மேலாகிறது, இன்று வரை வேறு விளக்கம் இல்லை. இப்பொழுதுதான் முதல் முறையாக விளக்கம் கொடுத்திருக்கிறார். எந்தெந்தக் கம்பெனிகளுக்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் தன்னுடைய ஆதாரத்தை வைத்துக் கொண்டு சொல்கிறார். நீங்கள் செய்தியை ஆதாரம் என்று சொன்னால் எப்படி ? (குறுக்கீடு) இல்லை. பத்திரிகையில் வருவதற்கெல்லாம் அமைச்சர் பதில்

சொல்லிக் கொண்டிருக்க வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்ப்பது முடியாது. (குறுக்கீடு) அமைச்சர் இப்பொழுது சொல்கிற விளக்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியது தான் முறை.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : சர்வீஸ் சார்ஜ் 3 சதவீதம். இது எங்கேயும் இல்லை. இது போக சர்சார்ஜ் 15—லிருந்து 20 சதவீதம். மத்திய அரசு மானியம் அளிக்கிறது. மாநில அரசு மானியம் வழங்குவதாகக் கூறி வரி விதித்துத் தன்னுடைய பங்கை எடுத்துக் கொள்கிறது. இது தான் உண்மை. அதே போல தமிழ்நாடு குடிநீர் வழங்கல் துப்புரவுத் திட்டத்திற்காக.......(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் மறுக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, DAP. Muriate of Potash, single super Phosphate Complex போன்ற உரங்களுக்கு மட்டுமே மானியம் வழங்குவதற்கு மத்திய அரசு மாநில அரசுக்கு பணம் ஒதுக்கீடு செய்கிறது. இந்தப் பணத்தை மூன்று கூட்டுறவு நிறுவனங்கள் வாயிலாக ஒதுக்கீடு செய்து எந்தெந்த நிறுவனங்கள் எவ்வளவு உரங்கள் அந்த மாதத்தில் அவர்கள் விற்பனை செய்திருக்கிறார்களோ, அவர்கள் கொடுக்கின்ற கணக்கின் அடிப்படையிலே, அவர்கள் ஒரு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் தமிழக அரசிடமிருந்து பெற்றிருக்கிறார்கள். இதற்காக எந்த சர்வீஸ் சார்ஜும் தமிழக அரசால் வசூல் செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஏதோ பத்திரிகையில் வந்தது, அதற்கெல்லாம் அமைச்சர் சொல்லவில்லையென்று சொன்னால் எப்படி. இன்றைக்குக் கேட்டிருக்கிறார். இன்றைக்கு அரசு பதிலைச் சொல்கிறது. அதை ஏற்றுக் கொள்வதுதான் கண்ணியமாக இருக்கும் என்பதை தங்கள் மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : குடிநீர் வழங்கல் துப்புரவு திட்டத்திற்காக கடந்த ஆண்டில் அனுமதிக்கப்பட்ட வழிவகை முன் பணங்களை மானியமாக மாற்றுவதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அரசு மேலும் 25 கோடி ரூபாய் வழங்கியுள்ளதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் உலக வங்கியின் நிதியுதவியோடு செயல்படுத்தப்படுகிறது. சென்னை நகரின் குடிநீர்த் தேவைக்காக புதிய வீராணம் திட்டத்தைத் தயாரித்து இருப்பதாகவும், அதற்குரிய நிதியுதவியை உலக வங்கியிடமிருந்து கோரி இருப்பதாகவும் செய்திகள் வெளியாகி இருக்கின்றன. ரூ. 400 கோடிக்கு மேற்பட்ட அந்தத் திட்டத்திற்கு உலக வங்கி ஒப்புதல் அளிக்க

